# அணிகலன்கள் அகராதி

தமிழ்-தமிழ்-ஆங்கிலம்

பதிப்பாசிரியர்

**வ. ஜெயதேவன்**

தொகுப்பாசிரியர்

**ந. ஆனந்தி**

சென்னைப் பல்கலைக்கழகம்

**2007**

150ஆம் ஆண்டு சிறப்பு வெளியீடு

# அணிகலன்கள் அகராதி

## தமிழ் — தமிழ் — ஆங்கிலம்

*பதிப்பாசிரியர்*

**வ. ஜெயதேவன்**

தகைசால் பேராசிரியர் - தமிழ் இலக்கியத்துறை
முதன்மை ஆய்வாளர் & தலைமைப் பதிப்பாசிரியர்
தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

*தொகுப்பாசிரியர்*

**ந. ஆனந்தி**

ஆய்வாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005

**சென்னைப் பல்கலைக்கழகம்**

**2007**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீடு: 3

அணிகலன் அகராதி
வ. ஜெயதேவன் (பதிப்பாசிரியர்)

150ஆம் ஆண்டு வெளியீடு

© சென்னைப் பல்கலைக்கழகம்

முதல் பதிப்பு: அக்டோபர் 2007

விலை ரூ. 130/-

கணினி வடிவமைப்பு: திருமதி ஐ. ஜோசபின்

வடிவமைத்து அச்சிட்டோர்: ஸ்ரீ ராகவேந்திரா பிரஸ்
✆ 24614545, 24952913

வெளியிடுவோர்: பதிப்புத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை 600 005





# சென்னைப் பல்கலைக்கழகம்

சேப்பாக்கம் - சென்னை - 600 005





பேராசிரியர் சு. இராமச்சந்திரன்
M.Sc., Ph.D., Ph.D. (Miami)
துணைவேந்தர்


## அணிந்துரை

புத்தகங்கள் நாகரிகத்தைச் சுமந்து வருவன; அவை இன்றேல், வரலாறு ஓசையற்றுப் போகும்; இலக்கியம் ஊமையாகி விடும்; அறிவியல் ஊனப்பட்டு விடும்; சிந்தனையும் எதிர்காலக் கணிப்பும் இயக்கமற்று விடும் எனப் புத்தகம் பற்றிச் சரியாகக் கூறப்பட்டுள்ளது. நம் பாசத்திற்கும் நேசத்திற்கும் உரிய அன்னை நிறுவனமான சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டை அடையாளப்படுத்த... நினைவு நூல்கள் வெளியிடுவதை விடவும் சிறந்த நிலையான வேறுபணி என்ன இருக்கமுடியும்?

சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் அதன் இணைப்பு நிறுவனங்களின் ஆசிரியப் பெருமக்கள் படைத்த இந்த நூல் தொகுதிகளுக்கு முகவுரை வரைவது அருமையும் பெருமையும் சான்ற சிறப்பு. இந்நூல்கள் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு அர்ப்பணிப்புக்கும் நிலையான நினைவுப் பொருள்களாக அமையும் என்பதைக் கருத்திற்கொண்டு, இந்நூல்கள் அவற்றின் புத்தாக்க அணுகுமுறை, ஆய்வுத்தரம், நடைநலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு வெளியிடப்பெறுகின்றன.

நமது பெருநிறுவனத்தின் முன்னேற்றப்பாதையில் ஓர் இன்றியமையாத மைல் கல்லாக மட்டுமன்றி நமது நாட்டின் கல்விப் பாங்கிற்கு ஓர் உண்மையான, பொருண்மை மிக்க பங்களிப்பை இந்நூல்கள் நல்கும் என்று நம்புகிறேன்.

கல்விச் சமூகத்தினர், கூட்டுறவாளர்கள், பங்காளர்கள் அனைவருக்கும், அவர்கள் நல்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுகிறேன். சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழும் அக்டோபர் 9, 2007இல் வெளியிடத்தக்க வகையில் இந்நினைவு நூல்களை உருவாக்கிய ஏனைய அனைவரையும் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் செயல்படத் தொடங்கிய செப்டம்பர் 5, 1857 முதல் இன்றுவரை எத்தனையோ மாற்றங்களும் ஏற்றங்களும் பெற்றுப் பொலிவுடன் ஒளிர்கிறது. மேலும் பல சிறப்புகள் வரவுள்ளன என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க இதயம் இறும்பூது எய்துகிறது. அன்பார்ந்த வணக்கத்துடனும் மனமார்ந்த வாழ்த்துக்களுடனும்

**சு. இராமச்சந்திரன்**
அக்டோபர் 2007

# பதிப்புரை

அழகுக்காகவும் மதிப்புக்காகவும் மற்றும் பண்பாட்டுப் பழக்க வழக்கம் காரணமாகவும் அணிகலன்கள் அணியப்படுகின்றன. அவரவர் செல்வநிலைக்கேற்ப அவரவர் அணியும் அணிகலன்கள் செய்பொருளாலும் செய்முறையாலும் பண்பாட்டு நெறியாலும் மதிப்புநிலையாலும் அழகுநீர்மையாலும் வேறுபடுகின்றன. இத்தகைய அணிகலன்களுள் பல எழுத்து ஆவணங்களில் பதிவுபெற்றுள்ளன. இவற்றில் பதிவு பெறாது பேச்சு வழக்கில் வழங்குவன பல. எழுத்து, பேச்சு என்னும் இரு வழக்குகளினின்றும் அணிகலன்கள் குறித்த தகவல்களை அரிதின் முயன்று திரட்டிச் திருமதி ந. ஆனந்தி அவர்கள் இந்த அகராதியை உருவாக்கியுள்ளார். எனக்குத் தெரிந்தவரை எந்த மொழியிலும் அணிகலன்களுக்கெனத் தனி அகராதி இதுவரை வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது முதல் முயற்சி; முன்னோடி முயற்சி எனலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்ட வெளியீட்டு வரிசையில் தொல்காப்பிய அகராதி, சட்டச் சொல்லகராதி (தமிழ் - ஆங்கிலம்) ஆகியவற்றையடுத்து மூன்றாவது நூலாக **அணிகலன்கள் அகராதி: தமிழ் - தமிழ் - ஆங்கிலம்** வெளிவருகிறது. தமிழ் மக்கள் இந்நன் முயற்சியை வரவேற்று ஊக்கமும் ஆக்கமும் தருவார்கள் என நம்புகின்றேன். இந்த அகராதியின் நிறைகுறைகள் குறித்த மதிப்பீடுகளைப் பெரிதும் வரவேற்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி அணிசெய்த சென்னைப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு எனது இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள
வ. ஜெயதேவன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | ix |
| 2. | பயன்பட்ட நூல்கள் | xiii |
| 3. | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | xxiii |
| 4. | அகராதிப் பதிவின் அமைப்பு | xxv |
| 5. | அகராதி | 1 |

# முன்னுரை

ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாட்டு வளர்ச்சியில் முக்கிய இடம் வகிப்பவை ஆடை, அணிகலன்களாகும். தமிழ் நாட்டு மக்கள் பண்டுதொட்டே அழகு உணர்ச்சிமிக்கவர்களாகவும் ஒப்பனையில் ஈடுபாடு உடையவர்களாகவும் இருந்தனர் என்பதை இலக்கியங்கள் வழி அறியலாம்.

ஆதியில் மக்கள் செடி, கொடிகளின் இலை, தழை, பூ, காய், வித்து முதலியவற்றையும், பின் விலங்குகளின் பல், நகம் முதலியவற்றையும் அணிகலன்களாக அணிந்தனர். பெரும்பாலும் அவர்கள் வாழ்ந்த திணையில் விளையும் பொருட்களையே அணிகளாக அணிந்து வந்தனர் என்பதற்கு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. மேலும், தம்மை அழகுபடுத்திக் கொள்வதோடு மட்டுமன்றித் தாம் வணங்கும் தெய்வங்களுக்கும் அணிகலன்களை அணிந்து அழகுபடுத்தி மகிழ்ந்தனர். சான்றாகக், கொற்றவைக்கு மண்டை ஓடுகளாலான மாலையையும், சிவனுக்குப் பாம்பாகிய அணிகலன்களையும் சூட்டியதைக் கூறலாம்.

நாகரிக வளர்ச்சியின் பயனாகச் சங்கு, மணிகள், பிற உலோகங்கள் இவற்றைக் கொண்டு அணிகலன்கள் அமைக்கத் தொடங்கினர். இவ்வாறு நாகரிகம் வளர, வளர அணிகலன்கள் செய்வதற்கான பொருளும் வேலைப்பாடுகளும் மாறலாயின. இன்று பொன்னாலும் பொன்னினும் விலைமிக்க பிளாட்டினத்தாலும் செய்யப்படும் பலவகை அணிகலன்களும் பிற மலிவான உலோகங்களில் பொன்னைப் போன்றே வடிவமைக்கப்படும் அணிகலன்களும் மிகுதியாகி வருவதனை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

அணிகலன்கள் குறித்த வரலாற்றை அறிவதற்குப் பண்டைய இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலியன ஆதாரமாகத் திகழ்கின்றன. இவற்றின் மூலம் அக்கால அணிவகைகளின் பெயர், செய்பொருள், பயன்பாடு இவற்றையும் அக்கால மக்களின் நாகரிக வளர்ச்சியினையும் அறிய முடிகிறது.

சிற்பங்களும், ஓவியங்களும் அணிவகைகளின் உருவைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஆனாலும் அவற்றின் பெயரை அறிவிப்பன இலக்கியங்களும் கல்வெட்டுகளுமே ஆகும். இவற்றுள் இலக்கியங்கள், ஓர் அணி எங்கு, எதற்காக அணியப்படுகிறது என்பதனையும், அதன் பயனையும், சமூகத்தில் அதன் முக்கியத்துவத்தையும் விளக்கும் ஆவணங்களாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை உள்ள இலக்கியங்கள் பெரும்பாலும் மக்களுக்கான அணிவகைகள் குறித்த தகவல்களைத் தருகின்றன. சைவ, வைணவ இலக்கியங்கள் இறைவனின் திருமேனிகளுக்கு இடும் அணிவகைகளைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு, அணிவகைகள் இலக்கியங்களில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

அணிகலன்கள் செய்வதற்கு உதவும் பொன், வெள்ளி முதலான உலோகங்களின் பெயர்களையும் அணிகலன்களில் பதிக்க உதவும் மணிகளின் பெயர்களையும் மக்கள் தம் அன்றாட வாழ்வுடன் இணைத்துக் கொண்டுள்ளனர். இதனை, 'இரத்தினம், மாணிக்கம்' எனத் தங்களுக்குப் பெயர் வைத்துக் கொள்வதாலும் 'தங்கம், வைரம்' என அன்புமிகுதியால் குழந்தைகள் முதலியோரைக் கொஞ்சுவதாலும் அறியலாம்.

தமிழ்ப் புலவர்கள் தாம் படைத்த வெவ்வேறுகாலக் காப்பியங்களுக்கு அணிகளின் பெயரைச் சூட்டியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. சிலம்பு, மேகலை, சிந்தாமணி, குண்டலம், வளை எனும் ஐவகை அணிகளையும் தமிழன்னைக்குச் சூட்டியதாக அறிஞர்கள் கூறுவர். இதனினின்றும் தமிழ்மக்கள் வாழ்வில் அணிகலன்கள் பெற்றிருந்த இடத்தை உணரலாம்.

அணிகலன்கள் ஒப்பனைக்கு மட்டுமன்றிப் பல்வேறு பயன்பாடுகளுக்கும் உரியன என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. ஒப்பனை செய்வதற்கான இடத்தில் அணிகலன்களின் பெயரைக் குறிப்பிடுவது போலவே, பலவகை உணர்ச்சிகளைக் கூறும் இடங்களிலும் அணிகலன்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உதாரணமாக உடல் உறுப்பு நலன் அழிதலை அணிகலன்கள் மூலம் உணர்த்தும் முறையினை அகத்திணை இலக்கியங்களில் மிகுதியாகக் காணமுடிகிறது.

> துறைவன் பிரிந்தன நெகிழ்ந்தன
> வீங்கின மாதோ - தோழி - என்வளையே (ஐங்குறுநூறு : 192 : 3-4)

இப்பாடல் தலைவனது பிரிவால் வளைகள் நெகிழ்ந்தமையைச் சுட்டுகிறது.

இதுபோன்றே ஆண்கள் வீரத்தின் சின்னமாக அணிந்த 'கழல்' என்னும் அணிகலனையும்; தீய சக்தியிலிருந்து தன்னைக் காக்கும் என்னும் நம்பிக்கையில் மக்கள் அணிந்து வந்த தடையம், காப்பு, தாயித்து, ஐம்படைத்தாலி முதலான அணிவகைகளையும் இலக்கியங்கள் கூறுகின்றன.

சிலவகைச் சடங்குகளிலும் அணிகலன்கள் முக்கிய இடம் பெற்றுள்ளன. நற்றிணையின் பாடல் 'சிலம்பு கழி நோன்பு' எனும் சடங்கு பற்றிக் கூறுவதைக் காணலாம்.

> சிலம்பு கழீஇய செல்வம்
> பிறருணக் கழிந்தலன் ஆயிழை அடியே (நற்றிணை 279 : 9-10)

இப்பாடலில், தன் மகள் தலைவனோடு சென்றதைக் கேள்வியுற்ற தாய் ஒருத்தி மகளின் பிரிவினால் வருந்துகின்றாள். தன் மகளின் திருமணத்திற்கு முன்பு 'சிலம்பு கழி நோன்பு' எடுத்து அதனைப் பார்க்க முடியவில்லையே என்று அத்தாய் ஏங்குவதாக அமைந்துள்ளது. இதன்மூலம் 'சிலம்பு' எனும் அணி சடங்குகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குவதை அறியமுடிகிறது.

> அம்செம் சீறடி, அணிசிலம்பு ஒழிய
> மென்துகில் அல்குல் மேகலை நீங்க
> மங்கல அணியின் பிறிதணி மகிழாள் (சிலப்பதிகாரம் 4 : 48-50)

என்று தாலியினை மங்கல அணியாகச் சிலம்பு சிறப்பிக்கின்றது.

மணிகளால் (நவமணி) செய்யப்பட்ட அணிகலன்களை அணிவதன்மூலம் அதிர்ஷ்டம் வரும்; நோய் தீரும் என்றெல்லாம் நம்பிக்கைகள் இருந்து வந்தன. ஒருவரது அறிவு, திறமை இவற்றிற்குக் கொடுக்கும் பட்டம், பரிசுப் பொருளாகவும் அணிகலன்கள் (ஏனாதி) இருந்தன. மேலும், முதலீடு செய்வதற்குச் சிறந்த பொருளாகவும் இவை திகழ்ந்தன.

இவ்வாறு பல்வேறு பயன்பாடுகளை உடைய அணிகலன்கள் ஒரு மனிதனின் சமூக உயர்வைக் காட்டும் குறியீடாகவும் விளங்குகின்றன. மக்கள் தத்தம் நிலைக்கேற்பவும், இனத்துக்கேற்பவும் அணிகலன்களை அணிந்துவந்துள்ளனர். உதாரணமாக அரசன், அரசி முதலானோர் அணிந்த மணிமகுடம், ஆரம் முதலியனவற்றையும் பரவ மகளிர் அணிந்த எருக்கிலைஅணி, கொத்தமல்லிமணி முதலானவற்றையும் சைவர்கள் அணிந்த உருத்திராட்சக்கடுக்கன், மாலை முதலானவற்றையும் இசுலாமியப் பெண்கள் அணிந்த அலுக்குத்து எனும் காதணியையும் கூறலாம்.

இவ்வாறு பயன்பாடு, சமூக உயர்வு, இனப்பாகுபாடு எனப் பன்முக வரலாற்றினை உடைய சிறப்பு மிக்கவை அணிகலன்கள். இவற்றைக் குறித்து இலக்கியங்கள், நிகண்டுகள், அகராதிகள், கல்வெட்டுகள், பேச்சுவழக்கு முதலானவற்றுள் உள்ள செய்திகளைக் கொண்டு இவ்வகராதி தொகுக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் அணிகலன்கள் குறித்து வழங்கும் அனைத்துப் பெயர்களையும் இயன்றவரை உரிய விளக்கத்துடனும் சான்றுகளுடனும் தொகுத்துப் பதிவு செய்வது ஆகும்.

இந்த அடிப்படையில் அணிகலன்கள் குறித்த பெயர்களைத் தொகுப்பதற்கு நிகண்டுகளும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியும் பெரிதும் துணை புரிந்தன. மேலும் வேறு பல அகராதிகளும் சொற்களைத் தொகுப்பதற்கு உதவின.

இவற்றுள் உள்ள அணிகலன்கள் குறித்த சொற்களில் பெரும்பாலானவை போதுமான விளக்கம் இன்றி இருந்தன. இத்தகைய சொற்களுக்குப் பல்வேறு இலக்கியங்கள் மூலமும், அ. இராகவன் அவர்கள் எழுதியுள்ள 'தமிழ் நாட்டு அணிகலன்கள்' என்னும் நூலின் துணையாலும் சில விளக்கங்கள் கிடைத்தன.

பேரகராதியில் 'திரு' எனும் சொல்லை அடையாகக் கொடுத்துப் பல அணிகலன்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாகத் திருமங்கலநாண், திருக்குதம்பை, திருக்கண்டவாளி முதலியவற்றைக் கூறலாம். இவை அடை இன்றி இடம் பெறும் சொற்களின் (மங்கலநாண், குதம்பை, கண்டவாளி) பொருளிலிருந்து மாறுபடாது வழங்கியமையாலும், 'திரு' என்னும் அடை 'கடவுளுக்கு அணிவது' என்னும் பொருளை மட்டுமே குறித்தமையாலும், இவ்வகையான சில அணிகளின் பெயர்கள் பேரகராதியிலிருந்து தனிப்பதிவாக இவ்வகராதிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. மேலும், இதுபோன்று பேரகராதியில் உள்ள சில பெயரடைச் சொற்களும் (பொன் பட்டம், பொன் வளை, பைம்பூண், பொலங்குழை...) இவ்வகராதியில் தனிப்பதிவாக இடம்பெறவில்லை.

அணிகலன்களைச் செய்வதற்கு உதவும் பொன், வெள்ளி, முதலிய உலோகப் பெயர்களும் அவற்றில் பொருத்தப்படும் நவமணிகளின் பெயர்களும் இவ்வகராதியில் தொகுக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் மட்டுமன்றி சிலம்பு, சீவகசிந்தாமணி, பெருங்கதை முதலான காப்பியங்களில் குறிப்பிடப்படும் அணிகலன்கள், சைவ, வைணவ, இலக்கியங்களிலும், சிற்றிலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் அணிகலன்கள் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ளன. மேலும் பேரகராதியில் இடம்பெறாத நானூற்றுக்கும் மேற்பட்ட பதிவுகளோடு இவ்வகராதியில் மொத்தம் 2150 பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு இலக்கியங்கிளிலிருந்து தொகுக்கப்பட்ட அணிகலன்களுக்கு வரலாற்று அடிப்படையில் மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. இவை தவிர, அகராதிகளிலிருந்து தொகுக்கப்பட்டவற்றுக்கு இலக்கியச்சான்று இல்லாதிருப்பின் அகராதிகளே சான்றாகக் கொடுக்கப்பட்டுள்ளன. பேச்சு வழக்கிலிருந்து தொகுக்கப்பட்ட அணிகலன்கள் *(Loc.)* அல்லது *(Colloq.)* என்னும் வழக்குப் புலக்குறிப்புடன் சுட்டப்பட்டுள்ளன. தமிழக வட்டார வழக்குகளை ஐந்து பெரும் பகுப்புக்குள் அடக்கி, உரிய சுருக்கக் குறியீடுகள் உரிய இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைச் சுருக்கக் குறியீட்டு விளக்கம்வழித் தெளியலாம். இவ்வகராதியின் அமைப்பு முறை பக்கம் xxii இல் கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வகராதியில் தொகுக்கப்பட்ட பல சொற்களுக்குத் தெளிவான விளக்கங்கள் தெரியவில்லை. உதாரணமாக, அருவடச்சுரிவு, சுளிகை, காளிங்கம், கற்கண்டு முதலான பதிவுகளில் 'அணிகலன் வகை' என்னும் குறிப்பு மட்டுமே தரமுடிந்தது. இதுபோன்று, கர்ணபூரம், கரணிகம், காய்க்காரை, சூளிகை முதலான சில பதிவுகளுக்குக் காதணிவகை, கழுத்தணிவகை, தலையணிவகை என்னும் குறிப்புகளே தரமுடிந்தன. இந்த அகராதியைப் பயன்படுத்தும் அறிஞர்கள் மேற்கூறிய அணிகலன்கள் குறித்த தெளிவான விளக்கம் அளிப்பின் அது இவ்வகராதியைச் செம்மைப்படுத்துவதற்கும், திருத்தப்பெறும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியில் பதிவு செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

இவ்வகராதி வெளிவருதவதற்கு வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், குறிப்பாக, என்னை இந்நூல் உருவாக்கத் தூண்டி, அச்சுப்படியில் உள்ள பிழைகளைத் திருத்தம் செய்து, அதற்கான காரணத்தையும் விளக்கி, இதனைச் செறிவாக்கப் பெரிதும் துணைநின்றதோடு சிறப்பாகப் பதிப்பித்துதவிய தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கான முதன்முயற்சியாக அட்டைகளில் எழுதப்பெற்ற பதிவுகளைத் திருத்தியதுடன், தேவையற்ற பதிவுகளை நீக்குவதற்கும் வழிகாட்டிய திரு ப.வெ. நாகராசன் அவர்களுக்கும் சில பதிவுகளுக்கான ஆங்கில விளக்கங்களைச் செறிவாக்க உதவிய திரு கு. சிவமணி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வப்போது எழும் ஐயங்களைக் களைய உதவிய முனைவர் மு. பாலகிருஷ்ணன், முனைவர் ந. இராணி மற்றும் நண்பர் வை. சிவநேசன் ஆகிய மூவருக்கும், இந்நூலுக்குப் பல வகைகளிலும் உதவிய திரு இல. கணேசன், திருமதி ந. சுமதி, திரு ஹ. கணேஷ்பிரசாத், திரு அ. செந்தில் நாராயணன் ஆகிய நண்பர்களுக்கும் என் நன்றிகள் உரியன.

இவ்வகராதியைக் கணிப்பொறியில் விரைவாகவும், பிழையின்றியும், அழகுடனும் வடிவமைக்க உதவியர் திருமதி ஐ. ஜோசபின் அவர்கள். திரும்பத்திரும்ப மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோதும் பொறுமையுடன் பிழைகளை ஊன்றிக் கவனித்து மாற்றி அமைத்தார். அவருக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை - 600 005
11.05.2005

**ந. ஆனந்தி**

# பயன்பட்ட நூல்கள்

| நூலின் குறுக்கம் | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| அகநா. | அகநானூறு | சங்கப்புலவர்கள் | சென்னை: மர்ரே அண்டு கம்பெனி, 1958. |
| அக.நி. | அகராதி நிகண்டு | சிதம்பர ரேவண சித்தர் | மதுரை : தமிழ்ச்சங்க முத்திராசாலை 1921. |
| அப்பாண்டை. உலா. | அப்பாண்டை நாதர் உலா | அனந்தவிசயர் | சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1974. |
| அபிதா. மாலை | அபிதான மணிமாலை | திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூலகம், 1988. |
| அரிச். பு. | அரிச்சந்திர புராணம் | ஆசுகவிராஜர் | வித்தியா ரத்நாகர அச்சுக்கூடம், 1913. |
| அரிச். வெ. | அரிச்சந்திர வெண்பா | | திருவனந்தபுரம்: திருவாங்கூர்ச் சருவகலாசாலை, தமிழ்ப்பதிப்பு, |
| அரு. நி. | அரும்பொருள் விளக்க நிகண்டு | அருமருந்தைய தேசிகர் | மதுரை : தமிழ்ச்சங்க முத்திரா சாலை, 1931. |
| அருட்பா. | திருவருட்பா | இராமலிங்க சுவாமிகள் | சென்னை: சூளை, கோள்டன் அச்சியந்திரசாலை, பராபவஹு புரட்டாசிமீ, 1906. |
| அழகர்கல. | அழகர்கலம்பகம் | சாமிகவிகாளருத்திரர் | மதுரை: தமிழ்ச்சங்கம் |
| ஆ. நி. | ஆசிரிய நிகண்டு | ஆண்டிப்புலவர் | தஞ்சாவூர்: சரசுவதிமகால் நூல்நிலையம், 1975. |
| ஆ.வி.அக. | ஆனந்த விகடன் அகராதி | | சென்னை: ஆனந்த விகடன் வெளியீடு, 1935. |
| ஆதியுலா. | பதினொராந் திருமுறை திருக் கைலாய ஞான உலா | சேரமான் பெருமாள் நாயனார் | சென்னை: சாது அச்சுக்கூடம், 1933. |
| ஆதியூரவதானி | ஆதியூரவதானி சரித்திரம் | சேஷையங்கார் | சென்னை: கலா ரத்நாகரம் அச்சுக்கூடம், சார்வரிஹு, ஆவணிமீ |
| ஆனந்த.வண்டு. தூது | கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டு விடுதூது | கச்சியப்ப முனிவர் | சென்னை: கேசரி அச்சுக்கூடம் 1931. |
| இரகு. | இரகுவமிசம் | அரசகேசரி | யாழ்ப்பாணம்: வித்தியானுபாலன யந்திரசாலை, 1887. |
| இராமநா. | இராமநாடகம் | அருணாசலக்கவிராயர் | சென்னை: பூமகள் விலாச அச்சுக்கூடம், 1911. |
| இராஜராஜ. உலா. | இராஜ ராஜ சோழன் உலா | ஒட்டக்கூத்தர் | சென்னை: சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், 1974. |
| இலக். அக. | இலக்கியச் சொல்லகராதி | குமாரசுவாமி பிள்ளை | சென்னைப்பட்டணம்: வித்தியா நுபாலன யந்திர சாலை, ஆனந்தஹு ஐப்பசிமீ. |
| இளைஞர் இலக். | இளைஞர் இலக்கியம் | பாரதிதாசன் | சென்னை: பாரிநிலையம், 1958. |

| நூற் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| இறை. | இறையனாரகப் பொருள் | கணக்காயனார் மகனார் நக்கீரனார் | திருநெல்வேலி: சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 1953. |
| ஈடு. | திருவாய்மொழி | நம்பிள்ளை | சென்னை: சென்னைப்பல்கலைக் கழகம், மூன்றாம் பதிப்பு, 1971. |
| உபதேசகா. | உபதேசகாண்டம் | குகனேரியப்பநாவலர் | சென்னை: கலாரத்நாகர அச்சுக்கூடம் அஅளஞ |
| எங்களூர் | எங்களூர் | கோவிந்தசாமிராசு | சென்னை: கார்டியன் அச்சுக்கூடம் 1925. |
| ஐங்குறு. | ஐங்குறுநூறு | சங்கப்புலவர்கள் | சென்னை: மர்ரே அண்டு கம்பெனி, 1957. |
| கந்தபு. | கந்தபுராணம் | கச்சியப்பசிவாசாரியார் | திருப்பனந்தாள்: திருப்பனந்தாள் காசிமடத்து வெளியீடு, 1952. |
| கப்பற்கோ. | கப்பற்கோவை | | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூலகம், 1958. |
| கம்பரா. | கம்பராமாயணம் | கம்பநாட்டாழ்வார் | சென்னை: கம்பன் கழகம், 1976. |
| கம்பரா. ... வை.மு.கோ | கம்பராமாயணம் - பாலகாண்டம் | கம்பநாட்டாழ்வார் | சென்னை: வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியர் கம்பெனி, 1964. |
| கயா. | கயாதர நிகண்டு | கயாதரர் | சென்னை: சென்னைப்பல்கலைக் கழகம், 1939. |
| கல்.கலை.அக. | கல்வெட்டு கலைச்சொல் அகரமுதலி | சி. கோவிந்தராசன் | மதுரை: மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1987. |
| கல்.சொல்.அக. | தமிழ்க் கல்வெட்டுக் சொல்லகராதி | | சென்னை: சாந்திசாதனா முதல் தொகுதி - 2002 இரண்டாம் தொகுதி - 2003. |
| கல்லா. | கல்லாடம் | கல்லாடனார் | மதராஸ்: ரிப்பன் அச்சியந்திரசாலை, 1911. |
| கலிங். | கலிங்கத்துப்பரணி | சயங்கொண்டான் | சென்னை: உமா பதிப்பகம், 1998. |
| கலித். | கலித்தொகை | சங்கப்புலவர்கள் | தஞ்சாவூர்: தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1984. |
| கலைசைச். | கலைசைச் சிலேடை வெண்பா | தொட்டிக்கலைச் சுப்பிரமணிய புலவர் | தஞ்சாவூர்: கல்யாண சுந்தரம் முத்திரா சாலை, 1908. |
| கார்.நாற். | கார்நாற்பது | மதுரைக் கண்ணங் கூத்தனார் | சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மறுபதிப்பு, 1997. |
| காளத்.உலா | திருக்காளத்தி நாதருலா | சேறைக்கவிராச பிள்ளை | சென்னை : வைஜந்தி அச்சுக்கூடம் 1904. |
| குமர.பிர. | குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு | குமரகுருபர சுவாமிகள் | சென்னை: கலாரத் நாகர அச்சுக் கூடம், சுபகிருதுஞூ, தைமீ, இரண்டாம்பதிப்பு. |
| குருகூர்ப். | குருகூர்ப்பள்ளு | சடகோபப்புலவர் | The Madras Law Journal press, Mylapore, Madras, 1932. |

| நூலின் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| குருபரம். | குருபரம்பராப்ரபாவம் (ஆறாயிரப்படி) | பின்பழகிய பெருமாள் ஐயர் | சென்னை: கணேச அச்சுக்கூடம் பராபவஹு, கார்த்திகைமீ. |
| குலோத். உலா. | குலோத்துங்க சோழன் உலா. | ஒட்டக்கூத்தர் | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 1946. |
| குலோத்.கோ. | குலோத்துங்க சோழன் கோவை | ஒட்டக்கூத்தர் | மதுரை: விவேகபாநு அச்சியரந்திர சாலை, 1910. |
| குலோத். பிள்ளைத். | குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் | ஒட்டக்கூத்தர் | தஞ்சாவூர் : தஞ்சை சரசுவதிமகால் 1974. |
| குற்றா.குற. | திருக்குற்றாலக் குறவஞ்சி | திரிகூடராசப்பன் கவிராச மூர்த்திகள் | மதுரை: விவேகபாநு அச்சியந்திர சாலை, 1912. |
| குற்றா.தல. | திருக்குற்றாலத் தலபுராணம் | திருகூடராசப்பன் கவிராச மூர்த்திகள் | மதுரை: விவேகபாநு அச்சியந்திர சாலை, சாதாரணஹு ஆவணிமீ |
| குறள் | திருக்குறள் | திருவள்ளுவர் | சென்னை: சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1982. |
| குறுந். | குறுந்தொகை | சங்கப்புலவர்கள் | சென்னை: மர்ரே அண்டு கம்பெனி 1957. |
| கூளப்ப. | கூளப்ப நாயக்கன் காதல் | சுப்பிரதீபக்கவிராயர் | சென்னை: விவேக விளக்க அச்சுக்கூடம் |
| கொண்டல்விடு. | கொண்டல் விடுதூது | | |
| கோவ.க. | கோவலன் கதை | | |
| சரவண.பணவிடு. | பணவிடு தூது. | சரவணப்பெருமாள் கவிராயர் | சென்னை: சாது அச்சுக்கூடம் 1934. |
| சி.சி. | சிவஞான சித்தியார் சுபஷம் | அருணந்தி சிவாசாரியர் | சென்னை: சிவஞானபோத யந்திர சாலை, சர்வதாரிஹு, வைகாசிமீ |
| சிங்.சிலே. | சிங்கச் சிலேடை வெண்பா | நமச்சிவாயப் புலவர் | சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1965. |
| சித்.சா. | சித்தாந்தசாராவளி | திரிலோசன சிவாசாரியர் | சென்னை: சிந்தாதிரிபேட்டை சிவஞான போதயந்திர சாலை, சர்வஜித்ஹு, தைமீ |
| சிலப். | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | சென்னை: கமர்ஷியல் அச்சுக்கூடம் இரண்டாம்பதிப்பு, 1920. |
| சிலப். ... அரும். | சிலப்பதிகாரம் அரும்பதவுரை | | |
| சிலப். ... அடியார். | சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரை | | |
| சிவரக. | சிவரகசியம் | ஒப்பிலாமணிதேசிகர் | திருச்செங்கோடு: சுப்பராய கவண்டர் அச்சியந்திரசாலை, ஜெயஹு, ஆனிமீ |
| சிற்.செந். | சிற்பச் செந்நூல் | வை.கணபதித்தபதி | சென்னை: தொழில்நுட்பக்கல்வி இயக்கம், 1978. |

| நூலின் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| சிறுபாண். | பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க் கினியருரையும் சிறுபாணாற்றுப்படை | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் | சென்னை கேசரி அச்சுக்கூடம் பிரஜோத்பத்தி௵, ஆவணி௴ மூன்றாம்பதிப்பு 1931. |
| சினேந். | சினேந்திரமாலை | சைனமாமுனிவர் | சென்னை: தனலக்ஷ்மி நர்த்தன அச்சியந்திரசாலை, 1906. |
| சீகாழிக்.கோ. | சீகாழிக்கோவை | மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை | வைஜயந்தி அச்சுக்கூடம், 1903. |
| சீகாழித். | சீகாழித்தலபுராணம் | அருணாசலக்கவிராயர் | சென்னை: ஜீவரஷாமிர்த அச்சுக்கூடம், விஜய௵, மாசி௴ |
| சீகாளத்.பு. | சீகாளத்தி புராணம் | சிவப்பிரகாச சுவாமிகள் கருணைப் பிரகாச சுவாமிகள் | சென்னை: மெமோரியல் அச்சுக் கூடம், சர்வதாரி௵, கார்த்திகை௴ |
| சீதக். | சீதக்காதி நொண்டி நாடகம் | | |
| சீவக. | சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க் கினியருரையும் | திருத்தக்கதேவர் | சென்னை: கபீர் அச்சுக்கூடம் ஏழாம்பதிப்பு, 1969. |
| சூடா. | சூடாமணி நிகண்டு | மண்டல புருடன் | சென்னை: சாந்தி சாதனா, 2004. |
| சூளா. | சூளாமணி | தோலாமொழித்தேவர் | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூலகம், இரண்டாம் பதிப்பு 1962. |
| செந்.சொற். | செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகரமுதலி | ஞா. தேவநேயப் பாவாணர் | சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், பகுதி - 1 - 1985 |
| சென்னி.ஆற்றுப் | சென்னிமலை முருகன் புலவராற்றுப் படை | வெ.ரா. தெய்வசிகா மணிக் கவுண்டர் | சென்னிமலைத் தலபுராண வெளியீட்டுக் குழுவினர், 1966. |
| சைவச. | சைவசமயநெறி | மறைஞானசம்பந்த நாயனார் | சென்னைப்பட்டணம்: வித்தியாநு பாலன யந்திரசாலை, கீலக௵, ஆடி௴, ஐந்தாம்பதிப்பு |
| சொக்க.உலா. | மதுரைச் சொக்க நாதருலா | புராணத் திருமலை நாதர் | சென்னை: கேசரி அச்சுக்கூடம் 1931. |
| ஞானா. | ஞானாமிர்தம் | வாகிசமுனிவர் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திரா சாலை, 1904. |
| த.நா.அ. | தமிழ்நாட்டு அணிகலன்கள் | அ. இராகவன் | திருநெல்வேலி: கலைநூற் பதிப்பகம் 1970. |
| த.மொ.அக. | தமிழ்மொழி அகராதி | நா. கதிரைவேற் பிள்ளை | சென்னை: சாரதா பதிப்பகம், 2003. |
| தக்கயாகப். | தக்கயாகப்பரணி மூலமும் உரையும் | ஒட்டக்கூத்தர் | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூலகம், 1960. |
| தஞ்சைவா. | தஞ்சைவாணன் கோவை | பொய்யாமொழிப்புலவர் | சென்னை: அமேரிக்கன் அச்சுக்கூடம் 1893. |
| தண்டலை.சத. | தண்டலையார் சதகம் | படிக்காசுப் புலவர் | மதராஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை 1905. |

| நூலின் குறுக்கக் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| தண்டி. | தண்டியலங்காரம் மூலமும் பழைய உரையும் | தண்டியாசிரியர் | சென்னை: வை.மு.கோபாலகிருட்டிண மாசாரியர் கம்பெனி, 1973. |
| தமிழறி. | தமிழறியும் பெருமாள் கதை | | மதராஸ் ரிப்பன் அச்சியந்திரச்சாலை 1922. |
| தனிப்பா. | தனிப்பாடற்றிரட்டு (முதற்பாகம் & இரண்டாம்பாகம்) (உடையுடன்) | உரையாசிரியர்: அ. மாணிக்கம் | சென்னை: பூம்புகார் பதிப்பகம் 1996. |
| தாசீல்தார் நா. | தாசீல்தார் நாடகம் | காசிவிசுவநாத முதலியார் | இசுடார் ஆப் இந்தியா பிரசு, 1868.. |
| திணை.நூற். | திணைமாலை நூற்றைம்பது | கணிமேதாவியார் | சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1979. |
| திருக்காவ. கலம். | திருக்காவலூர்க் கலம்பகம் | வீரமாமுனிவர் | குடந்தை: வேதநாயகர் இலக்கிய மன்றம், 1975. |
| திருக்காளத்.பு. | திருக்காளத்திப் புராணம் | ஆனந்தக்கூத்தர் | சென்னை: வைஜயந்தி அச்சுக்கூடம், 1912. |
| திருத். திருவந். | திருத்தொண்டர் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி | சென்னைப்பட்டணம்: வித்தியாநு பாலன யந்திரசாலை, சாதாரண௵, கார்த்திகை௴. |
| திருநூற். | திருநூற்றந்தாதி | அவிரோதியாழ்வார் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திரா சாலை, 1905. |
| திருப். | திருப்புகழ் | அருணகிரிநாதர் | சென்னை: சைவசித்தாந்த மகா சமாஜம், 1935. |
| திருமந். | திருமந்திரம் | திருமூலநாயனார் | சென்னை: உமா பதிப்பகம், 2003. |
| திருமயிலையுலா | திருமயிலையுலா | திருமயிலை சண்முகம் பிள்ளை | சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1983. |
| திருமலைமுரு. பிள். | திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் | கவிராச பண்டாரத் தண்ணா | சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1935. |
| திருமுரு. | பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க் கினியருரையும் திருமுருகாற்றுப்படை | நக்கீரர் | சென்னை கேசரி அச்சுக்கூடம் பிரஜோத்பத்தி௵, ஆவணி௴ மூன்றாம்பதிப்பு 1931. |
| திருவகுப்பு | திருவகுப்பு | அருணகிரிநாதர் | சென்னை: சைவசித்தாந்த மகாசமாசம் 1935. |
| திருவரங்கத்தந். | திருவரங்கத்தந்தாதி | பிள்ளைப் பெருமாளையங்கார் | மதராஸ், ரிப்பன் அச்சியந்திரசாலை, 1904. |
| திருவாச. | திருவாசகம் | மாணிக்கவாசக சுவாமிகள் | சென்னை: சைவசித்தாந்தப் பெருமன்றம், 2ம்பதிப்பு 1988. |
| திருவாலவா. | திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் | பெரும்பற்றப் புலியூர் நம்பி | சென்னை: கபீர் அச்சுக்கூடம் மூன்றாம்பதிப்பு: விரோதிகிருது௵ மார்கழி௴, 1972. |

| நூலின் சுட்டுக் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| திருவாரூரு. | திருவாரூருலா | அந்தகக் கவி வீரராகவ முதலியார் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திரா சாலை, 1910. |
| திருவானைக். | திருவானைக்காப் புராணம் | கச்சியப்ப சுவாமிகள் | சென்னை: ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடம், 1908. |
| திருவிசைப். | திருவிசைப்பா | திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்திநம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதனார், புரோடோத்தம நம்பி, சேதிராயர். | திருப்பனந்தாள்: திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, 1974. |
| திருவிளை. | திருவிளையாடற் புராணம் | பரஞ்சோதி முனிவர் (5 தொகுதி) | சென்னை: வர்த்தமானன் பதிப்பகம் 1998. |
| திவ். | நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் | ஆழ்வார்கள் | சென்னை: B. இரத்தின நாயகர் ஸன்ஸ், 1968. |
| திவ். | நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் | ஆழ்வார்கள் | மதராஸ் : கோல்டன் ஸ்டீம் பிரஸ், பிரதாபிஷு. |
| அமலனாதி. | அமலனாதிபிரான் | திருப்பாணாழ்வார் | |
| சிறிய.ம. | சிறிய திருமடல் | திருமங்கையாழ்வார் | |
| திருநெடுந். | திருநெடுந்தாண்டகம் | திருமங்கையாழ்வார் | |
| திருப்பா. | திருப்பாவை | ஆண்டாள் | |
| நாய்ச். | நாய்ச்சியார் திருமொழி | ஆண்டாள் | |
| பெரியதி. | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் | |
| பெரியாழ். | பெரியாழ்வார் திருமொழி | பெரியாழ்வார் | |
| திவா. | சேந்தன் திவாகரம் | சேந்தனார் | சென்னை: சாந்தி சாதனா, 2004. |
| தெய்வச்.விறலி. | தெய்வச்சிலையார் விறலிவிடுதூது | குமாரசுவாமி அவதானி | பி.என். அச்சகம், சென்னை, 1936. |
| தேவா. | தேவாரம்: | | சென்னை: திருவருளகம், 1953 |
| | " திருமுறை 1,2,3 | திருஞானசம்பந்த மூர்த்திகள் | |
| | " " 4,5,6 | திருநாவுக்கரசு சுவாமிகள் | |
| | " " 7 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | |
| தொல் | தொல்காப்பியம் | தொல்காப்பியர் | திருவனந்தபுரம்: பன்னாட்டு திராவிட மொழியியற் கழகம், 1996. |
| தொல்.எழுத். ... நச்சர். | தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை | | சென்னை: தமிழ்மண் பதிப்பகம் 2003. |

| நூல் சுருக். குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| தொல். பொ. ...நச்சர். | தொல்காப்பியம் - பொருளதிகாரம் நச்சினார்க்கினியருரை | நச்சினார்க்கினியர் | சென்னை: தமிழ்மண் பதிப்பகம் 2003. |
| நற். | நற்றிணை | சங்கப்புலவர்கள் | சென்னை: மர்ரே அண்டு கம்பெனி 1957. |
| நல்ல.கதை | நல்லதங்காள் கதை. | புகழேந்திப்புலவர் | சென்னை: சிரீமகள் கம்பெனி, 1973. |
| நாகை. கனக. உலா | நாகைக் கனகசபை நாதன் உலா | | தஞ்சாவூர்: சரசுவதி மகால் நூலகம் 1995. |
| நாநார்த்த. | நாநார்த்த தீபிகை | கவிராயர் முத்துசுவாமி பிள்ளை | சென்னை: சென்னைச் சர்வகலாசாலை 1936. |
| நாமதீப. | நாமதீப நிகண்டு | சிவசுப்பிரமணியக் கவிராயர் | தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம் மறுபதிப்பு 1985. |
| நாலடி. | நாலடியார் | சமணமுனிவர்கள் | சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 9ம்பதிப்பு-1992. |
| நித்தியா. | நித்தியானு சந்தானம் | | சென்னை: கணேச அச்சுக்கூடம் 1920. |
| நெடுநல். | பத்துப்பாட்டு: நெடுநல்வாடை | நக்கீரர் | சென்னை: கேசரி அச்சுக்கூடம், பிரஜோத்பத்திஹு, ஆவணிமீ, மூன்றாம் பதிப்பு 1931. |
| நைடத. | நைடதம் | அதிவீரராம பாண்டியன் | சென்னை: மகராணி, 1991. |
| பஞ்ச. | பஞ்சதந்திரப் பாடற்கதை | வீரமார்த்தாண்ட தேவர் | சென்னை: மனோன்மணி விலாச அச்சுக்கூடம், 1906. |
| பணவிடு. | பணவிடுதூது (மாதைத்திருவேங்கட நாதர் பேரில்) | | மதராஸ்: ரிப்பன் அச்சியந்திரசாலை 1908. |
| பதார்த்த. | பதார்த்தகுண சிந்தாமணி | பதினென் சித்தர் | சூளை: கோபாலவிலாச அச்சியந்திர சாலை, 1908. |
| பதிற்றுப் | பதிற்றுப்பத்து | குமட்டூர்க் கண்ணனார், பாலைக்கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார். | சென்னை: மர்ரே அண்டு கம்பெனி 1957. |
| பதினொ. | பதினொறாந் திருமுறை | திருவாலவாயுடையார், காரைக் காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவ நாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், பட்டணத்துப் பிள்ளையார், நம்பி யாண்டார்நம்பி | சென்னை: சைவசித்தாந்த மகா சமாஜம், சாது அச்சுக்கூடம், 1933. |

| நூலின் குறு குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| ஆளுடை. திருவந். | ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | நம்பியாண்டார் நம்பி. | |
| கோயினான் மணி | கோயினான்மணி மாலை | பட்டணத்துப் பிள்ளையார் | |
| பரிபா. | பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும் | சங்கப்புலவர்கள் | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், ஆறாம்பதிப்பு 1995. |
| பாகவ. | பாகவதம் | செவ்வைச்சூடுவார் | ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடம் 1908. |
| பாரிகாதை | பாரிகாதை | ரா.இராகவையங்கார் | அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1978. |
| பிங். | பிங்கல நிகண்டு | பிங்கல முனிவர் | சென்னை: சாந்திசாதனா, 2004. |
| பிரதாப. விலா. | பிரதாபசந்திர விலாசம் | இராமசாமிராசு | சென்னை: சரசுவதி நிலைய அச்சகம் 1915. |
| பிரபுலிங். | பிரபுலிங்கலீலை | சிவப்பிரகாச சுவாமிகள் | சென்னை: கலாரத்நாகர அச்சுக்கூடம் இரண்டாம்பதிப்பு, 1905. |
| பிரபோத. | பிரபோதசந்தி ரோதயம் | மாதைத் திருவேங்கட நாதர் | பெரியகுளம் : ஸ்ரீமீனாம்பிகை அச்சியந்திரசாலை, பரிதாபிஸு, தைமீ, இரண்டாம்பதிப்பு. |
| பிரமோத். | பிரமோத்தரகாண்டம் | வரதுங்கராம பாண்டியன் | சென்னை: ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலை, 1907. |
| பு.வெ | புறப்பொருள் வெண்பாமாலை | ஐயனாரிதனார் | சென்னை: வைஜயந்தி அச்சுக்கூடம் இரண்டாம்பதிப்பு, 1915. |
| புறநா. | புறநானூறு | சங்கப்புலவர்கள் | சென்னை: லாஜர்னல் அச்சுக்கூடம் மூன்றாம்பதிப்பு, யுவஸு, மார்கழிமீ, 1935. |
| பெண். தாலாட். | தாலாட்டுப் பிரபந்தம் பெண்பிள்ளை தாலாட்டு | | சென்னை: ரிப்பன் அச்சியந்திரசாலை 1908. |
| பெண்மதி மாலை | பெண்மதிமாலை | வேதநாயகம் பிள்ளை | சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1978. |
| பெரியபு. | பெரியபுராணம் | சேக்கிழார் | திருப்பனந்தாள்: திருப்பனந்தாள் காசிமடவெளியீடு, 1970. |
| பெருங். | பெருங்கதை | கொங்குவேளிர் | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 1968. |
| பெருஞ்.அக. | பெருஞ்சொல்லகராதி (4 தொகுதி) | | தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988. |
| பெரும்பாண். | பத்துப்பாட்டு: பெரும்பாணாற்றுப்படை | உருத்திரங்கண்ணனார் | சென்னை: கேசரி அச்சுக்கூடம், பிரஜோத்பத்திஸு, ஆவணிமீ, மூன்றாம் பதிப்பு 1931. |
| மச்சபு. | மச்சபுராணம் | வடமலையப்ப பிள்ளையன் | சென்னை: மினெர்வா அச்சியந்திரசாலை, 1900. |

| நூலின் சுருக்கக் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| மணி. | மணிமேகலை மூலமும் அரும்பத வுரையும் | சீத்தலைச் சாத்தனார் | சென்னை: கபீர் அச்சுக்கூடம் ஆறாம்பதிப்பு குரோதிஞூ, மாசிமீ, 1965. |
| மதி.கள. | மதிமோசக்களஞ்சியம் | பெ.கூ. பாலராஜ பாஸ்கரர் | ஷண்முகானந்த புத்தகசாலை, 1925. |
| மதுரைக். | பத்துப்பாட்டு: மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் | சென்னை: கேசரி அச்சுக்கூடம், பிரஜோத்பத்திஞூ, ஆவணிமீ, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மதுரைத்.அக. | மதுரைத் தமிழ்ப் பேரகராதி(2தொகுதி) | | சென்னை: சந்தியாபதிப்பகம், 2004 |
| மலை. | வைத்திய மலையகராதி | பதினெண் சித்தர் | சென்னை: ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக்கூடம், 1907. |
| மலைபடு. | பத்துப்பாட்டு: மலைபடுகடாம் | இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் | சென்னை: கேசரி அச்சுக்கூடம், பிரஜோத்பத்திஞூ, ஆவணிமீ, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மீனாட். பிள்ளைத். | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | குமரகுருபரசுவாமிகள் | சென்னை: கலாரத்நாகர அச்சுக்கூடம் சுபகிருதுஞூ, தைமீ, இரண்டாம்பதிப்பு |
| முத்தை. குறவ. | முத்தையேந்திரர் குறவஞ்சி | மாம்பழக்கவிச்சிங்க நாவலர் | சென்னை: தொல்பொருள் ஆய்வுத் துறை, 1997. |
| முல்லைப் | பத்துப்பாட்டு: முல்லைப்பாட்டு | நப்பூதனார் | சென்னை: கேசரி அச்சுக்கூடம், பிரஜோத்பத்திஞூ, ஆவணிமீ, மூன்றாம் பதிப்பு, 1931. |
| மூ.அ. | வைத்திய மூலிகை விரிவகராதி | பதினெண்சித்தர் | சென்னை: வித்தியாரத்நாதர அச்சுக்கூடம், 1902. |
| யாழ்.அக. | யாழ்ப்பாணத்து மானிப்பாயகராதி | சந்திரசேகரப்புலவர் | அமெரிக்கன் மிசன் அச்சகம், யாழ்ப்பாணம், 1842. |
| ரஹஸ்ய. | ரஹஸ்யத்ரயஸார ஸாரம் | ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் | ரஹஸ்யத்ரபஸார ப்ரசாரணஸபை, கோமளேசுவரன்பேட்டை, 1920. |
| வடமலை. | வடமலை நிகண்டு | ஈசுவரபாரதி | சென்னை: உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 1983. |
| வருணா.குற. | வருணா குறவஞ்சி | தில்லைவிடங்கன் மாசி முத்தாப் பிள்ளை | வெண்பாப்புலிவேலுசாமிப்பிள்ளை 1918. |
| வள்ளுவமா. | திருவள்ளுவமாலை | சங்கப்புலவர்கள் | சென்னைப்பட்டணம்: வித்தியாநு பாலன யந்திரசாலை, சௌமியஞூ, வைகாசிமீ. |
| வாழ்வி. களஞ். | வாழ்வியல் களஞ்சியம் | | தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகம் 1986. |
| விக்கிரம. உலா. | விக்கிரமசோழனுலா | ஒட்டக்கூத்தர் | மதுரை: தமிழ்ச்சங்க முத்திராசாலை, 1914. |
| விதான. | விதானமாலை | நாராயணசுவாமிகள் | மதராஸ் : ரிப்பன் அச்சியந்திரசாலை, 1900, இரண்டாம்பதிப்பு. |
| வில்லி. | மகாபாரதம் | வில்லிப்புத்தூரார் | சென்னை: வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார் கம்பெனி, 1960 |

| நூலின் குறுக்கக் குறிப்பு | நூல் | ஆக்கியோர்: தொகுத்தோர்: பதிப்பித்தோர் | பதிப்பித்த இடமும் காலமும் |
|---|---|---|---|
| விறலிவிடு. | விறலிவிடுதூது | சுப்பிரதீபக் கவிராயர் | கல்வி விளக்க அச்சுக்கூடம், துர்முகிஇு, மார்கழிமீ |
| வேத.சூடா. | வேதகிரியார் சூடாமணி நிகண்டு | | சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1997. |
| ஜீவ. | ஜீவசம்போதனை | | சென்னை: சிரீசைனசித்தாந்த நூல்நிலையம், 1957. |
| E.T. | Castes and Tribes of South India | Edgar Thurston | The Government Press, Madras, 1909. |
| F. | A Malabar and English Dictionary | Johann Philip Fabricius and John Christian Breithaupt. | Vepery, Madras, 1809. |
| M.E.R. | Madras Epigraphical Reports | Madras Government Publication | Government Press, Madras. |
| H.C.M. | Hindu Caste Marks and ornaments of the Madras | W. Rae Sheriffs | Madras Christian College Magazine, September 1913. |
| I.M.P. | Inscriptions of the Madras Presidency | Madras Government Publication | Government Press, Madras, 1919. |
| I.P.S. | Inscriptions of the Pudukkottai state | Published by the Pudukottai state | Sri. Brhadamba state press, Pudukkottai, 1929. |
| R. | A Dictionary of the Tamil English Languages | Rottler, Dr. | Vepery, 1834-37. |
| S.I.I. | South Indian Inscriptions | Madras Government Publications | Government Press, Madras. |
| T.A.S. | Travancore Archaeological Series | Travancore Government Publications | Methodist Publishing House, Madras, 1910-13. |
| T.D.I. | Tirupati Devasthanam Inscriptions | | Tirumala-Tiruptati Devasthanam Epigraphical series |
| G... D. | Gazetteer.. District | Madras Government Publications | Government Press, Madras. |
| W. | A comprehensive Tamil English Dictionary | Winslow, M. | The American Mission Press, Madras, 1862. |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| அடிக். | அடிக்குறிப்பு |
| க.வா. | கடவுள் வாழ்த்து |
| ப. | பக்கம் |
| பி-ம். | பிரதிபேதம் |
| C.D. | Centre Dialect |
| cf. | Compare |
| Colloq. | Colloquial |
| Corr. | Corruption |
| E.D. | East Dialect |
| J. | Jaffna Dialect |
| Loc. | Local Usage |
| n. | noun |
| N.D. | North Dialect |
| Parav. | Paravar Usage |
| perh. | perhaps from |
| prob. | probably, probably from. |
| R.C. | Roman Catholic Usage |
| S.D. | South Dialect |
| Vul. | Vulgar usage |
| W.D. | West Dialect |

# அகராதிப் பதிவின் அமைப்பு

→ தலைச்சொல்

அரி ari, *n.* < *அர்.* → வேர்ச்சொல்

1. சிலம்பின் பரல்; Pebbles or gems or pieces of metal put into an anklet to make it tinkle. *அரிபெய் சிலம்பின் ... பணைத்தோள் ஐயை* (*அகநா*. 6 : 1-3).

2. ► சிலம்பு. *அரி தளை ஞெகிழி நூபுரம் சிலம்பே* (*பிங்*. 6 : 83).

→ இலக்கணக்குறியீடு

அருணால் aruṇāl, *n.* corr. of. *அரைநாண்*

பெண்களின் தலையணிகளுள் ஒன்று; A kind of head ornament (J.).

→ உரோமன் எழுத்துப் பெயர்ப்பு

உக்கழுத்துமணி ukkaḻuttu-maṇi, *n.* < id. +.

[M. *ukkaḻuttu* +. ] → உடன்பிறப்பு மொழிச் சொல்வடிவம்

கழுத்துடன் ஒட்டி அணியும் தங்க மணிகளாலான அணிகலன்; Closely fitted necklace of gold beads → ஆங்கிலப் பொருள்

(*Loc.*). → வழக்குப்புலக்குறிப்பு

கடிகை[1] kaṭikai, *n.* < *kanthikā.* → ஒப்புருச்சொல்லின் தலையெண்

► கட்டுவடம். *நீலமணிக்கடிகை* (*கலித்*. 96 : 10). → காண்க என்பதன் குறியீடு

கடிகை$^{2}$ kaṭikai, *n.* < *kaṭaka*

1. திருமணம் முதலிய சடங்குகளின் போது தீய சக்திகள் தாக்காதிருக்க மணமகனின் வலது கரத்திலும் மணமகளின் இடது கரத்திலும் கட்டப்படும் மஞ்சள் கயிறு; காப்புநாண் → தமிழில் பொருள் விளக்கம்

A yellow thread worn on the right hand of the groom and the left hand of the bride at the time of marriage as an armlet.

*வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து* → எடுத்துக்காட்டு

(நெடுநல். 142). → சான்றாதாரம்

2. ஆண்கள் தோளில் அணியும் அணிகலன்; தோள்வளை; A bracelet worn on upper arm by men. *கடிகை வாளாரம் மின்ன* (*சீவக*. 2808 : 1).

→ பொருள் எண்

3. பவளத்தால் ஆன தலையணி வகை; A kind of head ornament made up of coral.

# அணிகலன்கள் அகராதி

## தமிழ் - தமிழ் - ஆங்கிலம்

## அ

**அக்கசூத்திரம்** akka-cūttiram, *n.* < *akṣa* +.

► உருத்திராக்க மாலை (*சித். சா. கிரியா.* 83, *தாத்.*).

**அக்கமாலிகை** akka-mālikai, *n.* < id. +.

► உருத்திராக்க மாலை. *அக்கமாலிகை விழைந்து புனை ... அழகியோர்* (*திருக்காளத். பு.* 20, 4).

**அக்கமாலை** akka-mālai, *n.* < id. +.

1. ► உருத்திராக்க மாலை. *புகலுறும் அக்கமாலை புனைகுவோர்* (*பிரபோத.* 18, 3).

2. ► செபமாலை. *புத்தகம் அக்க மாலை...பொருந்துகையாள்* (*திருவாலவா. க. வா.* 20).

**அக்கவடம்** akka-vaṭam, *n.* < id. +.

► உருத்திராக்க மாலை. *நீறணிந்து அக்கவடம் பூண்டு* (*மச்சபு. க. வா.* 12).

**அக்குச்சரி** akku-c-cari, *n.* < id. +.

கையில் அணியும் சங்கினாலான வளை; Shell-bracelet. *கைச்செறி அக்குச்சரி பப்பத்தினரே* (*தக்கயாகப்.* 100).

**அக்குமாலை** akku-mālai, *n.* < id. +.

► உருத்திராக்க மாலை (*த. மொ. அக.*).

**அக்குவடம்** akku-vaṭam, *n.* < id. +.

1. சங்குகளைக் கோத்து கழுத்திலோ இடுப்பிலோ அணியப்படும் மாலை; String of shell-beads worn on the neck or waist. *அக்குவடம் உடுத்து ஆமைத்தாலி பூண்ட அனந்தசயன்* (*திவ். பெரியாழ்.* 1, 8, 2 : 3).

2. ► உருத்திராக்க மாலை. *அக்குவடம் பூதியுங் கொள் அடியார்* (*சிவரக.* 1, 14, 1).

**அக்கொழுங்கு** akkoḻuṅku, *n.* < id. +.

கழுத்தில் அணியும் சங்கு மணி மாலை; String of shell-beads. *அக்கொழுங்கு படு கஞ்சுகம் அலம்பவுளரே* (*தக்கயாகப்.* 93).

**அகடச்சக்கரம்** akaṭa-c-cakkaram, *n.* < *அகடு* +.

► அரைப்பட்டிகை.

**அகலமணி** akala-maṇi, *n.* < *அகலம்* +.

மார்பில் அணியப்படும் மணிகள் பதித்த அணிகலன்வகை; An ornament inlaid with gems to wear on chest. *ஆணி* 49 *அகலமணி* 101ம் (*கல். சொல். அக.*).

**அகளசூடம்** akaḷa-cūṭam, *n.* < id. +.

தலையின் உச்சியில் அணியும் அணி வகை; A head ornament (*த. நா. அ. ப.* 301).

**அகி** aki, *n.* cf. *அரி*.

கால்களில் மகளிர் அணிந்துகொள்ளும் ஒலியெழுப்பும் சிலம்பு; Tinkling anklets worn by women. *அகி சிலம்பும் ... தீயும் ... தொகையும்* (*கல். சொல். அக.*).

**அங்கசுத்தம்** aṅka-cuttam, *n.* perh. *aṅga* +.
அணிகலன் வகை; An ornament. *செங்கதிர் எறிக்கும் அங்கசுத்தமும் (கல். சொல். அக.).*

**அங்கதம்** aṅkatam, *n.* < *aṅgada.*
► வாகுவலயம். *புயவரைமிசை ... அங்கதம் (திருவிளை.* 17, 12 : 3).

**அங்கரக்கை** aṅkarakkai, *n.* < *aṅga* +.
► தாயித்து. *அங்கரக்கை தொட்டான் மேல் அத்திரங்கள் புக்குருவார் (ஜீவ.* 403).

**அங்கவலயம்** aṅka-valayam, *n.* < id. +.
பாம்பின் தலை வடிவத்தில் அமைந்ததும் பூட்டு வாயைப் பெற்றுள்ளதுமான வாகுவலயம்; An armlet worn on the upper arm with a front piece resembling the cobra's head. *வெங்கண் அங்கவலயங்களும் இலங்க (கம்பரா.* 1, 3, 15 : 2).

**அங்கிலி** aṅkili, *n.* corr. *அங்குலி.*
► அங்குலி. *நவரத்தினக்கலான (ங்களாலான) அங்கிலி இரண்டு* (S.I.I. xiv, 378, 193).

**அங்குரீயகம்** aṅkurīyakam, *n.* < *aṅgurī* +.
► மோதிரம்.

**அங்குரீயம்** aṅkurīyam *n.* < id. +.
► அங்குரீயகம்.

**அங்குலி** aṅkuli, *n.* < *aṅguli.*
கை, கால் விரல்களில் அணியப்படும் மோதிரம்; Finger-ring; toe-ring. *அங்குலி கையெறிந் தஞ்சுமகன் விரித்த (சிலப்.* 22 : 44).

**அங்குலிகம்** aṅkuḷikam, *n.* < *aṅgulīka.*
கைவிரலில் அணிந்துகொள்ளும் மோதிரம்; Finger-ring. *அங்குலிக மொன்று புனலாழ்தரு கிணற்றில்விழ (வில்லி.* 1, 3, 51 : 1).

**அங்குலி முத்திரை** aṅkuli-muttirai, *n.* < *aṅguli* +.
► கணையாழி *(யாழ். அக.).*

**அங்குலியம்** aṅkuliyam, *n.* < *aṅgulīya.*
► அங்குலிகம் *(யாழ். அக.).*

**அங்குலீகம்** aṅkulīkam, *n.* < *aṅgulīka.*
► அங்குரீயம்.

**அங்குலீயகம்** aṅkulīyakam, *n.* < id. +.
► அங்குரீயம்.

**அச்சிராபரணம்** accirāparaṇam, *n.*
தலையணி வகை; Head ornament.

**அச்சுத்தாலி** accu-t-tāli, *n.* < *அச்சு* +.
உருவம் அழுத்திய பொன் அல்லது பிற உலோகத்தாலான காசுமாலை; Necklace of gold-coins or other stamped pieces. *அச்சுத்தாலியும் முளைத்தாலியும் (திவ். திருப்பா.* 7 *வ்யா.).*

**அஞ்சில்** añcil, *n.*

தட்டை வடிவான பொன் அணிவகை; Flat jewels.

**அஞ்சு கட்டிப்பூ** añcu-kaṭṭi-p-pū, *n.* < அஞ்சு +.

ஒரு நகை; An ornament. *அஞ்சுகட்டிப்பூப் பன்னிரண்டில் தடவிக்கட்டின பளிங்கு ஐம்பத்து நாலும் (கல். சொல். அக.).*

**அஞ்சுகொத்து மாலை** añcu-kottu-mālai, *n.* < id. +.

சிறிய உருத்திராக்கங்கள் நூற்றெட்டைப் பொற்கம்பிகளால் கட்டியதும் ஐந்து தொகுதி வடங்களை உடையதும் சிவ பக்தர்கள் கழுத்திலணிவதுமான தாழ்வடம்; A string of 108 *rudrākṣa* beads in five strands worn by the devotees of *Šiva* around neck. *அஞ்சுகொத்து மாலை அணிமார்பும் (நாகை. கனக. உலா*, 462).

**அஞ்சுமுக வங்கி** añcu-muka-vaṅki, *n.* < id. +.

ஐந்து உருண்டைகளைக் கொண்டுள்ளதும் மேல் கையில் அணியப்பெறுவதுமான ஒரு வளையல்; A bangle worn on upper arm with five spherical parts (*W. D.*).

**அஞ்சுமுத்துத்தாவடம்** añcu-muttu-t-tāvaṭam, *n.* < id. +.

ஐந்து முத்துவடங்களாலான கழுத்தணி வகை; A necklace of five strings of pearls. *அஞ்சுமுத்துத் தாவட மொன்றாயிருக்குமது (திவ். பெரியதி.* 1, 1, 5, *அரும்.*).

**அட்சமாலிகை** aṭca-mālikai, *n.* < *akṣa - mālikā.*

► உருத்திராக்க மாலை.

**அட்சமாலை** aṭca-mālai, *n.* < *akṣa* +.

1. ► உருத்திராக்க மாலை.

2. ► செபமாலை (W.).

**அட்டி** aṭṭi, *n.*

► அட்டிகை (*W. D.*).

**அட்டிகை** aṭṭikai, *n.* < K. *addike.* cf. *அட்டு-.*

(பெரும்பாலும் கல் பதித்து) நடுவில் பதக்கம் தொங்கும்படி கழுத்தோடு ஒட்டி அணியும் நகை; Closely fitting necklace of gold wires or of precious stones.

**அட்டியல்** aṭṭiyal, *n.* [T. *aḍḍigalu.*]

► அட்டிகை (*S. D.*).

**அடிக்கலம்** aṭi-k-kalam, *n.* < *அடி* +.

► சிலம்பு. *அடிக்கலம் அரற்ற (சீவக.* 2041 : 1).

**அடிக்காறை** aṭi-k-kāṟai, *n.* < id. +.

► திருவடிக்காறை (*கல். சொல். அக.*).

**அடுக்காழி** aṭukkāḻi, *n.* < *அடுக்கு* +.

கல்லிழைத்த மோதிரம்; Ring inlaid with jewels.

**அண்டு** aṇṭu *n.* < T. *aṇṭu.*
மணிவடம் முதலியவற்றின் உரு; Unit in a string of beads, link in a chain. *நாலு அண்டு அந்தச் சங்கிலிக்கு இன்னும் வேணும்* (*Loc.*).

**அண்ணாக்கயிறு** aṇṇā-k-kayiṟu, *n.*
► அரைஞாண் (*Colloq.*).

**அண்ணாக்கவுரு** aṇṇā-k-kavuru, *n.*
► அரைஞாண் (*W. D.*).

**அணி** aṇi, *n.* [K. M. *aṇi.*]
அணியப்படும் அணிகலன்; ஆபரணம்; நகை; Ornament, jewel. *நின் தோள் அணி பெற வரற்கும்* (*நற்*. 286 : 8).

**அணிகம்** aṇikam, *n.* < *அணி* +.
► அணிகலன். *அணிகமாப்பணிகள் செய்து* (*சீவக*. 2811 : 2).

**அணிகலம்** aṇikalam, *n.* < id. +.
► அணிகலன். *செய் அணிகலன்கள் சிந்தி* (*சீவக*. 117 : 3).

**அணிகலன்** aṇikalaṉ, *n.* < id. +.
அழகுக்காகவோ செல்வநிலையைக் காட்டவோ பண்பாட்டு மரபுக்காகவோ தரித்துக் கொள்ளப்படும் நகை; Ornament; jewel. *புண்ணியமுடைய இப்பொன் அணிகலன்* (*பெருங்*. 2, 5 : 158).

**அணியல்** aṇiyal, *n.* < id. +.
1. ► நகை. *உவகை கூர்ந்து அணியல் வாசி ... கொடுத்து விடுத்தனன்* (*திருவாலவா*. 27, 76 : 1-4).
2. ► முத்துமாலை. *அணியல் அணிகுவலின்றி* (*நைடத*. 5, 99 : 1).

**அணிவடம்** aṇi-vaṭam, *n.* < id. +.
கழுத்தில் அணியும் அணிகலக் கோவை; Ornamental string of jewels Necklace (*த. மொ. அக.*).

**அத்தகடகம்** atta-kaṭakam, *n.* < *hasta* +.
► வளையல். *அத்தகடகம் சூடகம் ... தோள்வளை* (*அரிச். பு. விவாக*. 118).

**அத்தம்** attam, *n.* < *artha.*
► பொன். *வெறுக்கை - அத்தம்* (*சிலப்*. 5 : 20, *அரும்.*).

**அத்தவலயம்** atta-valayam, *n.* < id. +.
► கைவளை ( *த. நா. அ. ப*. 301).

**அத்திக்காய்க்கொலுசு** atti-k-kāy-k-kolucu, *n.* < *அத்தி* +.
சுற்றிலும் அத்திக்காயின் வடிவிலமைந்த கால் கொலுசு வகை; A kind of foot chain.

**அத்து** attu, *n.* < *அத்து-*.
► அரைப்பட்டிகை, 1. *அத்து ... அரைப்பட்டிகையே* (*பிங்*. 6 : 92).

**அந்தளகம்** antaḷakam, *n.* cf. T. *bondaḷamu.*

► கவசம். *ஏறுமால் யானையே சிவிகை அந்தளகம் ஈச்சோப்பி* (தேவா. 2, 79, 2330 : 1).

**அந்தளம்** antaḷam, *n.*

► கவசம். *கவசப் பெயரே ... அந்தளமும் அபரமும்* (*பிங்.* 6 : 507).

**அந்துகம்** antukam, *n.*

► சங்கிலி (*அபிதா. மாலை.*).

**அந்தூகம்** antūkam, *n.*

► அந்துகம் (*மதுரைத். அக.*).

**அபரஞ்சி** aparañci, *n.* [T. K. *aparañji.*]

புடமிட்ட பொன்; Refined gold. *ஆயிரத் தெட்டு மாற்றின் அபரஞ்சி* (*மச்சபு. தாரகாசுரவ.* 26).

**அபரம்** aparam, *n.* < *a-para.*

► கவசம். *கவசப் பெயரே ... அந்தளமும் அபரமும்* (*பிங்.* 6 : 507).

**அபிடேகம்** apiṭēkam, *n.* < *abhi-ṣēka.*

தலையணி வகை; கிரீடம்; A kind of crown. *அபிடேகச் சொக்கன் புழுகுநெய்ச் சொக்க னென்னும்* (*திருவாலவா.* 11, 4 : 3).

**அபிஷேகம்** apiṣekam, *n.* < id.

► அபிடேகம். *அதி ரமணீய தர்ச்சநமாயிருந்த திருஅபிஷேகத்தாலே அலங்க்ருதனாய்* (*திருப்பா. ஆறா.* 3, 8, 1).

**அம்பு** ampu, *n.*

► வளையல் (*மதுரைத். அக.*).

**அர்க்கம்** arkkam, *n.* < *argha.*

► பொன் (W.).

**அர்ணாக்கொடி** arṇā-k-koṭi, *n.* < *அர்ணாள்* +.

► அரைஞாண் (*W. D.*).

**அர்ணாள்** arṇāḷ, *n.* Vul. for *அரைநாண்.*

► அரைஞாண்.

**அரக்குக்கொப்பு** arakku-k-koppu, *n.* < *rākṣā* +.

காதின் மேல் மடலில் போடும் அணிகலன் வகை; காதணி வகை; An ear stud worn on the upper part of the ear (*W. D.*).

**அரக்கு வளையல்** arakku-vaḷaiyal, *n.* < id. +.

மகளிர் அணியும் அரக்கினால் செய்யப்பட்ட கைவளை; கங்கணம்; Lac bracelet covered by thin brass leaf tinsel.

**அரசிலை** aracilai, *n.* < *அரசு* +.

1. ► அரைமூடி. *அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்னடர் (பெருங். 2, 7 : 23).*

2. மூசாடு இனத்தவர் திருமணத்தின் பொழுது அணிந்துகொள்ளும் அரச இலை வடிவிலான தங்கத்தகட்டினை நூலில் கோத்த அணிவகை; A wedding jewel in the shape of pipal leaf worn by *Mūcātu* women (E. T.).

3. எருத்தின் தலையில் அணிவிக்கும் அரச இலை வடிவ அணி; Ornament for the head of bull in the shape of a pipal leaf. *அரசிலை ஒளிபெற மிளிர்வதோர் சினமுதிர்விடை* (தேவா. 3, 86, 2 : 3-4).

**அரசிலைத்தாலி** aracilai-t-tāli, *n.* < id. +.
தாலிவகை; A *mangalyā* in the form of pipal leaf (*W. D.*).

**அரசிலைத் தூக்கம்** aracilai-t-tūkkam, *n.* < id. +.
► அரைமூடி (*Loc.*).

**அரசிலைத் தொங்கல்** aracilai-t-toṅkal, *n.* < id. +.
► அரசிலைத்தூக்கம் (W.).

**அரசிலைப் பஞ்சாயுதம்** aracilai-p-pañcāyutam, *n.* < id. +.
திருமாலின் ஐம்படைகள் வடிவில் குழந்தைகள் அணிந்துகொள்ளும் பொன்னாலான கழுத்தணி; A figleaf-shaped gold ornament worn by children or women with the *tāli*, showing in relief the five weapons of *Viṣṇu* (J.).

**அரசிலைப் பொன்அடர்** aracilai-p-poṉ-aṭar, *n.* < id. +.
► அரைமூடி. *அணிக்கலை புனைந்த அரசிலைப் பொன்னடர்* (பெருங். 2, 7 : 23).

**அரசிலை முருகு** aracilai-muruku, *n.* < id. +.
காதணி வகை; An ear-ornament (*சரவண. பணவிடு.* 121).

**அரடா** araṭā, *n.* < T. *araḍā.*
அணிகலனின் எடுப்பான விளிம்பு; Projecting border of a jewel (*S. D.*).

**அரணாக்கயிறு** araṇā-k-kayiṟu, *n.* < *அர்ணாள்* +.
► அரைஞாண்.

**அரணாக்கவுறு** araṇā-k-kavuṟu, *n.* < id. +.
► அரைஞாண் (*W. D.*).

**அரத்தம்** arattam, *n.* < *rakta.*

1. ► பவளம். *துப்பே அர்த்தம் ... பவளம்* (*திவா.* 6 : 11).
2. ► பொன். *அரத்தமே ... பொன்னும்* (*அக. நி.* 214).
3. ► இரத்தினம்.

**அரதனம்** arataṉam, *n.* < *ratna.*
► இரத்தினம். *அரதனநாகரிர் சொரிதரு வெகுளியர்* (*பெருங்.* 1, 46 : 13).

**அரவக்கழல்** arava-k-kaḻal, *n.* < *அரவம்* +.
► வீரக்கழல். *சிறைஅரவக்கழல்* (*கம்பரா.* 6, 25, 28 : 3).

**அரவச்சரி** arava-c-cari, *n.* < id. +.

பாம்பு வடிவில் செய்யப்பட்ட வளையல்; Bracelet resembling a Cobra. *நீளரவச்சரி தாழ்க்கை நிரைத்தாள் (கம்பரா.* 3, 11, 48 : 1).

**அரவம்** aravam, *n.* < *rava.*

மாணிக்கம் முதலிய மணிகளை உள்ளீடாகக் கொண்ட பாம்பு வடிவிலான ஒருவகைச் சிலம்பு; A snake-shaped anklet with gems inside so as to make it tinkle. *பரிபுரம் அரவம் ... சிலம்பு (திவா.* 7 : 52).

**அராகம்** arākam, *n.* < *அராகி-.*

▶ பொன். *ஆடகம் தக்கராகம் அராகம் (பிங்.* 10 : 54).

**அரி1** ari, *n.* < *அர்.*

1. சிலம்பின் பரல்; Pebbles or gems or pieces of metal put into an anklet to make it tinkle. *அரிபெய் சிலம்பின் ... பணைத்தோள் ஐயை (அகநா.* 6 : 1-3).

2. ▶ சிலம்பு. *அரி தளை ஞெகிழி நூபுரம் சிலம்பே (பிங்.* 6 : 83).

**அரி2** ari, *n.* < *hari.*

1. ▶ பொன். *அரித்தேர் நல்கியும் அமையான் (பெரும்பாண்.* 490).
2. ▶ மரகதம். *அரி பச்சை மரகதம் (திவா.* 6 : 12).
3. ▶ வைரம்.

**அரிக்குழை** ari-k-kuḻai, *n.* < *அரி* +.

▶ மகரக்குழை. *அரிக்குழையாடல் தகையள் கழுத்தினும் (கலித்.* 109 : 14-15).

**அரிச்சதங்கை** ari-c-cataṅkai, *n.* < id. +.

பரலிட்ட கால் அணிகலன்; Anklet with tinklets. *தாள்அரிச் சதங்கை ஆர்ப்ப (கம்பரா.* 6, 28, 49 : 1).

**அரிணம்** ariṇam, *n.* < *hariṇa.*

▶ பொன் (R.).

**அரிதுளைப்பான்** ari-tuḷaippāṉ, *n.* < *அரி* +.

மகளிர் காதில் அணியும் ஒருவகை அணிகலன்; A kind of ear-ornament worn by women (*பெருஞ். அக.*).

**அரிப்புச்சரி** arippu-c-cari, *n.* < id. +.

காதணியின் ஒரு பகுதியான தொங்கல் வகை; An ear pendant (S.I.I. iv, 77).

**அரிப்பொற்கிண்கிணி** ari-p-poṟkiṇkiṇi, *n.* < id. +.

▶ தவளைக் கிண்கிணி. *அரிப்பொற் கிண்கிணி யார்ப்ப வியலிக் (பெருங்.* 1, 40 : 18).

**அரியகம்** ari-y-akam, *n.* < id. +.

மகளிர் அணியும் காலணி வகை; A kind of food-ring worn by women. *அரியகங் காலுக் கமைவுற வணிந்து (சிலப்.* 6 : 85).

**அரியாயோகம்** ariyā-yōkam, *n.* < *அரியாத* +.

► அரைப்பட்டிகை, 1. *அரியாயோகமும்-கருவிவிலக்காகப்புனைந்த அரைப்பட்டிகையும்* (*சிலப்*. 14 : 170, *அடியார்*.).

**அருகாழி** arukāḻi, *n.* cf. *அறுகாழி*.

1. கால் விரலில் அணியும் மோதிரம்; Toe ring (*குருபரம்*. 117).

2. கைவிரல் மோதிர வகை; A kind of ring (*திவ். பெரியாழ்*. 1, 6, 3 *வ்யா. ப*. 120).

**அருகுகண்டம்** aruku-kaṇṭam, *n.*

பதக்க அணிவகை; A kind of pendant. *நாயககண்டம் ஒன்று அருகுகண்டம் ஆறு கடைத்தொழில் இரண்டு* (S.I.I. viii. 53).

**அருங்கலம்** aruṅ-kalam, *n.* < *அருமை* +.

1. மங்கல அணியான தாலி; *Māṅgalya.* *அருங்கலம் பூட்டும் தகுதி* (*கப்பற்கோ*. 81).

2. நகை; ஆபரணம்; Precious ornament. *பலர் புறங்கண்டு அவர் அருங்கலம் தரிஇ* (*மலைபடு*. 71).

3. ► கிரீடம். *இரும்பும் வெள்ளியும் இசைத்து உருக்குறீஇ அருங்கலமாக்கி* (*பெருங்*. 2, 17 : 69-70, *உரை*).

**அருங்கலன்** aruṅ-kalaṉ, *n.* < id. +.

அணிகலப்பொது; Ornament in general. *அருங்கலன் அணங்கு அரசி* (*கம்பரா*. 1, 21, 38 : 3).

**அருச்சுநம்** aruccunam, *n.* < *arjuna.*

► பொன். *அருச்சுந மருது வெண்மை கண்ணோய் பொன்* (*நாநார்த்த*. 652).

**அருணம்** aruṇam, *n.* < *hariṇa.*

► பொன். *அருணமென்பதும் ... பொன்னுமைம்பேரே* (*அக. நி*. 201).

**அருணால்** aruṇāl, *n.* corr. of. *அரைநாண்*.

பெண்களின் தலையணிகளுள் ஒன்று; A kind of head ornament (J.).

**அருத்தம்** aruttam, *n.* < *artha.*

► பொன். *தொடுக்கம் அருத்தம் ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**அருநெல்லிக்காய் மாலை** arunelli-k-kāy-mālai, *n.* < *அருநெல்லி* +.

சிறு நெல்லிக்காய் வடிவிலான உருப்படிகளைக் கோத்த சரம்; A chain of beads resembling *nelli* fruits.

**அரும்பு** arumpu, *n.* < *அரும்பு*-.

அணிகளின் அரும்பு வேலை; Filigree work in imitation of buds.

**அரும்புச்சரம்** arumpu-c-caram, *n.* < *அரும்பு* +.

மலர் மொட்டு வடிவில் பொன்னால் செய்து, பொன் சரட்டில் கோக்கப்பட்ட ஒரு கழுத்தணிகலன்; Necklace made up of golden buds (*சிற். செந்*. 93).

**அரும்புமணி** arumpu-maṇi, *n.* < id. +.

பொன்னால் செய்யப்பட்டதும் சிறுசிறு மணிகளைக் கொண்டதுமான கழுத்தணி வகை; Necklace of gold beads set with granules of gold (W.).

**அரும்புவளையம்** arumpu-vaḷaiyam, *n.* < id. +.

தாழ்வடமணிகளின் இடையில் கோக்கும் வளையம்; Gold or silver rings interspersed with beads in rosary (*செந். சொற்.*).

**அருவடச்சுரிவு** aruvaṭa-c-curivu, *n.*

அணிவகைகளுள் ஒன்று; A kind of ornament. *அருவடச் சுரிவு கல்* (S.I.I. viii. 77).

**அரைக்கச்சு** arai-k-kaccu, *n.* < *அரை*+.

► இடைப்பட்டிகை. *சருப்பத்தையும் அரைக்கச்சு எனத் தரிப்பான் (சீகாழித். ஆபத்துத்.* 4).

**அரைக்கச்சை** arai-k-kaccai, *n.* < id. +.

► அரைக்கச்சு.

**அரைக்காப்பு** arai-k-kāppu, *n.* < id. +.

► அரைஞாண். *பாம்பால் இழைத்த அரைக்காப்பு ஆரிடம் (சிங். சிலே.* 75).

**அரைக்குழல்** arai-k-kuḻal, *n.* < id. +.

அரைஞாணிற் கோத்து அணியும் மந்திரத்தகடு அடைத்த குழல்; தாயத்து; A pendant in the waist-cord, inside which a mystic scroll is kept (*Loc.*).

**அரைச்சதங்கை** arai-c-cataṅkai, *n.* < id. +.

பொன் அல்லது வெள்ளியாலானதும் குழந்தைகளின் இடுப்பில் கட்டப்படுவதுமான ஒலிக்கும் மணிகள் கோத்த அணிவகை; String of tinkling beads worn by children around the waist (*Loc.*).

**அரைச்சலங்கை** arai-c-calaṅkai, *n.* < id. +.

► அரைச்சதங்கை (*S. D.*).

**அரைஞாண்** arai-ñāṇ, *n.* < id. +.

ஆண்களும், குழந்தைகளும் இடுப்பில் கட்டிக்கொள்ளும் கயிறு அல்லது பொன் மற்றும் பிற உலோகத்தால் ஆன வடம்; A thin cord or metallic string worn around the waist by men and children. *மேலணி சுந்தர அரைஞாணும் (திருமலைமுரு. பிள்.* 18).

**அரைஞாண்கயிறு** arai-ñāṇ-kayiṟu, *n.* < id. +.

► அரைஞாண்.

**அரைஞாண்கொடி** arai-ñāṇ-koṭi, *n.* < id. +.

► அரைஞாண் (*S. D.*).

**அரைஞாண்மணி** arai-ñāṇ-maṇi, *n.* < id. +.

► அரைச்சதங்கை. *கட்டழகு மேய அரைஞாண்மணி கறங்க (கந்தபு.* 1, 14, 2 : 2).

**அரைஞாணம்** arai-ñāṇam, *n.* < id. +.

► அரைஞாண் (*S. D.*).

**அரைத்தொடர்** arai-t-toṭar, *n.* < id. +.

► அரைஞாண். *நாணும் அரைத்தொடரும் (திவ். பெரியாழ்.* 1, 3, 4 : 2).

**அரைநாண்** arai-nāṇ, *n.* < id. +.

► அரைஞாண். *பொன் அரை நாணொடு (திவ். பெரியாழ்.* 1, 6, 2 : 1).

**அரைநூல்** arai-nūl, *n.* < id. +.

1. ▶ அரைச்சதங்கை. *அரைநூல் ... சதங்கை (அரு. நி. 403).*
2. ▶ மேகலை. *அரைநூல் மேகலை (அரு. நி. 403).*
3. ▶ அரைஞாண் *(செந். சொற்.).*

**அரைநூன்மாலை** arai-nūṉ-mālai, *n.* < id. +.

▶ மேகலை. *அரைநூன் மாலையும் பொன்சரடும் போகச் சின்னங்களும் (பெருஞ். அக.).*

**அரைப்பட்டிகை** arai-p-paṭṭikai, *n.* < id. +.

1. ஆடையின் மேற்பகுதியில் அணியும் பொன் அல்லது வெள்ளியாலான இடையணி வகை; Gold or silver girdle or waist-belt worn by women over their dress. *கோத்து அணியும் அரைப்பட்டிகையால் (இராசராஜ. உலா, 182).*

2. வீரர் வாள் செருகுவதற்கு இடுப்பில் அணியும் பட்டிகை; Sheath; scab bard. *கருவி விலக்காகப் புனைந்த அரைப்பட்டிகையும் (சிலப். 14 : 170).*

**அரைமணி** arai-maṇi, *n.* < id. +.

▶ அரைச்சதங்கை *(செந். சொற்.).*

**அரைமூடி** arai-mūṭi, *n.* < id. +.

பெண் குழந்தைகளின் அற்றம் (அம்மணம்) மறைப்பதற்காக இடுப்புச் சங்கிலியில் கோக்கப்பட்டிருக்கும், அரசிலை வடிவிலான உலோகத் தகடு; Pipal leaf shaped plate of glass or metal, worn by little girls to cover their nudity (*S. D.*) .

**அரையணி** arai-yaṇi, *n.* < id. +.

▶ அரைத்தொடர் *(செந். சொற்.).*

**அரைவட்டம்** arai-vaṭṭam, *n.* < id. +.

▶ அரைமூடி (W.).

**அரைவடம்** arai-vaṭam, *n.* < id. +.

▶ அரைச்சதங்கை. *அரைவடங்கள் கட்டி (திருப்பு. 415 : 2).*

**அல்குற்காசு** alkuṟ-kācu, *n.* < *அல்குல்* +.

▶ அரைஞாண்மணி. *நிழலவிற் அல்குற்காசு சிலம்பொடுசிலம்ப (சீவக. 1254 : 3).*

**அல்லக் காதுத்தளுக்கு** alla-k-kātu-t-taḷukku, *n.*

பச்சைக்கல் முருகுவை அடுத்துப்போடும் காதணி; An ear stud (*W. D.*).

**அலுக்கு** alukku, *n.* < *அள்* +.

▶ அலுக்குத்து *(பெருஞ். அக.).*

**அலுக்குத்து** alu-k-kuttu, *n.* prob. *அள்* +.

இசுலாமியப் பெண்கள் அணியும் காதணி; An ear ornament worn by Mohammedian women *(மதுரைத். அக.).*

**அலுங்கு** aluṅku *n.* < *அல்-* +.

மணிமுடியென்னும் மகுட வகையில் செதில் போன்ற மலரணி உறுப்பு; A part of the crown *(சிற். செந். 87-88).*

**அவதஞ்சம்** avatañcam, *n.* < *ava-taṃsa.*

1. ► செவிமலர்ப்பூ. *கன்னாவதஞ்சம்* (சூடா. 7 : 28).

2. தலையணி வகை; A kind of hair disc.

**அவிடேகம்** aviṭēkam, *n.* < *abhi-ṣēka*

► அபிடேகம். *அரசர் முடி தோறும் அணியும் அவிடேகம் அணிய* (குலோத். பிள்ளைத். 63).

**அவுல்சரம்** avul-caram, *n.*

► நகை (*W. D.*).

**அழகுகுளிசம்** aḻaku-kuḷicam, *n.* < *அழகு* +.

கழுத்தணியில் கோக்கப்பெறும் தாயித்து; Amulet worn as an ornament on the neck (*Loc.*).

**அளகக்கொடி** aḷaka-k-koṭi, *n.* < *alaka* +.

► அளகவல்லி. *நடத்தொறும் இணர்ப்போது அலங்கல் அளகக்கொடி* (சூளா. 6, 20 : 1-2).

**அளகவல்லி** aḷaka-valli, *n.* < id. +.

முடி புரளாது காக்கும்படி காதணியில் இருந்து முடியில் மாட்டிக்கொள்ளும் ஓர் அணிகலன்; மயிர்மாட்டி; Hair hook, an ornament connecting the ear with the hair. *அம்பொற் சுருளை இருபாலும் அளகவல்லி அருகு இலங்க* (சூளா. 10, 196 : 3).

**அன்னக்கொப்பு** aṉṉa-k-koppu, *n.* < *அன்னம்* +.

காதின் மேல் விளிம்பில் அணியும் அன்னத்தின் வடிவிலான அணிகலன்; Ear ornament with design of swan worn at the top of the helix. *செவியிலாண் டன்னக் கொப்பு* (வருணா. குற. 50).

**அன்னப்பூ** aṉṉa-p-pū, *n.* < id. +.

பெண்கள் அணியும் அன்னத்தின் வடிவிலான தலையணி வகை; An ornament worn on the head by women (*Loc.*).

**அன்னம்** aṉṉam, *n.* cf. *அன்னப்பூ.*

பதக்கமாகவோ, சடைவில்லையாகவோ அணியப்படும் அன்னத்தின் வடிவுடைய அணிகலன் வகை; An ornament in the form of swan used either as a pendant of the necklace or a head decor. *அன்னம் ஒன்று பொன் தொண்ணூற்று ஐங்கழஞ்சு* (S.I.I. II. 2).

**அன்னவில்லை** aṉṉa-villai, *n.* < *அன்னம்* +.

அன்னத்தின் வடிவு கொண்ட தலையணி வகை; A head ornament (*Colloq.*).

**அனந்தம்** aṉantam, *n.*

► பொன். *அனந்தமும் வசுவும் ... திரவியமும் அதற்கே* (பிங். 6 : 132).

**அனந்த முடிச்சு** aṉanta-muṭiccu, *n.* < *an-anta* +.

பெண்கள் அணியும் காதணி வகை; A kind of woman's ear ornament (W.)

**அஸ்த கடகம்** asta-kaṭakam, *n.* < *hasta* +.

► அத்த கடகம்.

## ஆ

**ஆக்கம்** ākkam, *n.* < ஆக்கு-. [M. *ākkam.*]

▸ பொன். *ஆசை செங்கோல் ஆக்கம் கோவம் ... பொன்னே* (*பிங்.* 6 : 131).

**ஆசை** ācai, *n.* < *aśa.*

▸ பொன். *ஆசை ... அவிர் சடையண்ணல்* (*திருக்காளத். பு.* 4, 16).

**ஆடகம்** āṭakam, *n.* < *hāṭaka.*

1. முகப்பில் மாணிக்கமும் பத்திகளில் வைரமுமாகப் பல்வேறு மணிகள் பதிக்கப்பெற்று விளிம்புகளில் பூவேலைப்பாடு செய்யப்பட்ட முன்கைப் பொன்வளை; A bangle inlaid with rubies, diamonds etc and finished with floral designs.

2. நால்வகைப் பொன்வகைகளுள் ஒன்று; One of four kinds of *poṉ* 'gold', reputed to be of a greenish hue, and likened to the wings of a parrot. *சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சம்பூநதம்* (*சிலப்.* 14 : 201 *அரும்.*).

**ஆடுகொப்பு** āṭu-koppu, *n.* < ஆடு-.

காதின் மேல் பகுதியில் அணியும் மகளிர் அணி வகை; A kind of gold ear-ring, worn by women (*S. D.*).

**ஆடைக்கட்டு** āṭai-k-kaṭṭu, *n.* < ஆடை +.

இடுப்பில் கட்டியிருக்கும் ஆடை நெகிழாதிருக்க அணியும் ஆபரணம்; Waist belt.

**ஆணிப்பொன்** āṇi-p-poṉ, *n.* < *āṇi* +.

மாற்று உயர்ந்த பொன்; Gold of the finest quality. *ஆணிப் பொன்னின்* (*தேவா.* 5, 5, 7 : 3).

**ஆணிமுத்து** āṇi-muttu, *n.* < id. +.

மேன்மையான கெட்டி முத்து; Pearl of the finest quality. *சந்திரகுரு ... ஆணிமுத்து* (*சிலப்.* 14 : 196 *அரும்.*).

**ஆணைவட்டம்** āṇai-vaṭṭam, *n.* < ஆணை +.

குதிரை அணிகளுள் ஒன்று; An ornament for horses (*மதுரைத். அக.*).

**ஆதரம்** ātaram, *n.*

▸ சிலம்பு (*மதுரைத். அக.*).

**ஆபரணம்** āparaṇam, *n.* < *ā-bharaṇa.*

▸ அணிகலன். *ஆடையாபரணம் ... பணித்தருள வேண்டும்* (*தேவா.* 7, 46, 5 : 2-3).

**ஆமைத்தாலி** amai-t-tāli, *n.* < ஆமை +.

கூர்மாவதாரத்தை நினைவூட்டுவதாக வைணவர்கள் அணியக்கூடிய ஆமை வடிவமுள்ள தாலி; *Māṅgalya* in the form of a turtle, to remember the *kūrma* avathara of *Viṣṇu.*

**ஆரக்கோவை** āra-k-kōvai, *n.* < *hāra* +.

▸ முத்து மாலை. *ஆரக் கோவைகள் அணிவாரும்* (*கம்பரா.* 1, 22, 24 : 4).

**ஆரகேரம்** āra-kēram, *n.* < id. +.

▸ வாகுவலயம் (*த. மொ. அக.*).

**ஆரப்பூண்** āra-p-pūṇ, *n.* < id. +.

► முத்துமாலை. *எத்தை எனக்கு ஈத்த இடுவளை ஆரப் பூண்... தந்தானைத் தந்தேன் தருக்கு* (*பரிபா*. 26 : 76-77).

**ஆரம்** āram, *n.* < id.

1. ► முத்துமாலை. *தன் கடற் பிறந்த முத்தின் ஆரமும்* (*அகநா*. 13 : 1).

2. ► முத்து. *ஆரம் தாங்கிய அலர் முலை யாகத்து* (*நெடுநல்*. 136).

3. ► பதக்கம். *ஆளுறு திகிரிபோல் ஆரத்தான்* (*கம்பரா*. 3, 4, 7 : 2).

4. ► வளையல். *ஆரம் ... தொடி வளை ஆகுமே* (*ஆ. நி*. 183).

5. ஒன்றன் கீழ் ஒன்றாகத் தொங்கும் சரங்களை இணைத்த பொற்சங்கிலி; A golden chain of many strings arranged one beneath the other.

**ஆரமணி** āra-maṇi, *n.* < id. +.

► இரத்தின மாலை. *ஆரமணி நிழற்றும் தடவரையார் அகலத்தான்* (*சூளா*. 10, 249 : 2).

**ஆரவடம்** āra-vaṭam, *n.* < id. +.

► முத்துமாலை. *ஆரவடமும் அதிசீத சந்தனமும்* (*தண்டி*. 47, *உரை*).

**ஆலங்காய்க் கொலுசு** ālaṅkāy-k-kolucu, *n.* < *ஆலங்காய்* +.

சுற்றிலும் ஆலங்காயின் வடிவிலமைந்த கால் கொலுசு வகை; A kind of fort chain with the sides decorated with the beads in the form of banyan fruits.

**ஆவாபகம்** āvāpakam, *n.* prob. *ஆவாபம்*.

► கைவளை.

**ஆவாபம்** āvāpam, *n.* < *āvāpa*.

► ஆவாபகம்.

**ஆழி** āḻi, *n.* < *ஆல்*.

1. ► வாகுவலயம். *தோள் வளை ஆழி சுழற்றுவார்* (*பரிபா*. 9 : 55).

2. கைவிரல் மோதிரம்; Finger - ring. *கைவளையாழி தொய்யகம் புனைதுகில்* (*பரிபா*. 7 : 46).

3. காலில் அணியும் மோதிரம்; மெட்டி; மிஞ்சி; Toe-ring. *அவிர் ஆழிக் கால் பொலிந்து* (*சீவக*. 2435 : 1).

**ஆழிக்காப்பு** āḻi-k-kāppu, *n.* < *ஆழி* +.

அழகிய மணிகள் பதிக்கப்பட்டு வட்டவடிவில் செய்யப்பட்டதும் பொன்னாலானதும் காலில் அணியப்படுவதுமான அணி வகை; காப்பு; A foot ring inlaid with jewels.

**ஆழிமணி** āḻi-maṇi, *n.* < id. +.

மோதிரத்தில் பதித்துள்ள மாணிக்கம்; The emerald inlaid in a ring. *திருத்தாள் விரல் ஆழிமணி ஒத்ததே* (*திருவரங்கத்தந்*. 77).

**ஆழிவித்து** āḻi-vittu, *n.* < id. +.

► முத்து (W.).

**ஆறுகட்டி** āṟu-kaṭṭi, *n.* < *ஆறு* +.

திருமடத்தின் தலைவர்கள் காதிலணியும் ஆறு சிறிய உருத்திராக்கங்களாலான காதணிவகை; An ear-ring worn by the head of Saiva institution consisting of six *rudrākṣa* beads. *சட்குண்டலம் - ஆறுகட்டி என்னும் காதணி (நாகை. கனக. உலா, 79, உரை).*

**ஆனைமயிர்க்காப்பு** āṉai-mayir-k-kāppu, *n.* < *ஆனை* +.

யானை வால்மயிரையும் மெல்லிய பொற்கம்பியையும் முறுக்கிச் செய்யப்படும் கைவளை; Bracelet of a thin golden wire with the hair of an elephant's tail (W.).

## இ

**இசை** icai, *n.* < *இசை-.*

► பொன்.

**இசைக்கழல்** icai-k-kaḻal, *n.* < *இசை* +.

தேர்நூறு, குதிரை ஆயிரம், யானை நூறு, காலாள் பதினாயிரம் போரில் மடிய, வென்ற வேந்தன் இடக்காலில் அணியும் வீரவெண்டயம் என்னும் அணி; An ornament worn on the left leg by a king who won the battle by killing 1000 horses, 1000 elephants and 10, 000 soldiers and destroying 100 chariots.

**இசைநூபுரம்** icai-nūpuram, *n.* < id. +.

போரில் யானையைக் கொன்ற வீரன் வலக்காலில் அணியும் ஒற்றை வீரக்கழல்; A single anklet worn on the right leg by a mighty warrior who among other deeds of valour, has also killed an elephant (*மதுரைத். அக.*).

**இசைபுனை** icai-puṉai, *n.* < id. +.

1. வீரர் இடக்காலில் அணியும் அணிகலன் வகை; A honorific bangle worn on the left leg by warriors.

2. ► சங்கிலி, 1.

**இசைமணி** icai-maṇi, *n.* < id. +.

போரில் பத்தாயிரம் பேரைக் கொன்ற வேந்தன், வலக்காலில் அணியும் பொன்னாலாகிய வீரகண்டை; Tinkling golden anklet worn on his right leg by a king who has slain 10, 000 soldiers in battle (*மதுரைத். அக.*).

**இசைவளை** icai-vaḷai, *n.* < id. +.

குதிரைநூறு கொண்ட போர்க்களத்தில் போரிட்டு வென்ற மறவர் கால்பெரு விரலில் அணியும் மோதிரம்; A toe ring worn by a warrior who had won a battle of 100 horses (*வாழ்வி. களஞ்.* 3, *ப.* 14).

**இட்டடிக்கை** iṭṭaṭikkai, *n.* < *இடு* +.

காது மடல்களில் அணியும் பாம்படம், தண்டட்டி முதலிய நகைகளோடு சேர்ந்ததும், நீண்டு தொங்குவதுமாகிய காதணி வகை; An old-fashioned ear ornament, one of many ornaments worn through the ear-lobes.

**இட்டடுக்கி** iṭṭaṭukki, *n.* < id. +.

► இட்டடிக்கை (*S. D.*).

**இடங்கணி** iṭaṅkaṇi, *n.* < இடங்கு +.

► சங்கிலி. *சங்கிலி ... இடங்கணி* (*திவா.* 7 : 176).

**இடத்திருவடிநிலை** iṭat-tiruvaṭi-nilai, *n.*

கடவுள் திருமேனிகளுக்கு இடக்காலில் இடும் உறை; பாதுகை; The foot wear offered to deities in metal (*வாழ்வி. களஞ்.* 3, *ப.* 14).

**இடுக்குவளையல்** iṭukku-vaḷaiyal, *n.* < இடுக்கு +.

► கெட்டிக்காப்பு (*கல். கலை. அக.*).

**இடைக்கட்டு** iṭai-k-kaṭṭu, *n.* < இடை +.

1. தெய்வத்திருமேனியின் இடையில் முன்பகுதியில் கட்டப்படும் ஓர் அணிகலன்; Front plate, an adornment of idols so called from its being fastened in the middle (S.I.I. ii, 20, 5).

2. ► அரைக்கச்சு.

**இடைக்காற்பீலி** iṭai-k-kāṟpīli, *n.* < id. +.

பொதுவாகக் கால் சுண்டுவிரலுக்கு அடுத்துள்ள விரலில் பரதவ மகளிர் அணியும் அணி வகை; A toe ring worn on the toe next to the little toe usually by the women folk among the paratava community.

**இடைச்சரி** iṭai-c-cari, *n.* < id. +.

ஆண்கள் அணியும் தோள்வளை; Armlet worn by men as an ornament on the upper arm. *திருக்கைக்குச் சாத்துமவை ... இடைச்சரி கடைச்சரி என்று அநேகமாயிருக்குமிறே* (*ஈடு*, 2, 5, 6).

**இடைச்சூரி** iṭai-c-cūri, *n.* < id. +.

உருத்திராக்கம் முதலியவற்றின் இடையில் கோக்கும் மணி; Gold or silver beads interspersed in a rosary or *rudrākṣa* tulasi, etc. (J.).

**இடைச்செறி** iṭai-c-ceṟi, *n.* < id. +.

1. துடையில் அணியப்படும் அணிவகை; குறங்குசெறி; An ancient thigh ornament. *இடைச்செறி குறங்கு கௌவிக்கிம்புரி இளகமின்னும்* (*சீவக.* 2445 : 1).

2. ஒரு மோதிரம் அணிந்தவிரலில் மீண்டும் அணியும் மோதிரம்; துணைமோதிரம்; A second ring on a finger worn to keep another ring in place. *இராசபுத்திரர்கள் ... இடைச்செறி கடைச்செறிக்குத் தோற்றிருக்குமா போலே* (*ஈடு*, 6, 1, 1).

**இடைப்பட்டிகை** iṭai-p-paṭṭikai, *n.* < id. +.

இடுப்பில் அணியும் அணிவகை; Waist band; girdle. *இடைப்பட்டிகையும் இலங்கு கோவணமும்* (*சென்னி. ஆற்றுப்.* 769).

**இடைப்பூட்டு** iṭai-p-pūṭṭu, *n.* < id. +.

► இடைப்பட்டிகை (W.).

**இடைமணி** iṭai-maṇi, *n.* < id. +.

► மேகலை. *மீதாடி வில்லுமிழும் இடை மணியொண் கலாபங்கண் மிளிரவீக்கி* (*சூளா.* 9, 408 : 3).

**இடையாபரணம்** iṭai-y-āparaṇam, *n.* < id. +.

► ஒட்டியாணம் (*மதுரைத். அக.*).

**இதடக்கு** itaṭakku, *n.* < *இதழ்* + *அடக்கு*.

அணியுறுப்பு வகை; A part in Jewels (*கல். சொல். அக.*).

**இதயவாசனை** itaya-vācaṉai, *n.* < *இதயம்* +.

மன்னர்களால் அணியப்பெற்ற ஒரு மார்பணி; An ornament worn by kings in their chest. *இலைப் பெரும் பூணும் இதயவாசனையும்* (*பெருங்.* 2, 19 : 117).

**இந்திரநீலக்கடிப்பிணை** intira-nīla-k-kaṭippiṇai, *n.* < *indra.* +.

காதில் அணியும் நீலமணித் தொங்கல்; A pair of earrings with a sapphire as pendant. *இந்திர நீலத் திடையிடை திரண்ட சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை* (*சிலப்.* 6 : 103-104).

**இந்திரநீலம்** intira-nīlam, *n.* < id. +.

► நீலம். *இந்திரநீலத்து இடை இடை திரண்ட* (*சிலப்.* 6 : 103).

**இந்திராணிப்பூ** intirāṇi-p-pū, *n.* < *Indrani* +.

கையணியின் ஓர் உறுப்பு; A part of a Bracelet (*மதுரைத். அக.*).

**இரசதம்** iracatam, *n.* cf. *raśanā.*

1. ► அரைப்பட்டிகை, 1. *அரைப்பட்டிகையும் வெள்ளியும் இரசதம்* (*பிங்.* 10 : 135).
2. ► முத்துமாலை. *இரதம் ... முத்துமாலை* (*நாநார்த்த.* 683).
3. கழுத்தணி; Necklace (*மதுரைத். அக.*).
4. ► வெள்ளி. *இரசதம் தாரம் ... வெள்ளி* (*திவா.* 6 : 20).
5. ► பொன். *இரசதம் ... பொன்னும் பேர்* (*நாநார்த்த.* 683).

**இரசநை** iracanai, *n.* < *raśanā.*

► இரசனை (*மதுரைத். அக.*).

**இரசமணி** iraca-maṇi, *n.* < *raśa* +.

நோய் முதலியவை நீங்கக் காப்பாக அணியப்படும் இரசங்கட்டியமணி; பாதரசமணி; Hard globuse of mercury prepared with incantations and worn as an amulet for health purposes (W.).

**இரசனை** iracaṉai, *n.* < *raśanā.*

► காஞ்சி. *இரசனையோர் அணிவகுப்பு மலர் ஆதி தொடுத்தல்* (*நாநார்த்த.* 688).

**இரசிகை** iracikai, *n.*

மாதர் இடையணி; Waist chain worn by women (*மதுரைத். அக.*).

**இரசிதம்** iracitam, *n.* < *rajata.*

► வெள்ளி. *ஈயஞ்செம்பு இரும்பு இரசிதம் என்பவும் புணர்ப்பால் தோயும்* (*திருவிளை.* 36, 23 : 1-2).

**இரசுமிமாலை** iracumi-mālai, *n.* < *raśmi* + *mālā*.

ஐம்பது அல்லது அறுபது சரடுகளில் முத்துகள் கோக்கப்பட்டு உருவாக்கப்பட்ட கழுத்தணி வகை; Necklace of 50 or 60 threads, especially of pearls (*Loc.*).

**இரட்டைக்குண்டட்டிகை** iraṭṭai-k-kuṇṭaṭṭikai, *n.* < *இரண்டு* +.

இரட்டைப் பொன்மணி உருண்டைகள் அமைந்ததும் பெண்கள் கழுத்தை ஒட்டி அணிவதுமான அணி வகை; Necklace of double gold beads.

**இரட்டைத்திருவுழுத்து** iraṭṭai-t-tiruvuḻuttu, *n.* < id. +.

► உழுத்து. *இரட்டைத் திருவுழுத்து ஓரணை* (S.I.I. ii, 2).

**இரட்டைமணி** iraṭṭai-maṇi, *n.* < id. +.

அணிவகை; An ornament (I. M. P. Tj. 305).

**இரட்டைவடச் சங்கிலி** iraṭṭai-vaṭa-c-caṅkili, *n.* < id. +.

இரண்டு தனித்தனியான சங்கிலியை ஒரு முகப்பால் இணைத்துச் செய்யப்பட்ட கழுத்தணி வகை; Two stringed chain.

**இரட்டைவாளி** iraṭṭai-vāḷi, *n.* < id. +.

► இரட்டைவடச் சங்கிலி. *இரட்டைவாளி ஏற்றீரே* (*கலிங்*. 513 : 2).

**இரணம்** iraṇam, *n.* < *hiraṇa*.

1. ► பொன். *இரண கிரணம் மடமயில்* (*திருவகுப்பு*, *தேவேந்திர*. 2).
2. ► மாணிக்கம். *இரணம் பொன் கடன் மாணிக்கம்* (*சூடா*. 11 : 227).

**இரணியம்** iraṇiyam, *n.* < *hiraṇya*.

► பொன். *இரணியவரைக்கண் இந்திரன்* (*கந்தபு*. 1, 14, 92 : 4).

**இரத்தம்** irattam, *n.* < *rakta*.

► பவளம் (*மூ.அ.*).

**இரத்த விந்து** iratta-vintu, *n.* < *rakta-bindu*.

மாணிக்க வகையாகிய குருவிந்தம்; Corundum alumina in a crystalline state. *விந்தம் - குருவிந்தம்; இரத்த விந்து வென்பதுமது* (*சிலப்*. 14:186 *அடியார்*.).

**இரத்தின கடகம்** irattiṉa-kaṭakam, *n.* < *ratna* +.

மகரமீன் கவ்விய கொடி வடிவில் மணிகள் இழைத்துச் செய்யப்பட்ட பொன்னாலான கையணி வகை; Armlet inlaid with jewels.

**இரத்தின குண்டலம்** irattiṉa-kuṇṭalam, *n.* < id. +.

மணிகள் இழைத்துப் பொன்னால் செய்யப்பட்ட மகளிர் காதணி; Golden earning unlaid with jewels and worn by women.

**இரத்தினப்பணி** irattiṉa-p-paṇi, *n.* < id. +.

மணிகள் பதிக்கப்பட்ட அணிகலன்; Jewel inlaind with precious stones.

**இரத்தினபந்த உபக்கிரீவம்** irattiṉa-panta-upa-k-kirīvam, *n.* < id. +.
உள்கழுத்தில் அணியும் மணிகள் இழைத்த அணிவகை; அட்டியல்; Closely fitting necklace unlaid with precious stones.

**இரத்தினம்** irattiṉam, *n.*< id.
▶ மணி. *வத்திர தானங்கள் இரத்தின தானங்கள் போற்றல்* (*சிவரக.* 1, 27, 19).

**இரத்தின மகுடம்** irattiṉa-makuṭam, *n.* < id. +.
▶ மணிமுடி.

**இரத்தினமாலை** irattiṉa-mālai, *n.* < id. +.
▶ மணிவடம், 1.

**இரத்தின மோதிரம்** irattiṉa-mōtiram, *n.* < id. +.
மணிகள் இழைத்துச் செய்யப்பட்டதும் விரலில் அணியப்படுவதுமான மோதிர வகை; Finger ring inlaid with precious gems.

**இரத்தின வங்கி** irattiṉa-vaṅki, *n.* < id. +.
மணிகள் பதித்துப் பொன்னால் செய்யப்பட்ட தோளணி வகை; Bracelet worn on the upper arm inlaid with precious gems.

**இரத்தின வளையம்** irattiṉa-vaḷaiyam, *n.* < id. +.
மணிகள் இழைத்துச் செய்யப்பட்டதும், காது, மூக்கு ஆகியவற்றில் அணியப்படுவதுமான அணி வகை; A jewelled ring worn on ear and nose.

**இரத்ந பட்டிகை** iratna-paṭṭikai, *n.* < id. +.
மணிக்கற்கள் பதித்த அரைக்கச்சை; Girdle inlaid with precious stones.

**இரத்னகண்டி** iratṉa-kaṇṭi, *n.* < id. +.
மணிக்கற்கள் இழைத்த கழுத்தணி வகை; Ruby Necklace.

**இரத்ன மாலிகா** iratṉa-mālika, *n.* < id. +.
மணிகள் பதித்த மாலை; Necklace inlaid with precious stones.

**இரத்ன மோதிரம்** iratṉa-mōtiram, *n.* < id. +.
▶ இரத்ன மோதிரம்.

**இரத்ன வளையல்** iratṉa-vaḷaiyal, *n.* < id. +.
மணிகள் பொருத்தப்பட்ட கையணி; Bracelet inlaid with gems.

**இரதம்** iratam, *n.* prob. *raśanā.*
1. ▶ அரைஞாண். *அரைஞாணும் ... இரதம் என்ப* (*பிங்.* 10 : 136).
2. ▶ மேகலை. *இரதப் பல்காழ்ப் பரவை யல்குவர்* (*பெருங்.* 1, 41 : 63).

**இரதனம்** irataṉam, *n.* < id.
▶ அரைஞாண். *இரதனம் அரைஞாண்* (*திவா.* 7 : 59).

**இரவையட்டிகை** iravai-y-aṭṭikai, *n.* < ரவை +.
வைர அட்டிகை; *Aṭṭikai* set with diamonds.

**இரஜ்ஜு** irajju, *n.* < *rajju.*
திருமணத்தின் அடையாளமாகக் கருதப்படும் தாலிச்சரடு; Cord of the marriage-badge.

**இரஸனா** irasaṉa, *n.*
மகளிரது இடை அணிவகை; A variety of girdle for ladies.

**இராக்கடி** irākkaṭi, *n.* < U. *rākkadi.*
மகளிர் தலையில் அணிந்துகொள்ளும் சடைவில்லை வகை; An ornament worn by women on the crown of the head.

**இராக்கடை** irākkaṭai, *n.* < id.
► ராக்கடி.

**இராக்கிடி** irākkiṭi, *n.* < id.
► ராக்கடி (*Loc.*).

**இராக்குடி** irākkuṭi, *n.* < id.
► சடைவில்லை.

**இராக்கொடி** irākkoṭi, *n.* < id.
► ராக்கடி (*Loc.*).

**இராக்கோடி** irākkōṭi, *n.* < id.
► ராக்கடி (*Loc.*).

**இராசமுடி** irāca-muṭi, *n.* < *rajan* +.
► மகுடம், 1.

**இராசாவர்த்தம்** irācā-varttam, *n.* < id. +.
தலையணி வகை; Head ornament.

**இராணிச்சங்கிலி** irāṇi-c-caṅkili, *n.* < *ராணி* +.
► ராணிமுடிச்சுச் சங்கிலி (*W. D.*).

**இராணிமுடிச்சுச் சங்கிலி** irāṇi-muṭiccu-c-caṅkili, *n.* < id. +.
நீண்ட சங்கிலி வகை; A kind of long chain (*W. D.*).

**இராவிரேக்கு** irāvi-rēkku, *n.* prob. *இராவிரேகு.*
► அரைமூடி (F.).

**இராவிரேகு** irāvi-rēku, *n.* < T. *rdvirēku.*
1. தலையில் குழந்தைகளும் பெண்களும் அணிந்துகொள்ளும் இலை வடிவிலான அணி; Jewel in the shape of a bo-leaf worn by children and women on the forehead.
2. ► அரைமூடி (W.).

**இராஜவந்தம்** irāja-vantam, *n.* perh. *rajan* + *bandha.*
அணிவகை; A jewel.

**இருட்கண்டம்** iruṭ-kaṇṭam, *n.*
கழுத்தணி வகை; A necklace. *பிறங்கிருட் கண்டமும்* (S.I.I. viii, 39).

**இருப்புக் கச்சை** iruppu-k-kaccai, *n.* < *இரும்பு* +.
போர்க்காலத்தில் வீரர்கள் தங்கள் இடையில் அணியும் இரும்பாலான அணி; Iron girdle worn by warriors (W.).

**இருப்புச்சீரா** iruppu-c-cīrā, *n.* < id. +.
இரும்பால் செய்யப்பட்ட சட்டை; Iron coat of mail (W.).

**இரும்பு** irumpu. *n.*
▶ பொன். *இரும்பு தானே பொன்னுமிரும்புமாம்* (*அக. நி.* 433).

**இரும்புச் சுவடு** irumpu-c-cuvaṭu, *n.* < *இரும்பு* +.
இரும்பால் செய்யப்பட்ட கவசம்; Armour (W.).

**இரும்புச் சுற்று** irumpu-c-cuṟṟu, *n.* < id. +.
இரும்பாலாகிய மோதிரம்; Iron ring. *இருப்புச் சுற்றார் நெட்டிலைச் சூலம்* (*சீவக.* 1136 : 1-2).

**இலச்சினை** ilaccinai, *n.* < *lāñchana.*
▶ முத்திரை மோதிரம். *சரப்பணி இலச்சினை பதக்கம்* (*திருவகுப்பு, சித்து.* 47).

**இலம்பகம்** ilampakam, *n.* < *lambaka.*
நெற்றியில் தொங்கும்படி தலையில் அணியும் தலைக்கோலம் என்னும் அணிவகை; Ornametal chain for a women's forehead. *மகளிர் ஆய்நுதல் ... இலம்பகத்தோற்றம் ஒத்ததே* (*சீவக.* 1442 : 3-4).

**இலம்பம்** ilampam, *n.* < id. +.
கீழ்நோக்கி அசைந்தாடும்படி அமைந்துள்ள அணிவகை; தொங்கல்; Anything hanging down, as a pendulum; pendant. *இலம்பம் எனல் ... தொங்குதல்* (*நாநார்த்த.* 834).

**இலம்பமானம்** ilampamāṉam, *n.* < id. +.
கழுத்தில் தொங்கும் தாழ்வடம்; Long chain (*த. மொ. அக.*).

**இலம்பானம்** ilampāṉam, *n.* < id. +.
▶ இலம்பமானம் (*மதுரைத். அக.*).

**இலலாடிகை** ilalāṭikai, *n.* < *lalāṭa.*
1. நெற்றிப்பொட்டு; திலகம்; A round mark in colour on the forehead (*த. மொ. அக.*).
2. ▶ நெற்றிச்சுட்டி (*த. மொ. அக.*).

**இலலாமகம்** ilalāmakam, *n.*
▶ நெற்றிச்சுட்டி (*த. மொ. அக.*).

**இலலாமம்** ilalāmam, *n.*

► இலலாலம் (*மதுரைத். அக.*).

**இலலாலம்** ilalālam, *n.*

1. அணிகலன் வகை; A kind of jewels (*த. மொ. அக.*).

2. ► நெற்றிச்சுட்டி (*த. மொ. அக.*).

**இலவங்கப்பூ** ilavaṅka-p-pū, *n.* < *lavaṅga* + .

(இலவங்கப்பூ வடிவிலமைந்த) காதணி வகை; An ornament worn on the ear having the design of a clove (*Colloq.*).

**இலளிதை** ilaḷitai, *n.*

கழுத்திலணியும் ஒரு வகை முத்தாரம்; A kind of pearl necklace. *இலளிதை ஓர் முத்தாரம் பராசக்தி ஓர் இராகம்* (நாநார்த்த. 817).

**இலை** ilai, *n.* [K. Tu. *ele*, M. *ila*.]

பல்வேறு மணிகள் பதிக்கப்பெற்று பொன்னால் செய்யப்பட்டதும் மகளிர் அணிவதுமான சிறு தலையணி; சடைவில்லை; A small golden disk inlaid with gems worn on hair plait by women.

**இலைத்தாலி** ilai-t-tāli, *n.* < id. +.

இலை போன்ற வடிவமுடைய தாலி; Marriage badge in the shape of a leaf (*S. D.*).

**இலைப்பூண்** ilai-p-pūṇ, *n.* < இலை +.

► அரசிலை, 1 (*மதுரைத். அக.*).

**இலைமுகப்பைம்பூண்** ilai-muka-p-paimpūṇ, *n.* < id. +.

வெற்றிலைகளால் வடிவமைக்கப்பட்டது போன்ற பொன்னாலான கழுத்தணி வகை; A gold necklace with parts in the form of the betel leaf. *இலைமுகப்பைப்பூணும் இருகண்ணித் தாரும்* (*ஆனந்த. வண்டு. தூது*. 153).

**இழிகை** iḻikai, *n.* < *இழிகு-*.

► கைச்சரிகை. *பவளப் பாற்காற் பசுமணி யிழிகை* (*சீவக*. 558 : 1).

**இழுக்கு** iḻukku, *n.*

அணிகலனின் ஓர் உறுப்பு; கொக்கி; The link of a jewel (*த. மொ. அக.*).

**இழை** iḻai, *n.* < *இள்-*.

1. ► அணிகலன். *பொன்செய் புனை இழை கட்டிய மகளிர்* (குறுந். 21 : 2).

2. ► மங்கலநாண். *மதிவேள் கட்டு அன்பின் இழையே அணியாம் எனக்கு* (*பாரிகாதை*, 338).

3. சபதத்தை முன்னிட்டுக் கையில் கட்டும் காப்பு; String tied about the wrist for a vow (W.).

**இழைக்கலம்** iḻai-k-kalam, *n.* < இழை +.

► தாலி, 1. *இழைக்கல மகளிர் இருநூற்றுவ ரொடு* (பெருங். 1, 38 : 288).

**இனமணி** iṉa-maṇi, *n.* < *இனம்* +.

மணிகளையுடைய செபமாலை; Jeweled rosary. *இனமணி அணிகுவர் அவர்* (*திருக்காவ. கலம்*. 4).

ஈ

ஈகை īkai, *n.* < ஈ-.

► பொன். *ஈகையங் கழற்கால் (புறநா.* 99 : 5).

ஈடு īṭu, *n.* < இடு-.

► கவசம். *நற்றிடு மேனிக்கு ஈடு நவை அற இட்டு (திருவாலவா.* 28, 90 : 1).

ஈழம் īlam, *n.* < *pāli, sihala.* < *simhala*

► பொன். *இறைபடையிறை இறுக்கும் ஈழமே (இரகு. நகர.* 68).

உ

உக்கட்டு ukkaṭṭu, *n.* < *உள்* +.

பெண்கள் கழுத்தை ஒட்டி அணியும் ஒருவகை அணிகலன்; அட்டியல் வகை; A necklace of innerneck (*S. D.*).

உக்கம் ukkam, *n.* < *உகு-.*

► பொன் (*மதுரைத். அக.*).

உக்கலச் சங்கிலி ukkala-c-caṅkili, *n.* < *உள்* +.

1. ► உக்கட்டு (*W. D.*).

2. ► உட்கழுத்துச் சரடு (*W. D.*).

உக்கழுத்துமணி ukkaḻuttu-maṇi, *n.* < id. +. [M. *ukkaḻuttu*+. ]

கழுத்துடன் ஒட்டி அணியும் தங்க மணிகளாலான அணிகலன்; Closely fitted necklace of gold beads (*Loc.*).

உக்கா ukkā, *n.*

► உக்காக்கம் (*மதுரைத். அக.*).

உக்காக்கம் ukkākkam, *n.* < *உக்கம்* +.

இடுப்பில் கட்டும் அரைஞாண்; கயிறு; Waist cord (*யாழ். அக.*).

உக்கிட்டு ukkiṭṭu, *n.* < *உள்* + *கட்டு.*

► உட்கட்டு (*Loc.*).

உகிரப்புறவன் ukira-p-puṟavaṉ, *n.*

நகத்தின் மேல் அணியும் அணிவகை; A jewel for nails (S.I.I. ii. 16).

உச்சி ucci, *n.* < ucca.

► உச்சிப்பூ. *கொற்ற மணி முச்சி உச்சிக் கொண்டையாள் (திரு மயிலையுலா,* 281).

உச்சிச்சுட்டி ucci-c-cuṭṭi, *n.* < *உச்சி* +.

குழந்தைகளின் நெற்றியில் தொங்கும்படி தலையில் அணியும் ஓர் அணிகலன்; An ornament for the forehead of children.

**உச்சிச்சூடை** ucci-c-cūṭai, *n.* < id. +.

தலையில் அணியும் அணிவகை; An ornament for the forehead. *உயர்களிறு உச்சிச் சூடை நல்லணி முனிந்தன* (*கம்பரா*. 2, 4 , 210 : 1-2).

**உச்சிதிகம்** uccitikam, *n.* < id. +.

மகளிர் முன்கரத்தில் அணியும் வளைவகை; A kind of bangle (*அணி. ஒப். ப*. 71).

**உச்சிப்பட்டம்** ucci-p-paṭṭam, *n.* < id. +.

தலை உச்சியில் பெண்கள் அணியும் ஓர் அணிகலன்; An ornament worn by maidens an their center head (J.).

**உச்சிப்பிறை** ucci-p-piṟai, *n.* < id. +.

பரவ மகளிர் தலையில் அணியும் பிறை நிலவு வடிவிலான ஒருவகை அணிகலன்; Crescent-shaped head-ornament, a common ornament among women of the parava caste (*Parav.*).

**உச்சிப்பூ** ucci-p-pū, *n.* < id. +.

தலையின் உச்சியில் அணியும் மலர் வடிவிலான ஓர் அணிகலன்; A flower shaped jewel worn on the center of the head (*W. D.*).

**உச்சிமணிச்சுட்டி** ucci-maṇi-c-cuṭṭi, *n.* < id. +.

► நெற்றிச்சுட்டி. *பொன் சுரிகை காம்பு கவைள உச்சிமணிச் சுட்டி* (*திவ். பெரியாழ்*. 1, 4, 8 : 1-2).

**உச்சியணி** ucciyaṇi, *n.* < id. +.

தலைப்பாகையில் உள்ள அழகிய தொங்கல்; Pendant of a head-gear (*E. D.*).

**உச்சிவில்லை** ucci-villai, *n.* < id. +.

► *சடைவில்லை. ஓடைத் தாமரைபோல் தலை உச்சிவில்லை செய்வார்* (இளைஞர் இலக். 86).

**உட்கட்டு** uṭkaṭṭu, *n.* < *உள்* +.

1. பெண்கள் உட்கழுத்தில் அணியும்படி ஒரு பக்கம் நேராகவும் மற்றொரு பக்கம் முக்கோணம் போலவும் உள்ள பல துண்டுகள் கோக்கப்பட்ட பொன்னாலான மணிவடம்; A necklace in inner neck (W.).

2. பரவச் சிறுமியர் முதலியோர் குழந்தைப் பருவத்தில் அணியுஞ் சிறு தாலி; A kind of necklace worn especially by parava girls. *சிறந்த உட்கட்டது கழுத்துக்கணிந்து* (பெருஞ். அக.).

**உட்கழுத்து ஆரம்** uṭkaḻuttu-āram, *n.* < id. +.

► உட்கழுத்துச்சரடு.

**உட்கழுத்துக்கொடி** uṭkaḻuttu-k-koṭi, *n.* < id. +.

பெண்கள் கழுத்தை ஒட்டியிருக்கும்படி அணியும் பதக்கம் வைக்காத பொற்சரடு; A necklace of inner neck without pendant (*C. D.*).

**உட்கழுத்துச்சரடு** uṭkaḻuttu-c-caraṭu, *n.* < id. +.

பெண்கள் கழுத்தை ஒட்டியிருக்கும்படி அணியும் பதக்கத்துடன் கூடிய பொற்சரடு; அட்டிகை வகை; A close-fitting golden necklace, with a pendant (*Loc.*).

**உடல்** uṭal, *n.* prob. உடன். [T. *oḍalu*, K. *oḍal*, M. Tu. *uḍal.*]
► பொன். *சாதரூபம் உடல் ... பொன் எனப்படுமே (திவா.* 6 : 1).

**உடற்கருவி** uṭar-karuvi, *n.* < உடல் +.
► கவசம் (W.).

**உடற்காப்பு** uṭar-kāppu, *n.* < id. +.
► உடற்கருவி. *இருப்புடற்காப்பினர் (திருவிளை.* 59, 29 : 2).

**உடற்காவல்** uṭar-kāval, *n.* < id. +.
► உடற்கருவி. *ஒன்றானு மறாவுருவா வுடற் காவலோடும் (கம்பரா.* 6, 18, 15 : 2).

**உடியாணம்** uṭiyāṇam, *n.*
► ஒட்டியாணம்.

**உடைஞாண்** uṭai-ñāṇ, *n.* < உடை +.
இடுப்பிலுள்ள ஆடை நழுவாமல் இருக்க அதன்மேல் ஆடவர் அணியும் வெள்ளி அல்லது தங்கக் கயிறு; Silver or golden cord worn by men round the waist-cloth to serve as a waist-band and confine the cloth at the waist. *உடுத்த பஞ்சிமேல் கிடந்து உடைஞாண் பதைத்து இலங்க (சீவக.* 2240 : 3).

**உடைதாரம்** uṭai-tāram, *n.* < id. +.
► உடைஞாண். *உடைதாரமும் ஒட்டியாணமும் (மீனாட். பிள்ளைத். ஊசற்.* 10).

**உடைநாண்** uṭai-nāṇ, *n.* < id. +.
► உடைஞாண். *உடைநாணொடு கடிவட்டினொடு (சீவக.* 2263 : 2).

**உடைமணி** uṭai-maṇi, *n.* < id. +.
1. இடுப்பில் ஆடையின் மேல் பெண்கள் அணியும் அணிகலன்; மேகலை; Jewell girdle worn by women. *உடைமணி பொற்சிலம்பு ஒலிக்கும் கோயில் (சீவக.* 2407 : 2).
2. குழந்தைகளின் இடுப்பில் கட்டும் சிறு மணிகளோடு கூடிய அணிகலன்; Waist ornament with bells worn by a child. *ஆணிப் பொன்னாற் செய்த ஆய்பொன் உடைமணி (திவ். பெரியாழ்.* 1, 6, 1 : 2).

**உண்ணீடம்** uṇṇīṭam, *n.* < *uṣṇīṣa.*
அரசர் முதலியோர் தலையில் அணியும் மணிமுடி; கிரீடம்; Crown. *உண்ணீடம் கிரீடம் தலைக்கீடு (நாநார்த்த.* 316).

**உத்தஞ்சம்** uttañcam, *n.* < *uttaṃsa.*
► செவமலர்ப்பூண். *உத்தஞ்சம் செவிமலர்ப்பூண் (நாநார்த்த.* 3730).

**உத்தண்டமணி** uttaṇṭa-maṇi, *n.* < *ud-daṇḍa* +. [T. *uttaṇḍamulu, K. uttaṇḍa.*]
பெண்கள் கழுத்தில் அணியும் பொன்மணிகளால் ஆன அணிவகை; A woman's neckalce made of gold beads (W.).

**உத்தண்டால்** uttaṇṭāl, *n.* [T. *uttandamulu.*]
► உத்தண்டமணி (W.).

**உத்தாண்டமாலை** uttāṇṭa-mālai, *n.* < K. *uttaṇḍa* +.

► உத்தண்டமணி. *உத்தாண்ட மாலையைக் காதோலையைப் பொன் மோதிரத்தை வைத்து* (விறலிவிடு. 258).

**உத்தி** utti, *n.* prob. *உந்து.*

1. ► நெற்றிச்சுட்டி; Pendant of an ornament. *நூலமை பிறப்பின் நீல உத்தி* (*அகநா.* 400 : 5).
2. இலக்குமி உருவம் பொறித்த தலையணி; A head-ornament of women with the figure of *Lakshmi* embossed upon it. *தெய்வ உத்தியோடு வலம்புரி வயின் வைத்து* (*திருமுரு.* 23).

**உத்திகை** uttikai, *n.*

► உத்தி.

**உதரபந்தம்** utara-pantam, *n.* < *udara* +.

பொன் அல்லது வெள்ளியால் செய்யப்பட்டதும் ஆண்கள் இடுப்பில் அணிவதுமான அணிகலன்; அரைப்பட்டிகை; Girdle or belt made of gold or silver and worn over the dress by men. *வயிற்றின் மேல் உதரபந்தமாய் வலந்தது* (*பரிபா.* 4 : 43, *உரை*).

**உதரபந்தனம்** utara-pantaṉam, *n.* < id. +.

► உதரபந்தம். *கூத்தன்மேல் திகழ் உதரபந்தனம்* (*திவ். அமலனாதி.* 4 : 1-2).

**உதரபெந்தனம்** utara-pentaṉam, *n.* < id. +.

► உதரபந்தனம். *பலவும் இட்டுக்கட்டின மாலை 4ம் பொன்னின் உதர பெந்தனம் 1ம்* (TDI, i, 8).

**உபக்கிரீவம்** upa-k-kirīvam, *n.*

அடிக்கழுத்தின் தொண்டைக்குழியில் பெரிய மணியும் அதன் இருபுறத்திலும் சிறுமணிகளும் அமைய ஆண் சிற்பங்களின் உட்கழுத்தில் அமைக்கும் அணிகலன்; A necklace, sculptured along with the statue, as a big gem in the center with smaller ones on both side (*சிற். செந்.* 92).

**உம்மிசம்** ummicam, *n.* < T. *ommattsu.*

► உமிசம் (*Loc.*).

**உமிசம்** umicam, *n.* < id.

இரத்தினக்கல் பதிப்பதற்கு அமைக்கப்படும் நகைக்கட்டு; Groove in the framework of a jewel to inlay a gem (*Loc.*).

**உரசூதிகை** ura-cūtikai, *n.*

► முத்துமாலை (*மதுரைத். அக.*).

**உருக்கு** urukku, *n.* prob. *உருக்கு-.*

படகர் இனத்தவர் தம் இடக்கை மோதிர விரலில் அணிந்துகொள்ளும் அணி; A ring worn on the ring finger of the left hand by Badaga people.

**உருக்குமணி** urukku-maṇi, *n.* prob. *rukma* + *அணி.* [M. *urukkumaṇi,* K. *kātila.*]

பொற்குண்டுகளை இணைத்துச் செய்து பெண்கள் அணியும் காதணித் தொங்கல்; Solid globules or gold soldered together around a ring and worn by women as ear drops. *உருக்குமணி ஆபரணம்* (*நல்ல. கதை. ப.* 9).

**உருட்டு** uruttu, *n.* < உருட்டு +.

1. கால் விரலில் பெண்கள் அணியும் மோதிரம்; Ring for the toes of women. *கனத்த உருட்டு அதைத்தான் ஒக்கிட்டான் (தெய்வச். விறலி.).*

2. பண்டைக்காலத்தில் கைக்கட்டை விரலில் ஆடவர் அணியும் மோதிரவகை; Ring for the thumb (*பெருஞ். அக.*).

**உருட்டு மோதிரம்** uruttu-mōtiram, *n.* < id. +.

► உருட்டு (*Loc.*).

**உருத்திராக்கச்சுரி** uruttirākka-c-curi, *n.* < *rudrakṣa.*

உருத்திராக்க மாலையில் மணிகளுக்கு இடையே கோக்கப்படும் சதுர அல்லது வட்டத் தகட்டிணைப்பு; The square or round plates of metal interspersed in between the *rudrākṣha* beads.

**உருத்திராக்கப்பணி** uruttirākka-p-paṇi, *n.* < id. +.

► உருத்திராக்க மாலை. *உருத்திராக்கப் பணியும் விபூதியும் மெய்க் கணிந்து (தனிப்பா.* 154).

**உருத்திராக்கம்** uruttirākkam, *n.* < *rudrakṣa.*

சைவர்கள் புனிதமாகக் கருதி அணிந்து கொள்வதும் சிவபெருமானின் கண்ணாகக் கருதப்படுவதுமான உருத்திராட்ச மணி; *Rudrākṣa* nuts, worn as sacred beads and used in rosaries by saivas, so called because these beads represent the eyes of *Śiva*. *உருத்திராக்கம் விழுமியவணி (திருவானைக். கோச். செங்.* 49).

**உருத்திராக்க மாலை** uruttirākka-mālai, *n.* < id. +.

உருத்திராக்கக் கொட்டைகளைப் பொன் அல்லது வெள்ளிச் சரட்டிலோ நூற் கயிற்றிலோ கோத்து உருவாக்கப்படும் கழுத்தணி வகை; String of *rudrākṣa* beads.

**உருத்திராட்சக்கடுக்கன்** uruttirāṭca-k-kaṭukkaṉ, *n.* < id. +.

உருத்திராக்க மணியைக் கொண்டு செய்யப்பட்ட காதணி வகை; Ear ring made up of *rudrākṣa.*

**உருத்திராட்சகண்டி** uruttirāṭca-kaṇṭi, *n.* < id. +.

► உருத்திராட்சகண்டிகை.

**உருத்திராட்சகண்டிகை** uruttirāṭca-kaṇṭikai, *n.* < id. +.

உருத்திராக்க மாலை; String of *rudrākṣa* beads (*மதுரைத். அக*).

**உருத்திராக்ஷக்காறை** uruttirākṣa-k-kāṟai, *n.* < id. +.

நெருக்கமாகக் கோத்த உருத்திராக்கச் சரம்; A string of *rudrākṣa* (S.I.I. ii, 42).

**உருத்திராக்ஷச்சுரி** uruttirākṣa-c-curi, *n.* < id. +.

► உருத்திராக்கச்சுரி (*கல். சொல். அக.*)

**உருத்திராக்ஷத்தாழ்வடம்** uruttirākṣa-t-tāḻvaṭam, *n.* < id. +.

► அக்குமாலை (S.I.I. ii, 38).

**உருபு** urupu, *n.*

தாலி முதலியவற்றில் சேர்க்கும் உரு; The items like gold balls, chain pieces etc. stringed in Mangalya (F.).

**உருமணி** uru-maṇi, *n.* < உரு +.

மந்திரங்களை உருவேற்றுவதற்கு உதவும் மாலை; செபமாலை; Rosary. *உருமணி அணி உருவினர்... ஒருபால் (திருக்காவ. கலம்.* 38).

**உருவல்** uruval, *n.* prob. *உருவு-.*

காதணி வகை; Kind of ear-drops (W.).

**உரூப்பியம்** urūppiyam, *n.* < *rūpya.*

1. வெள்ளி நகை; Jewel made up of silver (*த. மொ. அக.*).
2. ▶ வெள்ளி. *வெள்ளி உரூப்பியம் வென்பொன்னுமாம் (நாமதீப.* 378).

**உரை** urai, *n.* < *உரை-.* [T.*ora,* K.*ore,* M.*ura.*]

▶ பொன். *கழுமலமுது பதிக்கவுணியன் கட்டுரை (கட்டு+உரை)* (*தேவா.* 1, 127, 12 : 1).

**உரோகிதம்** urōkitam, *n.* < *rōhita.*

▶ முத்தாரம். *உரோகிதம் ... முத்தாரம்* (*நாநார்த்த.* 757).

**உலோசகம்** ulōcakam, *n.*

1. ▶ காதணி . *உலோசகம் ... காதணி* (*நாநார்த்த.* 851).
2. ▶ நெற்றிச்சுட்டி. *உலோசகம் ... நுதற்சுடிகை* (*நாநார்த்த.* 851).

**உலோசம்** ulōcam, *n.*

▶ உலோசகம் (*மதுரைத். அக*).

**உழுத்து** uḻuttu, *n.*

பண்டைக்கால அணி வகை; An ancient ornament. *முத்தின் உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் மூன்றும்* (S.I.I. ii, 430).

**உளை** uḷai, *n.* < *உளை.*

குதிரையின் தலையாட்டம் என்னும் அணி; Hair plume on a horse's head; *cāmara. விரி உளைப் பொலிந்த வீங்கு செலல் கலிமா* (*நற்.* 121 : 8).

**உறை** uṟai, *n.*

▶ பொன். *சாம்பூனதம் உறை ... பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

**ஊ**

**ஊர்மிகை** ūr-mikai, *n.*

▶ மோதிரம் (*மதுரைத். அக*).

**ஊர்மிசை** ūr-micai, *n.*

▶ மோதிரம் (*பெருஞ். அக*).

**ஊருதாமம்** ūru-tāmam, *n.*

பல வளைவுகளுடன் இடுப்பிலிருந்து துடைவரை தொங்கும்படி இடையணியில் இணைந்துள்ள முத்துச்சரம்; A multi stringed chain of pearles connected to the waist band reaching up the thighs.

## எ

**எட்டுக்கல் பேஸ்திரி** eṭṭu-k-kal-pēstiri, *n.* < *எட்டு* +.

► பேசரி.

**எண்கோவை** eṇ-kōvai, *n.* < id. +.

எட்டுக் கோவைகளாலாகிய மகளிர் இடையணி; A waist band with 8 strings. *காஞ்சி, எண்கோவை ... கோவை என்ப* (*பிங்*. 6 : 90).

**எண்ணாற்காழ்நிரை** eṇṇāṟ-kāḻ-nirai, *n.*

முப்பத்தாறு கோவை கொண்ட விரிசிகை என்னும் மகளிர் இடை அணிகலன்; A girdle made up of 36 strings, worn by ladies. *எண்ணாற் காழ்நிரை கண்ணுமழ்ந் திலங்க* (பெருங். 2, 19 : 145).

**எண்ணெய்மணி** eṇṇey-maṇi, *n.* < *எண்ணெய்* +.

கழுத்தில் அணியும் பூவேலைப் பாடுகளற்ற ஒருவகை மணி; Kind of plain bead used in necklace (*மதுரைத். அக.*).

**எயிற்றுத்தாலி** eyiṟṟu-t-tāli, *n.* < *எயிறு* +.

எயினசாதிப்பெண் அணியும் மங்கல நாணாகிய புலிப்பல் தாலி; The mangalya of hunter women, made up tiger's took. *இரும்புலி எயிற்றுத்தாலி இடைஇடை மனவுகோத்த* (*பெரியபு*. 10, 9 : 2).

**எருக்கிலைமணி** erukkilai-maṇi, *n.* < *எருக்கு* + .

பரவமகளிர் இடுப்பில் அணியும் கழுத்தணி வகை; Necklace worn by parava women (*Parav.*).

**எருக்கிலைமாலை** erukkilai-mālai, *n.* < id. +.

► எருக்கிலைமணி.

**எலுமிச்சங்காய் ஓலை** elumicca-ṅ-kāy-ōlai, *n.* < *எலுமிச்சை* + .

எலுமிச்சை வடிவில் அமைந்த பொன்குண்டிலான தொங்கட்டான்; An eardrop in the shape of lemon.

**எழுகோவை** eḻu-kōvai, *n.* < *ஏழு* + .

► மேகலை. *காஞ்சி எண்கோவை எழுகோவை ... கோவை என்ப* (*பிங்*. 6 : 90).

## ஏ

**ஏகவட்டம்** ēka-vaṭṭam, *n.* < *ēka* +.

► ஏகவடம். *இனமணிப்பூணும் ஏகவட்டமும்* (*பெருங்*. 2, 5 : 139).

**ஏகவடம்** ēka-vaṭam, *n.* < id. +.

► ஏகாவலி. *பொங்கில நாகமோர் ஏகவடத்தோடு* (தேவா. 1, 44, 7 : 1).

**ஏகவல்லி** ēka-valli, *n.* < *ēkavali*.

▶ ஏகாவலி. *இடைமுலைக் கிடந்த ஏகவல்லி* (*பெருங்*. 1, 46 : 211).

**ஏகவாரம்** ēka-vāram, *n.* < *ēka* +.

▶ ஏகாவலி. *ஏகவாரம் இலங்கு கழுத்தினன்* (*பெருங்*. 5, 2 : 26).

**ஏகாவல்லி** ēkā-valli, *n.* < *ēkā-vali*.

▶ ஏகாவலி. *ஏகாவல்லி ஒன்றிற்கோத்த முத்து வட்டமும் அணுவட்டமும்* (S.I.I. ii, 39).

**ஏகாவலி** ēkā-vali, *n.* < id.

▶ முத்து நிரப்பம். *இட்டசுரி சங்கெடுத்துக் கோத்து ஏகாவலியும் சாத்தீரே* (*கலிங்*. 514 : 2).

**ஏகாவலி வடம்** ēkāvali-vaṭam, *n.* < id. +.

▶ ஏகாவலி. *முத்து நிரப்பம் ... ஏகாவலி வடம்* (*தக்கயாகப்*. 340, *உரை*).

**ஏகாவளி** ēkāvaḷi, *n.* < id.

▶ ஏகாவலி (*சிற். செந்*. 94).

**ஏணிப்படுகால்** ēṇi-p-paṭu-kāl, *n.* < *ஏணி* + *படு*.

▶ மேகலை. *ஏணிப்படுகால் இறுகிறுகத் தாளிட்டு* (*பரிபா*. 10 : 11).

**ஏமப்பூண்** ēma-p-pūṇ, *n.*

பொன்னாலாகிய அணிகலன்; Gold ornament. *கீழ்வீழ்ந்த ஏமப்பூண் கொள்ளரிதென்றேக* (*திருவாரூரு*. 112).

**ஏமம்** ēmam, *n.*

▶ பொன். *ஏமம் ஈத்த வியல்பின னாகி* (*பெருங்*. 4, 1 : 28).

**ஏலரிசிமணி** ēlarici-maṇi, *n.* < *ஏலம்* +.

பரவமகளிர் கழுத்தணிகளுள் ஒன்று; A kind of necklace worn by parava women (*Parav*).

**ஏழாங்காப்பு** ēḻ-āṅ-kāppu, *n.* < *ஏழ்* +.

பிறந்த ஏழாம் நாளில் குழந்தைக்கு அணிவிக்கும் வெள்ளி முதலியவற்றாலான வளை; Bracelets or anklets of a particular pattern, of copper and silver wire twisted together, put on a baby on the seventh day after birth, as an amulet (*Loc.*).

**ஏழாநாட்காப்பு** ēḻā-nāṭ-kāppu, *n.* < id. +.

▶ ஏழாங்காப்பு.

**ஏறுமுகக் கண்டிகை** ēṟu-muka-k-kaṇṭikai, *n.* < *ஏறு* +.

▶ ஏறுமுகவுருத்திராட்சம்.

**ஏறுமுகவுருத்திராட்சம்** ēṟu-muka-v-uruttirāṭcam, *n.* < id. +.

உருத்திராக்க மணிகளை அவற்றின் முகங்கள் ஏறுவரிசையால் அமையுமாறு கோக்கப்படும் மாலை; String of *rudrākṣa* beads in which the number of faces of the beads are in ascending order.

**ஏனாதிமோதிரம்** ēṉāti-mōtiram, *n.* < *ஏனாதி* +.

வணிகரில் சிறந்த ஏனாதிப்பட்டத்தார்க்கு அரசர் வழங்கும் மோதிரம்; Ring being the insignia of the title *ēṉāti*, given to notable merchants. *ஆழி - ஏனாதிமோதிரம்* (*சீவக*. 2569 : 2, *உரை*).

## ஐ

**ஐந்தாலி** aintāli, *n.* < *ஐந்து* +.
இடைக்குலத்தில் ஒரு பிரிவினர் அணியும் தாலி; A kind of *tāli* worn by yadava women.

**ஐந்துவிரன் மோதிரம்** aintu-viraṉ-mōtiram, *n.* < id. +.
பரவ மகளிர் ஒரு விரலுக்கு நான்கைந்து வீதம் ஐந்து விரல்களிலும் அணியும் பலவகை மோதிரம்; கரண்டைக்காய் *மோதிரம்*; *Five kinds of finger-rings worn* by parava women on the five fingers (*Parav.*).

**ஐம்படை** ai-m-paṭai, *n.* < id. +.
► ஐம்படைத்தாலி. *சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப* (*மணி.* 3 : 138).

**ஐம்படைத்தாலி** *ai-m-paṭai-t-tāli, n.* < *ஐம்படை* +.
பிள்ளைகளின் கழுத்தில் அணியப்பெறும் திருமாலின் ஐந்துவகை ஆயுத உருக்கள் அமைந்த அணிகலன்; A pendant worn by children in a necklace bearing in relief the five weapons of *Viṣṇu*, as an amulet. *ஐம்படைத்தாலிக் குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்கு* (*மணி.* 7 : 56-57).

## ஒ

**ஒக்கட்டு** okkaṭṭu, *n.*
► உக்கட்டு.

**ஒட்டியாணம்** oṭṭiyāṇam, *n.* < *uḍḍīyāna.* [T. *oḍḍāṇamu*, K. *oḍḍyāṇa*, Tu. *oḍyāṇa.*]
இடுப்பைச் சுற்றி ஆடையின் மேல் அணிந்துகொள்ளுமாறு பொன் அல்லது வெள்ளியால் செய்யப்படும் அணிகலன்; Gold or silver girdle or belt, an ornament worn by women. *உடைதாரமும் ஒட்டியாணமும்* (*மீனாட். பிள்ளைத். ஊசற்.* 10).

**ஒட்டுக்கடுக்கன்** oṭṭu-k-kaṭukkaṉ, *n.* < *ஒட்டு* +.
காதில் அணியக்கூடிய சிறு கடுக்கன் வகை; Small ear-ring sticking close to the ear (W.).

**ஒட்யாணம்** oṭyāṇam, *n.*
► ஒட்டியாணம். *ஒடுங்கிய போலிடையின் நற்செம்பொன் ஒட்யாணம் நல்கிய* (*அப்பாண்டை. உலா*, 389).

**ஒடியாணம்** oṭiyāṇam, *n.*
► ஒட்டியாணம்.

**ஒத்து** ottu, *n.* < *ஒத்து-*.
ஆடவர் முன்கையில் அணியும் காப்புப் போன்றதும் தங்கம் அல்லது வெள்ளியால் ஆனதுமான மெல்லிய வளையம்; *A thin* bangle made up of gold or silver and worn by men.

**ஒழுகுசங்கிலி** oḻuku-caṅkili, *n.* < *ஒழுகு-*.
தொடர்சங்கிலி; A kind of long chain. *தன்னோடொக்க ஒழுகுசங்கிலியிலே கட்டுண்டுழலுகிற ... காலிலே விழப்பண்ணியும்* (*ரஹஸ்ய.* 194).

**ஒற்றைத்தாலி** orrai-t-tāli, *n.* < *ஒற்றை* +.

பதக்கம் முதலிய தொங்கல்கள் இன்றித் தாலி மாத்திரமே உள்ள சரடு; Marriage badge, without any other accompanying jewels, pendants etc. (W.).

**ஒற்றைத் தாலிமணி** orrai-t-tāli-maṇi, *n.* < id. +.

இறைவித் திருமேனிகளுக்கு அணிவிக்கும் ஒரேயொரு இரத்தினம் மட்டும் அழுத்திய தாலி; Marriage badge inlaid with a single precious stone adorning the deities. *நம்பிராட்டியார்க்கு சாத்தி அருள இட்ட ஒற்றைத்தாலிமணி பதின்று ஒருபது* (S.I.I. V, 512).

**ஒற்றைப்பட்டுமணி** orrai-p-paṭṭu-maṇi, *n.* < id. +.

► ஒற்றைவடமணி (W.).

**ஒற்றைப் பின்னல் அட்டி** orrai-p-pinnal-aṭṭi, *n.*

ஒரு சரமாக அமைந்த பதக்கம் இல்லாத அட்டியல்; Single stringed close neck chain (*S. D.*).

**ஒற்றைமணி** orrai-maṇi, *n.* < id. +.

► ஒற்றைவடமணி.

**ஒற்றை முக வங்கி** orrai-muka-vaṅki, *n.* < id. +.

அழகிய முகப்பு வேலைப்பாடுள்ள வங்கி வகை; A type of Bangle worn an upper arm having an ornamental front piece (*S. D.*).

**ஒற்றைவட மணி** orrai-vaṭa-maṇi, *n.* < id. +.

ஒரேயொரு சரத்தை மட்டும் கொண்டுள்ளதும் கழுத்திலணிதற்குரியதுமான நீண்ட முத்து மாலை; A single stringed long chain of pearls.

**ஒன்னப்பூ** onnap-pū, *n.* perh. *கன்னப்பூ*.

பெண்கள் காதணி வகை; An ear ornament worn by women (W.).

## ஓ

**ஓசைசெய்தளை** ōcai-cey-taḷai, *n.* < *ஓசை* +.

ஒலிக்கும் காற் சிலம்பு வகை; A tinkling anklet. *குடச்சூல் ஞெகிழம் ஓசை செய்தளை* (*திவா.* 7 : 85).

**ஓடாணி** ōṭāṇi, *n.* < ஓடு- +.

அணி முதலியவற்றில் மாட்டும் ஆணி; A sliding pin in a metal case, jewel, etc. *ஓடாணியும் நிலையாணியும் உளப்ப* (*கல். சொல். அக.*).

**ஓடை** ōṭai, *n.* < ஓடு +.

1. யானையின் நெற்றியில் அணிவிக்கப்படும் பொன்முகப்படாம்; நெற்றிப்பட்டம்; Frontlet for elephants. *யானையோடைப் பொன்கொண்டு* (*புறநா.* 126 : 1).

2. ► நெற்றிப்பட்டம். *பட்டம் ஓடை* (*பிங்.* 6 : 80).

**ஓரை** ōrai, *n.*

► அணிகலன். *ஓரையென்பது ... கலன்* (*அக. நி.* 773)

**ஓலை** ōlai, *n.* < ஒல் +.

1. காதிலணியும் பனை ஓலைச்சுருள்; Rolled palm leaf used as an ear ornament. *அழகு பெறுக ஓலை மருவும் இருகாதை* (*திருப்பு*. 91 : 1).

2. கற்கள் பதித்துப் பொன்னால் செய்யப்பட்ட காதணித் தொங்கல்; Ornament worn in the lobe of the ear, as of gold often set with precious stones. *செம்பொன் ஓலை வீழவும்* (*சீவக*. 1103 : 1).

**ஓலைசரம்** ōlai-caram, *n.* < ஓலை +.

அணிகலன் வகை; A kind of ornament (*தாசில்தார் நா. ப*. 40).

க

**கங்கணம்** kaṅkaṇam, *n.* < *kaṅkaṇa*.

1. நடைபெறும் மங்கல நிகழ்வு முடியும்வரை அல்லது மேற்கொண்ட உறுதியை நிறைவேற்றும் வரை மணிக்கட்டில் கட்டிக்கொள்ளும் மஞ்சள் துண்டு கட்டப்பட்ட கயிறு அல்லது பொன்னணி; காப்புநாண்; A cord tied with a talisman or piece of turmeric worn around the wrist till a particular auspicious event comes to an end or till the vow taken fulfilled. *சேர்விற் பொலி கங்கணம் மீது திகழ்ந்த முன்கை* (*பெரியபு*. 10, 60 : 3).

2. கைவளையின் ஒரு வகை; Bangle; bracelet; wristlet. *கையினிற் கங்கணம் இட்டு* (*திவ். பெரியாழ்*. 1, 9, 2 : 2).

**கங்காபட்டாரகி** kaṅkā-paṭṭāraki, *n.* < *gaṅgā* +.

சிவமூர்த்திக்கு அணிவிக்கப்படும் கங்கைவடிவான தலையணி; Head-ornament for the idol of *Šiva*, to represent the Ganges (S.I.I. ii, 170).

**கச்சரி** kaccari, *n.*

► கைவளை. *சுனை குடை வரை அர மகளிர்கள் கச்சரி பச்சோலை எறி திரை நிரை தரு* (குலோத். பிள்ளைத். 35).

**கச்சிக்குழல்** kacci-k-kuḻal, *n.* < *கச்சு* +.

தாலியில் கோப்பதற்கு ஏற்ப உட்துளையுடன் உருண்டு அமைந்த ஒரு வகை அணி உறுப்பு; A part of neck ornament (*செந். சொற்*.).

**கச்சு** kaccu, *n.* < *kakṣyā* . [M. *kaccu*.]

ஒரு வகை இடையணி; அரைப்பட்டிகை; Belt; girdle; sash; cummerbund. *மள்ளர் ... யாத்த பூங்கச்சு* (*சீவக*. 16 : 1-2).

**கச்சை** kaccai, *n.* cf. *kañcuka*.

1. ► அரைக்கச்சு. *மாசுணக்கச்சைபாடி* (*திருவாச*. 9, 19 : 3).

2. ► கிண்கிணி. *காலிற் கச்சை கட்டினது போல்* (*பெண்மதிமாலை*. 115).

**கசை**[1] kacai, *n.* cf. *kaca*.

காதிலிருந்து பின்புறத் தலைமுடியில் மாட்டுவதற்கு ஏற்ப கொக்கியுடன் கூடிய தலையணி வகை; மயிர்மாட்டி; Hair ornament fastened by a hook from the top of the ear to the back of the head.

**கசை**[2] kacai, *n.*

► கவசம். *கவசம் ... கசையே (திவா. 7 : 36).*

**கசைவளையல்** kacai-vaḷaiyal, *n.* prob. *kaca* +.

பொற்கம்பியினால் உருவாக்கப்பட்ட கைவளை; பொற்கம்பிவளை; Bracelets made of braided gold wire (W.).

**கட்டிக்காப்பு** kaṭṭi-k-kāppu, *n.* < *கட்டி* +.

► கட்டைக்காப்பு (*செந். சொற்.*).

**கட்டு உடைக்கலன்** kaṭṭu-uṭai-k-kalaṉ, *n.* < *கட்டு* +.

► கட்டுக்கடுக்கன். *கட்டு உடைக் கலனும் கதிர் முத்தாரமும் (பெருங். 1, 37 : 155).*

**கட்டுக்கடுக்கன்** kaṭṭu-k-kaṭukkaṉ, *n.* < id. +.

மணி பதித்த காதணி வகை; Ear-ring set with gems (J.).

**கட்டுத்தாலி** kaṭṭu-t-tāli, *n.* < id. +.

மறவரினத்திலே திருமணம் நிகழ்த்தத்தடை ஏற்படும்போது திருமணவினைகள் பின்னொரு தேதிக்குத் (சில நேரங்களில் குழந்தைப் பிறப்புக்குப் பின்னருங்கூடத்) தள்ளி வைக்கப்பட்ட நிலையில், மணமகளைக் கணவன் வீட்டுக்குக் கொணர்வதற்காக அனுப்பிவைக்கப்படும் திருமாங்கலியம்; The *tāli* among Maravas which, when some impediment arises to prevent the celebration of the marriage, is sent to the bride, whereupon she is brought to the house of her husband the completion of the ceremony being deferred to a subsequent date, some times even after children have been born (E. T.).

**கட்டுப்பவளம்** kaṭṭu-p-pavaḷam, *n.* < id. +.

பவளக் கொடியாலான கைவளை; Coral wristlet. *கட்டுப்பவளம் கைவளை பொற்கடகம் (கூளப்ப. 136).*

**கட்டுப்பூட்டு** kaṭṭu-p-pūṭṭu, *n.* < id. +.

► அணிகலன் (J.).

**கட்டுவடம்** kaṭṭu-vaṭam, *n.* < id. +.

1. உருண்டையான பொன்மணிகளை உடைய கழுத்தணி வகை; Necklace of gold beads. *நீலமணியைத் தோலிலே வைத்துத் தைத்துச் செய்த கட்டுவடமாகிய கழுத்தில் கட்டு தலையுடைய வல்லிகையினையும் (கலித். 96 : 10, உரை).*

2. உருண்டையான பொன்மணிகளை கோத்த கழல்; An anklet. *கட்டுவடக் கழலினர் (பரிபா. 12 : 24).*

**கட்டுவம்** kaṭṭuvam, *n.* prob. id. +.

காலின் நான்காம் விரலில் பெண்கள் அணியும் காலாழி; Ring worn on their fourth toe by women (J.).

**கட்டைக்காப்பு** kaṭṭai-k-kāppu, *n.* < *கட்டை* +.

உள்ளே செப்புக்கட்டையும் மேலே பொன் தகடுமாக அமைந்த காப்பு; Bangles of copper rod encased in gold (*Loc.*).

**கட்டைப்பவுன்காப்பு** kaṭṭai-p-pavuṉ-kāppu, *n.* < id. +.

► கட்டைக்காப்பு.

**கட்படாம்** kaṭ-paṭām, *n.* < *கண்* +.

யானையின் முகத்தில் அணியும் அணிகலன்; Ornamental-fillet or frontlet for blind folding an elephant. *கடாஅக் களிற்றின் மேற் கட்படாம் அற்றே* (*குறள்*, 1087).

**கடகத்திரயம்** kaṭaka-t-tirayam, *n.* < *கடகம்* +.

1. கணுக்கைக்கு மேல் அணியப்படும் கேயூரம் போன்ற அணிவகை; An ornament like *keyūrā.*
2. நடுவில் அகலமாகவும் (மணிகள் பதித்து) இரு பக்கங்களிலும் (பூவேலைப்பாடுகளுடன்) மெல்லியதாகவும் அமைந்த மூன்று வளையல்கள் ஒன்றாக இணைந்த அணிவகை; A three banded bangle with a wide jewelled band with flowery side bands all in one.

**கடகம்** kaṭakam, *n.* < *kaṭaka.*

(பெரும்பாலும்) மகர மீன் கவ்விய கொடி வடிவிலான முன்கை அணி; Bracelet worn on the forearm. *மடைசெறி முன் கைக் கடகமோடு* (*புறநா.* 150 : 21).

**கடகவளை** kaṭaka-vaḷai, *n.* < *கடகம்* +.

மூன்று யவை கனமுள்ளதும், முழங்கையில் அணியப்படுவதுமான இருபாலார்க்கும் பொதுவான கையணி; A kind of Bracelet (*சிற். செந்.* 99).

**கடயம்** kaṭayam, *n.* < *kaṭaka.*

► கடகம் (*யாழ். அக.*).

**கடலைமணி** kaṭalai-maṇi, *n.* < *கடலை* +.

கடலைவித்துப் போன்ற பொன்மணிகளாலான கழுத்தணி வகை; A kind of necklace with beads resembling bengal gram pulse.

**கடிகச்சூத்திரம்** kaṭika-c-cūttiram, *n.*

► கடி சூத்திரம் (*யாழ். அக.*).

**கடிகை**[1] kaṭikai, *n.* < *kanthikā.*

► கட்டுவடம். *நீலமணிக்கடிகை* (*கலித்.* 96 : 10).

**கடிகை**[2] kaṭikai, *n.* < *kaṭaka.*

1. திருமணம் முதலிய சடங்குகளின் போது தீய சக்திகள் தாக்காதிருக்க மணமகனின் வலது கரத்திலும் மணமகளின் இடது கரத்திலும் கட்டப்படும் மஞ்சள் கயிறு; காப்புநாண்; A yellow thread worn on the right hand of the groom and the left hand of the bride at the time of marriage as an armlet. *வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து* (*நெடுநல்.* 142).
2. ஆண்கள் தோளில் அணியும் அணிகலன்; தோள்வளை; A bracelet worn on upper arm by men. *கடிகை வாளாரம் மின்ன* (*சீவக.* 2808 : 1).
3. பவளத்தால் ஆன தலையணி வகை; A kind of head ornament made up of coral.

**கடிகையாரம்** kaṭikai-y-āram, *n.* < id. +.

நாழிகை காட்டும் கருவிகள் போல் செய்து கோத்த மாலை; கழுத்தணி; Golden necklace worn by women in one or more strands, resembling a watch chain.

**கடிசூத்திரம்** kaṭi-cūttiram, *n.* < *கடி* +.

சிங்கத்தலை போன்ற முகப்பினையும் முன்புறம் சிறு சிறு சதங்கைகளையும் கொண்ட, இடுப்பில் அணியும் பொன் பட்டிகை; Waist string. *மணிக்கடிசூத்திரம் வீக்கி* (*கம்பரா*. 6, 34, 5 : 4).

**கடிஞாண்** kaṭi-ñāṇ, *n.* < id. +.

► கடிசூத்திரம் (*செந். சொற்*.).

**கடிப்பம்** kaṭippam, *n.* prob. *கடிப்பு*.

► காதணி. *வல்லிகை கொட்டை கடிப்பம் காதணி* (*பிங்*. 7 : 73).

**கடிப்பிணை** kaṭippiṇai, *n.* < *கடிப்பு* + *இணை*.

காதின் துளையைப் பெரிதாக்கியபின் அணியும் அணி வகை; A pair of ear rings. *சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை* (*சிலப்*. 6 : 104).

**கடிப்பு** kaṭippu, *n.* < *கடி-*.

1. ► கடிப்பிணை. *காதிற் கடிப்பு இட்டு* (*திவ். பெரியதி*. 10, 8, 1 : 1).

2. இந்திரநீலத்தையும் இடையிடையே வைர மணிகளையும் அழுத்திச் செய்யப்பட்ட காதணி வகை; An ear ring with saphire and diamond. *வார் கடிப்பு வீக்கி எறிக்கும் குழைக் காதிற் ஏற்றும்* (*விக்கிரம. உலா*, 173).

**கடியாரச்சங்கிலி** kaṭiyāra-c-caṅkili, *n.* < *கடியாரம்* +.

1. கைக்கடிகாரத்தில் மாட்டியுள்ள சங்கிலி; Watch strap in the form of a chain.

2. ► கடிகையாரம்.

**கடியாரசரம்** kaṭiyāra-caram, *n.* < id. +.

► கடியாரச்சங்கிலி.

**கடியாரத்தோடு** kaṭiyāra-t-tōṭu, *n.* < id. +.

கடிகாரத்தைப் போலக் காட்சியளிக்குமாறு வட்டமாகக் கற்கள் பதித்துச் செய்யப்பெற்ற பெரிய காதணி; கம்மல் வகை; Large ear ring in gold set with jewels resembling a watch.

**கடியாரவட்டிகை** kaṭiyāra-vaṭṭikai, *n.* < id. + *அட்டிகை*.

கழுத்தை ஒட்டியவாறு மகளிர் அணியும் பொன்னாலான அணி வகை; Women's necklace made of gold wire.

**கடுக்கன்** kaṭukkaṉ, *n.* prob. *கடி-*. cf. *கடிப்பு*. [M. *kaḍukkan*.]

காது மடலின் கீழ்ப்பகுதியில், ஆண்கள் அல்லது சிறுவர்கள் அணியும் கல் வைத்துக் கட்டிய காதணி; Ear ring for men. *காதுப்பொ னார்ந்த கடுக்கன்* (*திருமந்*. 1424 : 1).

**கடுக்கு** kaṭukku, *n.*

► கடுக்கன் (*W. D.*).

**கடுகுமணி** kaṭuku-maṇi, *n.* < *கடுகு* +.

கடுகைப்போன்ற சிறிய பொன் மணிகளால் கோக்கப்பட்ட கழுத்தணி வகை; A necklace of small gold beads, in the size of mustard seeds.

**கடை** kaṭai, *n*. [T. M. *kaḍa*, K. Tu. *kaḍe*.]

கழுத்தணிகலனில் அமைந்துள்ள பூட்டு; பூண்கடைப் புணர்வு; Clasp fastening of neck ornaments. *கடையும் கயிலும் புணர்வே* (*திவா*. 7 : 63).

**கடைச்சரி** kaṭai-c-cari, *n*. < *கடை* +.

முன்கையில் அணியும் தளர்வான வளை; The lowest bracelet on the fore arm. *அவைதாம் இடைச்சரி, கடைச்சரி என்பன போல்வ* (*ஈடு*, 2, 5, 6).

**கடைசெறி** kaṭai-ceṟi, *n*. < id. +.

வாளை மீன் தன்னைத்தானே கவ்விக்கொண்டிருப்பது போல் அமைந்ததும் கைவிரலில் அணியப்படுவதுமான மோதிர வகை; Finger-ring. *ஒளியையுடை வயிரஞ்சூழ்ந்த மரகதக் கடைசெறியும்* (*சிலப்*. 6 : 97, *அடியார்*.).

**கடைத்தொழில்** kaṭai-t-tōḻil, *n*. < id. +.

பதக்கத்தின் உறுப்பு; A part of pendant. *பதக்க மாலை* 1 *னால் நாயககண்டம்* 9 *அருகுகண்டம்* 6 *கடைத்தொழில்* 2 (S.I.I. viii, 53).

**கடைப்புணர்வு** kaṭai-p-puṇarvu, *n*. < id. +.

► கடைப்பூண்.

**கடைப்பூட்டு** kaṭai-p-pūṭṭu, *n*. < id. +.

► கடைப்பூண்.

**கடைப்பூண்** kaṭai-p-pūṇ, *n*. < id. +.

அட்டிகை முதலிய அணிகலன்களில் அமைந்துள்ள சங்கிலியின் இருபகுதிகளையும் இணைக்கும் மூட்டுவாய்; Clasp of a necklace. *கண்டிகை கங்கணங் கடைப்பூண்* (*நாமதீப*. 437).

**கடைமணி** kaṭai-maṇi, *n*. < id. +.

1. பரவ மகளிர் கையணி வகை; Bracelet of parava women (*Parav*.).

2. தாலியுடன் சேர்த்தணியும் மணி; Bead attached to the *tāli*. *கட்டின தாலிக்குக் கடைமணி யில்லாது போய்* (*பஞ்ச. திருமுக*. 1332).

**கடையம்** kaṭaiyam, *n*.

► கடகம்.

**கண்சோடு** kaṇ-cōṭu, *n*. < *கண்* +.

► கண்மலர். *பொற்சோடு* 2, *நிச்சள் கண்சோடு* 1, *பொன் தானிக்காய் ஒன்றுக்கு தூக்கம் பத்து* (*கல். சொல். அக*.).

**கண்டசரம்** kaṇṭa-caram, *n*.

பல வடிவப் பொன் மணிகளைக் கோத்துச் செய்யப்பட்ட கழுத்தணி வகை; A necklace made up of golden beads of various sizes. *முத்தின் சால்வுறு கண்டசரம்* (*கந்தபு*. 3, 12, 34 : 3-4).

**கண்டத்துடர்** kaṇṭa-t-tuṭar, *n*. < *kantha* +.

► கண்டநாண். *விளக்கின் கண்டத்துடர் ஒன்று பொன் அறுபத்து இரு கழஞ்சு* (*கல். சொல். அக*.).

**கண்டநாண்** kanta-nāṉ, *n.* < id. +.

கழுத்தில் அணியப்பெறும் இரத்தினங்கள் பொருத்தப்பட்ட அல்லது உருத்திராக்கமணி கோக்கப்பட்ட அணி வகை; A kind of necklace of gems or *rudrākṣa* beads (S.I.I. ii, 192).

**கண்டப்பலகை** kanta-p-palakai, *n.* < id. +.

தாலிச்சரட்டில் கோக்கப்படும் நீண்ட சதுர வடிவமுள்ள தகடு; Oblong pendants of *mangalasūtra.* *தாலி இருபத்தேழும் கண்டப்பலகை இரண்டும் உட்பட (கல். சொல். அக.).*

**கண்டமாலை** kanta-mālai, *n.* < id. +.

▶ கண்டசரம். *கண்டமாலை தன்னை யெட்டிப்பிடித்தது (திருவிளை. 21, 17 : 1-2).*

**கண்டாபரணம்** kaṇṭāparaṇam, *n.*

கழுத்தையொட்டி அணியும் அணிவகை; An ornament for inner neck.

**கண்டாமணி** kaṇṭā-maṇi, *n.* < *ghaṇṭā* +.

▶ வீரக்கழல்.

**கண்டாவளி** kaṇṭā-vaḷi, *n.* < *kaṇṭha-āvali.*

▶ கண்டமாலை. *கண்டாவளியைக் களிறுண்டது (திருவிளை. 21, 18 : 1).*

**கண்டி** kaṇṭi, *n.* < *kaṇṭhikā.*

1. ▶ தோளணி. *கண்டி தோளணி பதக்கம் கடிப்பம் ஓர் அளவும் ஆகும் (வேத. சூடா. 142).*
2. ▶ பதக்கம். *கண்டி தோளணி பதக்கம் கடிப்பம் ஓர் அளவும் ஆகும் (வேத. சூடா. 142).*
3. ▶ உருத்திராக்க மாலை. *கவர்தலை அரவொடு கண்டியும் பூண்பர் (தேவா. 1, 78, 7 : 1).*
4. ▶ கண்டசரம்.

**கண்டிகை** kaṇṭikai, *n.* < id. +.

1. பொன்னாலான அல்லது பொற் கம்பியில் முத்துக்கோத்த கழுத்தணி வகை; Necklace. *காமர் கண்டிகை தன்னொடு பின்னிய (சிலப். 6 : 89).*

2. கற்கள் பதிக்கப்பட்ட பொன்னாலான பதக்க அணி வகை; Breastplate of gold set with precious stones. *பதக்கம் கண்டிகை ஆரம் (திவா. 7 : 61).*

3. ▶ உருத்திராக்க மாலை. *அணிகலச் செப்பும் அக்கமணியும் ... கண்டிகை (பிங். 10 : 223)*

4. ▶ கண்டி, 1. *கண்டிகை பதக்கம் வாகுவலயமே (சூடா 11 : 83).*

**கண்டிகை மாலை** kaṇṭikai-mālai, *n.* < *கண்டிகை +.*

▶ உருத்திராக்க மாலை. *திருக்கழுத்து ஆரம் தெய்வக் கண்டிகை மாலை சேர (பெரியபு. 28, 1214 : 1).*

**கண்டு** kaṇṭu, *n.* < *gaṇḍa.*

விரும்பிய வடிவங்களில் செய்து கழுத்தணியில் கோத்துக் கொள்ளும் ஒரு தொங்கணி; ஆபரணவுரு; Bead or something like a pendant in an ornament for the neck. *புல்லிகைக் கண்ட நாண் ஒன்றிற் கட்டின கண்டு ஒன்றும்* (S.I.I. ii, 429).

**கண்டை** kaṇṭai, *n.* < *ghaṇṭā.*

1. ▶ வீரக்கழல்.
2. ▶ கிண்கிணி. *கண்டையின் தாரர் (கம்பரா. 6, 18, 132 : 2-3).*

**கண்பீலி** kaṇ-pēli, *n.* < *கண்* +.
காலவிரலில் அணியும் அணி; A toe-ring (*S. D.*).

**கண்மலர்** kaṇ-malar, *n.* < id. +.
இறைவன் திருமேனிகளுக்கு அணிவிக்கப்படும் பொன் அல்லது வெள்ளியாலான கண் உரு; Eyes made of gold or silver put on idols of temples (S.I.I. ii, 340).

**கணி** kaṇi, *n.* < *கணம்.*
► அணிகலன். *மார்பணிகலன் கணியே வள்ளி நகை (நாமதீப.* 438).

**கணுநிலை மணிவடம்** kaṇu-nilai-maṇi-vaṭam, *n.*
நடுவில் பெரிய மணி அமைய இருபுறமும் ஒத்த அளவுள்ள இரண்டிரண்டு சிறு மணியும் பின்பு பெரியமணியும் வருமாறு கோத்த முத்துமாலை; A string of pearls as the biggest one in the center and on both sides decreasing in size.

**கணையம்** kaṇaiyam, *n.*
► பொன். *கணையமென்பது ... பொன்னு மெழுவுங் காவற்காடுமாம் (அக. நி.* 941).

**கணையாழி** kaṇaiyāḻi, *n.* < *கணை* +.
விரலில் அணியும் முத்திரை பதித்த மோதிரம்; முத்திரை மோதிரம்; Finger ring; signet ring.

**கணையாழி மோதிரம்** kaṇaiyāḻi-mōtiram, *n.* < *கணையாழி* +.
► கணையாழி (W.)

**கத்தணம்** kattaṇam, *n.* [T. *kattaḷamu.*]
► கவசம். *கத்தணங் கடிது பூண்டார் (இரகு. மீட்சிப்.* 7).

**கத்திரிபாவல்** kattiri-pāval, *n.* < *கத்தரி* +.
► கத்தரிபாவிலி. *கத்திரிபாவல் செவிபுனையா (தனிப்பா.* ii, 250, 590).

**கத்திரிபாவிலி** kattiri-pāvili, *n.* < id. +.
மகளிர் காதின் மேற்பகுதியில் துளையிட்டு அணிந்துகொள்ளும் மணிகள் பதித்த பொன்னாலான காதணி வகை; An ornament made of gold and gems worn by women near the top of ear.

**கதலிகை** kataḷikai, *n.* < *kadalikā.*
ஒட்டியாணம் முதலிய அணிவகையின் ஓர் உறுப்பு; A part of the girdle. *காம வல்லியுங் கதலிகை யணிந்த (பெருங்.* 2, 2 : 151).

**கந்தம்** kantam, *n.* cf. *கந்தளம்.*
► பொன். *கந்தமென்பது ... பொன்னுமிந்திரியமும் ... கருதுமேழ்பேர் (அக. நி.* 960).

**கந்தளம்** kantaḷam, *n.* [T. *kattaḷamu.*]
► கவசம். *கந்தளம் பாரம் ... கவசப் பெயரே (பிங்.* 6 : 506).

**கப்பணம்** kappaṇam, *n.* < *காப்பு* +.
1. ஒரு வகைக் கழுத்தணி; பொன் வளையம்; A kind of necklace, gold collar (W.).
2. சமய இரவலன் கழுத்துப் பட்டியில் அணியும் இரும்பாலான அணி; Iron collar for the neck worn by religious mendicants (W.).

3. திருமணம் முதலிய சடங்குகளின் போது தீய சக்திகளிடமிருந்து காப்பதற்காக, மணிக்கட்டில் அணிவிக்கப்படும் மஞ்சள் கயிறு; காப்பு நாண்; Saffron cord around the wrist worn, as an amulet or as a preliminary to the preformance of certain ceremonies.

**கப்பற்கன்மணி** kappar̠-kan̠-maṇi, *n*. < *கப்பல்* + *கல்* + .

பரவ மகளிர் அணியும் கழுத்தணிவகை; A necklace worn by parava women (*Parav*.).

**கம்பன் குச்சு** kampan̠-kuccu, *n*.

ஆண்டாளின் வைரமுடியில் தொங்கவிடப்படும் குஞ்சலம்; The tassil attached to the diamond crown of *āṇṭāl* at Srivilliputtur.

**கம்பி** kampi, *n*. [T. K. M. Tu. *kambi*.]

கம்பிகளால் பின்னப்பட்ட அமைப்புடைய காதணி வகை; A kind of ear-ring. *கம்பி இருபதினால் பொன் அறுகழஞ்சே குன்றி* (S.I.I. ii, 19, 73).

**கம்பிக்கடுக்கன்** kampi-k-kaṭukkan̠, *n*. < *கம்பி* +.

கம்பியாற் பின்னப்பட்ட காதணி; கடுக்கன்; Ear-ring formed of a wire of metal (W.).

**கம்பிமணி** kampi-maṇi, *n*.

கம்பியால் பின்னப்பட்ட ஒருவகைக் கழுத்தணி; A kind of wire necklace (W.).

**கம்பை** kampai, *n*.

காதணி வகை; A kind of ear ornament.

**கம்மல்** kammal, *n*. < T. *kamma*.

பெண்கள் காதில் துளையிட்டு அணிந்துகொள்ளும் காதணி வகை; A kind of ear-ring worn by women in the lobe of the ear.

**கயில்** kayil, *n*.

► கடைப்புணர்வு. *கயிலும் ... பூண் கடைப் புணர்வே (திவா*. 7 : 63).

**கயிற்கடை** kayir̠-kaṭai, *n*. < *கயில்* +.

► கொக்குவாய். *கயிற்கடை யொழுகிய காமர் தூமணி (சிலப்*. 6 : 101).

**கயிறு** kayir̠u, *n*. [M. *kayar̠u*]

திருமணத்தின் அடையாளமாக அணிவிக்கப்படும் சரடு; மங்கலநாண்; *Māngalya*. *கயிறுநீத்து விதவையாய் (உபதேசகா. சிவபுண்*. 186).

**கர்ணப்பூ** karṇa-p-pū, *n*. < *karṇa* +.

காதின் மேல்பகுதியின் விளிம்பில் முருகுவை அடுத்து அணியப்படும் (பெரும்பாலும்) பொன்னாலான காதணி; Jewel worn at the top of the ear next to the *muruku*.

**கர்ணபத்திரம்** karṇa-pattiram, *n*. < id. +.

1. ஓலையென்னும் பொன்னாலான காதணி; Gold ear-ring fashioned after a roll of palmyra leaf worn by women.

2. தெய்வத்திருமேனிகளுக்குச் சாத்தும் காது போன்ற பொன் அல்லது வெள்ளியால் ஆன அணிகலன்; Ear-like ornament for the idols, made of gold or silver.

**கர்ணபத்ரம்** karṇa-patram, *n.* < id. +.
காதுத்தோடு; Ear disc.

**கர்ணபூரம்** karṇa-pūram, *n.* < id. +.
காதணி வகை; A kind of ear-ornament.

**கர்ணமுத்ரா** karṇa-mutrā, *n.* < id. +.
காதின் மேல் நுனியில் அணியும் மகளிர் அணிவகை; A stud worn on the upper ear (*அணி. ஒப். ப.* 70).

**கர்ணவலயம்** karṇa-valayam, *n.* < id. +.
மகளிர் காதணிவகை; A variety of ear ring (*அணி. ஒப். ப.* 70).

**கர்ணிகை** karṇikai, *n.* < *karṇikā*.
தாமரை மொக்குப் போன்ற காதணி வகை; An ear ring in the form of a lotus bund.

**கர்ணோத்கீலகம்** karṇōt-kīlakam, *n.*
காதின் மேல் நுனியில் அணியும் மகளிர் அணிவகை; An ornament worn on the upper ear (*அணி. ஒப். ப.* 70).

**கர்ப்பூரம்** karppūram, *n.* < *karbūra.*
► பொன். *காஞ்சனம் கற்பூரம் பொன்னே* (*பிங்.* 6 : 131).

**கர்ஜீரகம்** karjīrakam, *n.*
மகளிர் முன்கரங்களில் அணியும் வளையல் வகை; A kind of bangles (*அணி. ஒப். ப.* 71).

**கரடிகை** karaṭikai, *n.*
அணிகலனின் ஓர் உறுப்பு; A part of an ornament (*கல். கலை. அக.*).

**கரடு** karaṭu, *n.* [M. M. *karaḍu.*]
1. ► பொன்.
2. ► ஒருவகை முத்து; A variety of pearl (S.I.I. ii, 549).

**கரண்டமகுடம்** karaṇṭa-makuṭam, *n.*
அடியினின்று முடிவரை படிப்படியாகச் சுற்றளவு குறைந்து நுனி குவிந்து காணப்படும் பல்வேறு மணிகள் பதித்த, பொன்னாலான தலையணி; A crown of conical shape.

**கரண்டமுகுடம்** karaṇṭa-mukuṭam, *n.*
► கரண்டமகுடம். *பொற் பண்டாரத்துக்கு முதலாக ஒடுக்கின ரத்நங்கட்டின் கரண்ட முகுடம் ஒன்றும்* (*கல். சொல். அக.*).

**கரண்டிகை** karaṇṭikai, *n.* < *karaṇḍikā*.
தலையணியாகிய முடியின் ஓர் உறுப்பு; Name of a part of the crown. *கரண்டிகையிற் கோத்த வடம்* (S.I.I. ii, 87).

**கரண்டைக்காய் மோதிரம்** karaṇṭai-k-kāy-mōtiram, *n.*
பரவமகளிர் ஒரு விரலுக்கு நாலைந்துவீதம் ஐந்து விரலிலும் அணியும் மோதிரம்; A kind of ring worn by parava women on all the five fingers, four or five such rings being worn on each finger (*Parav.*).

**கரவளை** karavaḷai, *n.* < *கரம்* +.

► கைவளை. *கரவளை மழவு மூலநாள்* (*வேத. சூடா.* 380).

**கரிணிகம்** kariṇikam, *n.*

1. காதணி வகை; An ear-ornament (*யாழ். அக*).

2. மகளிர் உட்கழுத்தில் அணியும் கறுப்பு மணி வகை; A kind of necklace made of black beads.

**கருகுமணி** karuku-maṇi, *n.* < *கருகு-* +.

பெரும்பாலும் சிறுமிகளும் இளம் பெண்களும் உட்கழுத்தில் அணியக்கூடிய தொங்கலணியுடன் சேர்ந்த கறுப்பு மணிவகை; சில இனத்து மங்கல மகளிருக்கு இன்றியமையாத அணி; String of small black beads with a pendant in the centre, worn close fittingly around the neck by girls and young women generally.

**கருணதாமம்** karuṇa-tāmam, *n.*

► செவிப்பூ (*அபிதா. மாலை.*).

**கருணிகை** karuṇikai, *n.* < *karṇika.*

► காதணி.

**கருந்தனம்** karu-n-taṉam, *n.* < *கரு-மை* +.

► பொன். *நிதியே கருந்தனம் ... பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

**கரும்பாசி** karum-pāci, *n.* < *கரும்* +.

கறுப்பு மணியாலான இருளர் தாலி; Black bead used as a *tāli* by Irular women folk (*S. D.*).

**கருமணி** karu-maṇi, *n.* < *கரு-மை* +.

1. ► கருகுமணி (*யாழ். அக.*).

2. ► நீலமணி (*மதுரைத். அக.*).

**கருவளையல்** karu-vaḷaiyal, *n.* < id. +.

குழந்தையின் கையில் அணிவிக்கப்படுவதும் (கன்னிமார்) கடவுள் வழிபாட்டில் பயன்படுத்தப் படுவதுமான சிறிய கறுப்பு நிறக் கண்ணாடி வளையல்; Black glass bangles worn by children as an amulet and used in rituals (*S. D.*).

**கருவி** karuvi, *n.* prob. *கரு.* [M. *karuvi.*]

1. ► அணிகலன்.

2. ► குதிரைக்கலணை. *பரம் கருவி ... கலணைத் தொடர்பே* (*திவா.* 7 : 44).

**கருவைக்கால் கொலுசு** karuvai-k-kāl-kolucu, *n.* < *கருவை* +.

காலில் அணியும் அணிவகை; A kind of anklet (*Colloq.*).

**கல்** kal, *n.* [T. Tu. *kallu*, K.M. *kal.*]

► இரத்தினம். *பொத்த நூல் கல்லும்* (*நாலடி.* 38 : 6).

**கல்கட்டு மோதிரம்** kal-kaṭṭu-mōtiram, *n.* < *கல்* +.

விலை உயர்ந்த கற்கள் பதித்துச் செய்யப்பட்ட மோதிரம்; Ring stud with costly stones.

**கல்யாணம்** kalyāṇam, *n.* < *kalyāṇa* +.

► பொன். *கல்யாணம் ஓர் ஐந்துடையாய்* (*திருநூற்*. 4).

**கல்லட்டிகை** kal-l-aṭṭikai, *n.* < id. +.

மகளிர் கழுத்தை ஒட்டியிருக்குமாறு அணியக்கூடியதும், இரத்தினம் வைத்து இழைத்ததுமான அணிகலன்; Necklace set with precious stones.

**கலசக்கொப்பு** kalaca-k-koppu, *n.* < *kalasa* +.

மகளிர் காதின் மேற்பகுதியில் அணியும் கொப்பு வகை; Ear ornament worn by women (W.).

**கலசப்படை** kalaca-p-paṭai, *n.* < id. +.

பரவ மகளிர் அணியும் காதணி வகை; An ear ornament worn by parava women (*Parav.*).

**கலம்** kalam, *n.*

► அணிகலன். *நன்கலம் பச்சின்மாக்கட்கு ... நல்கி* (*புறநா*. 6 : 15).

**கலம்புரி** kalam-puri, *n.* < *கலம்* +.

► மேகலை. *கலம்புரி யகலல்குற் றாயர் தவ்வையர்* (*சீவக*. 184 : 1).

**கலவம்** kalavam, *n.* < *kalāpa.*

பெண்கள் அணியும் கலாபம் என்னும் இடையணி; Women's jewelled girdle. *பூந்துகில் கலவங் கண்புதையாது* (*சீவக*. 1982 : 1-2).

**கலன்** kalaṉ, *n.*

► அணிகலன். *கலன் நாண் இழை ... ஆபரணம்* (*திவா*. 7 : 79).

**கலனரசு** kalaṉaracu, *n.* < *கலம்* +.

திருமணத்தின் அடையாளமாகப் பெண்கள் அணிந்துகொள்ளும் மங்கல அணியான தாலி; திருப்பூட்டு; The paramound of all ornaments, *tāli*, the marriage badge.

**கலாப்பு** kalāppu, *n.*

பறையர் இனத்தவர் அணிந்துகொள்ளும் காதணி வகை; An ear ornament worn by pariahs (E. T. vi, 97).

**கலாபம்** kalāpam, *n.* < *kalāpa.*

1. பதினாறு கோவைகளாலான சங்கிலிகள் தொங்கும் இடையணி; Women's zone of beads or bells consisting of 16 strands. *கலாபம் வீக்கி* (*சீவக*. 624 : 1).

2. ► மேகலை. *அழன் மணிக்கலாபம் அஞ்சி சிலம்பொடு ஆர்ப்ப* (*சீவக*. 1952 : 4).

**கலாப வட்டம்** kalāpa-vaṭṭam, *n.* < id. +.

► கலாபம். *கோதை மிளிர் மணிக் கலாப வட்டம்* (*சூளா*. 6, 107 : 1).

**கலாபாரம்** kalāpāram, *n.*

காஞ்சி முதலிய இடையணி; A girdle like *kañci.* *அருங் கலாபாரமும் மேகலையும்* (*இராஜராஜ. உலா*, 387).

**கலாபி** kalāpi, *n.* < *kalāpa.*

► உச்சிதிகம் (*அணி. ஒப். ப*. 71).

**கலாவம்** kalāvam, *n.* < id.

► கலாபம். *நிலாவிடு பசுங்கதிர்க் கலாவம் ஏய்ப்ப* (*பெருங்.* 1, 42 : 142).

**கலிக்கத்துரா** kalikkat-turā, *n.* prob. *kalikā* + U. *turai.*

முன் நெற்றியில் தொங்கும்படி மகளிர் தலையில் அணிந்துகொள்ளும் உயர்ந்த மணிகள் பதித்த பொன்னாலான அணிவகை; நெற்றிச்சுட்டி; Aigrette, spray of gems, diadem of gold or of gold set with precious stones, set up as an ornament vertically over the forehead and worn by women.

**கலிக்கத்துராய்** kalikkat-turāy, *n.* < id. + id.

தேள் கொடுக்குப் போல் உயர்ந்து தூக்கின நுனியை உடைய மகுடம்; கிரீடம்; A kind of crown.

**கலை** kalai, *n.* < *kalā.*

1\. மேகலை, காஞ்சியென்னும் இடையணிகள்; Woman's girlde consisting of seven strands of jewels. *நலம் சார் பவளக் கலை உடுத்தி* (*சிலப்.* 7 : 37).

2\. ► குதிரைக்கலணை (*பு. வெ.* 7, 7, *உரை*).

**கவசம்** kavacam, *n.* < *kavaca.*

போரில் வீரர்கள் தற்காப்பிற்காகத் தங்கள் உடம்பில் அணிந்து கொள்ளும் உறை; Armour. *புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய* (*புறநா.* 13 : 2).

**கவசனை** kavacaṉai, *n.*

► கவசம் (*த. மொ. அக.*).

**கவான்செறி** kavāṉ-ceṟi, *n.*

► குறங்குசெறி. *குறங்குசெறியணி - கவான் செறியாபரணம்* (*சிலப்.* 6 : 86, *அரும்.*).

**கவுடு** kavuṭu, *n.*

பொற்குவளையில் அமைந்த உருத்திராக்கமணி; Sacred elecarpus bead enclosed in gold and worn round the neck (*Loc.*).

**கவுத்துவம்** kavuttuvam, *n.* < *kaustubha.*

திருமால் மார்பில் அணிவதும் பாற்கடலைக் கடைந்து பெறப்பட்டதும் ஆகிய மணி; Jewel obtained from churning the sea of milk, and worn by *Viṣṇu* on his chest. *கடல் சேப்ப வந்த கவுத்துவம் ஒன்றும் அடல் சேக்கும் மார்பிற்கு அமைய* (*குலாத். உலா*, 236).

**கவுரிசங்கம்** kavuri-caṅkam, *n.*

► கவுரிசங்கரம்.

**கவுரிசங்கரம்** kavuri-caṅkaram, *n.* < *gauri-saṅkara.*

உருத்திராக்க மாலையின் நாயகமாக அமைக்கப்படுவதும், சக்தி சிவனின் இணைந்த வடிவமாகக் கருதப்படுவதுமாகிய இரட்டை உருத்திராக்கமணி; A double *rudrākṣa* bead believed to represent *Pārvati* and *Śiva* (W.).

**கழங்கு** kaḻaṅku, *n.* perh. *கழல்.*

கழற்காய் வடிவமாகச் செய்த அணிகலன்; கழற்சிக்காய் மாலை; A necklace of beads in the form of Molucca beans.

**கழல்** kaḻal, *n.* < *கழல்-*.

1. வீரர் காலில் அணியும் அணிகலன்; வீரக்கழல்; Anklet given as a token of honour to a warrior. *வில்லோன் காலன கழலே* (*குறுந்.* 7 : 1).

2. ▶ சிலம்பு. *அறைகழல் பெருஒலி* (*ஞானா.* 2, 9).

3. கால் விரலில் அணியும் மோதிரம்; Toe-ring. *கட்டுவடக் கழலினர்* (*பரிபா.* 12 : 24).

**கழல்தொடி** kaḻal-toṭi, *n.* < *கழல்* +.

வீரர்கள் தோளில் அணியும் நுண்ணிய வேலைப்பாடுகள் கொண்ட அணிவகை; A loose bracelet with time decoration worn on the upper arm by warriors.

**கழல்வளை** kaḻal-vaḷai, *n.* < id. +.

கைகளில் அணிந்துகொள்ளும் வளைவகை; A variety of loose bangles. *என்னுடைய கழல் வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே* (*திவ். நாய்ச்.* 11, 2 : 3-4).

**கழற்சிக்காய் மாலை** kaḻaṟci-k-kāy-mālai, *n.* < *கழற்சி* +.

▶ கழங்கு. *கழங்கு - பொன்னாற் செய்த கழற்சிக்காய் மாலை* (*பெருங்.* 1, 46 : 212, *அடிக்.*).

**கழுத்துப்பதக்கம்** kaḻuttu-p-patakkam, *n.* < *கழுத்து* +.

தொங்குகின்ற பதக்கம் இணைந்த உட்கழுத்து அட்டிகை; A necklace of inner neck with a pendant.

**கழுத்துமணி** kaḻuttu-maṇi, *n.* < id. +.

கழுத்தணி வகை; A kind of necklace.

**கழுத்துரு** kaḻutturu, *n.* < id. +.

திருமாங்கலியத்துடன் கோக்கும் பலவகையான தங்க உருக்கள்; Pieces of gold of various shapes and sizes forming the accompaniments of the *tāli.*

**கள்ளிப்பூ** kaḷḷi-p-pū, *n.* < *கள்ளி* +.

கள்ளிப்பூ வடிவில் அமைந்த ஒரு வகை நகை உரு; Part of a jewel. *படுகண் நாலும் கள்ளிப்பூ நாலும் கொக்குவாய் ஒன்றும் சவக்கமிரண்டும் உட்பட பொன்* (S.I.I. ii, 16).

**களதபுதம்** kaḷataputam, *n.*

▶ வெள்ளி. *சுல்லுக் களதபுதம் வெள்ளி* (*நாமதீப.* 378).

**களதௌதம்** kaḷatautam, *n.* < *kaladhauta.*

▶ வெள்ளி. *தாரம் களதௌதம் வெள்ளி* (*திவா.* 6 : 20).

**களாக்காய்** kaḷā-k-kāy, *n.* < *களா* +.

பொன் அல்லது வெள்ளியில் களாக்காய் உருவாகச் செய்து தாலி அல்லது அட்டிகையோடு இணைத்துக் கொள்ளும் ஒருவகை நகைஉரு; A circular piece of gold or silver in the shape of a carissa fruit attached to the necklace or *tāli* (*Loc.*).

**களாப்பூ** kaḷā-p-pū, *n.* < id. +.

களாப்பூ வடிவிலான மகளிர் காதணி வகை; A kind of women's ear ornament (*Loc.*).

**களாவம்** kaḷāvam, *n.* < *kalāpa.*

► கலாவம். *களாவம் ஒன்றிற் கோத்த முத்துவட்டமும் அனுவட்டமும் (கல். சொல். அக.).*

**களாவம்வடம்** kaḷāvam-vaṭam, *n.* < id. +.

► கலாபம். *இவர்க்குக் குடுத்தன களாவம் வடம் மூன்றிற்க் கோத்தமுத்த (கல். சொல். அக.).*

**களிகை** kaḷikai, *n.* < *kalika.*

ஒரு வகைக் கழுத்தணி; A kind of necklace. *நலப் பெருங் களிகையு நன்முத்தாரமும் (பெருங்.* 2, 19 : 118).

**கற்கட்டுமோதிரம்** kaṟkaṭṭu-mōtiram, *n.* < *கல்* +.

ஒன்று அல்லது பல விலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட மோதிரம்; A kind of ring set with one or more precious stones.

**கற்கண்டு** kaṟkaṇṭu, *n.* < id. +.

அணிகலன் வகை; A kind of ornament. *கற்கண்டு ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு இரண்டு (கல். சொல். அக.).*

**கற்கரிகை** kaṟ-karikai, *n.* < *ghargharikā.*

► சதங்கை *(யாழ். அக.).*

**கற்பூ** kaṟ-pū, *n.* prob. *கல்* +. [M. *koppu.*]

பரவ மகளிர் காதின் மேற்பகுதியில் அணியும் அணி வகை; An upper ear ornament of parava women (*Parav.*).

**கறடிகை** kaṟaṭikai, *n.* cf. *கறண்டிகை.*

மணிமுடி, காப்பு, சிலம்பு முதலியவற்றில் காணப்படும் ஓர் அணிகல உறுப்பு; Component of an ornament as of a crown, bracelet or anklet. *முத்தின் சூடகமொன்றில் ... கறடிகை ஆறும்* (S.I.I. ii, 211).

**கறடு** kaṟaṭu, *n.* < *கரடு.* [T. *karaṭi.*]

1. ► பொன். *கறடே பொன்னுங் கறடுமாகும் (ஆசி. நி.* 855).

2. தாழ்தரமான முத்துவகை; Crude or inferior pearl. *முத்துங் குறுமுத்துங் ... கறடும் நிம்பௌமும்* (S.I.I. ii, 143).

**கறண்டிகை** kaṟaṇṭikai, *n.* cf. *கறடிகை.*

தலையணியாகிய மகுட உறுப்புகளுள் ஒன்று; Component part of a crown. *கறண்டிகையிற் கோத்த வடம்* (S.I.I. ii, 90).

**கன்று** kaṉṟu, *n.* [K. Tu. *kanau*, M. *kannu.*]

► கைவளை. *கன்று அணிகரத்தெம் மன்னை (சீகாளத். பு. கன்னி* 147).

**கன்னசரம்** kaṉṉa-caram, *n.*

இரு காதுகளினின்று நெற்றியின் மையத்தில் தொங்கும் சிறு பதக்கத்துடன் அரைவட்டமாகத் தலைமுடியின் மீது அணியும் அணி; A gold chain connecting both the ear rings through the upper part of forehead.

**கன்னதாமவலம்பனம்** kannatāma-valampaṉam, *n*. < id. +.
பெரும்பாலும் கொற்றவையின் (மகிசாசுரமர்த்தினியின்) காதில் கயிறுபோலத் தொங்கவிடும் மாட்டல், சிமிக்கி போன்ற அணிகலன்; A kind of ear pendant (*த.நா.அ. ப*. 301).

**கன்னப்பூ** kaṉṉa-p-pū, *n*. < id. + prob. *pārsva*. [M. *kannappūvu*.]
► கர்ணப்பூ. *கோதில் கன்னப்பூக் கஞல* (*கம்பரா*. 1, 21, 17 : 1-2 ).

**கன்னபுஷ்பம்** kaṉṉa-puṣpam, *n*. < id. +.
► கர்ணப்பூ. *கன்ன புஷ்ப 3னால் 8½ மாறி பொன் இரு கழஞ்சே கால்* (*கல். சொல். அக*.).

**கன்ன பூரம்** kaṉṉa-pūram, *n*. < *karṇapūra*.
► கர்ணபூரம். *கன்னபூரங் கலந்தசெங் கண்ணியே* (*வில்லி*. 1, 1, 111 : 4).

**கன்னபூஷணம்** kaṉṉa-pūṣaṇam, *n*. < id. +.
காதணி; Ear ornament.

**கன்னாவதங்கிசம்** kaṉṉāvataṅkicam, *n*. < id. +.
காதில் அணியும் அணிவகை; Ear - ornament. *தென்னர் வலம்புரியும் சேரலர் சாமரையும் கன்னாவதங்கிசமாக் கைக்கொண்டு* (*இராஜராஜ. உலா*, 238).

**கன்னாவதஞ்சம்** kaṉṉāvatañcam, *n*. < id. +.
காதின் மேல் பகுதியில் அணியும் செவிமலர் என்னும் அணிவகை; Ear - ornament, ornament for the upper ear. *கன்னாவதஞ்சம் செவி மலர்ப்பூ* (*திவா*. 7 : 86).

**கனகம்** kaṉakam, *n*. < *kanaka*.
► பொன். *மணியார் தருகனகம் அவை வயிரத்திரளோடும்* (*தேவா*. 1, 16, 4 : 3).

**கஜ்ஜட்டிகை** kajjaṭṭikai, *n*. < *கஜ்ஜை* +.
அட்டிகை வகை; A kind of necklace of inner neck (*Colloq*.).

**கஜ்ஜை** kajjai, *n*. [T.K. *gajje*.]
► சலங்கை. *காலில் கஜ்ஜைகட்டி யாடினார்களானால்* (*பிரதாப. விலா. ப*. 52).

**கஜ்ஜைக்கொலுசு** kajjai-k-kolucu, *n*. < *கஜ்ஜை* +.
வெள்ளியாலான கால் கொலுசு வகை; Silver anklet stringed with linking bells (*பிரதாப. விலா. ப*. 18).

## கா

**காசிமணிமாலை** kāci-maṇi-mālai, *n*.
1. காசிக்கு பயணம் மேற்கொண்டவர் அங்கிருந்து கொண்டுவரும் செம்பு அல்லது கண்ணாடி மணியாலான பெண்கள் கழுத்தணி; Womens necklace of brass or glass beads, brought originally by the pilgrims from *kāci*..
2. ► காசுமணிமாலை (*செந். சொற்*.).

**காசு** kācu, *n*. prob. *kās*. cf. *kāca*. [M. *kāsa*].
1. ► அச்சுத்தாலி. *காசும் பிறப்புங் கலகலப்ப* (*திவ். திருப்பா*. 7 : 3).
2. மேகலையாகிய ஆபரணம்; Girdle strung with gems. *பட்டுடை சூழ்ந்த காசு* (*சீவக*. 468 : 2).

3. காசுமாலையில் உள்ள நாணய வடிவத்தகடு; A round coin like piece made of gold or silver for stringing into a necklace.

4. [M. *kāšu.*] ► மணி. *காழ் பெயல் அல்குல் காசு முறை திரியினும் நாண்வழிக் காசுபோலவும்* (இறை. 2, உரை, ப. 29).

5. [M. *kāšu.*] ► பொன். *பொன் பெருங்காசு காணம் ஆமே* (ஆசி. நி. 169).

**காசுமணிமாலை** kācu-maṇi-mālai, *n.* < *காசு* +.

காசுகளும் மணிகளும் கோத்த மாலை; Necklace decorated with *Kācu* & gems (*செந். சொற்.*).

**காசுமாலை** kācu-mālai, *n.* < id. +.

பொன் அல்லது வெள்ளியாலான நாணய வடிவ வட்டத் தகடுகளைக் கோத்துச் செய்யப்பட்ட பெண்கள் கழுத்தணி; Necklace of gold coins worn by women.

**காஞ்சனம்** kāñcaṉam, *n.* < *kāñcana.*

► பொன். *காஞ்சனக் கமுகு காய் பொற் கனிக்குலை வாழை* (*சீவக.*1497 : 1).

**காஞ்சி** kāñci, *n.* < *kañcī.*

ஏழு முத்துவடங்கள் கோத்த மகளிர் இடையணி; Woman's waist-girdle consisting of seven strings of pearls. *மேகலை காஞ்சி வாகுவலயம்* (*பரிபா.* 7 : 47).

**காணம்** kāṇam, *n.*

1. பொற்காசு; An ancient gold coin. *ஒன்பதுகாப் பொன்னும் நூறாயிரங் காணமுங் கொடுத்து* (*பதிற்றுப்.* 6 *பதிகம்*).

2. ► பொன். *மாடு காணம், கனமே ... பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

**காதணி** kātaṇi, *n.* < *காது* +.

காதில் அணியும் கம்மல், தோடு போன்ற அணிகலன்; Ear ornament. *குழையே மிஞ்சிகை காதணி குண்டலம்* (*திவா.* 7 : 70).

**காதுஇழை** kātu-iḻai, *n.* < id. +.

► தொங்கட்டான்.

**காதுச்சில்லறை** kātu-c-cillaṟai, *n.* < id. +.

காதணி வகை; Ear ornament.

**காதுப்பூ** kātu-p-pū, *n.* < id. +.

காதில் மகளிர் அணியும் மலர் வடிவிலான அணி வகை; Flower shaped ear ornament of women.

**காதுப்பொன்** kātu-p-poṉ, *n.* < id. +.

மூன்று வளையங்கள் கொண்ட காதணி வகை; A jewel for ear made up of three rings (*W. D.*).

**காதோலை** kātōlai, *n.* < id. +. [M. *kātōla.*]

1. மகளிர் காதில் அணிந்துகொள்ளும் பனங்குருத்து ஓலையின் சிறு சுருள்; Small roll of a palmyra leaf, often, as an ornament inserted in the lobe of ear.

2. பொன், மணி, வைரம் முதலியவற்றால் செய்யப்பட்ட ஓலைச்சுருள் போன்ற மகளிர் காதணி வகை; Ear ornament made of gold, gems diamond, etc. worn by women designed as a palmyra leaf circle.

**காப்பு** kāppu, *n.* < *கா-*. [T. K. Tu. *kāpu*, M. *kāppu*.]

1. ► காப்பு நாண். *பூசுரர் கைக் கன்னித் தளிர் அறுகின் காப்பு அணிந்து* (*தக்கயாகப்.* 41).

2. கையிலும் காலிலும் அணியும் பட்டையான அல்லது மெழுகடைத்த உருண்ட தங்க வளையல்; Bracelet; anklet. *மைந்தரும் ... காப்பணியாக் கொள்ளுங் கலைசையே* (*கலைசைச்.* 53).

3. நோய் வராமல் தடுப்பதற்காகக் காலில் அணியும் ஈயம் அல்லது இருப்பாலான வளையம்; A lead or iron anklet worn for medical purposes.

**காப்புநாண்** kāppu-nāṇ, *n.* < *காப்பு* +.

திருமணம் முதலிய சடங்குகளில் தீய சக்திகளிலிருந்து காக்கக் கையில் கட்டும் மஞ்சள் கயிறு; String tied round the wrist of a person with *mantras* to ward off evils, as an amulet, in time of marriage etc. *காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன்* (*திவ். நாய்ச்.* 6, 4 : 4).

**காய்க்கடுக்கன்** kāy-k-kaṭukkaṉ, *n.* <*காய்* +.

உருத்திராக்கம் வைத்துக்கட்டிய காதணி வகை; உருத்திராட்சக்கடுக்கன்; An ear pendant made up of *rudrākṣa* bead (J.) .

**காய்க்காரை** kāy-k-kārai, *n.* < id. +.

கழுத்தணி வகை; A kind of necklace (*W. D.*).

**காரணிக்கம்** kāraṇikkam, *n.* perh. *kāraṇika.*

► செபமாலை (R. C.).

**காரம்** kāram, *n.* < *bhṛṅgāra.*

► பொன். *காரம் தொடுக்கம் ... பொன்னே* (*பிங்.* 6 : 131).

**காரை** kārai, *n.*

அகலமும் பருமனும் மிகுந்த அட்டியல் வகை; A broad necklace of inner neck (*W. D.*).

**கால்காப்பு** kāl-kāppu, *n.* < *கால்* +.

► காப்பு, 2.

**கால்கொலுசு** kāl-kolucu, *n.* < id. +.

► கொலுசு.

**கால்மணிவடம்** kāl-maṇi-vaṭam, *n.* < id. +.

► பாதசாலம் (*கயா.*).

**கால்மெட்டி** kāl-meṭṭi, *n.* < id. +.

► மெட்டி (*செந். சொற்.*).

**கால்மோதிரம்** kāl-mōtiram, *n.* < id. +.

► கான்மோதிரம்.

**கால்வடம்** kāl-vaṭam, *n.* < id. +.

ஒலிக்கும் சதங்கைகளை உடைய கால் அணிகலன் வகை; A kind of anklet with tinkling beads. *திருக்கால்வட மொன்றிற் கோத்த* (S.I.I. ii, 397, 205).

**கால்வளை** kāl-vaḷai, *n.* < id. +.

► தண்டை, 1.

**காலணி** kāl-aṇi, *n.* < id. +.

(பெரும்பாலும்) பெண்கள் காலில் அணியும் சலங்கை முதலிய அணிகள்; Anklet, toe rings or bells etc. *கரந்தியான் கொண்ட காலணி (சிலப்.* 16 : 127).

**காலாழி** kālāḻi, *n.* < *கால் + ஆழ்-.*

கால் விரலில் அணிந்துகொள்ளும் மோதிரம்; Toe - ring. *கிண்கிணியையும் சிலம்பையும் காலாழியுடன் அகற்றிய பின்பு (சீவக.* 353 : 2, *உரை*).

**காவல்** kāval, *n.* < *கா-.* [T. kāvali, K.M. *kāval.*]

► கவசம். *வான் புலங் காவல் கொண்டார் (சீவக.* 793 : 4).

**காவிதி கணை** kāviti-kaṇai, *n.* < *காவிதி +.*

அரசியல் அதிகாரிகளும் கலை வல்லுநர்களும் காவிதிப்பட்டம் பெறும் போது அளிக்கப்படும் மோதிரம்; A ceremonial ring presented with the title of *Kāviti* in olden days. *சுந்தரபாண்டிய ஈஸ்வரத்து தேவரடியாள் தேவன் கருதாச் சிலைக் காவிதிமகள் காவிதி கணை பெற்றார்* (S.I.I. xiv, 83).

**காவிதிப்பூ** kāviti-p-pū, *n.* < id. +.

காவிதியென்னும் பட்டத்துடன் அரசர் அளிக்கும் பொற்பூ; Gold flower, the badge of the title *kaviti. எட்டிப்பூ, காவிதிப்பூ, நம்பிப்பேறு என (தொல். எழுத்.* 154, *நச்சர்.*).

**காழ்** kāḻ, *n.* prob. *kāś.*

1. ► முத்துமாலை. *மார்பிற் பூண்ட வயங்கு காழ் ஆரம் (புறநா.* 150 : 20).

2. ► மேகலை. *கலிங்கமொடு காழ் கலக்கி (பெருங்.* 1, 37 : 239).

**காழ்நகை** kāḻ-nakai, *n.* < *காழ் +.*

► நகைக்காழ். *தாழ்காழ் நகையொடு தாமந் துயல்வரும் (பெருங்.* 1, 47 : 209).

**காளிங்கம்** kāḷiṅkam, *n.*

அணிகலன் வகை; A kind of jewel. *தெள்ளொளிய காளிங்கஞ் சோதிகிடப்பத் தொடுத்து (ஆதியுலா,* 121).

**காற்காப்பு** kāṟ-kāppu, *n.* < *கால் +.*

காலில் அணியும் அணிகலன்; காப்பு; Anklet.

**காற்காறை** kāṟ-kāṟai, *n.* < id. +.

தெய்வத் திருமேனிகளின் திருவடிகளில் சாத்தும் காலணிகலன் வகை; Foot rings for the idols. *திருக்காற்காறை நாற்பொன் ஐங்கழஞ்சு* (S.I.I. ii, 397).

**காற்சரி** kāṟ-cari, *n.* < id. +.

► பாதசரம். *திருக்காற் சரியும் சாத்திய ஒண்சுடர் (பெரியபு.* 7, 36, 32 : 4).

**காற்சவடி** kāṟ-cavaṭi, *n.* < id. +.

பொன்னாலான சிறு வடங்களை முறுக்கி ஒரு புறத்தைக் கால் பெருவிரல் மோதிரத்திலும் மற்றொன்றை சிலம்பின் கீழும் அணியும் மகளிர் அணி வகை; A chain connecting toe ring and the Anklet. *பரியகம் - காற்சவடி (சிலப். 6 : 84, அடியார்.).*

**காற்சிலம்பு** kāṟ-cilampu, *n.* < id. +.

காலில் அணியப்படும் இனிய ஓசை தரும் அணிகலன்; சிலம்பு; Tinkling anklet.

**காற்சுற்று** kāṟ-cuṟṟu, *n.* < id. +.

மகளிர் தம் கால்விரலில் அணியும் வெள்ளியால் செய்யப்பட்ட மெட்டி; Toe ring.

**காற்றண்டை** kāṟṟaṇṭai, *n.* < id. + *தண்டை.*

காலைப் பிடித்தாற் போன்று அமைக்கப்பெற்ற சிறு காலணி வகை; தண்டை; Tinkling trinket for ankles.

**காறை** kāṟai, *n.* prob. *காறு.*

முன்புறம் இடையிடையே பூக்கள் போன்ற அணிகளுடன் வட்ட வடிவமாகக் கம்பிபோல் செய்யப்பட்டு, பெண்களும் குழந்தைகளும் அணிந்து கொள்ளும் பொன்னாலான கழுத்தணி வகை; Gold or silver collar, necklet for women and children. *கழுத்தினிற் காறையொடும் தன்னில் பொலிந்த விருடிகேசன் (திவ். பெரியாழ். 1, 8, 3 : 3-4).*

**கான்மோதிரம்** kāṉ-mōtiram, *n.* < *கால்* +.

பெரும்பாலும் கால் கட்டைவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிந்துகொள்ளும் சிறு வளையம்; Ring usually worn on the second toe. *விரலணி - மகரவாய்மோதிரம், பீலி, கான்மோதிரம் முதலியன (சிலப். 6 : 83, அடியார்.).*

## கி

**கிங்கிணி** kiṅkiṇi, *n.* < *kinkiṇi.* cf. *கிண்கிணி.*

1. தவளையின் வாய் வடிவில் அமைந்து ஒலியெழுப்பும் ஒருவகைக் கால் அணிகலன்; பாத சதங்கை; Tinkling ornament for the anklet. *கிங்கிணி சேர்ந்த திருத்தடியாள் (ஆதியுலா, 89).*

2. இடுப்பில் கட்டும், ஒலியெழுப்பும் சிறு மணிகளை உடைய அணிகலன்; அரைச்சதங்கை; Girdle of small bells. *மாணிக்கக் கிங்கிணி தன்னரை யாட (திவ். பெரியாழ். 1, 7, 2 : 1-2).*

**கிண்கிணி** kiṇkiṇi, *n.* < *கிண்கிண்.*

1. ► கிங்கிணி, 1. *தவளை வாய் பொலஞ்செய் கிண்கிணி (குறுந். 148 : 1).*

2. ► அரைச்சதங்கை. *உடன்கூடிக் கிண்கிணி யார வாரிப்ப (திவ். பெரியாழ். 1, 8, 1 : 3).*

**கிண்கிணித்தாமம்** kiṇkiṇi-t-tāmam, *n.* < *கிண்கிணி* +.

► கிண்கிணிமாலை, 2. *தவளைக் கிண்கிணித் தாமஞ் சேர்த்தியும் (சீவக. 3126 : 1).*

**கிண்கிணிமாலை** kiṇkiṇi-mālai, *n.* < id +.

1. இடுப்பு, கண்டைக்கால் பகுதியில் மகளிர் அணியும் ஒலியெழுப்பும் சதங்கை மாலை; String of small tinkling bells, for the waist or anklet of women.

2. குதிரை முதலிய விலங்குகளின் கழுத்துப் பகுதியில் அணியும் ஒலியெழுப்பும் சதங்கை மாலை; String of small tinkling bells, for the neck of horse or other animals. *குரலே தார் இவை கிண்கிணிமாலை (பிங். 6 : 164)*

**கிம்பிரிமுகம்** kimpiri-mukam, *n.* < *கிம்புரி* +.

► கிம்புரி முகம். *திருப்பட்டிகை ஒன்றிற் கிம்பிரிமுகம் ஒன்றும் மட்டப்பூப் பத்தும்* (S.I.I. ii, 46).

**கிம்புரி** kimpuri, *n.* < *கீள் + புரி*.

1. யானைத் தந்தத்திலிடும் தொப்பி போன்ற பூண்; Ornamental cover on an elephant's task. *கிம்புரி பகுவாய்க் கிளர் முத்து ஒழுக்கத்து* (*சிலப்*. 5 : 150).

2. ஐந்து வகையான முடியுறுப்புள் ஒன்று; Cone of the five types of Crown. *தூவொளி மணிமுடி முகத்த கிம்புரி* (*சூளா*. 10, 79 : 3).

3. மகரவாயென்னும் ஆபரணம்; A kind of ornament. *தொடுத்தலர் மாலை சூட்டிக் கிம்புரி முத்த மென்றோள்* (*சீவக*. 2091 : 2).

4. ஆண்கள் தோளில் அணியும் ஓர் ஆபரணம்; தோளணி; Men's ornament for the upper arm, a kind of epaulet (W.).

**கிம்புரிமுகம்** kimpuri-mukam, *n.* < *கிம்புரி* +.

அணிகலன்களில் முகப்பாகவும், எடுப்பாகவும், தொடக்கமாகவும், பொன்னால் யானைமுகம் அமைக்கப்பெற்ற ஓர் உறுப்பு; Ornamental knob, as part of a jewel (S.I.I. ii, 430).

**கிம்புரிவலயம்** kimpuri-valayam, *n.* < id +.

மகரமீன் வடிவாகச் செய்யப்பட்ட தோள்வளை; Bracelet of upper arm. *தோள் தொறுந் தொடர்ந்த மகரிகை வயிரக் கிம்புரி வலயமாச் சுடர்கள்* (*கம்பரா*. 5, 3, 83 : 1).

**கிரப்பாசி** kira-p-pāci, *n.*

இருள இனத்தவரின் தாலி; The *tāli* of *Iruḷa* women folk (*W. D.*).

**கிராம்புக் குச்சி** kirāmpu-k-kucci, *n.* < *கிராம்பு* +.

காதின் மேற்பகுதியில் அணியும் கிராம்பின் வடிவமுடைய காதணி வகை; Clove shape ear - jewel (*W. D.*).

**கிராம்புச் சொரை** kirāmpu-c-corai, *n.* < id. +.

► கிராம்புக் குச்சி (*W. D.*).

**கிராம்புத் திருகிணி** kirāmpu-t-tirukiṇi, *n.* < id. +.

► கிராம்புக் குச்சி (*W. D.*).

**கிராம்புப் பூடி** kirāmpu-p-pūṭi, *n.* < id +.

► கிராம்புக் குச்சி.

**கிரீடம்** kirīṭam, *n.* < *kirīṭa*.

அரசன், அரசி போன்றோர் தங்கள் அதிகாரத்தின் சின்னமாகத் தலையில் அணிந்து கொள்ளும் தங்கத்தாலான மணிமுடி; Crown; diadem. *மகுடம் கிரீடம் மணிமுடி என்ப* (*திவா*. 7 : 77).

**கிரீடமகுடம்** kirīṭa-makuṭam, *n.* < *கிரீடம்* +.

தாமரைமலர், குடை, ஆமை போன்ற வடிவங்களில் அமைந்து விலை உயர்ந்த மணிகள் பதிக்கப்பட்ட பொன்னாலான தலையணி வகை; A kind of crown.

**கிருத்மாசியம்** kirut-māciyam, *n.*

தொடையில் முத்துச் சரங்கள் தொங்கவிடுவதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ள முகம் போன்ற பகுதி; The front part of the girdle ie. waist band.

**கிரைவேயகாரம்** kirai-vēya-kāram, *n.*

► கிரைவேயம்.

**கிரைவேயம்** kirai-vēyam, *n.*

கழுத்திலிருந்து மார்பு வரை தொங்கும் காசுமாலை, காரை, அட்டிகை போன்ற உள்கழுத்தணிகள்; A leunch of necklaces of inner neck.

**கிள்ளட்டிகை** kiḷḷaṭṭikai, *n.* < *கிள்ளு + அட்டிகை.*

நகக்கிள்ளு வடிவமான பொன்னுருக்கள் அமைந்த கழுத்தணி வகை; Ornament for the neck made of thin gold pieces strung together.

**கிளிச்சிறை** kiḷi-c-ciṟai, *n.* < *கிளி* +.

நால்வகைப் பொன்னுள் ஒன்றான (கிளிச்சிறகு போன்ற நிறமுள்ள) பொன்வகை; Gold resembling the parrot's wing in colour, one of four kinds of pon. *சாதரூபங் கிளிச்சிறை யாடகம் சாம்புநதம்* (*சிலப்*. 14 : 201).

**கிளியட்டிகை** kiḷi-y-aṭṭikai, *n.* < id. +.

பொன்னால் கிளி உருவம் அமையச் செய்த அட்டிகையணி; Necklace of gold threads ornamented with golden parrots (*Loc.*).

**கிறி** kiṟi, *n.* < *கிறு-*.

1. குழந்தைகளின் முன்கையிலணியும் சிறு பவளவடம்; Coral wristlet for children. *கிண்கிணி கட்டிக் கிறிகட்டி* (*திவ். பெரியாழ்*. 1, 9, 2 : 1).

2. வைணவர்கள் அணியும் கழுத்தணி; A necklace worn by Vaishnavites.

## கீ

**கீச்சி** kīcci, *n.* < *கரிச்சி*.

பாசிமணிகளாலான கழுத்தணி; Necklace, commonly of black earthen beads (J.).

**கீரைமணி** kīrai-maṇi, *n.* < *கீரை* +.

பெண்களும் குழந்தைகளும் கழுத்திலணியும் பல வண்ணங்களையுடைய சிறுபாசிமணி; Tiny glass beads of various colours worn on the neck by poor women and children. *அயலார் புன் கீரைமணி பூண்டாலு மென்கண் பொறுக்காது* (*அருட்பா*, i, *விண்ணப்*. 359).

**கீரைமணியட்டிகை** kīrai-maṇi-y-aṭṭikai, *n.* < id. +.

சிறிய பொன்மணிகள் அமைந்ததும் பெண்கள் அணிவதுமான அட்டியல் வகை; Women's necklace of tiny gold beads.

**கீலம்** kīlam, *n.*

ஆண்கள் அணியும் காதணி வகை; A kind of ear ornament worn by men (*அணி. ஒப். ப*. 70).

குு

**குச்சம்** kuccam, *n.* < *guccha.*

சடையின் நுனியில் கட்டப்படும் பொன் பூணிலிருந்து தொங்கும் மூன்று பந்துகள் போன்று அமைந்த அலங்காரக் குஞ்சம்; Tassel of thread, sheaf of paddy in the form of a tassel, hung as an ornament at the end of the pigtail (W.).

**குச்சிப்பதக்கம்** kucci-p-patakkam, *n.* < *குச்சு* +.

சிறிய காசு வடிவிலானதும் டீக்காப்பதக்கத்திலிருந்து வேறானதுமான பதக்க வகை; Jewel pendant set with small rubies, dist. fr. *tikkā-p-patakkam.*

**குச்சு** kuccu, *n.* < *guccha.* [T. *kutccu,* K. M. *kuccu.*]

1. ► குஞ்சம். *கவரி மேனிலாப்படக் குச்சொடுந் தூக்கினர் (உபதேசகா. சிவபுண். 68).*

2. பெண்கள் காதில் அணியும், மணி வடிவிலான பொன் அணி வகை; Small bell shaped gold pendant worn on ears (W.).

3. ஊராளி மகளிர் அணியும் கதிர் வடிவிலான கழுத்தணி வகை; Pencil-shaped ornament suspended from the neck, worn by *Ūrāḷi* women.

**குச்சுமணி** kuccu-maṇi, *n.* prob. *குச்சு* +.

பரவ மகளிர் அணியும் கழுத்தணி வகை; A neck-ornament of women (*Parav.*).

**குஞ்சம்** kuñcam, *n.*

► குச்சம் (*செந். சொற்.*).

**குஞ்சரமணி** kuñcara-maṇi, *n.* perh. *குஞ்சம்* +.

பரவப் பெண்கள் அணியும் கழுத்தணி வகை; Necklace worn by parava women (*Parav.*).

**குஞ்சாமணி** kuñcā-maṇi, *n.* < *குஞ்சு* + *ஆம்* + *மணி.*

ஆண் குழந்தைகளின் இடுப்பில் கட்டும் அணிவகை; தம்பித்தோழன்; A waist ornament of male children.

**குஞ்சிக்கம்பு** kuñci-k-kampu, *n.* < *குஞ்சி* +.

► தம்பித்தோழன் (*S. D.*).

**குஞ்சிமணி** kuñci-maṇi, *n.* < id. +.

► குஞ்சாமணி.

**குட்டம்** kuṭṭam, *n.*

ஒரு நகை; An ornament. (*இரத்தினம் இட்ட குட்டம்*) *சிகரமன மேலுக்கு ரற்றி நமிட்ட குட்டம்* 1, *கருமுத்து* 709 (*கல். சொல். அக.*).

**குடச்சூல்** kuṭaccūl, *n.* < *குடைச்சூல்* .

► குடைச்சூல். *குடச்சூல் ஞெகிழம் ஓசை செய்தளை (திவா. 7 : 85).*

**குடுமி** kuṭumi, *n.* cf. *cūḍā.* [M. *kaṭuma.*]

► கிரீடம். *குடுமிகொண்ட மண்ணுமங்கலம் (தொல். 1018 : 10).*

**குடைச்சூல்** kuṭai-c-cūl, *n.* < குடை-.

புகலாகச் செய்து உள்ளே பரல்கள் போடப்பட்ட நீள்வட்டமான கால் அணிகலன்; சிலம்பு; Anklet. *அவ்வரிக் குடைச்சூல் (பதிற்றுப். 68 : 18).*

**குண்டலக்கடுக்கன்** kuṇṭala-k-kaṭukkaṉ, *n.* <*kaṇḍala* +.

பெரிய வட்டமான காதணி, கடுக்கன் வகை; A large ear-ring.

**குண்டலம்** kuṇṭalam, *n.* < id. +.

சிறு குண்டோ மணியோ தொங்கும்படி அமைந்த ஆடவர் காதணி; Gold ear-ring worn by men. *குண்டல மொருபுடை குலாவி வில்விட (சீவக. 1009 : 1).*

**குண்டுத்தாலி** kuṇṭu-t-tāli, *n.* < குண்டு.

தாலி வகை; A kind of *tāli* (*W. D.*).

**குண்டுமாலை** kuṇṭu-mālai, *n.* < id. +.

பொன்மணிகளாலமைந்த கழுத்தணி வகை; Necklace of gold beads (*Loc.*).

**குணுக்கு** kuṇukku, *n.* prob. குணுக்கு-.

1. ► கடிப்பிணை. *கடிப்பிணை குணுக்கு ஆம் (பிங். 6 : 74).*

2. காது வடித்தற்காகக் காதின் கீழ்ப்பகுதியில் அணியப்படும் கனமான ஒரு வளையம்; Ring of lead or brass suspended in the lobe of the ear to stretch it (*சினேந். 109, உரை.*).

**குதம்பை** kutampai, *n.* perh. குதம்பு-.

1. காதின் துளையைப் பெரிதாக்குவதற்காக அணியப்படும் ஓலை அல்லது சீலை முதலியவற்றாலான சுருள்; Roll of palmyra leaves or cloth worn in the ear lobe to widen the perforation. *சீலைக் குதம்பை யொருகாது (திவ். பெரியாழ். 3, 3, 1 : 1).*

2. விலை உயர்ந்த மணிகள் பதித்த பொன்னாலான காதணி வகை; A kind of ear-ring. *குல கிரிகள் ... இருகாதில் ... குதம்பையும் ஆம் (கலிங். 132 : 2).*

**குதிரைக்கலணை** kutirai-k-kalaṇai, *n.* < குதிரை.

குதிரை முதுகில் சவாரி செய்வதற்காகவும், அழகுக்காகவும் போடப்படும் சேணம்; Horse - saddle.

**குதும்பை** kutumpai, *n.*

► குதம்பை, 1.

**குதை** kutai, *n.* cf. *guda.* [M. *kuta.*]

வளையல் போன்ற அணிகலன்களில் அமைக்கப்பட்டுள்ள கொக்கி அல்லது பூட்டு; Bow; loop; running knot; button or clasp of a bracelet (W.).

**குதைச்சு** kutaiccu, *n.* < குல் +.

தாலியில் கோக்கப்படும் உருக்கள் வகை; A pendant in *tāli*, representing the nava *tāli* (*Loc.*).

**குந்தனம்** kuntaṉam, *n.* < T. *kundanamu.*

அணிகலன்களின் இரத்தினம் பதிக்கும் இடம்; Interspace for enchasing or setting gems in a jewel. *குந்தினத்தில் அழுத்தின ... ரத்தினங்கள் (திவ். திருநெடுந். 21, வ்யா, ப. 175).*

**குப்பி** kuppi, *n.* < *kuppī*. [K. M. Tu. *kuppi*.]

1. ► சடைக்குச்சு. *குருகையூரார் தந்த குப்பியுந் தொங்கலும் (குற்றா. குற.* 124).

2. ► குப்பிக்கடுக்கன்.

3. மாட்டுக்கொம்பு மற்றும் யானைத் தந்தத்தில் அணியப்படும் பூண்; Ferrule at the end of a scabbard, on the horn of an ox, on the tusk of an elephant, on the end of a pestle, cover on the spout of a kettle (*Loc.*).

**குப்பிக்கடுக்கன்** kuppi-k-kaṭukkaṉ, *n.* < *குப்பி* +.

ஒருவகைக் கடுக்கன்; A kind of ear-ring.

**குரகி** kuraki, *n.*

லம்பாடி இனச் சுமங்கலிப் பெண்டிர் அணியுங் காதணி வகை; Ear ring worn by lambadi women.

**குரடு** kuraṭu, *n.*

► குருடு.

**குரல்** kural, *n.* cf. *kura.*

► கிண்கிணிமாலை, 2. *குரலே தார் இவை கிண்கிணி மாலை (பிங்.* 6 : 164).

**குருகு** kuruku, *n.* < *குரு-*.

► வளையல். *கைகுவிபிடித்துக் குருகு அணி செறித்த (கல்லா.* 44, 22).

**குருட்டுப்பாவலி** kuruṭṭu-p-pāvali, *n.* < *குருடு* +.

கன்னத்தை ஒட்டிச் சிறிது நீண்டு இருக்கும் காதின் அடிப்புறச் சதைப்பகுதியில் அணியப்படும் ஒருவகைக் காதணி; Ear ornament worn in the tragus.

**குருடு** kuruṭu, *n.* < *குல்* +.

► குருட்டுப்பாவலி.

**குருடுசரி** kuruṭu-cari, *n.* < *குருடு* +.

சிறு வடங்கள் தொங்கும்படியாகச் செய்து கையில் அணிந்து கொள்ளப்படும் பொன்னாலான அணிவகை; Gold Bangles with chain pieces.

**குருவிந்தக்கல்** kuruvinta-k-kal, *n.* < *kuruvinda* +.

► குருவிந்தம், 1. *குருவிந்தக் கற்கள் (கம்பரா.* 2, 9, 17 : 3-4).

**குருவிந்தம்** kuruvintam, *n.* < id.

1. தாழ்தரமான மாணிக்க வகை; Inferior kind of ruby. *விந்தம் - குருவிந்தம் (சிலப்.* 14 : 186, *அடியார்.*).

2. ► முத்தக்காசு (*மலை.*).

**குவளை** kuvaḷai, *n.* cf. *gōla.*

1. அணிகளில் மணி பதிக்குங்குழி; Socket or bed for a gem in a jewel.

2. ► குவளைக்கடுக்கன்.

3. மகளிர் கழுத்தணிகளுள் ஒன்று; A neck ornament worn by women.

**குவளைக்கடுக்கன்** kuvaḷai-k-kaṭukkaṉ, *n.* < குவளை +.

உருத்திராட்சம் அல்லது மணி அழுத்தின குவளைப்பூ வடிவிலான கடுக்கன் வகை; Ear-ring with a bead or gem enchased in it.

**குழல்** kuḻal, *n.* [K. *koḻal*, M. *kuḻal*.]

மூசாடு இனத்தவர் அணியும் ஒருவகைக் கழுத்தணி; A kind of neck ornament (*Loc.*).

**குழை** kuḻai, *n.* < குழை-.

காதின் அடிப்புறம் மகளிர் அணியும் ஒருவகைப் பொன்அணி; குண்டலம்; A kind of gold ear ring. *கயல்ஏர் உண்கண் கனங்குழை மகளிர்* (குறுந். 398 : 3).

**குறங்கணி** kuṟaṅkaṇi, *n.* < குறங்கு +.

► குறங்குசெறி. *குறங்கணியும் பட்டிகையும் நூபுரமும்* (இராஜராஜ. உலா, 324).

**குறங்குசெறி** kuṟaṅku-ceṟi, *n.* < id. +.

புடைவையை இறுக்கிப் பிடிக்குமாறு துடையில் மகளிர் அணியும் ஒருவகைப் பொன் அணிகலன்; Gold ornament for the thigh worn upon the saree. *குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்து* (சிலப். 6 : 86).

## கூ

**கூட்டுக்கம்பி** kūṭṭu-k-kampi, *n.* < கூட்டு +.

காதணி வகை; An ear ornament. *கூட்டுக்கம்பி ஓரணை* (S.I.I. ii, 2).

**கூழ்** kūḻ, *n.* < குழை-. < *kura.* [T. *kūḍu*, K.M. *kūḻ*, Tu. *Kūla.*]

► பொன். *பல்வகை உணவும் பயிரும் பொன்னும் கொள்ப மாதோ கூழ்என்கிளவி* (திவா. 11 : 283).

**கூழை** kūḻai, *n.* cf. *kuš.*

► பொன். *கூழை யென்பது ... பொன்னு நடுவுஞ் சேறும் படையுறுப்பு மெண்பேர்* (அக. நி. 1188).

## கெ

**கெச்சட்டிகை** keccaṭṭikai, *n.* < T. *gejja* +.

கழுத்தணி வகை; A kind of ornament worn on the neck (*Colloq.*).

**கெச்சம்** keccam, *n.* [T. K. *gajje*, M. *kecca.*]

சிறு சதங்கை; Small metal bells. *பெண்களணி மணிக் கெச்சமடா* (குற்றா. குற. 123, 12).

**கெச்சை** keccai, *n.*

► கெச்சம். *அடியிடத்துச் சமைத்துக்கட்டின... கெச்சையும்* (கலித். 96 : 10, உரை).

**கெச்சைக்கொலுசு** keccai-k-kolucu, *n.* < கெச்சை +.

ஒலியெழுப்பும் மணிகளை உடைய வெள்ளியாலான கால்கொலுசு வகை; Anklet of tinkling silver bells (W.).

**கெட்டிக்காப்பு** keṭṭi-k-kāppu, *n.* < *கெட்டி* +.

கால், கைகளில் அணியப்படும் பொன் அல்லது வெள்ளியாலான (உட்குழல் இல்லாது இறுகிய) காப்பு; Bracelet or anklet of solid gold or silver (*Colloq.*).

**கெட்டிக்கொலுசு** keṭṭi-k-kolucu, *n.* < id. +.

காலில் அணியும் பொன் அல்லது வெள்ளியாலான உட்குழலில்லாத இறுகிய கொலுசுவகை; Anklet of solid gold or silver (*Colloq.*).

**கெண்டைப்பீலி** keṇṭai-p-pīli, *n.* < *கெண்டை* +.

கெண்டை மீன் வடிவ முகப்புடையதும் மகளிரால் கால்விரலில் அணிந்து கொள்ளப்படுவதுமான மோதிரம்; Women's toe ring with face designed like carp (R.).

**கெம்பட்டிகை** kempaṭṭikai, *n.* < *கெம்பு* + *அட்டிகை.*

பதுமராக மணிகள் இழைத்துச் செய்யப்பட்டதும் பதக்கம் வைத்ததுமான உட்கழுத்தணி; அட்டியல்வகை; Ruby necklace with pendant in the middle.

**கெம்பு** kempu, *n.* [T.K. *kempu*, M. *kembu.*]

▶ பதுமராகம்.

**கெவுடு** kevuṭu, *n.*

பொன் அல்லது வெள்ளிக் குவளைக்குள் வைத்துக் கட்டி, கையில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளும் உருத்திராக்கம்; *Rudrākṣa* bead enclosed in gold or silver case and tied on the arm or neck, as a badge, amulet or charm (*Loc.*).

**கெவுரி சங்கம்** kevuri-caṅkam, *n.* < *gaurī* + *śaṅkara.*

▶ கவுரிசங்கரம் (W.).

## கே

**கேயூரம்** kēyūram, *n.* < *kēyūra.*

நெளி மோதிரம் போன்று பெரியதாக அமைந்த தோளணி வகை; வங்கி; Bracelet worn on the upper arm; a kind of epaulet. *எண்தோட்கும் கேயூரம் பெய்து* (*ஆதியுலா*, 20).

**கேவணம்** kēvaṇam, *n.* < *kṣēpaṇa.* [K. *kēvaṇa.*]

மணி பதிக்கும் குழி; Bed or socket for inlaying a gem. *மணியொடு வயிரங் கட்டிய பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல்* (*சிலப்.* 16 : 118).

## கை

**கைக்கட்டி** kai-k-kaṭṭi, *n.* < *கை* +.

▶ கைக்கட்டு (*யாழ். அக.*).

**கைக்கட்டு** kai-k-kaṭṭu, *n.* < id. +. [M. *kaikeṭṭu.*]

பொன்மணியும் பவளமும் கோத்துக் கட்டிக்கொள்ளும் மகளிர் கையணி வகை; Ornament for the arm or waist of a women (W.).

**கைக்கட்டுப்பவளம்** kaikkaṭṭu-p-pavaḷam, *n.* < id. +.
பரவ மகளிர் அணியும் பவளத்தாலான ஒருவகை வளையல்; Coral bracelet worn by women (*Parav.*).

**கைக்கடகம்** kai-k-kaṭakam, *n.* < id. +.
கையிலணியும் வளை; அத்தகடகம்; Bracelet. *வலயம் கைக்கடகம் சுற்று வட்டம் வாருதி* (*வேத. சூடா.* 406).

**கைக்காப்பு** kai-k-kāppu, *n.* < id. +.
கையில் அணியுங் காப்பு; Wristlet; bracelet.

**கைக்காறை** kai-k-kāṟai, *n.* < id. +.
பொன்னாலும் மணியாலும் அழகிய வேலைப்பாடுடையதாகச் செய்யப்பெற்றுக் கைக்கு ஏற்ப அணியப்பெறும் அணிவகை; Bracelet; arm-ring. *திருக்கைக்காறை யொன்று* (S.I.I. ii, 144).

**கைச்சங்கிலி** kai-c-caṅkili, *n.* < id. +.
► கைக்காறை.

**கைச்சரி** kai-c-cari, *n.* < id. +.
மேலே பருத்தும் கீழே சிறுத்தும் சிறு குழாய் வடிவில் அமைந்ததும், காப்பின் மேற்பகுதியில் அணிவதுமான மகளிர் கையணி; A kind of bracelet worn by women.

**கைச்சரிகை** kai-c-carikai, *n.* < id. +.
► கைச்சரி. *பரியகம்; கைச்சரியுமாம்* (*சிலப்.* 6 : 93, *அரும்.*).

**கைத்து** kaittu, *n.* < id.
► பொன். *கனகம் கைத்து ... உடலே பண்டம்* (*சூடா.* 6 : 2).

**கைந்நூல்** kai-n-nūl, *n.* < id. +.
கையிற்கட்டும் காப்புநாண்; Ceremonial thread worn on the wrist. *கைந்நூல் யாவாம்* (*குறுந்.* 218 : 2).

**கைப்பிடிமோதிரம்** kai-p-piṭi-mōtiram, *n.* < id. +.
திருமணத்தில் மாப்பிள்ளைக்குப் பெண்வீட்டார் கொடுக்கும் மோதிரம்; The wedding presented to the groom by the brides side (*மதுரைத். அக.*).

**கைப்பொட்டு** kai-p-poṭṭu, *n.* < id. +.
கையில் அணியும் ஓர் அணி; An ornament on the hand. *திருக்கைப்பொட்டு ஒன்று* (S.I.I. ii, 80, 7).

**கைவடம்** kai-vaṭam, *n.* < id. +.
பவளத்தாலான வளையல்; The Bangle made up of coral (*மதுரைத். அக.*).

**கைவந்தி** kai-vanti, *n.* < id. +.
தோளின் கீழாகக் கையில் அணியப்படும் ஓரணி; Bracelet worn on the arm just below the shoulder. *விளக்கமுற்றிய கைவந்தியினையும்* (*மதுரைக்.* 415, *உரை*).

**கைவளை** kai-vaḷai, *n.* < id. +. [M. *kaivaḷa.*]

► வளையல். *கைவளை திருத்துபு கடைக்கண் நோக்கினாள் (கம்பரா. 1, 21, 37 : 4).*

► தோள்வளை.

கொ

**கொக்கிப்பூட்டு** kokki-p-pūṭṭu, *n.* < id. +.

அணிகலனின் இருமுனைகளை இணைக்கும் பகுதி; பூட்டு; Lock of a clasp in an ornament (W.).

**கொக்கிவாய்** kokki-vāy, *n.* < id. +.

► கொக்குவாய். *கொக்கிவாய் முத்தாரமாகச் செய்து (சிலப். 6 : 101, அரும்.).*

**கொக்குவாய்** kokku-vāy, *n.* < *கொக்கு* +.

அணிகலனில் படுகண்ணியிற் செருகும் பூட்டு; The hook of a clasp in an ornament. *கொக்குவாய்ப் படுகண் தொடக்கிய பன்மணிக்கோவையால் (சிலப். 6 : 101, அடியார்.).*

**கொட்டை** koṭṭai, *n.* < *கொள்* +.

1. மகளிர் தலையணி வகை; A gold ornament for women's hair.

2. யானையின் அணிவிசேடம்; An ornament for elephant. *பட்ட மடுத்த கொட்டையொடு (பெருங். 3, 27 : 75).*

3. மகளிர் காதில் அணிந்து கொள்ளும் விதை வடிவிலான அணி வகை; A kind of ear-ornament for women. *கொட்டையும் அதனைக் காதணி கூறும் கிளவி (திவா. 7 : 72).*

**கொட்டைமுத்துத்தாலி** koṭṭi-muttu-t-tāli, *n.*

பள்ளர் இனத்தைச் சேர்ந்த மகளிர் அணியும் இருகொம்புகளையுடைய சிறு தாலி; A twim edged *tāli* worn by women of palla caste (*W. D.*).

**கொட்டையரைஞாண்** koṭṭai-y-arai-ñāṉ, *n.* < *கொட்டை* +.

குழந்தைகளின் அரைநாண் வகை; Children's ornament worn on the waist. *கொட்டையரை ஞாண் துகள் நீக்கி (பெரியபு. 36, 60 : 1).*

**கொட்பூ** koṭ-pū, *n.* < *கொள்* +.

மேற்காதில் அணியப்படும் பூ வடிவிலான அணி வகை; A flower shaped small ornament of the upper ear (*செந். சொற்.*).

**கொடி** koṭi, *n.* < *கொடு* +.

1. மகளிர் கழுத்தில் அணியும் பொன்கயிறு அல்லது சங்கிலி; Gold string or chain for women's neck. *மென்றோட் கொடியென (பெருங். 1, 41 : 71).*

2. பொன் இழைகளால் பின்னப்பட்டுச் சிறிய அச்சில் நுழைத்து இழுத்துச் செய்யப்பட்ட கம்பிவடிவிலான ஓர் இடுப்பணி; அரைஞாண்; Gold or silver thread worn round a person's waist (S.I.I, ii, 5).

**கொடித்தாலி** koṭi-t-tāli, *n.* < *கொடி* +.

► சரட்டுத்தாலி (*Loc.*).

**கொடித்திருப்பாடகம்** koṭi-t-tiru-p-pāṭakam, *n.* < id. +.

மகளிர் காலணிகலன் வகை; A women's foot ornament (W.).

**கொடிதூக்கம்** koṭi-tūkkam, *n.* < id. +.

அணிகலன் வகை; An ornament. *பொன்னின் கொடிதூக்கத்தில் தலையில் தைச்சப்பூப் பதினாறு உட்பட* (S.I.I. ii, 1).

**கொடுக்கி** koṭukki, *n.* < கொடுக்கு.

அணிகலனில் அமைந்துள்ள பூட்டு; Clasp of an ornament (W.).

**கொடுக்கு** koṭukku, *n.*

ஆடை முதலியவற்றில் கட்டித் தொங்கவிடும் தொங்கல்; Ornamental hangings or ends of cloth in wear. *கச்சை புனைந்ததிலே விட்டான் பெருங்கொடுக்கு* (*திருவாலவா*. 30, 9 : 4).

**கொடைக்கழல்** koṭai-k-kaḻal, *n.* < கொடை +.

மன்னர்கள் வீரர்களுக்கும், புலவர்களுக்கும் கொடையின் சின்னமாகக் காலில் அணிந்து கொள்ளக் கொடுக்கும் அணிவகை; An anklet presented by a king to warriors and scholars.

**கொடை சிமிக்கி** koṭai-cimikki, *n.* < id. +.

கம்மலுடன் இணைத்துப் போடப்படும் கவிழ் குடைபோலத் தொங்கக்கூடிய காதணி வகை; An ear ornament with a pendentant in the shape of an inverted umbrella (*W. D.*).

**கொண்டிக்கடுக்கன்** koṇṭi-k-kaṭukkaṉ, *n.* < கொண்டி +.

பரவர்களின் காதணி வகை; A kind of ear-ring worn by paravas (*Parav.*).

**கொண்டை** koṇṭai, *n.* [T. *koṇḍe*, K. Tu. *goṇḍe*, M. *koṇṭa*.]

குழந்தைகளுக்கு உச்சிக்கொண்டை கட்ட உதவும் நார்வளையம்; Fibre-ring used in dressing the hair of a child (*Loc.*).

**கொண்டைக் குச்சு** koṇṭai-k-kuccu, *n.* < கொண்டை +.

1. குழந்தைகளின் உச்சிக் கொண்டையில் கட்டும் குச்சு; Tassel tied on the tust of the children.
2. ► கொண்டையூசி.

**கொண்டைத்திருகு** koṇṭai-t-tiruku, *n.* < id. +.

மகளிர் சடையிலணியும், செவ்வந்திப்பூ வடிவிலானதும் பொன்தகட்டின் அடியில் மெழுகடைத்த வெள்ளித்தகடு பொருத்தப்பட்டதுமான திருகணி வகை; சடைவில்லை; Ornament for the hair in the shape of a chrysanthemum flower with a spiral wire underneath, worn by women over the pigtail.

**கொண்டைப்பூ** koṇṭai-p-pū, *n.* < id. +.

► கொண்டைத்திருகு.

**கொண்டையூசி** koṇṭai-y-ūci, *n.* < id. +.

பெண்களின் கொண்டை அல்லது பின்னல் அவிழாதபடி செருகும் இருபகுதியாக வளைக்கப்பட்ட மெல்லிய கம்பி; Ornamental hair-pin (W.).

**கொத்தமல்லி மணி** kottamalli-maṇi, *n.* < கொத்துமல்லி +.

பரவ மகளிரால் அணியப்படுவதும் கொத்தமல்லி விதை வடிவிலான மணிகளாலானதுமாகிய கழுத்தணி; A necklace worn by parava women made up of small beads (*Parav.*).

**கொத்தமல்லி மாலை** kottamalli-mālai, *n.* < id. +.

► கொத்தமல்லி மணி.

**கொத்து** kottu, *n.*

பல வடங்களை உடைய கழுத்தணி; கொத்துச்சங்கிலி; Multistringed necklace.

**கொத்துச்சரப்பணி** kottu-c-carappaṇi, *n.* < *கொத்து* +.

மகளிர் கழுத்தில் அணியும் பொற்சங்கிலி வகை; A kind of gold chain for the neck, worn by women.

**கொத்துச்சரப்பளி** kottu-c-carappaḷi, *n.* < id. +.

► கொத்துச்சரப்பணி.

**கொத்துச்சரம்** kottu-c-caram, *n.* < id. +.

► கொத்துச்சரப்பணி. *முருகு பளபளென்ன கொத்துச் சரங்கள்* (*முத்தை. குறவ.* 30).

**கொத்துச்சவடி** kottu-c-cavaṭi, *n.* < id. +.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொற்சரடுகளின் கொத்தாக அமைந்த கழுத்தணி; A necklace of 3 or more gold cords.

**கொத்துத்தாழ்வடம்** kottu-t-tāḻvaṭam, *n.* < id. +.

இடையிடையே பவளங்கள் கோக்கப்பெற்று, முகப்பில் தங்கக் கட்டமைத்த உருத்திராக்கமாலை; String of *rudrākṣa* beads interspersed with coral (*Loc.*).

**கொத்துமல்லிச் சரம்** kottumalli-c-caram, *n.* < *கொத்துமல்லி* +.

► கொத்துமல்லிமணி (*W. D.*).

**கொத்துமல்லித் தோடு** kottumalli-t-tōṭu, *n.* < id. +.

கொத்துமல்லிவிதையைப் போன்ற சிறிய குமிழாகிய காதணி வகை; An earring in the shape of coriander seed (*W. D.*).

**கொந்தமணி** konta-maṇi, *n.* < *கொந்து-* +.

மகளிர் கழுத்தணி வகை; A kind of necklace worn by women (*Loc.*).

**கொந்தளம்** kontaḷam, *n.* perh. *kuntala.*

காதணி வகை; A kind of ear ornament. *காதுக்குக் கொந்தளம் அணிந்து* (*தமிழறி*. 64).

**கொந்திக்காய்** konti-k-kāy, *n.*

மகளிர் கைமூட்டுக்கு மேல் அணியும் பொன் அல்லது பவள மணிகள் கோத்த ஆபரண வகை; A string of gold or coral beads worn by women above the elbow (*S. D.*).

**கொப்பி** koppi, *n.*

மாட்டின் கொம்பில் அணிவிக்கும் பூண்; A conical shaped cover inserted in the horns of cow (*W. D.*).

**கொப்பு** koppu, *n.* [K. M. Tu. *koppu.*]

காதின் மேற்பகுதியில் துளையிட்டு அணியும் சிறுகாம்புடன் மணிகள் பதிக்கப்பட்ட மலர் வடிவிலான அணிவகை; Flower shaped ornament worn at the top of the helix by women. *கொப்பு இட்ட வுமைபாகர்* (*தண்டலை. சத.* 12).

**கொப்புக்காது** koppu-k-kātu, *n.* < *கொப்பு* +.

► கிராம்புக்குச்சி (*W. D.*).

**கொப்புக்குடை** koppu-k-kuṭai, *n.* < id. +.

கொப்பணியிலிருந்து தொங்கும் கவிழ் குடை வடிவிலான உறுப்பு; சிமிக்கி; Inverted umbrella shaped pendants hanging from ear rings (*Loc.*).

**கொப்புமயிர்மாட்டி** koppu-mayir-māṭṭi, *n.* < id. +.

மகளிர் கொப்புவிலிருந்து கூந்தலில் பொருந்தும் படி அமைந்த பொன்னாலான காதணி வகை; Golden hair-hook worn by women connecting *koppu* to a strand of hair behind the ear.

**கொப்புவாளி** koppu-vāḷi, *n.* < id. +.

மகளிர் அணியும் வாளி (தொங்கல்) என்னும் காதணி வகை; Women's ornament for the ear, having a knob and a pendant.

**கொப்பு ஜம்புல்** koppu-jampul, *n.* < id. +.

காதணி வகை; A kind of ear-ornament (*தாசீல்தார் நா. ப.* 40).

**கொலுசு** kolucu, *n.* < T. *golusu.*

வெள்ளியால் சிறுசிறு மணிகள் தொங்குமாறு செய்யப்பட்டுப் பெண்கள் கணுக்காலில் அணியும் அணி வகை; Silver chain for the anklet. *கொலுசுடன் சிலம்பசைய* (*திருப்பு.* 570 : 1).

**கொழுந்து** koḻuntu, *n.*

► நெற்றிச்சுட்டி. *கொழுந்து ஒளி கஞலத் தூக்கி* (*கம்பரா.* 1, 21, 5 : 2).

**கொள்கை** koḷkai, *n.* < *கொள்-* +.

தெய்வத் திருமணிகளுக்கு இடும் கவசம்; Cover for temple idols. *இவ்வுடையாரே குடுத்த பொன்னின் கொள்கை* (*கல். சொல். அக.*).

**கொள்பொந்றி** koḷponṟi, *n.*

உலோகத் திருமேனிகட்குக் காதணியாகச் சாத்தும் கொள்ளுப்பூ வடிவிலான அணி வகை; An ear ornament for the deities. *திருக்காதில் சாத்தும் கொள்பொந்றி நால்* (*கல். கலை. அக.*).

**கொளு** koḷu, *n.*

► கொளுத்து. *தோடு அமை கொளுவத்து ஊடுற வளைஇ* (*பெருங்.* 1, 47 : 208).

**கொளுத்து** koḷuttu, *n.* [M. *koḷuttu.*]

அணிகலன்களின் பூட்டு; Clasp. *கொளுத்துச்செறிந்த முன்கைக்கணிந்த கடகத்துடனே* (*புறநா.* 150 : 21, *உரை*).

## கோ

**கோசகம்** kōcakam, *n.*

ஒரு நகை; An ornament. *திருக்கோசகம் இரண்டினால் கல்வெட்டி நபடி காசு நிறைகல்லால்* (*கல். சொல். அக.*).

**கோசரம்** kōcaram, *n.*

ஒரு நகை; An ornament. *திருக்கொடுக்கும் திருக்கோசரமுமாகப் பண்ணி* (*கல். சொல். அக.*).

**கோடகம்** kōṭakam, *n.* < *kōṭaka.*

1. மகுடத்தின் (கீரிடத்தின்) உறுப்புகள் ஐந்தில் ஒன்று; Ornamental curves of a crown, one of five *muṭi-u-uṟuppu*. *கோடகம் கிம்புரி முடியுறுப்பு (திவா. 7 : 82).*

2. சிகரமாகச் செய்த மகுட (கீரிட) வகை; A kind of tapering crown. *கோடகம் அணிந்த கோல முடியினாய் (சீவக. 2989 : 4).*

**கோடம்** kōṭam, *n.* < கோடகம்.

► கோடகம், 1. *கோடங்களிலும் ... கோத்த முத்து* (S.I.I. ii, 87).

**கோடிப்பாளைக் கருக்கு** kōṭi-p-pāḷai-k-karukku, *n.* < கோடி.

மகளிரின் நெற்றிச்சுட்டி என்னும் சூளாமணிவகைகளில், பாக்குப்பாளை போன்று பூவேலைப்பாடுகள் செய்யப்பட்ட முன்னமைப்பு; A frontal decoration of an ornament worn by women hanging above the forehead (*செந். சொற்.*).

**கோடீரம்** kōṭīram, *n.* < *kōṭīra.*

► மகுடம் (W.).

**கோணக்காப்பு** kōṇakkāppu, *n.* < கோணல் +.

கைகால்களில் அணியும் வளைவான வளையல்; Angulated anklet or bangles.

**கோதுமைச் சங்கிலி** kōtumai-c-caṅkili, *n.* < கோதுமை +.

► கோதுமை மணி (*W. D.*).

**கோதுமைமணி** kōtumai-maṇi, *n.* < id. +.

கோதுமை போன்ற பொன்மணிகளால் அமைந்த கழுத்தணி; A kind of necklace formed of wheat-like beads of gold.

**கோபி சங்கிலி** kōpi-caṅkili, *n.*

கழுத்தணி; A kind of necklace (*W. D.*).

**கோமேதகம்** kōmētakam, *n.* < *gō- mēdaka.*

நவமணியுள் ஒன்றானதும், பழுப்பு அல்லது வெளிர் மஞ்சள் நிறத்தில் உள்ளதுமான விலையுயர்ந்த கல்; Sardonyx from the Himalayas and the Indus, one of *nava-maṇi*. *மஞ்சளும் சிவப்பும் கலந்தாலொத்த நிறத்தையுடைய கோமேதக வருக்கமும் (சிலப். 14 : 190, அடியார்.).*

**கோமேதம்** kōmētam, *n.* < *gōmēda.*

► கோமேதகம்.

**கோல்வளை** kōl-vaḷai, *n.* < கோல் +.

சித்திரவேலைப்பாடு மிகுந்த வளையல்; Bangles with exquisite craftmanship. *வெள்ளிச் சூர்ப்புறு கோல்வளை செறித்த முன்கை (அகநா. 142 : 16-17).*

**கோலம்** kōlam, *n.* [T. *kōlamu*, K. *kōla*, M. *kōlam.*]

► அணிகலன். *குறங்கிணை திரண்டன கோலம் பெறாஅ (சிலப். 30 : 18).*

**கோவம்** kōvam, *n.* cf. *karbura.*

► பொன். *ஆக்கம் கோவம் ... பொன்னே (பிங். 6 : 131).*

**கோவாங்கு** kōvāṅku, *n.* perh. *gavāṅga.*

படிதம் என்னும் மாணிக்க வகை; A kind of ruby. *படிதம் - கோவாங்கு (சிலப். 14 : 186 அடியார்.).*

**கோவை** kōvai, *n.* < கோ-. [T. M. *kōva.*]

1. ஐந்து அல்லது ஆறு வடங்களாகச் செய்யப்பட்ட ஓர் அணி வகை; Multistringed necklace. *காமன் தூமணி செயத்தகு கோவை (சிலப். 6 : 102).*

2. பொன்னால் செய்த இடையணி; Gold girdle.

**கோவைத்தரளம்** kōvai-t-taraḷam, *n.* < கோவை +.

▶ முத்துமாலை. *கோவைத் தரளங் கொட்டையொடு துயல்வரும் (பெருங். 1, 57 : 55).*

**கோளகை** kōḷakai, *n.* < *gōlaka.*

யானையின் தந்தத்தில் பூட்டும் அணிகலன்; யானைக்கிம்புரி; Ornamental ring of an elephant's tusk. *மதம் கொள் கரியின் கோளகையை மணிச் சூடகமாச் செறியீரே (கலிங். 511 : 1).*

**கோற்றொடி** kōṟṟoṭi, *n.* < கோல் + தொடி.

அரிய வேலைப்பாடுகளுடன் அமைந்த கைவளையல்; Bangles with artistic workmanship. *கோற்றொடி மாதரொடு (சிலப். 26 : 121).*

**கோறம்பு** kōṟampu, *n.* [K. *kōramba.*]

▶ நெற்றிச்சுட்டி. *நெற்றிமேல் திருத்திய கோறம்புந் திருக்குழலும் (திவ். பெரியாழ். 3, 4, 6 : 1).*

**கௌத்துவம்** kauttuvam, *n.* cf. *kaitava.*

▶ கவுத்துவம். *கௌத்துவம் உடைக்கோவிந்தனோடு (திவ். பெரியாழ். 4, 5, 8 : 3).*

**கௌத்துவமணி** kauttuva-maṇi, *n.* < *kaustubha.*

▶ கொஸ்துபம். *கௌத்துவமுடைக் கோவிந்தன் (திவ். பெரியாழ். 4, 5, 8 : 3).*

**கௌதுகம்** kautukam, *n.* < *kautaka.*

▶ தாலி, 1 *(யாழ். அக.).*

**கௌரிசங்கம்** kauri-caṅkam, *n.* < *gaurī* +.

▶ கவுரிசங்கரம்.

**கௌரிசங்காமணி** kauri-caṅkā-maṇi, *n.* < id. +.

▶ கவுரிசங்கரம்.

**கௌஸ்துபம்** kaustupam, *n.* < *kaustubha.*

▶ கௌத்துவம்.

## ச

**சகசிரதாரை** cakacira-tārai, *n.* < *sahasra* +.

பல இழைகளை உடைய முத்துமாலை; A multistringed necklace of pearls. *சகசிரதாரை என்னும் முத்தக்கோவை (தக்கயாகப். 106, உரை).*

**சங்கக்காப்பு** caṅka-k-kāppu, *n.* < *சங்கம்* +.

பரவ மகளிர் கையிலணியும் சங்குவளை; Bracelet made of conch shells worn by women by parava caste (*Parav.*).

**சங்கக்குழை** caṅka-k-kuḻai, *n.* < id. +.

சங்கினாலான காதணி வகை; Ear ring made up of conch shell.

**சங்கபத்திரம்** caṅka-pattiram, *n.* < id. +.

► சங்கக்குழை. *சங்கக் குழைகரந்த சட்குண் டலம்* (*நாகை. கனக. உலா*. 79).

**சங்கம்** caṅkam, *n.* < *śaṅkha* +.

► சங்கக்காப்பு. *சங்க மது ஆர் குறளதர்* (*தேவா*. 1, 43, 2 : 3).

**சங்கவளை** caṅka-vaḷai, *n.* < id. +.

சங்கினால் செய்யப்பட்ட வளையல்; White bangles or bracelets made of conch-shell (*பு. வெ.* 12, *இருபாற்*. 9, *கொளு, உரை*).

**சங்கிலி** caṅkili, *n.* < *śṛṅkhala*. [M. *caṅkala.*]

1. வளையம், கண்ணி போன்ற வடிவங்களால் செய்யப்பட்ட தங்கம் அல்லது வெள்ளியாலான கழுத்தணி; வீரச்சங்கிலி; (Gold or Silver) chain (as a piece of jewellery). *சங்கிலி நுண்டொடர்* (*சிலப்*. 6 : 99).

2. வயிரத்தாலான கழுத்தணி; வயிரச்சங்கிலி; Diamond studded necklace. *சங்கிலி வயிரச்சங்கிலி சாரும்* (*திவா*. 7 : 89).

**சங்கிலிமடிப்பு** caṅkili-maṭippu, *n.* < *சங்கிலி* +.

கழுத்திலணியும் சங்கிலியின் பட்டையான முகப்பு; Plate clasp of a neck-chain (*Loc.*).

**சங்கிலிமோதிரம்** caṅkili-mōtiram, *n.* < id. +.

சங்கிலியை முறுக்கிச் செய்யப்பட்ட விரலணி; சிக்கு மோதிரம்; Finger-ring of small links (W.).

**சங்கிலிவடம்** caṅkili-vaṭam, *n.* < id. +.

சங்கிலி போன்ற அமைப்புடைய கழுத்தணி; A neck-ornament in the shape of a chain.

**சங்கிலிவலயம்** caṅkili-valayam, *n.* < id. +.

► சங்கிலிவளையம் (W.).

**சங்கிலிவளையம்** caṅkili-vaḷaiyam, *n.* < id. +.

சங்கிலி தொடர்ச்சியாக வருவதற்கு இடையிடையே இணைக்கப்படும் வளையம்; Links or rings of a chain.

**சங்கு** caṅku, *n.* < *śaṅkha*.

1. ஐம்படைத்தாலியில் பொறிக்கப்பெறும் சங்கின் வடிவம்; A constituent of the *aimpatai* ornament.

2. சங்கினால் செய்த கைவளை; Bangles made up of conch. *சங்கு அமரும் முன்கை மடமாதை* (*தேவா*. 3, 81, 1 : 1).

**சங்குசக்கரக்கடுக்கன்** caṅku-cakkara-k-kaṭukkaṉ, *n.* < *சங்கு* +.

இடக்காதில் சங்கின் வடிவாகவும் வலக்காதில் சக்கரவடிவாகவும் வைணவரால் அணியப்படும் கடுக்கன் வகை; Ear-rings in the form of a chank for the left ear and of a discus for the right, used by *vaiṣṇavas.*

**சங்குத்தாலி** caṅku-t-tāli, *n.* < id. +.

1. சங்கு உருவிலான தாலி; *Tāli* with beads in imitation of chanks, one on either side (W.).

2. பரவமகளிர் மற்றும் வேளாளர் இனத்தைச் சேர்ந்த பெண்கள் அணியும் சங்கினாலான தாலி; *Tāli* made of shell, worn by women (*Parav.*).

**சங்குமணி** caṅku-maṇi, *n.* < id. +.

சங்குத்துண்டங்களால் ஆக்கப்பட்ட மணி; Beads cut out from chanks.

**சங்குமோதிரம்** caṅku-mōtiram, *n.* < id. +.

சங்கினால் செய்த மோதிரம்; A ring made of conch-shell.

**சங்குவளை** caṅku-vaḷai, *n.* < id. +.

சங்கினால் செய்த வளையல்; Shell - bracelet. *சங்குவளை இறுகின இறையையுடைய* (நெடுநல். 36, *உரை*).

**சட்குண்டலம்** caṭ-kuṇṭalam, *n.*

► ஆறுகட்டி. *சங்கக் குழைகரந்த சட்குண் டலம்காண்பார்* (நாகை. கனக. *உலா*, 79).

**சடாங்கம்** caṭāṅkam, *n.*

சடையின்மேல் பாம்பின் தலை உருவமும் கீழே அதனுடைய வால் தொங்குவது போன்றும் அமைந்த பொன்னாலான பாம்பு வடிவத் தலையணி; சடைவில்லை வகை; Gold disc worn on hair plait.

**சடாரி** caṭāri, *n.* perh. *jaḍa* + *அரி*.

► கவசம். *சடாரி அரணம் பாசம் ... கவசப் பெயரே* (*பிங்*. 6 : 506).

**சடைக்குச்சு** caṭai-k-kuccu, *n.* < *சடை* + *guccha.*

மகளிர் கூந்தலோடு பின்னித் தொங்கவிடப்படுவதும் இரண்டு மூன்று குச்சுக்களையுடையதுமான அணி; குஞ்சம்; A hair-ornament with pendants composed of two or three small gold cups.

**சடைக்குஞ்சம்** caṭai-k-kuñcam, *n.* < *சடை* +.

► சடைக்குச்சு (*Loc.*).

**சடைத்திருகு** caṭai-t-tiruku, *n.* < id. +.

► சடைவில்லை.

**சடைநாகம்** caṭai-nākam, *n.* < id. +.

தலை உச்சியில் பெண்கள் அணிந்து கொள்ளும் ஏழுதலை நாகம் போன்று மெழுகடைத்துச் செய்யப்பட்ட பொன்னாலான தலையணி; A woman's hair-ornament resembling the seven headed cobra.

**சடை நாகர்** caṭai-nākar, *n.* < id. +.

► சடைநாகம்.

**சடைபில்லை** caṭai-pillai, *n.* < id. +. [T. *jaṭabilla.*]

► சடைவில்லை.

**சடைவில்லை** caṭai-villai, *n.* < id. +.

பின்னல் முடியில் திருகிப் பெண்கள் அணிந்து கொள்ளும் கற்கள் பதிக்கப்பட்ட வட்டவடிவ அணிகலன்; Gold disc worn on the hair-plait, a woman's ornament.

**சண்பங்காறை** caṇpaṅkāṟai, *n.*

சண்பகப்பூவின் வடிவிலமைக்கப்பட்ட தாலி உரு வகை; A piece like in the *tāli. மாணிக்கத்தின் தாலி பொன்னின் சண்பங்காறை சிறியது* (S.I.I. ii, 396, 140).

**சதங்கை** cataṅkai, *n.* cf. *śṛṅkhalā.*

1. இடுப்பிலும் பாதத்திலும் பெண்களும் சிறுகுழந்தைகளும் அணிந்து கொள்ளும் ஒலியெழுப்பும் பொன் அல்லது வெள்ளியாலான அணிவகை; String of small silver or gold bells, worn by childern and women as an ornament for the feet or waist. *பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை* (*சிலப்*. 6 : 84, *அடியார்.*).

2. ► சலங்கை.

**சதங்கைமாலை** cataṅkai-mālai, *n.* < *சதங்கை* +.

1. ஒருவகைக் கழுத்தணி; A kind of neck-ornament.

2. மாலைவகை; A kind of garland.

3. எருது, குதிரைகளின் கழுத்தில் தொங்கவிடப்படும் அணி; A string of bells for the neck of cattle and horses.

**சதலிகைய் நங்கனை** catalikaiy-naṅkaṉai, *n.*

ஒரு நகை; An ornament. *திருப்பட்டிகை சதலிகைய் நங்கனை ஒன்று* (*கல். சொல். அக.*).

**சந்திர ஆரம்** cantira-āram, *n.* < *candra* +.

வட்ட நிலா வடிவில் தங்க வளையங்கள் கோக்கப்பெற்ற, கழுத்திலணியும் மாலை வகை; A necklace of moon-like gold ring lets.

**சந்திரகலை** cantira-kalai, *n.* < *candra* + *kalā.*

தலையின் இடப்பக்கத்தில் மகளிர் அணிந்துகொள்ளும் மணி அல்லது கல் பதித்த பிறை வடிவப் பொன்னணி வகை; Ornament of gold set with precious stones worn on the left side of the head by women. *சந்திரகலையார் மேகக் கருங்குழலை* (*பிரமோத். பிரதோஷ*. 5).

**சந்திரகாரம்** cantira-kāram, *n.* < *candra* +.

► சந்திரமாலை.

**சந்திரப்பிரபை** cantira-p-pirapai, *n.* < id. +.

► சந்திரக்கலை.

**சந்திரப்பிறை** cantira-p-piṟai, *n.* < id. +.

1. மகளிர் கழுத்தில் அணியும் பிறை வடிவிலான அணி; Crescent-shaped necklace of women.
2. ► சந்திரகலை.

**சந்திரபாணி** cantira-pāṇi, *n.* prob. < id. +.

► வயிரம். *சந்திரபாணி தகைபெறு கடிப்பிணை* (*சிலப்.* 6 : 104).

**சந்திரபாவலி** cantira-pāvali, *n.* < id. +. [Tu. *candrabāvali.*]

காதில் பெண்கள் அணியும் நிலவு வடிவிலான அணிகலன்; Moon-shaped ear-ornament worn by women (*Colloq.*).

**சந்திரம்** cantiram, *n.* < id.

► பொன். *சந்திரமா அளித்தான்* (*திருவாலவா.* 61, 20 : 4).

**சந்திரமாலை** cantira-mālai, *n.* < id. +.

► சந்திரப்பிறை, 1 (*Loc.*).

**சந்திரமுருகு** cantira-muruku, *n.* < id. +. [K. *candramurugu*, Tu. *candramuru.*]

காதின் மேற்பகுதியில் அணியும் பிறைவடிவிலான காதணி வகை; Crescent-shaped ear-ornament. *முத்துச் சிமிக்கி பொன்னோலை மேற் சந்திர முருகு* (*முத்தை. குறவ.* 30).

**சந்திரவங்கி** cantira-vaṅki, *n.* < id. +. [T. *candravaṅka.*]

பிறைவடிவாக அமைந்த தலையணி வகை; Crescent-shaped ornament for head.

**சந்திரஹாரம்** cantira-hāram, *n.* < id. +.

► சந்திர ஆரம் (*Colloq.*).

**சந்துக்காறை** cantu-k-kāṟai, *n.* < *சந்து* +.

ஒருவகைக் கைவளை; A kind of bracelet. *கைவளை - சந்துக்காறை* (*சிலப்.* 6 : 92, *அரும்.*).

**சந்துபட்டைக்காறை** cantu-paṭṭai-k-kāṟai, *n.* < id. +.

அணி வகை; An ornament. *சந்துபட்டைக்காறை இரண்டு எட்டரை மாறி தூக்கம்* (S.I.I. ii, 71).

**சந்நாகம்** cannākam, *n.*

► கவசம். *சந்நாகம் வாங்கி* (*திருவாலவா.* 1, 18 : 3).

**சப்தசரி** capta-cari, *n.* < *sapta-sarī.*

ஏழு வரிசைச் சரமாகவும், சரத்திற்கு ஒரு பதக்கமாகவும் ஒன்றன் கீழ் ஒன்றாகத் தொங்கும் பாங்கிலமைந்த பதக்கமாலை; A kind of necklace having seven strands each with a pendant in desending order. *சப்தசரியொன்றிற் கோத்த முத்து வட்டமும்* (S.I.I. ii, 34, 143).

**சப்பைச்சலங்கை** cappai-c-calaṅkai, *n.* Prob. *சப்பை* +.

குழந்தைகள் காலில் அணியும் சதங்கையணி வகை; An ornament of tiny bells for children (*S.D.*).

**சபவடம்** capa-vaṭam, *n.* < *சபம்* +.

மந்திரம் கூறிக் கடவுளை வணங்கும் போது (மந்திர உச்சரிப்பை) எண்ணுதற்குப் பயன்படும் உத்திராக்க மாலை; String of beads for keeping count in prayer; rosary. *சபவடமும் வெண்ணூல் மார்பும் (திருவாலவா.* 27, 51 : 2).

**சம்பு** campu, *n.*

தலைச்சாமான்களில் செருகப்படும் அணிவகை; An item in a set jewellery for head.

**சமந்தகம்** camantakam, *n.* < *syamantaka.*

கண்ணபிரான் கழுத்தில் அணிந்த தெய்வமணி வகை; A gem of miraculous virtue worn by *Kṛṣṇa* on his neck. *சட்கோடி மாணிக்கம் ஒன்றும் - சமந்தகமும்* (குலோத். உலா, 235).

**சமந்தகமணி** camantaka-maṇi, *n.* < id. +.

► சமந்தகம். *கொள்ளொளி யெறிக்கும் சமந்தக மணிபூண்* (*பாகவ.* 10, *சத்தியாபா.* 7).

**சமந்தகவிரத்னம்** camantaka-v-iratṉam, *n.* < id. +.

► சமந்தகம். *சமந்தக விரத்னந்தாவென* (*பிரபோத.* 26, 34).

**சர்ப்பகுண்டலம்** carppa-kuṇṭalam, *n.*

சிவபெருமானுக்கு உகந்த பாம்பு வடிவிலான பொற்காதணி; Ear-ring in the shape of a snake, worn by Lord Śiva.

**சர்வ கடையம்** carva-kaṭaiyam, *n.*

பரவ இனத்தவர் அணியுங் கையணி வகை; A kind of bracelet (*Parav.*).

**சரட்டட்டிகை** caraṭṭaṭṭikai, *n.* < *சரடு* +.

பொற்சரடு செய்து பட்டையாகத் தட்டப்பட்டுப் பதக்கங்கட்டிய கழுத்தணி வகை; Necklace of gold threads with a *patakkam* pendant.

**சரட்டுத்தாலி** caraṭṭu-t-tāli, *n.* < id. +.

நூலைத் திரித்தது போன்ற அமைப்பில் பொன்னால் செய்யப்பட்டு, அதில் தாலியைக் கோத்து அணிந்து கொள்ளும் கழுத்தணி வகை; A kind of wedding badge hung in a gold necklet (*Loc.*).

**சரடு** caraṭu, *n.* prob. *sara.*

பொற்கம்பியினால் பின்னப்பட்ட கழுத்தணி வகை; A necklet of plaited gold thread.

**சரணாபரணம்** caraṇāparaṇam, *n.*

கால் அணிகலன் வகை; A kind of anklet (*ஆ. வி. அக.*).

**சரதத்துடர்** carata-t-tuṭar, *n.*

ஒரு நகை; An ornament. *தேவர் நம்பிராட்டி யாற்கு சரதத்துடர் மூன்று இத்துடர் மூன்றுக்குத் தாளிம்பம் ஒன்றாக* (*கல். சொல். அக.*).

**சரப்பணி** cara-p-paṇi, *n.* < *sara* +. [T. K. *sarapaṇi.*]

பொன் சங்கிலியில் வயிரக் கற்கள் பதிக்கப்பெற்ற கழுத்தணி வகை; Gold neck-chain inlaid with diamond. *சரப்பணி வயிரச்சங்கிலி ஆகும்* (*பிங்.* 6 : 105).

**சரப்பளி** cara-p-paḷi, *n.* [K. *sarapaḷi*, M. *sarappaḷi*, Tu. *sarapoḷi.*]

1. ► சரப்பணி. *சவடி, சரப்பளி முதலாயுள்ள பிறவற்றையும்* (*சிலப்.* 6 : 99, *அடியார்.*).

2. சிறுசிறு குண்டுகளாகச் செய்துப் பொன்சரட்டில் கோக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று வடங்களாலான கழுத்தணி வகை; Gold necklet (*சிற். செந்.* 93).

**சரம்** caram, *n.* < *sara.*

ஒன்றன்பின் ஒன்றாகக் கோக்கப்பட்ட முத்துகளாலான கழுத்தணி வகை; String of pearls, gems, etc. *மணிவடமும் கொறுகக்கச்சியும் ... சரமே* (*பிங்.* 10 : 451).

**சரமணி** cara-maṇi, *n.* < *sara-maṇi* .

ஒலியெழுப்பும் சிறு மணிகள் கட்டிய அரைப்பட்டிகை; Waist-belt with tinkling tiny bells (W.).

**சரி** cari, *n.* < *சரி-.*

1. முன் கையில் பெண்கள் அணிந்துகொள்ளும் வளையல்; A kind of bracelet. *சரியின் முன்கை நன்மாதர்* (*தேவா.* 2, 96, 3 : 3).

2. ► காப்பு, 2. *காரிரும்பின் சரி செறி கைக் கருஞ் சிறார்* (*பெரியபு.* 18, 7 : 3).

3. காலணிகலன் வகை; A kind of anklet. *திருவடி மலர்மேல் ... கோவை மணிச் சரி அணைச் சாத்தி* (*பெரியபு.* 28, 1210 : 2).

**சரிசு** caricu, *n.*

► சரி, 1 (J.).

**சரிமணி** cari-maṇi, *n.* < U. *sarī*+.

இடையிலணியும் மணிகள் பதிக்கப்பட்ட மகளிர் அணி; கலாபம்; A kind of girdle set with gems. *கலாபம் தோரை சரிமணிப் பெயரே* (*திவா.* 7 : 87).

**சரிமணிக்கோவை** cari-maṇi-k-kōvai, *n.* < *சரிமணி* +.

► சரிமணி. *கலாபம் தோரை சரிமணிக் கோவை* (*பிங்.* 6 : 91).

**சரிவளை** cari-vaḷai, *n.*

வளை வகை; A variety of bangle (*திவ். பெரியாழ்.* 3, 4, 8, *வ்யா. ப.* 618).

**சரிவு** carivu, *n.* < *சரி-.*

முன்கையில் அணியும் மகளிர் அணி வகை; A kind of bracelet worn by women on the fore-arms (*Loc.*).

**சல்லடைக்கொப்பு** callaṭai-k-koppu, *n.* < *சல்லடை* +.

காதின் மேற்பகுதியில் துளையிட்டு மகளிர் அணியும் சல்லடை போன்ற அமைப்புடைய கொப்பு வகைக் காதணி; Women's jewel for the helix (W.).

**சல்லடைமுருகு** callaṭai-muruku, *n.* < id. +.

காதின் மேற்பகுதியில் துளையிட்டு மகளிர் அணியும் முருகுக் காதணி வகை; A kind of ear-ornament for women (*Loc.*).

**சல்லரி** callari, *n.*

► கைவளை; Bracelet.

**சல்லி** calli, *n.* [T. *ljalli*, K. Tu. *jalli.*]

குட்டையான பதக்க வகை; ஆபரணத்தொங்கல்; Short pendant in ornaments; hangins. *முத்தாலாகிய சல்லியையும்* (*மணி.* 18 : 46, *உரை*).

**சலங்கை** calaṅkai, *n.* < *சதங்கை.*

ஒலியெழுப்பக்கூடிய சிறுசிறு உலோக மணிகள் இணைத்த பட்டை; Tiny bells attached to ornaments.

**சலங்கைமுன்தாங்கி** calaṅkai-muṉ-tāṅki, *n.* < *சலங்கை* +.

பரவ மகளிர் காலின் இரண்டாம் விரலில் அணியும் ஐவர்ண அணிகளுள் ஒன்று; Ring worn on the second toe by women, one of *ai-varnam* (*Parav.*).

**சலாகை** calākai, *n.* prob. *ślāgh.*

1. விழித்த கண்களை உடைய மீன்போன்ற வடிவுள்ள குண்டலம்; An ear ornament resembling a fish with opened eyes. *சலாகை - காதில் இடும் கம்பி* (*சீவக.* 2696 : 3, *அடிக்.*).

2. தோளணிவகை; Bracelet for upper arm. *சலாகை - வாகுவலயம் என்பாருமுளர்* (*சீவக.* 2696 : 3, *உரை*).

3. நன்மணி; A superior kind of gem. *அரதனம் சலாகை அகன்மணிக்கு ஆகும்* (*திவா.* 6 : 7).

**சவடி** cavaṭi, *n.* [M. *cavaṭi.*]

1. பொற்சரடுகளில் பிறைபோன்ற கனமான பொன்தகடுகள் கொத்தாக அமைந்த கழுத்தணி வகை; An ornament for the neck consisting of three or more gold cords. *சவடி, சரப்பளி முதலாயுள்ள பிறவற்றையும்* (*சிலப்.* 6 : 100, *அடியார்.*).

2. பெண்கள் காதணி வகை; Ear-ornament worn by women.

**சவடிக்கடுக்கன்** cavaṭi-k-kaṭukkaṉ, *n.* < *சவடி* +. [M. *cavaṭikkaṭukkan.*]

ஆண்கள் அணியும் பெரிய கடுக்கன் வகை; A kind of large ear-ring for men (W.).

**சவடிக்கோவை** cavaṭi-k-kōvai, *n.* < id. +.

கழுத்தணி வகை; A necklace (J.).

**சவடிகை** cavaṭikai, *n.*

நகையின் ஓர் உறுப்பு; A part of a jeweled ornament. *பச்சை* 139, *மாணிக்கம்* 5, *பழைய வஜ்ரம்* 508, *சிவப்பு* 189 *இதில் கோத்த சவடிகை ஒன்றுக்கும்* (*கல். சொல். அக.*).

**சவடிப்பூணூல்** cavaṭi-p-pūṇūl, *n.* < *சவடி* +.

மணிகள் பதிக்கப்பெற்ற பொற்பூணூல்; Ornamental sacred thread of gold. *இட்ட சவடிப்பூணூலும்* (*ஈடு*, 3, 10, 5).

**சவடிப்பொட்டு** cavaṭi-p-poṭṭu, *n.* < id. +.

► தாலிப்பொட்டு (W.)

**சவளி** cavaḷi, *n.* < id.

மகளிர் அணியும் கழுத்தணி வகை; A kind of necklace for women. *பூசாரி ராயனிட்ட பொற்சவளி* (*விறலிவிடு.* 696).

**சவி** cavi, *n.* < *chavi.*

சரமாகக் கோக்கப்பட்ட மணிக்கோவை; Girdle with strings of beads or bells. *சவி மூன்றுவடம் உடையன* (S.I.I. ii, 210).

**சவுக்கடி** cavu-k-kaṭi, *n.* < *சவுக்களி*. [T. *tcaukaṭṭu.*]

காதணியாகிய தோட்டில் உள்ள தொங்கல்; Pendant of an ear-ring (W.).

**சவுக்களி** cavu-k-kaḷi, *n.* prob. < Pkt. *caukka.*

1. காதணி வகை; A kind of ear-ring. *சற்று மறுவில்லாச் சவுக்களியும்* (பணவிடு. 243).

2. கடுக்கனோடு சேர்க்கும் தங்கத் தகடு; Small gold piece appended to ear-rings (W.)

**சவுக்களிக்கடுக்கன்** cavu-k-kaḷi-k-kaṭukkaṉ, *n.* < *சவுக்களி* +.

காதணி வகை; Ear-ring with *cavukkali* pendant (W.).

**சறை** caṟai, *n.*

► சறைமணி. *சறையினார் கவராத தளிர் நிறத்தால்* (ஈடு, 4, 8, 4).

**சறைகைமணி** caṟaikai-maṇi, *n.* < *சறை* +.

(பசுக்கள் ஓசையைக் கேட்டு உடன் வருவதற்காக) இடையர் தம் இடுப்பில் கட்டி ஒலிப்பிக்கும் மணி. Herdsman's tinkling girdle, at the sound of which cows follow him to their stall. *சறைகைமணி என்று ஒரு மணி உண்டாயிற்று* (ஈடு, 4, 8, 4).

**சறைமணி** caṟai-maṇi, *n.* < id. +.

► சறைகைமணி.

**சன்தாபனம்** caṉtāpaṉam, *n.*

ஒரு நகை. An ornament. *வடமூன்று முத்தினற் களாகவரம் பொன்னின் சன்தாபனக் கடையுந் நடுவு இட்ட படமு* (கல். சொல். அக.).

**சன்நவடம்** caṉṉa-vaṭam, *n.*

ஒரு நகை; An ornament. *கோத்த திருச்சன்நவடம் மூன்றினால்* (கல். சொல். அக.).

**சன்னல் சங்கிலி** caṉṉal-caṅkili, *n.* < *சன்னல்* +.

பலகணியைப்போன்று இடையிடையே துளைகளைக்கொண்ட கண்ணிகளாலான சங்கிலி; Neck chain with pieces resembling a window (*W. D.*).

**சன்னாவதஞ்சம்** caṉṉāva-tañcam, *n.*

காதணி வகைகளுள் ஒன்று. An ear ring.

**சனிவளையம்** caṉi-vaḷaiyam, *n.*

பரவ மகளிர் அணியும் காதணி வகை; A kind of ear-ornament worn by women (*Parav.*).

## சா

**சாக்கு** cākku, *n.* corr. of *சரக்கு.*

► பொன். *சாக்கு பந்தம் ... பொன்னே* (பிங். 6 : 131).

**சாங்கிருதம்** cāṅkirutam, *n.*

ஒலியெழுப்பும் காலணிகலன் வகை; Tinkler, an anklet (*யாழ். அக.*).

**சாதரூபம்** cātarūpam, *n.* < *jāta-rūpa.*

நால்வகைப் பொன்களில் ஒன்று; A kind of gold, one of four *poṉ*. *சாதரூபங் கிளிச்சிறை யாடகம் சாம்புநதம்* (*சிலப்*. 14 : 201).

**சாதாக்கொப்பு** cātā-k-koppu, *n.* < *சாதா* +.

காதின் மேற்பகுதியில் துளையிட்டு அணியப்படும் சித்திரவேலைப்பாடற்ற அணி வகை; Plain ear-ornament of women (W.).

**சாதாச் சங்கிலி** cātā-c-caṅkili, *n.* < id. +.

வேலைப்பாடற்ற கழுத்தணி வகை; Simple neck chain (*W. D.*).

**சாதுரங்கம்** cāturaṅkam, *n.* < *catur-aṅga.*

► பதுமராகம். *பதுமம் பதுமராகம் சாதுரங்கம் என்பதும் அது* (*சிலப்*. 14 : 186, *அடியார்*.).

**சாந்துக்காறை** cāntu-k-kāṟai, *n.* perh. *சந்து* +.

மகளிர் கழுத்தணி வகை; Collar-like ornament worn by women (*Loc.*).

**சாம்பு** cāmpu, *n.* prob. *jāmbūnada.*

► பொன். *சாம்பு பொன் பறை ஆம் என்ப* (*சூடா*. 11 : 149).

**சாம்புநதம்** cāmpu-natam, *n.* < id.

நால்வகைப் பொன்களுள் ஒன்று; A kind of fine gold, one of four kinds of *poṉ*. *பொன்னுக்குச் சாம்புநதம்* (*வள்ளுவமா*. 36).

**சாம்பூநதம்** cāmpūnatam, *n.* < id.

► சம்புநதம். *சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம்* (*சிலப்*. 14 : 201-202).

**சாம்பூனதம்** cāmpūṉatam, *n.* < id.

► பொன். *சாம்பூனதம் ஆன அருஞ் செழுங் கனகம்* (*திருவாலவா*. 25, 5 : 2-3).

**சாமந்திப்பூ** cāmanti-p-pū, *n.* < *sēvati* +.

செவ்வந்திப்பூ வடிவினையுடைய திருகுவில்லை என்னும் தலை அணி; Gold jewel resembling chrysanthemum, worn by women in the hair.

**சாமி** cāmi, *n.* cf. *cāmīkara.*

► பொன். *குரவனும் பொன்னும் தலைவனும் முருகனும் அருகனும் இளமையாட்டியும் சாமி* (*பிங்*. 10 : 467).

**சாமீகரம்** cāmīkaram, *n.* < id.

► பொன். *சாமீகரம் பூரி ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**சாரங்கம்** cāraṅkam, *n.*

► அணிகலன்.

**சாரசணம்** cāracaṇam, *n.*

மாதரின் இடையணி வகை; A waist-band for women (*யாழ். அக*.).

**சாலகம்** cālakam, *n.* < *jālaka.*

யாகபத்தினிகள் நெற்றியில் அணியும் அணிவிசேடம்; Ornament worn on the forehead by the wife of a man who performs the sacrifice during the junction. *சாலகம் - ஜாலகம் (புறநா.* 166 : 14, *உரை*).

**சாலப்பிராயம்** cāla-p-pirāyam, *n.*

போர்க்கவசம்; Armour (*த. மொ. அக.*).

**சாலிகை** cālikai, *n.* prob. *jalika.*

▶ கவசம். *சாலிகை யுடம்பினர் தறுகணாளரே (சீவக.* 2217 : 4).

### சி

**சிக்குமோதிரம்** cikku-mōtiram, *n.* < *சிக்கு* +.

▶ சங்கிலி மோதிரம்.

**சிகாபாசம்** cikāpācam, *n.* < *šikhā* +.

மகளிர் அணியும் தலையணிகலன்; A head ornament (*அணி. ஒப். ப.* 70).

**சிகாமணி** cikā-maṇi, *n.* < id. +.

1. முடியில் அணியப்பெறும் இரத்தினம்; A gem worn on hair. *இந்து சிகாமணி எங்களை ஆள (திருவாச.* 49, 7 : 4).

2. மணிமாலை ஒன்றின் நடுவில் சிறப்பிடம் பெற்று விளங்கும் இரத்தினம் ஆகிய நாயக மணி; The main gem of a string of gems.

**சிகாமோதிரம்** cikā-mōtiram, *n.* < *சிகா* +.

முத்திரை மோதிரம்; A ring with initials (*Loc.*).

**சிகா வ்யாலம்** cikā-vyālam, *n.* < id. +.

மகளிர் அணியும் தலையணிவகை; A kind of head jewel (*அணி. ஒப். ப.* 70).

**சிகி** ciki, *n.*

▶ சிலம்பு. *சிகி என்ப பரிபுரம் (வேத. சூடா.* 4).

**சிகிபத்ரம்** ciki-patram, *n.* < *சிகி* +.

மகளிர் அணியும் காதணிவகை; A kind of ear ring (*அணி. ஒப். ப.* 70).

**சிகைதாடு** cikai-tāṭu, *n.* < T. *sikatāḍu.*

1. பெரும்பாலும் சிறுவர்கள் அணியும் தலையணி வகை; A head ornament of the children (*Loc.*).

2. தலைமயிர் கட்டுங் கயிறு; String of fastening the hair (W.).

**சிகைதாடுகுச்சு** cikai-tāṭu-kuccu, *n.* < *சிகைதாடு* + *குச்சு.*

▶ சிகைதாடு, 1 (W.).

**சிகைமணி** cikai-maṇi, *n.* < *சிகை* +.

▶ சூளாமணி. *சிகைமணி அழுத்திய செம்பொற்சென்னிய (சூளா.* 10, 221 : 1).

**சிங்கமதாணி** ciṅka-matāṇi, *n.* < *சிங்கம்* +.

வெற்றி பெற்ற வேந்தன் மார்பிலணியும் சிங்கமுகப் பதக்கம்; Lion-faced pendant worn by a victorious king on his chest (*மதுரைத். அக.*)

**சிங்கமுகக்காப்பு** ciṅka-muka-k-kāppu, *n.* < id. +.

சிங்கமுகம் பொறிக்கப்பட்ட காப்பு வடிவிலான கையணி வகை; Bracelet with a lion's face on the clasp (W.).

**சிடுக்கு** ciṭukku, *n.* < *சிக்கு*.

மகளிர் அணியும் அணிவகை; A kind of ornament for women. *முத்தின் சிடுக்கு ஒரணையிற்கோத்த முத்து* (S.I.I. II, 211).

**சித்தி** citti, *n.*

தலையணி வகைகளுள் ஒன்றான சுட்டி; One of the head ornaments that in *cutti.*

**சித்திர உத்தி** cittira-utti, *n.* < *சித்திரம்* +.

▶ சீதேவி. *முத்து அணி வடமும் சித்திர உத்தியும்* (*பெருங்*. 2, 19 : 120).

**சிந்தாக்கட்டிகை** cintākkaṭṭikai, *n.* < *சிந்தாக்கு* +.

▶ சிந்தாக்கு. *சிந்தாக்கை யிருமுலையாட் குஏன்கழுத்தி லிட்டேன்* (*விறலிவிடு*. 695).

**சிந்தாக்கு** cintākku, *n.* < T. *cintāku.* [K. *cintāka.*]

உட்கழுத்தில் அணியப்பெறும் அணிவகைகளுள் ஒன்று; A kind of necklace.

**சிந்தாமணி** cintā-maṇi, *n.* < *cintā* +.

▶ தெய்வமணி. *சிந்தாமணி சூளாமணி ... தெய்வமணி ஐந்து என்ப* (*பிங்*. 6 : 119).

**சிம்மகுண்டலம்** cimma-kuṇṭalam, *n.* < *சிம்மம்* +.

வலது காதில் அணியக்கூடிய சிங்கமுகம் போன்றமைந்த வட்டமான காதணி; An ornament for right ear resembling the face of a lion.

**சிமந்தகம்** cimantakam, *n.* < *syamantaka.*

▶ சமந்தகம்.

**சிமந்தகமணி** cimantaka-maṇi, *n.* < id. +.

▶ சிமந்தகம். *சிமந்தகமணி சூடாமணி ... தெய்வமணி ஐந்து என்ப* (*பிங்*. 6 : 119).

**சிமிக்கி** cimikki, *n.* < U. *jhumki* .

காதில் அணியும் கம்மல் முதலியவற்றுடன் சேர்த்து அணியப்படும் மணி வடிவிலமைந்த காதணித் தொங்கல் வகை; Bell-shaped golden pendant of kammal, the edges of which are furnished with small pearls. *பொற்சிமிக்கிப் பொற்கிடைக்கப் போகுதோ* (*விறலிவிடு*. 690).

**சிமிக்கிப்பூ** cimikki-p-pū, *n.* < *சிமிக்கி* +.

▶ சிமிக்கி.

**சிரச்சக்கரம்** cira-c-cakkaram, *n.* < *śiras* +.

தலையில் அணிவிக்கப்பெறும் வட்டமான திருகுவில்லை; சடைவில்லை; A round golden disc worn on the hair plait of the women.

**சிரச்சூளம்** cira-c-cūḷam, *n.* < id. +.

► அகளசூடம்.

**சிரமாலை** cira-mālai, n. < id. +.

1. சிவபெருமான் அணியும் மண்டையோட்டு மாலை; A garland made up of skulls worn by Lord Śiva.

2. சிவனடியார்கள் தம் தலையில் அணியும் உருத்திராக்கமாலை; A string of *rudrākṣha* beads worn by Saivaites on their head.

**சிரமேல்மாலை** cira-mēl-mālai, *n.*

► முடிமாலை (*சயா.*).

**சிரிமுடி** ciri-muṭi, *n.*

► மகுடம்.

**சிருங்கலம்** ciruṅ-kalam, *n.*

► சங்கிலி, 1 (*அபிதா. மாலை.*).

**சிரோமணி** cirō-maṇi, *n.* < *śiras* + *maṇi*.

► சிகாமணி, 1 (*யாழ். அக.*).

**சிரோரத்தினம்** cirō-rattiṉam, *n.* < id. + *ratna.*

► சிகாமணி, 1.

**சில்** cil, *n.* < *சின்-மை.* cf. *śithila*

► சடைவில்லை. *சில் இயல் ஓதி* (*கம்பரா.* 1, 21, 12 : 1).

**சிலம்பு** cilampu, *n.* < *சிலம்பு-.*

உள்ளீடற்ற வளையத்தினுள் உயர் வகைக் கல் போன்றவற்றால் ஒலியெழுப்பக்கூடியதாகச் செய்யப்பட்டதும் தண்டை போன்றதுமான, மகளிர் காலணிகலன் வகை; Tinkling anklets worn by women on their feet. *ஒன்றின வோவவ ளஞ்சிலம்படியே* (*ஐங்குறு.* 389 : 5).

**சிலுவணி** cilu-vaṇi, *n.* parh. *சில்* +.

பரவ மகளிர் அணியுங் காதணி வகை; An ear-ornament (*Parav.*).

**சிவந்திப்பூக் கடுக்கன்** civanti-p-pū-k-kaṭukkaṉ, *n.* < *śēvati* +.

சுற்றிலும் சிவப்புக் கல்லும் நடுவில் வெள்ளைக் கல்லும் வைத்துச் செய்யப்பட்ட காதணி வகை; A kind of ear ornament gemmed with rubies around a white stone.

**சிவந்திப்பூ மோதிரம்** civanti-p-pū-mōtiram, *n.* < id. +.

சிவந்திப்பூ வடிவில் செய்து மணிகள் பதிக்கப்பெற்ற மோதிரம்; A ring shaped like *chrysanthemum* flower.

**சிவப்பு** civappu, *n.* < *சிவ-.*

► சிவப்புக்கல். *மாமணி சிவப்பு மாணிக்கம்* (*நாமதீப.* 383).

**சிவப்புக்கல்** civappu-k-kal, *n.* < *சிவப்பு* +.

மாணிக்கம்; Ruby (*Colloq.*).

**சிவளிகை** civaḷikai, *n.* cf. *சிகழிகை.*

► பெருஞ்சூட்டு. *பெருஞ்சூட்டு என்பது சிவளிகைப் பெயரே* (*பிங்.* 6 : 104).

**சிற்றுரு** ciṟṟuru, *n.* < *சிறு-மை* + *உரு.*

தாலியுடன் கோக்கும் உருக்களுள் ஒன்று; Ornamental pieces appended to the *tāli.*

**சிறுதாலி** ciṟu-tāli, *n.* < *சிறு-மை* +.

1. சில அரும்புகளைப் பாம்பின் பல் வரிசை போல் நிரல்பட அமைத்த தாலி வகை; A kind of small *tāli* or marriage badge. *நல்லோன் புனைந்த நெற்சிறு தாலி* (*பெருங்.* 4, 16 : 29).

2. கணவன் வாழும் நாள்வரை மகளிர் கழுத்தில் சரட்டுடன் விளங்கும் தாலி; A small *tāli* worn by married women by long as her husband lives.

3. வைப்பாட்டிக்குக் கொடுக்கும் தாலி; *Tāli* given by a paramour to his concubine (*Loc.*).

**சிறுதாள்** ciṟu-tāḷ, *n.* < id. +.

விரல் மறையும்படி அணியும் மணிகள் பதித்த மோதிரம்; A kind of ring studded with gems so as to conceal the fingers.

**சிறுதூக்கம்** ciṟu-tūkkam, *n.* < id. +.

அணியின் ஓர் உறுப்பாகவும் சிறிதாக அசைந்தாடுவதாகவும் உள்ள வைரமணித் தொங்கல்; Small pendant of Jewellary. *திருப்பட்டிகை முகம் ஒன்றில் சவியினுள்ளால் சிறு தூக்கம் மூன்றே நாலித் தலையில் விடங்குடையான எட்டில் கட்டின பொத்தி எட்டும்* (S.I.I. ii, 51).

**சிறுநெற்றாலி** ciṟu-neṟṟāli, *n.* < id. +.

► சிறுதாலி, 1. *நெற்சிறுதாலி - சிறுநெற்றாலி* (*பெருங்.* 4, 16 : 29, *அடிக்.*).

**சிறுபடுகண்** ciṟu-paṭukaṇ, *n.* < id. +.

தொங்கும் அணியுறுப்பு வகை; A pendant in an ornament (S.I.I. ii, 396).

**சிறுமணி** ciṟu-maṇi, *n.* < id. +.

குழந்தைகளின் இடுப்பிலும், கணுக்காலிலும் அணிவிக்கப்படும் ஒலியெழுப்பும் சதங்கை; Tiny bell tied in a string around a child's waist or foot. *சதங்கை சிறுமணி கிங்கிணி* (*பிங்.* 6 : 82).

**சிறுவட்டமணி** ciṟu-vaṭṭa-maṇi, *n.* < id. +.

குழந்தைகள் இடுப்பில் கட்டுவதும் இலேசான முத்துகள் பொருத்தப்பெற்றதுமான வெள்ளியாலான அணி; A silver ornament with tiny bells worn round the waist by children.

**சின்னப்பூ** ciṉṉa-p-pū, *n.* < *சின்னம்* +.

சிறிய பூ வடிவமாகச் செய்யப்பெற்ற சடைவில்லை; A flower shaped disc worn on the hair plait of women. *சின்னப்பூ அணிந்த குஞ்சி* (*சீவக.* 2251 : 1).

## சீ

**சீதேவி** cītēvi, *n.* < *śrī-dēvī*.

சடைவில்லை வகை; A woman's head ornament. *சீதேவி என்னும் தலைக்கோலத்துடனே* (*திருமுரு.* 23, *உரை*).

**சீர்** cīr, *n.* cf. *śrī.*

காலில் அணியப்படும் தண்டை; Tinkling ornament's for the feet. *கால் தண்டை புகழ் ... சீர் ஆகும்* (*திவா.* 11 : 296).

**சீர்ஷஜாலம்** cīrṣajālam, *n.*

மகளிர் தலையில் அணியும் கூந்தல் வலை; Hairnet of women (*அணி. ஒப். ப.* 70).

**சீல்மோதிரம்** cīl-mōtiram, *n.* < *சீல்* +.

முத்திரையிடுவதற்குரிய மோதிரம், Signet-ring, finger-ring with seal set in it (*Colloq.*).

**சீனச்சரப்பளி** cīna-c-cara-p-paḷi, *n.* < *சீனம்* +.

► சரப்பணி (*தெய்வச். விறலிவிடு.* 599).

### சு

**சுங்கு** cuṅku, *n.* < T. *tcuṅgu.* [K. *cuṅgu.*]

► சடைக்குச்சு.

**சுட்டி** cuṭṭi, *n.* perh. *cūḍiya.*

1. ► நெற்றிச்சுட்டி. *சுட்டி சிதையக் குட்டத்துக் குளித்து* (*பெருங்.* 1, 40 : 102).
2. ► நெற்றிப்பட்டம். *சுட்டியென்பது பட்டமுஞ் சுட்டியும்* (*அக. நி.* 1548).

**சுட்டிகை** cuṭṭikai, *n.* prob. *cūḍiya.*

► நெற்றிச்சுட்டி. *சூளிகையுஞ் சுட்டிகையும்* (*ஆதியுலா*, 68).

**சுட்டிமுகடு** cuṭṭi-mukaṭu, *n.* < *சுட்டி* +.

மகளிர் அணியும் தலையணிகலன்; Set of ornament worn by women on the head.

**சுடாரி** cuṭāri, *n.* cf. *சடாரி.*

► கவசம். *மெய் புகு கருவி கவசப் பெயரே சுடாரியும்* (*பிங்.* 6 : 506).

**சுடிகை** cuṭikai, *n.* < *juṭika.*

1. ► மணிமுடி. *சூடிகை சுடிகை சேகரமும்* (*பிங்.* 6 : 67).
2. முன்நெற்றியில் மகளிரும் சிறுமியரும் அணியும் நெற்றிச்சுட்டி; Ornament worn by women and girls on the forehead. *சுடிகைப் பூங்கமல மன்ன சுடர்மணி முகத்தினர்* (*கம்பரா.* 1, 14, 8 : 2, *வை.மு.கோ*).

**சுண்டுவிரற்கண்ணி** cuṇṭu-viraṟ-kaṇṇi, *n.* < *சுண்டுவிரல்* +.

மகளிரின் கால்சிறுவிரல் மோதிரம்; A kind of ring, worn by women on the little toe.

**சுண்டைக்காய் மாலை** cuṇṭai-k-kāy-mālai, *n.* < *சுண்டைக்காய்* +.

சுண்டைக்காய் வடிவில் செய்யப்பட்டிருக்கும் மணிகள் கோத்த கழுத்தணி வகை; A necklace made up of beads resembling Indian currant tomato.

**சுத்து** cuttu, *n.* < *சுற்று.*

1. ► கைவளை (*W. D.*).
2. மூன்று பொன்கம்பிகளை ஒன்றாக இணைத்ததும் முகப்புக்குக் கீழே மூன்று சதங்கைகள் தொங்கும்படி அமைக்கப்பட்டதுமான ஒரு தோளணி வகை; A bracelet worn on upper arm which has three strings and hanging tinklets.

**சுத்துப் பரிஞ்சி** cuttu-p-pariñci, *n.* < id. +.
நெற்றிச்சுட்டிக்கு இருபுறமும் உள்ள சங்கிலி; A chain on either side of *neṟṟi-c-cuṭṭi* (*S. D.*).

**சுத்துமணி** cuttu-maṇi, *n.* < id. +.
► சுற்றுமணி.

**சுத்துரு** cutturu, *n.* < id. +.
► சுற்றுரு.

**சுரகனத் தோள்வலயம்** curakaṉa-t-tōḷvalayam, *n.*
பாம்பு வடிவில் அமைக்கப்பட்ட வாகுவலயம்; A bracelet worn on upper arm resembling a serpent.

**சுரி** curi, *n.* < *சுரி-*.
1. திருகாணி, வளையல், சரடு முதலியவற்றின் மூட்டுவாய்; Part of an ornament. *உத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி* (S.I.I. ii, 156, 39).
2. உருத்திராக்க மணிகளுக்குப் பக்கமாக இணைக்கும் வில்லைத்தகடு; The plates placed in between the beads in a *rudrākṣha* string. *உத்திராக்ஷச்சுரி பொன்னின் நூலிற் கோத்த உருத்ராக்ஷம் ஒன்றும்* (S.I.I. ii, 38).

**சுரிகை** curikai, *n.* perh. *சுரி*.
► கவசம். *கசையே சுரிகை மெய்புகுகருவி* (*திவா*. 7 : 36).

**சுரிதகம்** curitakam, *n.* < *சுரி-* + *அகம்*.
தலைப் பின்னலில் அணியப்படுவதும் திருகுப்பூப் போன்ற வட்டமான மணிகள் பதித்ததுமான பொன் அணி; An ornament fastened to the hair with a screw. *சுரிதக வுருவினதாகி* (*நற்*. 86 : 6).

**சுருள்** curuḷ, *n.* < *சுருள்-*. [K. *suruḷi*, M. *curuḷ*, Tu. *suruḷ*.]
பனையோலைச் சுருளின் வடிவிலமைந்த மகளிர் காதணி வகை; Women's ear ornament resembling a coil of palm leave. *செம்பொன் செய்சுருளுந் தெய்வக் குழைகளும்* (*கம்பரா*. 1, 16, 5 : 1).

**சுருள்கொலுசு** curuḷ-kolucu, *n.* < *சுருள்* +.
மகளிர் காலில் அணியும் திரித்தகயிறு போன்ற அமைப்புடைய கொலுசு; A kind of anklet worn by women resembling a coin (*மதி. கள*. ii, 65).

**சுருள்பீலி** curuḷ-pīli, *n.* < id. +.
மகளிர் காலின் மூன்றாம் விரலில் அணியும் ஆழி; மோதிரம்; Ring worn by women on the third toe.

**சுருளை** curuḷai, *n.* < *சுருள்-*. [K. *suruḷe*.]
► சுருள். *செம்பொன் செய் சுருளை மின்ன* (*சூளா*. 10, 79 : 3).

**சுரை** curai, *n.* cf. *suṣira*.
திருகாணியைச் செலுத்துஞ் சிறுகுழாய்; Female screw.

**சுல்லு** cullu, *n.* cf. *śukla*.
► வெள்ளி. *கருதிய சுல்லு ... இரசதம் வெள்ளியின் பேர்* (*சூடா*. 6 : 9).

**சுவணம்** cuvaṇam, *n.* < *suvarṇa.*

► பொன். *எரிபுரை சுவணம்* (பெருங். 4, 11: 52).

**சுவர்ணம்** cuvarṇam, *n.* < id.

► பொன்.

**சுவாமி** cuvāmi, *n.* < *svamin.*

► பொன். *சுவாமியென்பது முருகனும் பொன்னு மாசானெனவுமாகு முப்பெயரே* (அக. நி. 1542).

**சுழியம்** cuḻiyam, *n.* < *சுழி.*

1. பெண்கள் அணிந்துகொள்ளும் தலையணி வகையுள் ஒன்று; A kind of ornament worn by women on the head. *சுழியம் சூடி* (*கம்பரா.* 1, 22, 51 : 4).

2. ► நெற்றிச்சுட்டி. *படர் சடை மொழுப்பும் சுழியமும்* (*திருவிசைப்.* 3, 3, 2 : 1).

**சுளிகை** cuḷikai, *n.*

அணிவகை; A kind of ornament. *சூளிகையும் சூட்டும் சுளிகையும்* (*ஆதியுலா*, 68).

**சுற்று** cuṟṟu, *n.* < *சுற்று-.* [M. *cuṟṟu.*]

திருமணமான பெண்கள் அணியும் கால் விரல் மோதிரம்; Toe ring. *சுடுபொன் வளைஇய வீரமை சுற்றொடு* (*கலித்.* 85 : 1-2).

**சுற்றுக்கடுக்கன்** cuṟṟu-k-kaṭukkaṉ, *n.* < id. +.

கடுக்கன் வகை; A kind of ear-ornament (W.).

**சுற்றுக்கல்** cuṟṟu-k-kal, *n.* < id. +.

கொப்பு முதலிய அணிகலனைச் சுற்றி வட்டமாக அமைக்கும் மணிகள்; Precious stones set circularly on the fringe of *koppu* and similar ornaments.

**சுற்றுமணி** cuṟṟu-maṇi, *n.* < id. +.

மங்கல நாணாகிய தாலிக்கு இருபுறத்திலும் கோக்கப்படும் பலவித வடிவமைந்த உருக்கள்; Beads of various forms stringed on both sides of the marriage badge to form *maṅgalya suthra.*

**சுற்றுரு** cuṟṟuru, *n.* < id. +.

► சுற்றுமணி.

**சுற்றுற்றி** cuṟṟuṟṟi, *n.*

அணிகலன் வகை; A kind of ornament. *உசரத்து ஐஞ்சாணே மூவிரல அரைபாதச் சுற்றுற்றி* (*கல். சொல். அக.*).

**சுறவுக்குழை** cuṟavu-k-kuḻai, *n.* < *சுறவு* +.

மகரமீன் வடிவாகச் செய்த காதணி; மகரக் குழை; An ear-ornament shaped like fish. *நாகம் மருப்பி னியன்ற தோடுந் நலங்கொள் சுறவுக் குழையும்* (*சீவக.* 2440 : 1).

**சுறவுவாய்** cuṟavu-vāy, *n.* < id. +.

மகளிர் தலையில் அணியும் மகரவாய் என்னும் அணி; An ornament shaped like a shark's mouth, worn by women on the head. *சுறவுவா யமைந்த* (*பெரும்பாண்.* 385).

## சூ

**சூட்டு** cūṭṭu, *n.* < சூட்டு-.

1. பெண்கள் முன்நெற்றியில் அணியும் அணிவகை; நெற்றிச்சுட்டி; Ornament for women's forehead. *நாட்டுப்பெயர் பொறித்த சூட்டுப் பொலிசுடர் நுதல்* (பெருங். 2, 4 : 10).

2. ► கிரீடம். *இறை கொள் மா நகர்ச் சூட்டு வைத்தனையது* (சீவக. 2569 : 2).

**சூடகம்** cūṭakam, *n.* perh. சூடு-. [T. *sūḍigamu*, K. *sūḍaga*, Tu. *cūḍaga*.]

வளையல் வகை; Bracelet. *வயிரங் கட்டிய சித்திரச் சூடகஞ் செம்பொற் கைவளை* (சிலப். 6 : 91-92).

**சூடா** cūṭā, *n.* < *cūḍa*.

1. ► கைவளை.

2. கழுத்திலணியும் பொற்கொடியில் கோத்த உருத்திராக்கம்; *Rudrākṣa* beads enclosed in gold and stringed in a gold band to wear as a necklace.

**சூடாமணி** cūṭā-maṇi, *n.* < id. +.

1. உயர்ந்த மணிகள் பதித்த சடைவில்லை வகை; A variety of hair disc. *சூடாமணியும் பணிவளையும்* (இராஜராஜ. உலா, 322)

2. ஒரு மாலையின் நடுநாயகமான மணி; நாயகமணி; Jewel in a crest or diadem.

3. ► தெய்வ மணி. *சிமந்தகமணி சூடாமணி ... தெய்வமணி ஐந்து என்ப* (பிங். 6 : 119).

**சூடிகை** cūṭikai, *n.* < *cūḍikā*.

தலையைச் சுற்றி அணியும் ஒருவகை நகை; மணிமுடி; Crown bejewelled diadem. *மீன்சோதி படல சூடிகா கோடி* (தக்கயாகப். 105 ).

**சூடைக்காசு** cūṭai-k-kācu, *n.* < சூடை +.

► சூடாமணி, 1. *உறுசுடர்ச் சூடைக்காசுக் கரசினை* (கம்பரா. 5, 6, 45 : 1).

**சூர்ப்பு** cūrppu, *n.* < சூர்-.

கையில் அணியும் வளைந்த கடகம்; Bracelet. *சூர்ப்பு அமை முன் கை* (புறநா. 163 : 3).

**சூரியப்பிரபை** cūriya-p-pirapai, *n.* < *sūrya+prabhā*.

மகளிர் தலையின் வலப்பக்கத்தில் அணிந்துகொள்ளும் மணி பதித்த சடைவில்லை வகை; Ornament of gold set with precious stones, worn by women on the right side of the head cf. *cantira-p-pirapai*.

**சூரியப்பிரவை** cūriya-p-piravai, *n.* < id. +.

► சூரியப்பிரபை.

**சூரியப்பிறை** cūriya-p-piṟai, *n.* < id. +.

► சூரியப்பிரபை.

**சூரியபொறை** cūriya-poṟai, *n.* < id. +.

► சூரியப்பிரபை.

**சூலிகா** cūlikā, *n.*

ஆண்கள் மணிக்கட்டில் அணியும் அணிவகை; A kind of bracelet worn by menfolk (*அணி. ஒப். ப.* 70).

**சூழி** cūḻi, *n.* < *சூழ்-*.

1. யானையின் முகத்தில் அணிவிக்கப்படும் நெற்றிப்பட்டம்; முகப்படாம்; Ornamental covering for the elephant's face. *சூழி யானைச் சுடர்ப் பூண் நன்னன்* (*அகநா.* 15 : 10).

2. ► குதிரைக்கலணை. *சூழியும் பரிமாக்கலணை ஆகும்* (*பிங்.* 6 : 519).

**சூழியம்** cūḻiyam, *n.* < *சூழி*.

உச்சிக்கொண்டையில் அணியும் அணிகலன்; Ornament worn on the crown of the head. *விட்டிலகு சூழியம் விழுங்கு சிறுகொண்டை* (*திருவிளை.* 1, 4, 16 : 1).

**சூளாமணி** cūḷā-maṇi, *n.* < *cūḍa-maṇi*.

1. ► சூடாமணி, 2. *சூளாமணி சிந்தித்திரியுமன்றே* (*சீவக.* 786 : 4).

2. இந்திரன் அணியும் மணி; Gem worn by Indra. *சிந்தாமணி, சூளாமணி ... தெய்வமணி ஐந்து என்ப* (*பிங்.* 6 : 119).

**சூளிகை** cūḷikai, *n.* < *cūlikā*.

தலையணி வகை; A type of head ornament. *சூளிகையும் ... சூட்டும் மின் விலக* (*ஆதியுலா,* 68).

**செங்கோல்** ceṅ-kōl, *n.* < *செம்-மை* +.

► பொன். *ஆசை செங்கோல் ... பொன்னே* (*பிங்.* 6 : 131).

**செந்தாது** cen-tātu, *n.* < id. +.

► பொன். *தேசிகம், செந்தாது ... பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

**செபமாலை** cepa-mālai, *n.* < *japa* +.

► சபவடம். *செய்க செபமாலை நூற்றெட்டினால்* (*சைவச. பொது.* 144).

**செபவடம்** cepa-vaṭam, *n.* < id. +.

► சபவடம். *வந்தான் செபவடக் கரமுந்தானும்* (*திருவாலவா.* 35, 25 : 4).

**செம்பு** cempu, *n.* < *செம்-மை* +. [K. M. *cembu.*]

► பொன். *செம்பு தானே நாவலுஞ் செம்பும் பொன்னுமெனவே போற்றிடு முப்பெயர்* (*அக. நி.* 1604).

**செம்மணி** cem-maṇi, *n.* < *செம்-மை* +.

► மாணிக்கம். *செம்மணி, மாணிக்கம் ... என்பதும் அப்பெயர்க்கு உரித்தே* (*பிங்.* 6 : 109).

**செயினட்டிகை** ceyiṉaṭṭikai, *n.* <E. *Chain* +.

கைக்கடிகாரச் சங்கிலி போலச் செய்து பதக்கம் சேர்க்கப்பட்ட அட்டிகை வகை; A necklet in the pattern of a watch chain to which a pendant is attached.

**செருந்திப்பூ** cerunti-p-pū, *n.*

மாலையாகக் கோக்கப்படுவதற்காகச் செருந்திப்பூ வடிவில் செய்யப்பெற்ற பொன்மணிகள்; The golden beads made in the form of panicled golden blossom to string as a necklace. *செருந்திப்பூ பதினொன்றும் கொய்சகம் இரண்டும் (கல். சொல். அக.).*

**செவிடு** cevitu, *n.* perh. < *செவி* +.

காதணி வகை; An ear ornament (*Loc.*).

**செவிப்பூ** cevi-p-pū, *n.* < id. +. [T. *cevulappuvvu.*]

► செவிமலர், 1. *தோடே செவிப்பூவே (திவ். திருப்பா. 27 : 4).*

**செவிமலர்** cevi-malar, *n.* < id. +.

1. ► செவிமலர்ப்பூ.

2. தெய்வத் திருமேனிகளில் சாத்தும் பொன் அல்லது வெள்ளியாலான கர்ணபத்திரம்; Gold or silver ears put on idols on special occasions.

**செவிமலர்ப்பூ** cevi-malar-p-pū, *n.* < id. +.

மகளிர் காதணி வகை; An ear ornament of women. *கன்னாவதஞ்சம் செவிமலர்ப்பூவே (திவா. 7 : 86).*

**செவிமாலி** cevi-māli, *n.* < id. +.

காதணி வகை; A variety of ear ring.

**செறிநிலைவடம்** ceṟi-nilai-vaṭam, *n.* < *செறி-*

நடுவில் பெரியனவும் அவற்றை அடுத்துப் படிப்படியாகச் சீர்மையுடன் இருபுறமும் சிறியனவுமான முத்துகள் அமையுமாறு கோக்கப்பட்ட மாலை; A string of pearls having big pearls in the center and smaller over on both sides in decreasing sizes gradually and symmetrically.

## சே

**சேகரம்** cēkaram, *n.* < *śekhara.*

► மணிமுடி. *சூடிகை சுடிகை சேகரமும் சொல்லும் (பிங். 6 : 67).*

**சேமணி** cēmaṇi, *n.* < *சே-*

கால்நடைகளுக்கு அணிவிக்கப்படும் மணிவகை; Bell tied to the neck of cattle (*யாழ். அக.*).

**சேமியாப்பட்டடை** cēmiyā-p-paṭṭaṭai, *n.* < *சேமியா* +.

சேமியாவின் உருவம் அமையச் செய்யப்பட்டு, குழந்தைகளும் மகளிரும் அணியும் கால் கொலுசு வகை; Vermicelli-like anklet for children and women.

**சேர்வை** cērvai, *n.* < *சேர்-.*

மகளிர் காதணி வகை; Women's ear ornament (W.).

## சொ

**சொகுசாமோதிரம்** cokucā-mōtiram, *n.* < *சொகுசா* +.

செம்பு கலந்த உலோகத்தால் செய்யப்பட்ட மோதிரவகை; Ring made of pinchbeck (W.).

**சொர்ணம்** corṇam, *n.* < *svarṇa.*

► பொன்.

**சொருகுப்பூ** coruku-p-pū, *n.* < *சொருகு-* +.

தலையில் செருகும் பூ வடிவில் அமைந்த சடைவில்லை; The flower like disc used as the ornament for pigtail.

**சொன்னம்** coṉṉam, *n.* < *svarṇa.*

► பொன். *வெறுக்கை சொன்னம் ... பொன் எனப்படுமே (திவா.* 6 : 1).

### சோ

**சோனகச்சிடுக்கு** cōṉaka-c-ciṭukku, *n.* < *சோனகம்* +.

சோனக நாட்டிலிருந்து வந்த அணிவகை; An ornament for women from Greece. *சோனகச் சிடுக்கின் கூடொன்றிற்கட்டின மாணிக்கம்* (S.I.I. ii. 430).

### சௌ

**சௌகந்தி** caukanti, *n.* < *saugandhika.*

மாணிக்க வகை; A kind of ruby having the tint of the red flowered water-lily, one of *Māṇikkam.* *சௌகந்திக்குச் சாற்றிய நிறனே (சிலப்.* 14 : 186, *அடியார்.*).

**சௌகந்திகம்** caukantikam, *n.* < id.

► சௌகந்தி.

### ஞா

**ஞாலித்தட்டு** ñālittaṭṭu, *n.* < *ஞால்-* +.

சிற்றுருக்களோடு சேர்த்து மகளிர் கழுத்தில் அணியும் அணிகலன் வகை; A kind of woman's ornament worn along with *Ciṟṟuru.*

**ஞாலுத்தட்டு** ñāluttaṭṭu, *n.*

► ஞாலித்தட்டு (*S. D.*).

**ஞாலுதட்டு** ñālutaṭṭu, *n.*

► ஞாலித்தட்டு (*S. D.*).

**ஞானக்குழாய்** ñāṉa-k-kuḻāy, *n.*

► கச்சிக்குழல் (*N. D.*).

### ஞெ

**ஞெகிழம்** ñekiḻam, *n.* < *ஞெகிழ்-.*

► ஞெகிழி. *சீரார் ஞெகிழம் சிலம்ப (கலித்.* 90 : 11).

**ஞெகிழி** ñekiḻi, *n.* < id. +.

பொன்னால் செய்யப்பட்ட ஒரு வகைச் சிலம்பு; Tinkling anklet. *பரிபுரம் அரவம் பைம்பொன் ஞெகிழி ... சிலம்பு (திவா.* 7 : 52).

## டீ

**டீக்காப்பதக்கம்** ṭīkkā-p-patakkam, *n.* < U. *ṭīkā* +.

பொற்றகட்டில் விலையுயர்ந்த மணிகள் பதிக்கப்பட்டதும் மகளிர் அணிவதுமான, குச்சிப் பதக்கத்திலிருந்து வேறான பதக்க வகை; A jewel pendant with a top-clasp of gold, set with precious stones, dist. fr. *kuccip-patakkam*.

**டீகா** ṭīka, *n.*

► டீக்காப்பதக்கம்.

**டீகாப்பொட்டு** ṭīkā-p-poṭṭu, *n.* < *டீகா* +.

மகளிர் தலைவகிடுக்கு நேரே நெற்றியில் அணியும் சுட்டி; A jewel pendant worn by women on the forehead (*Loc.*).

## டோ

**டோலாக்கு** ṭōlākku, *n.* < Hind. *lōla*.

*நீண்ட வடிவில் அமைக்கப்பெற்ற காதணித் தொங்கல் அணி;* An long ear-pendant.

## த்

**த்ரிசரம்** tri-caram, *n.*

► *திரிசரம். பொற்கட்டு 160ம் உட்பட தூக்கம் 250க்கு வன்னசர த்ரிசரம் ஒன்றும் மாணிக்கம்100ம் (கல். சொல். அக.).*

**த்ரிவேணி** tri-vēṇi, *n.*

► *திரிவேணி (அணி. ஒப். ப. 71).*

**த்ரிஸரவடம்** tri-sara-vaṭam, *n.*

► *திரிசரவடம். கிரீடம் ஒன்றுக்கு தூக்கம் 3308 த்ரிஸரவடம் ஒன்றுக்கு முத்து* 1370 (கல். *சொல். அக.*).

## த

**தக்க** takka, *n.*

நாயர் இனப் பெண்கள் அணியும் அணி வகை; An ornament worn by nayar ladies (E. T.).

**தகட்டுக்குழை** takaṭṭu-k-kuḻai, *n.* < *தகடு* +.

கழுத்தணி உறுப்பு வகை; A part of necklace (S.I.I. viii, 128).

**தங்கச்சரம்** taṅka-c-caram, *n.* < *தங்கம்* +.

தங்கச் சங்கிலி ஆகிய கழுத்தணி; Gold chain.

**தங்கம்** taṅkam, *n.* [M. *taṅkam.*]

அணிகலன்கள் முதலியவை செய்யப் பயன்படுவதும், இயற்கையாகக் கிடைப்பதுமான மதிப்புமிக்க வெளிர் மஞ்சள் நிற உலோகம்; Gold. *மாதங்க ராசி திருவாய் மலர்ந்தான் (இராஜராஜ. உலா*, 332).

**தங்க ஸூத்ரம்** taṅka-sūtram, *n.*

ஆண்கள் இடுப்பில் அணியும் அணிவகை; A girdle for men (*அணி. ஒப். ப.* 70).

**தசும்பு** tacumpu, *n.* cf. *kusumbha.*

► பொன். *தசும்பென்பது வேகுடமு மிடாவும் பொன்னுமெனவே போற்று முப்பெயரே* (*அக. நி.* 1759).

**தட்டாணி** taṭṭāṇi, *n.*

தாலிச் சரட்டின் ஓர் உறுப்பு, A part of the marriage badge. *வன்படையார் தேவியர் தம் மங்கலனாண் தட்டாணிக்கன் புரிய வோடாணி* (*கல். சொல். அக.*).

**தட்டு** taṭṭu, *n.* < *தட்டு-*

(சதுர வடிவிலான) கழுத்தணியில் கோக்கப்படும் சதுர வடிவிலான அணி உரு; Square pieces of a necklace.

**தட்டுக்குச்சு** taṭṭu-k-kuccu, *n.* < id. +.

காதிலணியும் கம்மல், தோடு முதலியவற்றின் திருகாணி; The screw of an ear ornament (*S. D.*).

**தட்டுச்சரி** taṭṭu-c-cari, *n.* < id. +.

முன்கையில் அணியும் மகளிர் அணிவகை; A kind of bracelet worn by women on the forearm. *தட்டுச் சரியைச் சரியாகக் கைக்கணிந்து* (*கூளப்ப.* 136).

**தட்டுமணி** taṭṭu-maṇi, *n.* < id. +.

சிறிய சதுர வடிவப் பொன் உருக்களாலாகிய கழுத்தணி வகை; Small necklace of square pieces of gold (*யாழ். அக.*).

**தட்டை**[1] taṭṭai, *n.* < *தட்டு-*.

காதின் மேல் பகுதியில் அணியும் காதணியில் பொருத்தக்கூடிய அணிகலன்; Small ear-ornament like a tack, worn in the upper helix. *மறுவில் செம்பொன் மணிகெழு தட்டைகள்* (*கந்தபு.* 6, 16, 7 : 1).

**தட்டை**[2] taṭṭai, *n.* < *தண்டை*.

ஒலியெழுப்பக்கூடிய ஒரு காலணிகலன் வகை; தண்டை; A tinkling anklet. *தட்டை ஞெகிழுங்கழல்* (*கந்தபு.* 1, 14, 2 : 1).

**தட்டைத் திருப்பு** taṭṭai-t-tiruppu, *n.* < *தட்டை* +.

அணிகலன் வகை; A kind of ornament (*யாழ். அக.*).

**தட்டைப்பீலி** taṭṭai-p-pīli, *n.* < id. +.

காலின் சுண்டுவிரலுக்கு அடுத்த விரலில் அணியும் தட்டையான மெட்டி வகை; Flat faced ring worn on the fourth toe (*Loc.*).

**தடுப்பு** taṭuppu, *n.* < *தடு-*.

காதில் அணியும் இரு அணிகள் ஒன்றோடொன்று உரசாதிருக்க இடையில் அணியும் ஒரு வளையம், A washer introduced in between two ear ornament to avoid rubbing.

**தடை** taṭai, *n.* < id. +.

1. ► காப்பு, 2.

2. ► கவசம். *தடைகுடங் கவசம் பாரி தடுத்தல் பூண்கடைப்புணர்ப்பாம்* (*அரும்.* 126).

**தடைமோதிரம்** taṭai-mōtiram, *n.* < *தடை* +.

கைவிரலில் பெரியதாக அணிந்திருக்கும் மோதிரத்தைக் கீழே விழாமல் தடுத்து நிற்கும் சிறு மோதிரம்; Keeper ring.

**தடையம்** taṭaiyam, *n.* < id. +.

அணிகலன் (*S. D.*).

**தண்டட்டி** taṇṭaṭṭi, *n.* < *தண்டு* +.

► தண்டொட்டி (*S. D.*).

**தண்டிகம்** taṇṭikam, *n.*

► முத்துமாலை.

**தண்டிகை** taṇṭikai, *n.*

► தண்டிகம்.

**தண்டை** taṇṭai, *n.* cf. *daṇḍa.*

1. குழந்தைகள், சிறுமிகள் ஆகியோர் காலில் அணியும் ஒன்றுக்கொன்று தொட்டாற் போல் முனைகளைக் கொண்ட உருட்டுக்கம்பி அல்லது குழல் வடிவிலான பொன் அல்லது வெள்ளி அணிகலன் வகை; Hollow anklet. *மருப்பின் தண்டை செறி மணிக் குதம்பை* (*பெரியபு.* 10, 21 : 3).

2. குதிரையின் காலடிகளைச் சுற்றிப் பொருத்தப்படும் வெள்ளி அணிகலன் வகை; A silver ornament put round the feet of horses.

**தண்டைவெட்டி** taṇṭai-veṭṭi, *n.* < *தண்டை* +.

► தண்டொட்டி (*Loc.*).

**தண்டொட்டி** taṇṭoṭṭi, *n.* < *தண்டு* + *ஒட்டி*.

காதின் துளையைப் பெரிதாக்கிய பெண்கள் அணியும் அரக்கு அடைக்கப்பட்ட பொன்னாலான குழல் வடிவக் காதணி வகை; A kind of women's ear-ornament. *வயிரத்தண்டொட்டி தந்தான்* (*விறலிவிடு.* 1116).

**தந்தப்பூண்** tanta-p-pūṇ, *n.* < *danta* +.

யானைத் தந்தத்தில் அணியும் கிம்புரி; Ferrule or metal cap on the tip of an elephant's tusk. *கிம்புரி முடி தந்தப்பூண்* (*சூடா.* 11 : 146).

**தந்தவளை** tanta-vaḷai, *n.* < id. +.

யானைக் கொம்பினால் (தந்தம்) செய்யப்பட்டதும், சங்கு வளையை விடப் பெரியதும், பளபளப்பானதும், விலையுயர்ந்ததுமான வளையல் வகை; A precious and shining bracelet made up of elephant's tusk, bigger than that of conch.

**தநிவடம்** tani-vaṭam, *n.*

► தனிவடம். *மேற்படியார் சார்த்தும் தநிவடம் ஒன்றும், முத்து முப்பத்தொன்றும் (கல். சொல். அக.).*

**தப்பளைக்கொக்கி** tappaḷai-k-kokki, *n.* < *தப்பளை* +.

அணியின் கொக்குவாய் (பூட்டு) வகை; A kind of hook in jewels.

**தபனியம்** tapaṉiyam, *n.* < *tapaniya.*

► பொன். *தபனியப்பொது (கந்தபு. 2, 30, 2: 4).*

**தம்பம்** tampam, *n.* cf. *daṃśana.*

► கவசம். *மெய்யுறை தம்பம் ... மெய் புகு கருவி (திவா. 7 : 36).*

**தம்பித்தோழன்** tampi-t-tōḻaṉ, *n.* < *தம்பி* +.

ஆண்குழந்தைகளின் இடுப்பில் கட்டும் குஞ்சாமணி; Ornament for the waist of male infants resembling the *membrum virile.*

**தமநியம்** tapaniyam, *n.* < *tapaniya.*

► பொன். *தமநியமென்பது பொன்னெனலாகும் (ஆசி.நி. 5 : 1708).*

**தமனியம்** ta-maṉiyam, *n.* < id.

► பொன். *தமனியம் வளைஇய தாவுஇல் விளங்குஇழை (மதுரைக். 704).*

**தரளத்தாமம்** taraḷa-t-tāmam, *n.* < *தரளம்* +.

► முத்துமாலை. *தரளத்தாம விஞ்சையர் (கம்பரா. 6, 36, 117 : 3-4).*

**தரளக் கட்டுவடம்** taraḷa-k-kaṭṭu-vaṭam, *n.* < id. +.

ஒத்த அளவுள்ள மணிகளைக் கோத்த முத்து மாலை வகை; A string made up of pearls of same size.

**தரளம்** taraḷam, *n.* < *tarala.*

► முத்து. *வாரித்தரள நகை செய்து (சிலப். 7 : 38).*

**தலகம்** talakam, *n.*

மகளிர் இடையில் அணியும் அணிவகை; A kind of girdle worn by women (*அணி. ஒப். ப. 70*).

**தலைக்கருவி** talai-k-karuvi, *n.* < *தலை* +.

தலையைப் பாதுகாப்பதற்காக அணியும் கவசம்; Helmet. *சீசகம் சிரகம் தலைக்கருவி (திவா. 7 : 38).*

**தலைக்கோலம்** talai-k-kōlam, *n.* < id. +.

மகளிர் தலையணி வகை; சீதேவி; A kind of head-ornament worn by women. *தலைக்கோலமாகிய முத்தும் (சீவக. 349 : 4, உரை).*

**தலைச்சாமான்** talai-c-cāmāṉ, *n.* < id. +.

இடப்பக்கம் பிறை நிலவு போலவும், வலப்பக்கம் சூரியன் போலவும் அமைந்து நடுக்கோடு வகிடுமேல் செல்லும் மகளிர் தலையணி வகை; Set of jewels consisting of a central piece lying along the parting of the hair, a left limb in the form of the crescent moon and a right limb in the form of the sun.

**தலைசாமான்** talai-cāmāṉ, *n*. < id. +.

► தலைச்சாமான் (*Colloq*.).

**தலைநகை** talai-nakai, *n*. < id. +.

► தலைச்சாமான்.

**தலைநாடா** talai-nāṭā, *n*. < id. +.

பொன் தகட்டாலானதும் நுனி இழுத்துக் கட்டுவதற்கேற்பத் துளைகள் இடப்பட்டதுமான தலைமுடியைக் கட்டும் அணிவகை; A gold band of tie hair.

**தலைப்பணி** talai-p-paṇi, *n*. < id. +.

► *தலைச்சாமான்* (*S. D*.).

**தலைப்பாளை** talai-p-pāḷai, *n*. < id. +.

தலை மயிர்ப் பிரிவின் நடுவில் மகளிரால் அணியப்படும் ஒன்பது வகை மணிகள் அழுத்திச் செய்யப்பெற்ற பொன் அணி வகை; A kind of hear-ornament for women. *சிகை நடுவில் தலைப்பாளை நான்று* (*சீவக*. 2731 : 1, *உரை*).

**தலைமணிவடம்** talai-maṇi-vaṭam, *n*. < id. +.

► செறிநிலைவடம்.

**தலையணி** talai-y-aṇi, *n*. < id. +.

► தலைச்சாமான்.

**தலையாட்டம்** talai-y-āṭṭam, *n*. < id. +.

குதிரைத் தலையணி வகை; Plume of hair on a horse's head. *துஞ்சாகிய சிவந்த தலையாட்டத்தினையும்* (*கலித்*. 96 : 9, *உரை*).

**தவளைக்கிண்கிணி** tavaḷai-k-kiṇkiṇi, *n*. < *தவளை* +.

தவளைபோல் ஒலிக்கும் கிண்கிணி கொண்ட காலணி வகை; An anklet with bells giving the sound of a frog's croak. *தத்து நீர்த் தவளைக் குரற் கிண்கிணி* (*சீவக*. 2481 : 3).

**தவளைக்குரங்கு** tavaḷai-k-kuraṅku, *n*. < id. +.

அணிகலனின் பூட்டு; A kind of clasp in chain, in jewellery (W.).

**தவளைவாய்** tavaḷai-vāy, *n*. < id. +.

நகையின் ஓர் உறுப்பு ஆகிய பூட்டு; The hosk of a jewel. இடைக்கட்டு *நாலும் தவளைவாய் நாவியில்* (*கல். சொல். அக*.).

**தளப்பம்** taḷappam, *n*. < *தளம்பு*-.

காதணி வகை; An ear-ornament. *தக்கையிட்ட காதில் தளப்பமிட்டு* (விறலிவிடு. 184).

**தளுக்கு** taḷukku, *n*. < *தளுக்கு*. [K. *talaku*.]

காதின் மேல் பகுதியில் அணியும் சிறு அணிவகை போன்றமைந்த மூக்கணி; Nose jewel, small ornament like a tack worn in the upper helix. *மூவைந்தாம் பாட்டிகண்ட மூக்குத்தளுக்கை* (விறலிவிடு. 704)

**தளை** taḷai, *n.* < *தளை*. [K. *taḷe*, M. *taḷa*.]

காற்சிலம்பு; Anklet. *ஆண்பால் மயிர் தொடர்பு சிலம்பும் தளையே* (*பிங்*. 10 : 587).

**தறுந்திரம்** taṟu-n-tiram, *n.*

► தறுத்திராணம்.

**தறுத்திராணம்** taṟu-t-tirāṇam, *n.*

► கவசம்.

**தனம்** taṉam, *n.* < *dhana*.

► பொன். *பொருளும் தனமும் ... திரவியமும் அதற்கே* (*பிங்*. 6 : 132).

**தனிப்பட்டு** taṉi-p-paṭṭu, *n.* < *தனி* +. perh. *பட்டை*.

► தனிவடம்.

**தனிவடம்** taṉi-vaṭam, *n.* < *தனி* +.

ஒற்றைச்சரமாகிய கழுத்தணி வகை; Neck chain. *சார்த்தும் தனிவடம் ஒன்றும் முத்து நாற்பத்திரண்டும்* (*கல். சொல். அக.*).

**தனுத்திரம்** taṉuttiram, *n.* < *tanu-tra*.

உடம்பைப் பாதுகாப்பதற்கு அணியும் கவசம்; Armour (W.).

**தனுவாரம்** taṉu-vāram, *n.* < *tanu* + *vāra*.

போர்க்கவசம், Armour (*யாழ். அக.*).

## தா

**தாங்கி** tāṅki, *n.* < *தாங்கு-*.

► கிம்புரி, 1. *கோளகை தாங்கி ... பூணின் பெயர்எனப் போற்றல் வேண்டும்* (*திவா*. 7 : 95).

**தாடங்கம்** tāṭaṅkam, *n.* < *tāṭaṅka*.

பெண்கள் காதிலணியும் தோடு; Women's ear-ornament. *தோடு தாடங்கம்* (*திவா*. 7 : 83).

**தாதணிவளையம்** tātaṇi-vaḷaiyam, *n.* Prob. *தாது* + *அணி* +.

விரலணி வகை, A kind of finger ring. *தலைவிரற்சுற்றுந் தாதணி வளையம்* (*பெருங்*. 2, 19 : 180).

**தாமம்** tāmam, *n.* < *dāman*.

1. மணிகளாலான சரம்; மணிமாலை; Necklace of beads, string as of pearls. *முத்துத் தாம முறையொடு நாற்றுமின்* (*மணி*. 1 : 49).

2. பதினெட்டு முத்துக் கோவைகள் கொண்ட மகளிர் இடையணி; Woman's waist ornament of 16 or 18 strings of pearls (W.).

3. முடியுறுப்புகள் ஐந்தனுள் ஒன்று; One of the five ornamental part of a crown. *தாமம் முகுடம் பதுமம் ... முடியுறுப்பு* (*திவா*. 7 : 82).

**தாமரைக்கொட்டை** tāmarai-k-koṭṭai, *n.* < *தாமரை*+.

மகளிர் தலையணி வகை; A head-ornament worn by women (*Loc.*).

**தாமரைமணி** tāmarai-maṇi, *n.* < id. +.

தாமரைக் கொட்டையாலான மாலை; A rosary of Lotus-seeds. *துளசி தாமரைமணி தோண்மேல்* (*பிரபோத*. 11, 11).

**தாமரைவிதை மாலை** tāmarai-vitai-mālai, *n.* < id. +.

பைராகி இனத்தவர் அணியும் தாமரைமணி மாலை; A string of lotus beads (E. T.).

**தாய்க்கடுக்கன்** tāy-k-kaṭukkaṉ, *n.* < *தாய்* +.

காதணி வகை; A kind of ear-ornament (W.).

**தாயத்து** tāyattu, *n.* < U. *tā 'it.*

► தாயித்து.

**தாயித்து** tāyittu, *n.* < id. [T. *tāuitu.*]

1. மந்திரவாதி, பூசாரி போன்றவரால் மந்திரிக்கப்பட்ட பொருள் உள்ளிடப்பட்டதும் தீமை, நோய், துரதிர்ஷ்டம் முதலியவை விலகும் என்னும் நம்பிக்கையில் கழுத்து, கை அல்லது இடுப்பில் அணியப்படுவதுமான நீள் உருண்டை வடிவிலான குழல்; Small gold or silver case worn on the person as amulet; cylindrical talisman.

2. அணிகலன்வகை; An ornament (*Loc.*).

**தார்** tār, *n.* cf. *dhr.*

1. குதிரையின் கழுத்தில் அணியப்படும் கிண்கிணி மாலை; String of bells for a horse. *தார் மணி அன்ன ஒண் பூக்கொழுதி* (குறுந். 243 : 2)

2. ► சங்கிலி, 1 (*மதுரைத். அக.*).

**தார்மணி** tār-maṇi, *n.* < *தார்* +.

► தார், 1 (*யாழ். அக.*).

**தாரகைக்கோவை** tārakai-k-kōvai, *n.* < *தாரகை* +.

ஏகாவலி என்னும் ஒற்றைச்சரக் கழுத்தணி; A single stringed necklace. *தாரகைக் கோவையுஞ் சந்தின் குழம்பும்* (*சிலப்*. 13 : 19).

**தாரகைச்சும்மை** tārakai-c-cummai, *n.* < id. +.

நட்சத்திரத் தொகுதி போன்று முத்துகளாலான அணிகலன்; A group of jewels studded with pearls. *மேகலையும் தாழத் தாரகைச் சும்மை பூட்டித்* (*கம்பரா*. 1, 21, 13 : 2).

**தாரகைச்சுமை** tārakai-c-cumai, *n.*

► தாரகைச்சும்மை. *பாரத்தாரகைச் சுமையும் பூட்டி* (*கம்பரா*. 1, 21, 13 : 2).

**தாரம்** tāram, *n.* < *tāra.*

1. ► வெள்ளி. *தாரம் களதௌதம் வெள்ளி* (*திவா*. 6 : 20).

2. ► முத்து (*யாழ். அக.*).

**தாலி** tāli, *n.* [T. K. M. Tu. *tāli.*]

1. திருமணத்திற்கு அடையாளமாக மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவிக்கும் மஞ்சள் கயிறு அல்லது பொற்சங்கிலியுடன் கோக்கப்பட்ட மங்கல அணி; *Tāli*, central piece of a neck ornament solemnly tied by the bridegroom around the bride's neck as marriage-badge. *தாலி ... நல்லார் கழுத்தணிந்து* (*சீவக*. 2697 : 1).

2. ► ஐம்படைத்தாலி. *தாலி களைந்தன்று மிலனே* (புறநா. 77 : 7).

3. தீய சக்திகளிடம் இருந்து காக்கும் எனும் நம்பிக்கையில் சிறுவர் கழுத்திலணியும் புலிப்பல் கோக்கப்பட்ட அணி; Amulet tied on a child's neck. *புலிப்பற்றாலிப் புன்றலைச் சிறாஅர்* (புறநா. 374 : 9).

4. ► ஆமைத்தாலி.

**தாலிக்கயிறு** tāli-k-kayiṟu, *n.* < *தாலி* +.

தாலி கோப்பதற்கான கயிறு; மாங்கலியச் சரடு; Twisted thread on which is hung the *tāli* (*Colloq.*).

**தாலிக்காறை** tāli-k-kāṟai, *n.* < id. +.

பொற்பட்டையாலான உட்கழுத்தணியில் கோக்கப்பட்ட தாலி; The marriage badge attached to a flat inner necklace.

**தாலிக்கொடி** tāli-k-koṭi, *n.* < id. +.

பின்னல் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் தாலி கோப்பதற்கான பொற்சரடு; Braided gold chain of the *maṅgalya* (*Colloq.*).

**தாலிக்கொழுந்து** tāli-k-koḻuntu, *n.* < id. +.

1. ► ஆமைத்தாலி (*திவ். பெரியாழ்.* 2, 6, 1, *வ்யா.*).

2. பனை மரத்தின் வெண்மையான குருத்தோலையில் செய்த அணிகலன்; A necklace worn by boys as play which is made up of palm leaves. *தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு* (*திவ். பெரியாழ்.* 2, 6, 1 : 2).

**தாலிக்கோவை** tāli-k-kōvai, *n.* < id. +.

தாலியுடன் கோப்பதற்கான பல்வகை உருக்கள்; String of beads to which the wedding badge is attached (W.).

**தாலிச்சரடு** tāli-c-caraṭu, *n.* < id. +.

► தாலிக்கொடி.

**தாலிப்பொட்டு** tāli-p-poṭṭu, *n.* < id. +.

தாலிச் சங்கிலியில் அல்லது கயிற்றில் கோக்கப்படும் வட்டமான தகடு போன்ற மங்கல உரு; Disc-shaped *tāli*.

**தாலிமணிவடம்** tāli-maṇi-vaṭam, *n.* < id. +.

தாலியோடு மணிகள் சேர்ந்த மாங்கலியக் கொடி; String of beads to which the *tāli* is attached. *தாலிமணிவடம் ஒன்று* (S.I.I. ii, 171).

**தாலியுரு** tāli-y-uru, *n.* < id. +.

1. தாலியுடன் கோக்கப்படும் பலவித உருக்கள்; Beads of different forms attached to the *tāli*.

2. தாலி மட்டும் இணைக்கப்பட்ட வடம்; Chain containing the *tāli*.

**தாலியைம்படை** tāli-y-aimpaṭai, *n.* < id. +.

► ஐம்படைத்தாலி. *தாலியைம்படை தழுவுமார்பிடை* (கம்பரா. 1, 2, 58 : 1).

**தாலுகா** tāluka, *n.* < U. *talq.*

► கர்ணப்பூ (*Loc.*).

**தாவடம்** tāvaṭam, *n.* < *தாழ்-* + *வடம்.* [T. *tāvaḍamn.*]

1. ► உருத்திராக்கப்பணி.

2. கழுத்தில் அணியும் மாலை; Necklace. *தழை உடுத்துக் குன்றி மணித் தாவடத்தைப் பூண்டு* (*அரிச். வெண்.* 119).

**தாழ்** tāḷ, *n.* [K. tāḷ.]

விரலணி வகை; A kind of ring. *சிறுதாழ் செறித்த மெல்விரல்* (*நற்.* 120 : 4).

**தாழ்வு** tāḷvu, *n.* < *தாழ்-.*

► தொங்கல், 1 (*W.*).

**தாழ்த்து** tāḷttu, *n.*

► தாயித்து (*Loc.*).

**தாழ்வடம்** tāḷ-vaṭam, *n.* prob. *தாழ்* +. [M. *tāḷvaṭam.*]

1. கழுத்தின் அடியில் அணிகலன்களின் கீழ் அணியப்படும் முத்து அல்லது மணிகளாலான நீண்ட பொற்சரடு; Necklace of pearls or beads, long chain. *தாவு இல் தாழ்வடம் தயங்க* (*சீவக.* 2426 : 1).

2. ► உருத்திராக்க மாலை. *மார்பின்மீதிலே தாழ்வடங்கள் மனதிலே கரவடமாம்* (*தண்டலை. சத.* 29).

**தாழக்கூட்டுக் கம்பி** tāḷa-k-kūṭṭu-k-kampi, *n.* < *தாழ்-.*

வளைய வடிவில் வேலைப்பாடமைந்ததாகச் செய்யப்பெற்றுத் திருமேனிகட்கு ஆணியிட்டுப் பொருத்தும் காதணி வகை; An ear-ornament for deities (*கல். சொல். அக.*).

**தாழம்பூ** tāḷam-pū, *n.* < *தாழை* +.

நடுவே அகன்றும் இரு புறமும் நுனிகள் சிறுத்தும் தாழம்பூ மடல் வடிவமாகச் செய்யப்பட்ட மகளிர் தலையணி; Woman's hair-ornament in the shape of the bract of the screw-pine.

**தாழிவில்லை** tāḷi-villai, *n.*

சடைவில்லை வகை; A kind of hair-ornament. *வரதப்பனொடு தாழிவில்லை போட்டான்* (*விறலிவிடு.* 1128).

**தாள்** tāḷ, *n.*

► தாள்செறி. *தகையவர் கைச் செறித்த தாள் போல* (*கலித்.* 43 : 98).

**தாள்செறி** tāḷ-ceṟi, *n.* < *தாள்* +.

மோதிர வகை; A kind of ring. *வில் வயிரத்து மரகதத் தாள் செறி காந்தள் மெல் விரல் கரப்ப அணிந்து* (*சிலப்.* 6 : 97-98).

**தாளம்பூ** tāḷam-pū, *n.*

► தாழம்பூ.

**தாளிம்பம்** tāḷimpam, *n.*

முன்நெற்றியில் அணியப்படும் அணிவகை; Ornament worn on forehead. *தாளிம்பத்து ஆமநுதல் சேர்த்தி* (*ஆதியுலா*, 121).

**தாளுருவி** tāḷ-uruvi, *n.* < *தாள்* +.

காதின் துளையைப் பெரிதாக்கிய பின் அணியும் ஒருவகைக் காதணி; Small ear-ornament. *தாளுருவி என்னும் அணிகலன் அசையா நின்ற காதினையும்* (பெரும்பாண். 161, உரை).

**தானைத்திருப்பட்டிகை** tāṉai-t-tiru-p-paṭṭikai, *n.* < *தானை* +.

தெய்வ உருவங்களின் அரையாடை மேல் அணிவிக்கப்படும் அணிகலன் வகை; Girdle for the idols. *உடையார்க்குச் செய்த தானைத் திருப்பட்டிகை* (கல். சொல். அக.).

**தானைத்தூக்கம்** tāṉai-t-tūkkam, *n.* < id. +.

திருப்பட்டிகையணியின் உறுப்பினுள் ஒன்று; A pendant in *tiruppaṭṭikai*. *தானைத் தூக்கம் பின்னுக் கோவைத் தலையில்* (கல். சொல். அக.).

## தி

**திரட்சி** tiraṭci, *n.*< *திரள்-*.

► முத்து. *தரளம் திரட்சி ஆகவும் சாற்றுவர்* (*திவா*. 6 : 10).

**திரணை** tiraṇai, *n.* < id.

► சுட்டி, 1. *பாற்படு முத்தின் பனிச்சுடர்த் திரணை சாத்தி* (*பெரியபு*. 28, 1215 : 3).

**திரவியம்** tiraviyam, *n.* < *dravya*.

► பொன். *திரவியம் வேங்கை ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**திரள்மணிவடம்** tiraḷ-maṇi-vaṭam, *n.* < *திரள்-* +.

திரட்சியான வடிவில் இரத்தினங்கள் வைத்திழைக்கப்பட்ட உருத்திராக்கமாலை; A kind of necklace. *நம்பி ஆரூரனார்க்கு குடுத்தன திரன்மணிவடம் ஒன்று* (S.I.I. ii, 32).

**திராணம்** tirāṇam, *n.* < *trāṇa*.

► கவசம். *தலைத் திராணமும் வீரப்புட்டிலும் புனைந்து* (வ. த. அக.).

**திரிசரம்** tiri-caram, *n.* < *tri-sara*.

மூன்று சரங்களையுடைய மகளிர் கழுத்தணி வகை; Three stringed necklace. *ஸ்ப்தசரம் என்றாப்போல சொல்லுகிற ... முத்துவடங்களையும்* (*திவ். அமலனாதி*. 10 வ்யா. ப. 10).

**திரிசரவடம்** tiri-cara-vaṭam, *n.* < *tri-sara* +.

► திரிசரம்.

**திரிசரி** tiri-cari, *n.* < *tri* +.

முகப்பில் உயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்ற மூன்று வளையங்களையுடைய காதணிவகை; An earing with three circular bonds and inlaid with gems on its front piece.

**திரிவேணி** tirivēṇi, *n.* < id. +.

► திரிசரம்.

**திரு** tiru, *n*. Prob. *śrī*.[T. K. M. *tiru*.]

1. ► மாங்கலியம். *திருவொன்றுட் படப் பட்டைக்காறை* (S.I.I. ii, 157).
2. ► சீதேவி. *திரு அணிந்த ஒள் நுதல் மாதர் திறத்து* (*கார். நாற்.* 34 : 3).

**திருஅடையாளமாலை** tiru-aṭaiyāḷa-mālai, *n*. < *திரு* +.

► உருத்திராக்க மாலை. *திரு அடையாளமாலை எவ் உலகோடும் ஏத்தத் தொழுது தாம் எடுத்துப் பூண்டார்* (*பெரியபு.* 28, 1216 : 3).

**திருக்கண்டநாண்** tiru-k-kaṇṭa-nāṇ, *n*. < id. +.

► கண்டநாண். *மருவு திருக் கண்டநாண் மார்பினில் ஐம்படை* (*பெரியபு.* 36, 21 : 2).

**திருக்கண் வேர்வாளி** tiru-k-kaṇ-vēr-vāḷi, *n*. < id. +.

அணிகலன் வகை; A kind of ornament. *திருக்கண் வேர்வாளி இரண்டு நால் கழஞ்சு பொன்* (*கல். சொல். அக.*).

**திருக்கவம்** tiru-k-kavam, *n*. < id. +.

தலையணி வகை; A kind of head ornament.

**திருக்காப்பு** tiru-k-kāppu, *n*. < id. +.

கங்கணம்; Bracelet. *திருக் காப்பு அணி அம் கை ஏந்தி* (*வில்லி.* 1, 5, 95 : 2).

**திருக்கு** tirukku, *n*. < *திருகு-* +.

அணியில் காணப்படும் திருகுவகை; Tiny Screw in jewels. *தேவாங்கும் மகரவாளியும் வயிர வல்லியும் திருக்கும் ஆக்கி* (*அரிச். வெண். உ. பா.* 22).

**திருக்கைச்சிறப்பு** tiru-k-kai-c-ciṟappu, *n*. < *திரு* + *கை* +.

ஏனாதிப்பட்டத்திற்கு அறிகுறியாக அளிக்கும் மோதிரம்; Signet-ring given as badge of the tittle *ēṉāti*. *அருளொடுந் திருக்கைச் சிறப்புமிட்டுப் போவென்று விடைகொடுப்ப* (*திருவாலவா.* 39, 4 : 3).

**திருகணி** tirukaṇi, *n*. < *திருகு-* +.

► திருகாணி (J.).

**திருகாணி** tirukāṇi, *n*. < id. +. [K. *tiru-gāṇi*.]

1. தோடு, மூக்குத்தி போன்றவற்றில் திருகி உட்செலுத்தும் சிறுகம்பி போன்ற ஆணி; திருகுமரை; Screw in ornaments (J.).
2. பெண்கள் காதிலும் மூக்கிலும் அணியும் ஓரணி வகை; Small ornament like a tack, worn by girls and women in the upper helix of the ear or in the nostril.

**திருகாணிக்குழாய்** tirukāṇi-k-kuḻāy, *n*. < *திருகாணி* +.

► திருகாணி, 1.

**திருகினி** tirukiṉi, *n*.

மாட்டுக் கொம்புக்குப் போடும் பூண்; Metal cap for the horns of cows oxen (*W. D.*).

**திருகு** tiruku, *n*. < *திருகு-*.

அணியின் திருகுமரை; Thread of a screw.

**திருகுகம்மல்** tiruku-kammal, *n.* < *திருகு* +.

திருகுடன் அமைந்த மகளிர் காதணி வகை; A kind of ear-ornament for women fastened with a screw.

**திருகுதம்பைத் தகடு** tiru-kutampai-t-takaṭu, *n.* < *திரு* +.

விக்கிரகங்களின் காதிற்கு ஒப்பனை செய்வதற்காக அணிவிக்கப்படும் காது போன்ற பொன்னாலான தகடு; A kind of ear stud. *திருகுதம்பைத் தகடு இரண்டு பொன் மஞ்சாடியுள் குன்றி* (S.I.I. ii, 43).

**திருகுப்பூ** tiruku-p-pū, *n.* < *திருகு* +. [T. *tirugud upuvvu*, K. *tirupu*.]

செவந்திப்பூ உருவிலமைந்த சடைவில்லை வகை; Women's hair-ornament in the shape of a *chrysanthemum*.

**திருகுமரை** tiruku-marai, *n.* < id. +.

1. திருகு முதலியவற்றில் அமைந்த உட்செலுத்தும் அமைப்பு; Thread of a screw.
2. திருகாணி; Screw, as in ornaments.
3. திருகாணியின் தலை; Nut for securing bolt (*Loc.*).

**திருகுவில்லை** tiruku-villai, *n.* < *திருகு*- +.

► திருகுப்பூ (*Colloq.*).

**திருநயனம்** tiru-nayaṉam, *n.* < *திரு* +.

கோயில் மூர்த்திக்கு அணிவிக்கும் வெள்ளி அல்லது பொன்னாலான திருக் கண்மலர்; Eye made of silver or gold for a deity (S.I.I. ii, 409).

**திருநீற்றுப் பத்திரி** tiru-nīṟṟu-p-pattiri, *n.* < *திரு நீறு* +.

பதக்கம் போன்ற வடிவில் செய்யப்பட்ட தாலியுருக்களுள் ஒன்று; A pendant in the *tāli* cord. *தாலிச்சரட்டிலே திருநீற்றுப்பத்திரியேனும் அலரிப்பூவேனும் அணிந்தவர்கள்* (எங்களூர், 24).

**திருநெற்றித்திறணை** tiru-neṟṟi-t-tiṟaṇai, *n.* < *திரு* +.

விக்கிரகத்தின் நெற்றியில் சாத்தப்படும் ஓர் அணி; An ornament for the forehead of a deity. *திருநெற்றித்திறணை ஒன்றினால் 8½ மணி பொன் ஐங்கழஞ்சே* (கல். சொல். அக.).

**திருப்பூட்டு** tiru-p-pūṭṭu, *n.* < id. +.

► தாலி, 1 (W.).

**திருமகரம்** tiru-makaram, *n.* < id. +.

► மகரக்குழை. *ஸ்ரீபதஞ்சலிதேவர் திருமேனி இவர்க்குக் குடுத்தன திருமகரம் ஓரணையிற் நாற் பொன் கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடி* (கல். சொல். அக.).

**திருமங்கல்யம்** tiru-maṅkalyam, *n.* < id. +.

► தாலி, 1. *சந்திரமதியுடன் பிறந்த அற்புதமான திருமங்கல்யத்தை* (அரிச். வெண். உ. பா. 26).

**திருமங்கலியம்** tiru-maṅkaliyam, *n.* < id. +.

► திருமங்கிலியம்.

**திருமங்கிலியம்** tiru-maṅkiliyam, *n.* < id. +.

► தாலி, 1. *பெண்கள் திருமங்கிலியத்திலிடும் (இராமநா. பாலகா.* 20.).

**திருமணித்தாவடம்** tiru-maṇi-t-tāvaṭam, *n.* < id. +.

துளசிமணி, தாமிரமணி இரண்டும் சேர்த்துச் செய்ததும் தாழ்வாகத் தொங்கும் படி கழுத்தில் அணிவதுமான மாலை; A long string made up of *thulasi* and lotus beads.

**திருமேனி** tiru-mēṉi, *n.* < id. +.

பெண்கள் காதணி; Women's ear-ornament (W.).

**திருமேனிக்கடுக்கன்** tiru-mēṉi-k-kaṭukkaṉ, *n.* < *திருமேனி* +.

கைம்பெண்கள் அணியும் காதணி வகை; An ear-ornament worn by widows (*யாழ். அக.*).

**திருவடிக்காறை** tiru-v-aṭi-k-kāṟai, *n.* < *திருவடி* +.

தெய்வத்திருமேனிகளுக்கு அணிவிக்கப்பெறும் காலணிகலன் வகை; Anklet of an idol (S.I.I. ii, 144).

**திருவாழி** tiru-v-āḻi, *n.* < id. +.

► கணையாழி. *திருமுகத்தையும் திருவாழியையும் தந்தருளென்று கூற (சீவக.* 1032 : 2-3, *உரை*).

**திருவுழுத்து** tiru-v-uḻuttu, *n.* < id. +.

அணிவகை; An ornament. *இரட்டைத் திருவுழுத்து ஒரணையினால்* (S.I.I. ii, 16).

**திருவுறுப்பு** tiru-v-uṟuppu, *n.* < id. +.

மகளிர் நெற்றியில் அணியும் சீதேவி என்னும் அணிவகை; *Cītēvi*, a gold ornament worn by women on the forehead. *திருவுறுப்பும் உத்தி ஆகும் (பிங்.* 10 : 164).

**திருவேடம்** tiru-vēṭam, *n.* < id. + *vēṣa.*

சைவ மடங்களிலுள்ள துறவிகள் அணியும் காதணி வகை; Ear-rings worn by the *Śaivite* ascetics in mutts (W.).

**திலகம்** tilakam, *n.* < *tilaka.*

1. யானையின் நெற்றிப்பட்டம்; Frontlet for elephants. *ஒள் நுதல் யாத்த திலக அவிர் ஓடை* (*கலித்.* 97 : 11).

2. நெற்றிப்பொட்டு; *Tilka,* a small circular mark on forehead. *திலகந் தைஇய ... திருநுதல் (நற்.* 62 : 6).

**திலதம்** tilatam, *n.*

► திலகம், 2. *திலதஞ் சுடருந் திருமதி வாண்முகம்* (பெருங். 3, 5 : 23).

## து

**துகிர்** tukir, *n.* [T. K. Tu. *togaru.*]

► பவளம். *பொன்னுந் துகிரு முத்தும் (புறநா.* 218 : 1).

**துடக்கு** tuṭakku, *n.*

► தூக்கம், 2. *மதலிகை தூக்கம் துடக்கு வடிவே (திவா.* 7 : 66).

**துணி** tuni, *n.* < *துணி-*. [M. *tuṇi.*]

தொங்கல்; Pendant. *துணி சிதார் ஆம்* (*சூடா.* 7 : 75).

**துணைத் தலைமணிவடம்** tuṇai-t-talai-maṇi-vaṭam, *n.*

பெரியதும் சிறியதுமான முத்துகள் மாறிமாறி கோக்கப்பட்ட மாலை வகை; A string of pearls in which bigger and smaller pearls are stringed alternatively.

**துத்தரிப்பு** tuttarippu, *n.*

அட்டிகைப் பதக்கத்தின் மேலுறுப்பு வகை; An upper part of *patakkam* in *aṭṭikai* (*Loc.*).

**துத்திப்பூக்கிளாவர்** tutti-p-pū-k-kiḷāvar, *n.* < *துத்தி* +.

மூவிலை வடிவத்தில் அமைந்த காதணி; A women's ear-ornament in the shape of clove sign of playing cards.

**துத்திப்பூமோதிரம்** tutti-p-pū-mōtiram, *n.* < id. +.

துத்திப்பூ வடிவிலமைந்த விரல் மோதிரம்; Finger-ring designed after the tutti flower.

**துத்துக்கம்மல்** tuttu-k-kammal, *n.* < T. *duddu* +.

பெண்கள் அணியும் காதணி வகை, An ear-ornament worn by women (*Loc.*).

**துத்துரு** tutturu, *n.* [T. *duddu.*]

தாமரைப் பூவில் அமைந்துள்ள கொட்டையைப் போன்ற அணிவகை; An ornament like the pericarp of a lotus. *துத்துருவொன்றில் தடவிக்கட்டின பளிங்கு ஒன்றும்* (S.I.I. ii, 179).

**துப்பு** tuppu, *n.*

► பவளம். *அத்தச் செயலைத் துப்பு உறழ் ஒண் தளிர்* (*ஐங்குறு.* 28 : 3).

**தும்பிப்பதக்கம்** tumpi-p-patakkam, *n.* < *தும்பி* +.

வண்டின் வடிவில் செய்யப்பட்ட பதக்கம்; *Beetle*-shaped pendant of a necklace. *தும்பிப் பதக்கவிலை சொற்பமோ* (*விறலிவிடு.* 698).

**தும்பு** tumpu, *n.*

1. வல்லம்பர், நாட்டுக்கோட்டைச் செட்டியார் இனப் பெண்டிர் அணியும் ஒருவகைத் தாலியுரு; Small globular pendant suspended from the *tāli* of *vallampar* and *Nattukkottai chetti* women.

2. ► தோடு, 2. *தும்பு என்ப சிம்பு தோடு ஆம்* (*சூடா.* 11 : 138).

**தும்பைமணி** tumpai-maṇi, *n.* Perh. *தும்பை* +.

மறவ மகளிரில் ஒரு பிரிவினர் அணியும் தாலி வகை; A kind of *tāli* worn by women of certain *maṟava* sub-caste (G. Tn. D. I, 136).

**துராய்** turāy, *n.* < U. *turā.*

முத்து முதலியவற்றால் அமைக்கப்பட்ட தலையணி வகை; An ornament for the head made of pearls, etc. *தலைக்குச் சூட்டவொரு முத்துத்துராய் ஈந்தான்* (*விறலிவிடு.* 915).

**துலாகோடி** tulā-kōṭi, *n.* < *துலா* +.

மகளிர் காலணிகலன் வகை; A food-ornament of women (*யாழ். அக.*).

**துவர்** tuvar, *n.* cf. *துகிர்.* [K. *togar.*]

► பவளம். *பால் ஆர் துவர் வாய்ப் பைம்பூட் புதல்வன் (நற்.* 269 : 2).

**துவரைமல்லிக் கிரீடம்** tuvarai-malli-k-kirīṭam, *n.* < *துவரை* +.

துவரம் பருப்பையும் மல்லிகைப் பூவையும் அடுத்தடுத்து நெருக்கி வைத்தது போன்று பட்டை தீட்டாத வைரத்தில் செய்த மகுடம்; A variety of diamond crown.

**துளசிமணி** tuḷaci-maṇi, *n.* < *tulasī* +.

துளசிச்செடியின் தண்டினால் செய்யப்படும் மணி; Beads made of *tulaci*, worn by vaisnava devotees.

## தூ

**தூக்கணம்** tūkkaṇam, *n.* < *தூக்கு-.*

► தொங்கல் (W.).

**தூக்கம்** tūkkam, *n.* < *தூங்கு-.* [T. *tūgu.*]

1. பண்டைய அணிவகை; An ornament of ancient times (S.I.I. ii, 86).

2. அணிகலன்களில் அமைந்துள்ள தொங்கல்; Pendants in jewels. *தொங்கலும் உத்தியும் அவற்றின் தூக்கம் (திவா.* 7 : 65).

3. காதணி வகை; A kind of ear-ornament (*யாழ். அக.*) .

**தூக்கு** tūkku, *n.* < id. +. [T. *tūgu, tūku,* M. *tūkku.*]

► தூக்கம், 2. *சல்லியுந் தூக்குமாக விட்ட முத்தமாலை (சீவக.* 1170 : 1, *உரை).*

**தூக்கு மூக்குத்தி** tūkku-mūkkutti, *n.* < *தூக்கு* +.

மூக்குத்தி வகை; A kind of nose ornament. *தூக்குமூக்குத்தி தூங்காக் குமிழையு நின் மூக்குக்குவமை சொன்னால் முத்தமிழோர்க் கொவ்வாதே (கூளப்ப.)*

**தூங்கணம்** tūṅkaṇam, *n.* < *தூங்கு-.*

► தொங்கல், 1.

**தூங்கணி** tūṅkaṇi, *n.* < id. + *அணி.*

கற்கள் பதிக்கப்பட்ட பொன்னாலான சிறுகோளவடிவத் தொங்கலணி வகை; Jewel formed of hanging globules of gold and precious stones (W.).

**தூங்கல்** tūṅkal, *n.* < id. [M. *tūṅṅal.*]

► தொங்கல், 1.

## தெ

**தெய்வப்பூண்** teyva-p-pūṇ, *n.* < *daiva* +.

► திருமாங்கலியம். *அவுணர் தம் மகளிர் தெய்வப் பூணொடு குழைகள் வாங்க (வில்லி.* 3, 2, 145 : 1-2).

**தெய்வமணி** teyva-maṇi, *n.* < id. +.

விரும்பிய அனைத்துங் கொடுக்கவல்ல தெய்வமணி; A mythical gem believed to yield to its possessor everything that is desired.

**தெய்வவுத்தி** teyva-v-utti, *n*. < id. +.
சீதேவி என்னும் தலைக்கோல அணிவகை; Women's head-ornament. *தெய்வவுத்தியோடு வலம்புரி வயின்வைத்து* (*திருமுரு*. 23).

**தெழ்கு** teḻku, *n*. Prob. *தெழி*-. [T. *tĕgā*.]
இடை அணி வகை; A kind of waist-ornament. *இடைவிரவிக்கோத்த வெழில் தெழ்கினோடும்* (*திவ். பெரியாழ்*. 1, 4, 2 : 2).

**தென்பல்லி** teṉ-palli, *n*. < *தென்* +.
புல்லகம் என்ற தலையணியின் உறுப்பு இரண்டனுள் இடதுபுறமாக அணியும் அணிவகை; One of the two sections of the ornament *pullakam*. *தென்பல்லி வடபல்லி என்னும் இவையும் ... ஒன்றாக தலைக்கோலத்தை* (*சிலப்*. 6 : 107, *அடியார்*.).

## தே

**தேசிகம்** tēcikam, *n*. < *tējas*.
► பொன். *நிதானம் தேசிகம் ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**தேவச்சந்தம்** tēva-c-cantam, *n*.
நூறு சரமுள்ள முத்தாரம்; A garland of hundred strings of pearls (*யாழ். அக*.).

**தேள்தண்டட்டி** tēḷ-taṇṭaṭṭi, *n*. < *தேள்* +.
புறக்காதில் உருக்குமணி அணிக்கு மேலிடத்தில் மகளிர் அணியும் காதணி வகை; A kind of ear-ring, worn by women above the *urukkumaṇi* (*Parav*.).

## தொ

**தொங்கட்டம்** toṅkaṭṭam, *n*. < *தொங்கு*-.
► தொங்கட்டான் (*Loc*.).

**தொங்கட்டான்** toṅkaṭṭāṉ, *n*. < id.
காதில் தோட்டோடு சேர்த்துத் தொங்கவிடும் அணிவகை; லோலக்கு; Ornament attached to and suspended from the ear stud (J.).

**தொங்கணி** toṅkaṇi, *n*. < id. +.
► தொங்கட்டான் (W.).

**தொங்கல்** toṅkal, *n*. < id.
1. அணிகலன்களில் பொருந்தும்படி அமைந்துள்ள பதக்க உறுப்பு; Pendant part of an ornament. *தொங்கலும் உத்தியும் அவற்றின் தூக்கம்* (*திவா*. 7 : 65).
2. ► தொங்கட்டான் (*யாழ். அக*.).
3. அணிகலனின் கடைப்பூட்டு; Clasp of an ornament (*யாழ். அக*.).

**தொங்கல்விட்டம்** toṅkal-viṭṭam, *n*. < *தொங்கல்* +.
அலங்காரக் குஞ்சம்; Decorative hangings (*Loc*.).

**தொடக்கு** toṭakku, *n.* < *தொடக்கு-*.

1. கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி; Gold chain with joints worn on neck. *தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும் (சிலப். 15 : 211).*

2. ► குஞ்சம். *தொடக்கொடு தூக்கி (சீவக. 1343 : 3).*

**தொடர்** toṭar, *n.* < *தொடர்-*. [K. *toḍar*, M. *toṭar*.]

► சங்கிலி, 2. *முத்தணி வடமும் சித்திர உத்தியும் நாணும் தொடரும் (பெருங். 2, 19 : 120).*

**தொடலை** toṭalai, *n.* < *தொடு-*.

மணிக்கோவைகளால் தொடுக்கப்பட்ட மேகலை; Jewelled girdle. *தொடலை அல்குல் தொடித்தோள் மகளிர் (புறநா. 339 : 6).*

**தொடி** toṭi, *n.* < id.

1. கைவளை; Bracelet. *நெடு மென் ... தொடி ... நும்மின் ஆகும் (குறுந். 185 : 2).*

2. மகளிர் தோளை அடுத்துள்ள கைப்பகுதியில் அணிந்துகொள்ளும் பிடிப்பான தோளணி வகை; A kind of armlet. *தொடி விளக்கு இறைய தோள் (குறுந். 367 : 2).*

3. படைவீரர்கள் அணியும் தோளணி வகை; வீரவளை; Warrior's armlet. *கழல் தொடி சேய் குன்றம் (குறுந். 1 : 3).*

4. ► காப்பு, 2. *பொலந் தொடிப் புதல்வனும் பொய்தல கற்றனன் (நற். 166 : 7).*

5. [T. *toḍi.*] யானையின் தந்தத்தில் அணிவிக்கப்படும் அணிவகை; பூண்; Ring, ferrule, ornamental knob of an elephant's tusk. *கடி மதில் கதவம் பாய்தலின் தொடி பிளந்து (அகநா. 24 : 11).*

**தொடுக்கம்** toṭukkam, *n.* < id.

► பொன். *மாடை-தொடுக்கம் ... பொன் எனப்படுமே (திவா. 6 : 1).*

**தொடுப்பு** toṭuppu, *n.* < id.

► தொடர் *(யாழ். அக.).*

**தொடை** toṭai, *n.* < id.

► வடம், 1. *முத்துத்தொடை (பரிபா. 6 : 16).*

**தொண்டு** toṇṭu, *n.*

அணிகலன் வகை; An ornament. *பச்சைமணித் தொண்டு கட்டியே (குருகூர்ப். 6).*

**தொந்தி** tonti, *n.* < *tundi.*

பரவமகளிர் கையில் அணியும் காப்பு; Bracelet of women in parava caste (*Parav.*).

**தொப்பாரம்** toppāram, *n.* < T. *tapāramu.*

மணிமகுடம்; வைரமுடி; Crown. *குற்றுடை வாளுங் கட்டிக் குலவு தொப்பாரம் கட்டி (திருவாலவா. 4, 12 : 2).*

**தொய்யகம்** toy-y-akam, *n.* prob. *தொய்-* +.

தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு; தலைப்பாளை; A part of a head ornament. *தொய்யகம் தாழ்ந்த கதுப்பு (கலித். 28 : 5).*

**தொய்யில்** toyyil, *n.*

► காதணி. *குழையும் ... தொய்யில் கிளவி (திவா. 11 : 314).*

**தொழிற்பட்டிகை** toḻiṟ-paṭṭikai, *n.* < *தொழில்* +.
மகளிர் இடையில் அணியும் மேகலை வகை; A kind of woman's girdle (S.I.I. ii, 16).

## தோ

**தோக்கை** tōkkai, *n.*
► தொங்கல், 1. *நீள் தாழ்பு தோக்கை நித்தில அரிச் சிலம்பு* (*பரிபா.* 22 : 49).

**தோட்காப்பு** tōṭ-kāppu, *n.* < *தோள்* +.
► தோள்வளை.

**தோட்சுடிகை** tōṭ-cuṭikai, *n.* < id. +.
► தோள்வளை.

**தோட்டி** tōṭṭi, *n.* cf. *tōtra*.
தலைக்கோல அணி வகை; A part of the head ornament. *தொய்யகத் தோட்டி* (*கலித்.* 97 : 13).

**தோடா** tōṭā, *n.* < U. *tōrā*.
1. கையணி வகை; An armlet.
2. கல்வித்திறமைக்குப் பரிசிலாகத்தரப் பெறும் பொற்கங்கணம்; பொற்காப்பு; Gold bracelet, as a reward of merit.

**தோடு** tōṭu, *n.* perh. *தொடு*-.
1. காதில் அணியும் வகையில் அமைக்கப்பட்ட ஓலைச்சுருள், காதோலைச் சுருள்; Ola roll worn in the perforation of the ear. *விண்டலர்ந் தொருபுடை தோடு மின்செய* (*சீவக.* 1009 : 2).
2. பெண்கள் அணியும் வைரம் முதலிய கற்கள் பதிக்கப்பட்ட வட்ட வடிவக் காதணி வகை; Ear-disc. *வெள்ளி வெண்டோட்டு* (*மணி.* 3 : 118).

**தோரை** tōrai, *n.* cf. *dhāra*.
அணிவடம்; String of jewels. *பொற்றோரை மின்ன* (*சீவக.* 2132 : 1).

**தோள் அணிவலயம்** tōḷ-aṇi-valayam, *n.* < *தோள்* +.
► வாகுவலயம். *தொடியும் உந்தியும் தோள் அணி வலயமும்* (*பரிபா.* 13 : 52).

**தோள்பதக்கம்** tōḷ-patakkam, *n.* < id. +.
பொன்தகட்டில் மாணிக்கமும், முத்தும் பதித்துச் செய்யப்பட்ட தோள் அணிகலன்களின் பதக்கம்; Pendant of the bracelet of upper arm.

**தோள்முத்தம்** tōḷ-muttam, *n.* < id. +.
தோளில் அணியும் மகரமீன் வடிவான அணி; A Bracelet for upper arm. *கரும்பார் தோள் முத்தம் கழன்று* (*சீவக.* 231 : 1).

**தோள்வலையம்** tōḷ-valaiyam, *n.* < id. +.
முற்காலத்தில் அரசர்கள் வீரத்தின் அடையாளமாக அணிந்து கொண்ட ஒருவகைத் தோளணி; Armlet. *தொல்லார் கலி வலையம் தோள் வலையம்* (குலோத். *உலா.* 16).

**தோள்வளை** tōḷ-vaḷai, *n.* < id. +.

தோளில் அணியும் வலயம் போன்ற அணி வகை; Ring worn on the upper arm. *நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த* (*குறுந்.* 252 : 1).

**தோளணி** tōḷ-aṇi, *n.* < id. +.

தோளின் மேற்பகுதியில் அணியப்படும் அணிவகை; Ornament worn on the upper arm. *தோளணி தோடு சுடரிழை நித்திலம்* (*பரிபா.* 10 : 115).

## ந

**நகமூடி** naka-mūṭi, *n.* < *நகம்* +.

பரவ மகளிர் வலக்காற் பெருவிரலில் அணியும் ஐவர்ண அணியினுள் ஒன்று; Ring worn on the right toe by parava women, one of *ai-varnam* (*Parav.*).

**நகரமீன்** nakara-mīṉ, *n.* perh. *நகரம்* + cf. *நகரை*.

பரவ மகளிர் தம் காலின் சுண்டுவிரலில் பூணும் ஐவர்ண அணியுள் ஒன்று; Ring worn on the little toe by parava women, one of *ai-varnam* (*Parav.*).

**நகாசுமணி** nakācu-maṇi, *n.* < *நகாசு* +.

பரவ மகளிர் அணியும் கழுத்தணி; Necklace worn by parava women (*Parav.*).

**நகை** nakai, *n.* < *நகு-*.

1. ► முத்துமாலை. *ஒருத்தி செயல் அமை கோதை நகை* (*கலித்.* 92 : 33).
2. ► அணிகலன். *பொன் நகைக் குலம் பொலிந்து* (*சூளா.* 7, 18 : 3).

**நகைக்காழ்** nakai-k-kāḻ, *n.* < *நகை* +.

► முத்தாரம்.

**நகைக்கோவை** nakai-k-kōvai, *n.* < id. +.

► முத்தாரம். *கதிர்நகைக் கோவைக் கைவினைப் பொலிந்த* (*பெருங்.* 1, 46 : 158).

**நகைத்தாமம்** nakai-t-tāmam, *n.* < id. +.

► முத்தாரம். *கதிர்நகைத் தாம மெதிர்முக நாற்றிப்* (*பெருங்.* 3, 5 : 52).

**நங்கனை** naṅkaṉai, *n.*

அரைப்பட்டிகையின் உறுப்பு; Part of a girdle. *திருப்பட்டிகைக் கதலிகை நங்கனை ஒன்று* (S.I.I. ii, 144).

**நட்சத்திர மணிமாலை** naṭcattira-maṇi-mālai, *n.* < *நட்சத்திரம்* +.

கழுத்தணி வகை; A kind of necklace.

**நடுக்கட்டு** naṭu-k-kaṭṭu, *n.* < *நடு* +. [K. *naḍukaṭṭu, M. naṭukkeṭṭu.*]

► அரைக்கச்சை.

**நடுநாயகம்** naṭu-nāyakam, *n.* < id. +.

அணிகலனின் மையத்தில் பதிக்கப்பட்ட மணி; நாயக மணி; Central gem of an ornament.

**நத்து** nattu, *n.* < *நந்து*. [T. K. *nattu.*]

மூக்கணி வகை; A nose-ornament. *நத்தையணி நாசிவள்ளி* (*தனிப்பா.* ii, 234, 557).

**நயனமாலை** nayaṉa-mālai, *n.* < *nayana* +.

▶ உருத்திராக்க மாலை. *வனைதரு நயனமாலை (பிரமோத். 12, 6).*

**நரிப்பல்** nari-p-pal, *n.* < *நரி* +.

நரியின் பல் வடிவத்திலான ஒருவகைக் கழுத்தணி உரு; Bead of a kind of necklace, resembling a jackal's tooth.

**நல்லணி** nal-l-aṇi, *n.* < *நல்* +.

திருமணத்தின் அடையாளமாக அணியப்படும் மங்கல நாண்; *Tāli*, a marriage-badge, as ornament par excellence. *நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇ (சிலப்.* 6 : 83).

**நவ கண்டிகை** nava-kaṇṭikai, *n.* < *navan* +.

▶ செறிநிலை வடம்.

**நவசரி** nava-cari, *n.* < id. +.

அழகிய மணிகள் பதிக்கப்பெற்ற ஒன்பது வளையங்களைக் கொண்ட காதணி வகை; An ear pendant with precious stones.

**நவதாலி** nava-tāli, *n.* < id. +.

நவக்கிரகசாந்தியாக விளக்கிடு கல்யாணத்தில் சிறுமிக்குக் கட்டும் ஒருவகைத் தாலி; The *tāli* tied round the neck of girls, on the occasion of *viḷakkiṭu kalyāṇam*, in propitiation of *nava-k-kirakam*.

**நவபூசாவந்தம்** nava-pūcāvantam, *n.* < id. +.

ஒன்பது முகமுடைய கடுக்கன் வகை; Nine-faced ear-ring (W.).

**நவமணி** nava-maṇi, *n.* < id. +.

கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் ஆகிய ஒன்பது வகை அரதனங்கல்; The nine gems or precious stones, viz, *kōmētakam, nīlam, pavaḷam, marakatam, māṇikkam, muttu, puruṭarākam, vaiṭūriyam, vayiram. கண்ணிடை நவமணி ஒழுக்கிய மண்ணிய நாவலம் (சிலப்.* 3 : 115).

**நவமணிமாலை** nava-maṇi-mālai, *n.* < *நவமணி* +.

ஒன்பது வகை மணிகளாலான ஒரு கழுத்தணி வகை; A necklace with all the nine kinds of precious stones. *அணிகிளர் மாடவீதி நச்சரவுச்சியாட்கு நவமணிமாலை மானும் (குற்றா. தல. நகரச்சருக்.* 13).

**நவரத்தினம்** nava-rattiṉam, *n.* < *nava* +.

▶ நவமணி (W.).

**நவரத்தின மோதிரம்** navarattiṉa-mōtiram, *n.* < *நவரத்தினம்* +.

ஒன்பது வகை மணிகள் பதிக்கப்பட்ட விரலணி வகை; A ring with all the nine kind of gems. *நவரத்ரு மோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பதும் உள்பட* (S.I.I. ii, 93).

**நவரத்தின வளை** navarattiṉa-vaḷai, *n.* < id. +.

ஒன்பது வகை உயர்ந்த மணிகள் பதித்துச் செய்யப்பெற்ற பொன்னாலான வள்ளயல்; Bangle with all the kinds of nine precious stones.

நவனாலி navaṉāli, *n.*

► நவதாலி.

நளினாட்சமாலை naḷiṉāṭca-mālai, *n.* < *nalina* + *akṣamālā.*

தாமரைமணி மாலை; Necklace of lotus seeds (*நித்தியா*. 6).

## நா

நாக சடைபில்லை nāka-caṭai-pillai, *n.* < *நாகம்* +.

சடைவில்லை வகை; A kind of hair disc (*W. D.*).

நாகபடத்தாலி nāka-paṭa-t-tāli, *n.* < *நாகபடம்* +.

படமெடுத்த நாகத்தின் உருவங் கொண்ட கழுத்தணி வகை; A kind of necklet resembling cobra's hood.

நாகபடம் nāka-paṭam, *n.* < *nāga* +.

1. படமெடுத்த நாகத்தின் உருவங்கொண்ட தோளணி வகை; Armlet shaped like a coiled up cobra with out-spread hood. *வலய நாகபடங்கொடு பாரித்திட்டான்* (இரகு. கடிமண. 64).

2. பாம்புப் படத்தின் உருவங்கொண்ட மகளிர் காதணி வகை; Ear-ornament resembling a *cobra's hood, worn by women* (W.).

நாகபணம் nāka-paṇam, *n.* < id. +.

அணிவகை; An *ornament* (S.I.I. vi, 180).

நாகமுடிச்சு nāka-muṭiccu, *n.* perh. *nāga* +.

பெண்கள் அணியும் அனந்த முடிச்சு என்னும் காதணி வகை; A kind of woman's ear-ornament.

நாகமுறி nāka-muṟi, *n.*

கையணி; A variety of bangle (*W. D.*).

நாகர் nākar, *n.* < *nāga.*

ஐந்தலை அல்லது ஏழுதலை நாக உருவம்கொண்டதும் மகளிர் அணிவதுமான தலையணி வகை; நாகாபரணம்; A gold ornament having the design of a god under the hood of the five or seven-headed cobra, worn by woman on the crown of the head.

நாகவடம் nāka-vaṭam, *n.* < *நாகம்* +.

► நாகபடம் (W.).

நாகவொத்து nāka-v-ottu, *n.* < id. +.

மகளிர் அணியும் பொன்னாலான தோளணி வகை; A kind of armlet with a golden bead supended, worn by women.

நாக ஜடை nāka-jaṭai, *n.*

► நாகர்.

நாகாபரணம் nākāparaṇam, *n.*

1. சிவாலயங்களில் சிவலிங்கத்தின் மேல் குடையாக அமைக்கப்பெறும் ஐந்தலைப்பாம்பு; The five hooded cobra on linga at *Śiva* temples.

2. ஐந்தலை நாக வடிவில் செய்யப்பெற்ற சடைவில்லை; நாகர்; Hair disc in the form of five hooded snake.

3. ஐந்தலை நாக வடிவில் அமைந்த பதக்கம்; Pendant resembling a five hooded serpant. *திருவாபரணம் கிருஷ்ணராயன் பதக்கம் நாகாபரணம் பொன்நில்* (S. I. I, viii, 165).

**நாகுல்** nākul, *n.*

பாம்பின் நாவினைப் போன்று நீண்டு அமைந்த பழங்குடியினர் காதணி வகை; A variety of ear ring like the tongue of a cobra.

**நாசிகாபரணம்** nācikāparaṇam, *n.* < *nāsikā* + *ābharaṇa.*

மூக்குத்தி; Nose-jewel. *நாசிகாபரணமாகச் சொல்லரும் குன்றிதேடிச் சூடியதென்னை* (*திருவாலவா*. 45, 6 : 2).

**நாசிப்பிறை** nāci-p-piṟai, *n.* < *நாசி* +.

► புல்லாக்கு.

**நாட்டுக்கடுக்கன்** nāṭṭu-k-kaṭukkaṉ, *n.* < *நாடு* +.

இலங்கையின் வடப்பகுதியில் ஊரினர் அணியும் கடுக்கன் வகை; Ear-rings worn in the northern rural districts of Sri Lanka (J.).

**நாட்டுப்பொட்டு** nāṭṭu-p-poṭṭu, *n.* < id. +.

தாசியாக அறிவிக்கப்படும்போது அந்தப் பெண்ணுக்குக் கட்டப்படும் தாலி; பொட்டுத்தாலி; Marriage badge tied on a girl to announce her as a *tāci.*

**நாண்** nāṇ, *n.* cf. *ஞாண்*. [K. *nēṇ.*]

1. மாங்கலியம் கோத்த சரடு; Woman's necklet containing the marriage badge. *உன் கழுத்தின் னாணுன் மகற்குக் காப்பின்னாணா மென்றான்* (*கம்பரா*. 2, 4, 48 : 4).

2. ► அரைஞாண். *நாணும் அரைத்தொடரும்* (*திவ். பெரியாழ்*. 1, 2, 3 : 2).

3. பாம்பின் வடிவிலான பொன் அணி; Gold ornament in the form of a cobra. *சிறுவெள் அரவின் குருளை நாண் சுற்றிக் குறு நெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி* (*சிலப்*. 12 : 22).

4. அணிகலப்பொது; Jewel. *பொலம் கலன் நாண் ... செய் ஆபரணம்* (*திவா*. 7 : 79).

**நாமத்தாலி** nāma-t-tāli, *n.* < *நாமம்* +.

கார்காத்த வேளாளரது விளக்கிடு கலியாணத்தில் பெண்கழுத்தில் அணியும் தாலி வகை; A kind of *tāli* worn by the bride in the *viḷakkiṭu-kalliyāṇam* of *karkātta-vēḷāḷar* (G. Tn. D. I, 241).

**நாமமோதிரம்** nāma-mōtiram, *n.* < id. +.

அணிபவரின் பெயர் பொறிக்கப்பெற்ற மோதிரம்; Ring engraved with the name. *ஆம்பான் மணிநாம மோதிரந் தொட்டு* (*சீவக*. 1040 : 3).

**நாய்க்காசு** nāy-k-kācu, *n.* < *நாய்* +.

குழந்தைகள் இடுப்பில் கட்டப்படும் நாயின் உருவம் வரைந்த பட்டையான சிறு வெள்ளிக்காசு; A silver disc tied on children's waist with dog's figure (*N. D.*).

**நாயகக்கண்டம்** nāyaka-k-kaṇṭam, *n.* < *நாயகம்* +.

பதக்க வகை; A kind of pendant (S.I.I. viii, 53).

**நாயகத்தூக்கம்** nāyaka-t-tūkkam, *n.* < id. +.

ஓர் அணிகலனில் பதக்கங்கள் பலவற்றுக்கு இடையே உள்ள தலைமைப் பதக்கம்; The chief pendant in an ornament (S.I.I. ii, 226).

**நாயகம்** nāyakam, *n.* < *nāyakā*.

▶ நாயகமணி. *நாயகத்தைத் தொட்டு நவில்க* (*சைவச. பொது*. 139).

**நாயகமணி** nāyaka-maṇi, *n.* < id. +.

மணிமாலையின் நடுவில் இடம் பெற்றிருக்கும் பெரிய மணி; The main gem of a necklace. *சத்தியதிசத்தி பரியந்தமாக மேலாகிய நாயகமணியிலே பூசை பண்ணத்* (*சைவச. பொது*. 139).

**நாயகமுத்து** nāyaka-muttu, *n.* < id. +.

1. மாலையின் நடுவில் அமைந்த பெருமுத்து; A big pearl at the centre of the necklace.

2. துளையிடப்படாத முத்து; Unholded pearls. *துளையிடாத நாயகமுத்தென்றுமாம்* (*சீவக*. 2184 : 1, *உரை*).

**நாயகன்** nāyakaṉ, *n.*

நகை உறுப்பு; A part of the jewel. *நாயகனிற் பின்பு பொன்னிலாதது அரக்கு உட்பட* (S.I.I. ii, 467).

**நாரைக் கண்பட்டி** nārai-k-kaṇpaṭṭi, *n.*

நாரை எனும் பறவையின் கண் போன்ற வடிவில் செய்யப்பெற்ற காதணி வகை; An ear stud resembling the eye of bird *nārai* (*கல்.கலை. அக.*).

**நாலித்தலை** nāli-t-talai, *n.*

கழுத்தணியில் அசைந்தாடும் தொங்கல்; The pendant of a necklace. *நாலித்தலையில் விடங்குடையன எட்டில் கட்டின பொத்தி எட்டும்* (S.I.I. ii, 51).

**நாலுத்தட்டு** nālu-t-taṭṭu, *n.* < *நால்* +.

▶ ஞாலித்தட்டு (*S. D.*).

**நாவடம்** nāvaṭam, *n.* < *nāga* +.

1. ▶ நாகவடம்.

2. திருமணத்தின் அடையாளமாக அணியப்படும் தாலி உரு வகை; A jewel worn along with the marriage-badge.

**நாவலம்** nāvalam, *n.*

▶ பொன். *நாவலந்தானே பொன்னெனலாகும்* (*அக. நி*. 2084).

**நானக்குழாய்** nāṉa-k-kuḻāy, *n.*

▶ கச்சிக்குழல்.

## நி

**நிசி** nici, *n.* cf. *niṣka*.

▶ பொன். *காஞ்சனம் மஞ்சள் கங்குல் நிசியே* (*பிங்*. 10 : 695).

**நித்திலத்தாமம்** nittila-t-tāmam, *n.* < *நித்திலம்* +.

▶ முத்தாரம். *தங்கொளி நித்திலத் தாமஞ் சூடிய* (*சீவக.* 94 : 1).

**நித்திலம்** nittilam, *n.*

▶ முத்து. *நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்* (*சிறுபாண்.* 149).

**நித்தில மதாணி** nittila-matāṇi, *n.* < *நித்திலம்* +.

ஆண்கள் மார்பில் அணியும் முத்தாலாகிய பதக்கம்; A pendant inlaid with pearls and specially worn by males. *பூணணி கவைஇய வாரணி நித்தில நித்தில மதாணி* (*பரிபா.* 2 : 29-30).

**நித்தில வட்டம்** nittila-vaṭṭam, *n.* < id. +.

▶ முத்தாரம். *நித்தில வட்டமோர் பொன்செய் நாண்* (*சீவக.* 1323 : 3).

**நித்திலவடம்** nittila-vaṭam, *n.* < id. +.

▶ முத்துமாலை.

**நிதானம்** nitāṉam, *n.* < *ni-dhāna.*

1. ▶ இரத்தினம்.

2. ▶ பொன். *ஆடகம் மாசை ஈரம் ஓமம் ... நிதானம் ... இன்னவை பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

3. ▶ தெய்வமணி. *நவமணி கடவுள் மணி என்று இவற்றின் நிகழ்பெயர் நிதியும் நிதானமும் என்ப* (*திவா.* 6 : 4).

**நிதி** niti, *n.* < *nidhi.*

1. ▶ மதலிகை. *நிதி ... நிறைவொடு மதலிகைப் பேர்* (*வேத. சூடா.* 182).

2. ▶ பொன். *ஈகை, நிதியே ... பொன் எனப்படுமே* (*திவா.* 6 : 1).

**நியாயதம்** niyāyatam, *n.*

அணிகலனின் ஓர் உறுப்பு; A part of an ornament. *பாசமலை கீழ் நியாயத்து ஒன்றிற் கோத்த தாலி பதினேழும்* (*கல். சொல். அக.*).

**நிரைத்தாலி** nirai-t-tāli, *n.* < *நிரை* +.

ஒருவகைத் தாலி; A kind of *tāli*. *வெள்ளிய நிறைத்தாலியாகக் கட்டி* (*சிலப்.* 12 : 28, *அடியார்.*).

**நிலவுப்பிறை** nilavu-p-piṟai, *n.* < *நிலவு* +.

▶ சந்திரப்பிரபை. *நெற்றிச் சுட்டியும் நிலவுப்பிறையும்* (*S. D.*).

**நிலை** nilai, *n.* < *நில்-*. [T. *nelavu*, K. *nele*, M. *nila.*]

அணிலன்களின் தொங்கல்; Pendant of a jewel (W.).

**நிலையாணி** nilai-y-āṇi, *n.*

நகைகளில் பதித்திருக்கும் ஓடாணியினும் வேறான ஆணி வகை; Fixed pin, in jewel, dist. fr. *ōṭāṇi.*

**நிறைகல் நகை** niṟai-kal-nakai, *n.* *நிறை-* +.

மிகுதியான கற்கள் பதிக்கப்பட்டதும், சுற்றுக்கல்லிலிருந்து வேறானதுமான அணிவகை; Ornament set profusely with precious stones, as *dist.* fr. *cuṟṟukkal-nakai.*

## நீ

**நீலக்கடைச்செறி** nīla-k-kaṭai-c-ceṟi, *n.* < *நீலம்* +.

நீலமணிகள் பதிக்கப்பெற்ற வளையல்; Bangle inlaid with sapphire.

**நீலக்கல்** nīla-k-kal, *n.* < id. +.

நவமணிகளுள் ஒன்றானதும், அணிகலன்களில் பதிக்கப்படுவதுமான நீலநிறமுடைய விலையுயர்ந்த கல்; Sapphire, one of *nava-maṇi.*

**நீலக்குதம்பை** nīla-k-kutampai, *n.* < id. +.

நீல மணிகள் பதித்த பொன்னாலான காதணி வகை; Ear-ring inlaid with sapphire.

**நீலத்தின் உழுத்தோரணை** nīlattiṉ-uḻu-t-tōraṇai, *n.* < id. +.

நீலநிறமுடைய கற்களாலான அணி; An ornament studded with sapphire. *மேற்படியார் சாத்தும் நீலத்தின் உழுத்தோரணையில் நால் பொன் கழஞ்சரையும்* (S.I.I. v, 521).

**நீலம்** nīlam, *n.* < *nīla.*

► நீலக்கல். *மால் நீலம் மாண்ட துகில் உமிழ்வது ஒத்து அருவி மால் (திணை. நூற்.* 6 : 1-2).

**நீலமணி** nīla-maṇi, *n.* < *நீலம்* +.

► நீலம், 1. *நீலமணி மிடற்றொருவன் (புறநா.* 91 : 6).

## நு

**நுண்டொடர்** nuṇṭoṭar, *n.* < *நுண்-மை + தொடர்.*

► நேர்ஞ்சங்கிலி. *சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினை (சிலப்.* 6 : 99).

**நுணகம்** nuṇakam, *n.* cf. *நுணுக்கம்.*

► பொன். *நுணகமென்பது பொன்னெனப்படுமே (அக. நி.* 2168).

**நுதல்சுடிகை** nutal-cuṭikai, *n.* < id. +.

► நெற்றிச்சுட்டி. *சுட்டி நுதல் சுடிகை (திவா.* 7 : 73).

**நுதலணி** nutal-aṇi, *n.* < *நுதல்* +.

► நெற்றிச்சுட்டி (*யாழ். அக*).

**நுதற்குறி** nutaṟ-kuṟi, *n.* < id. +.

► பட்டம், 1 (*கயா.*).

**நுதற்சூட்டு** nutaṟ-cūṭṭu, *n.* < id. +.

► நெற்றிச்சுட்டி. *திருநுதற் சூட்டயல் சுடரும் (பெருங்.* 1, 40 : 101).

**நுதற்பட்டம்** nutaṟ-paṭṭam, *n.* < id. +.

► நெற்றிப்பட்டம். *நலநுதற் பட்டம் கட்டி நகைமுடிக் கோதை சூட்டி (சீவக.* 673 : 2).

**நுதற்பூண்** nutaṟ-pūṇ, *n.* < id. +.

► நெற்றிச்சுட்டி.

## நூ

**நூ** nū, *n.*

ஆபரணப் பொது; Ornament (*யாழ். அக*).

**நூபுரம்** nūpuram, *n.* < *nūpura.*

1. ► சிலம்பு. *பரியகம் நூபுரம் பாடகஞ் சதங்கை* (*சிலப்*. 6 : 84).

2. பாதத்தில் அணியும் கிண்கிணி எனும் காலணிகலன்; Anklets formed of little bells. *நாகச்சிரம் செய் நூபுரமும் வண்டும் சிலம்பொடு சிலம்பி ஆர்ப்ப* (*கம்பரா.* 1, 21, 22 : 2).

**நூல்** nūl, *n.* < *நூல்*-. [T. K. Tu. *nūlu*, M. *nūl.*]

1. திருமணத்தில் அடையாளமாக அணிவிக்கப்படும் கயிறு; மங்கலநாண்; The cord of the wedding badge. *தகு மகட் பேசினோன் வீயவே நூல்போன சங்கிலிபால்* (*திருத். திருவந்.* 69).

2. மேகலை எனும் அணி; Waist band. *சங்கொடு சிலம்பும் நூலும் பாத சாலகமும் தாழ* (*சுக்*. 72 : 113).

**நூலில்லாமாலை** nūl-illā-mālai, *n.* < *நூல்* + இல் *neg.* +.

கழுத்தணி வகை; A necklace (*S. D.*).

**நூற்குச்சு** nūṟ-kuccu, *n.* < id. +.

பருத்தி நூலால் செய்யப்பட்ட குஞ்சம்; Tassel of cotton thread (W.).

**நூற்குஞ்சம்** nūṟ-kuñcam, *n.* < id. +.

► நூற்குச்சு (W.).

## நெ

**நெகிழம்** nekiḻam, *n.*

► நெகிழி.

**நெகிழி** nekiḻi, *n.* < *நெகிழ்*-. cf. *ஞெகிழி*.

பாதச்சிலம்பு; Tinkling foot-rings (W.).

**நெகிளம்** nekiḷam, *n.* cf. *ஞெகிழம்*.

► நெகிழி (*யாழ். அக*).

**நெம்பு** nempu, *n.* < *நெம்பு*-.

ஒரு நகை உறுப்பு; ஓடாணி; A part of the jewel. *பொன்னின் நெம்பு இரண்டு மூன்றொன்றாக அடுத்து விளக்கின தாளிம்பம் இரண்டும்* (*கல். சொல். அக.*).

**நெருஞ்சிப்பூச்செயல்** neruñci-p-pū-c-ceyal, *n.* < *நெருஞ்சி* +.

நெற்றிப்பட்டையின் தொங்கல் வகை; A *neruñci* shaped pendant of frontlet (S.I.I. ii, 163).

**நெல்லிக்காய்க்குண்டு** nelli-k-kāy-k-kuṇṭu, *n.* < *நெல்லி* +.

► நெல்லிக்காய்மணி (W.).

**நெல்லிக்காய்மணி** nelli-k-kāy-maṇi, *n.* < id. +.
நெல்லிக்காயின் வடிவத்தில் பொன்னால் செய்யப்பெற்ற மணிமாலை; Golden beads of a necklace in the form of *nelli* fruit (W.).

**நெல்லிக்காய்மாலை** nelli-k-kāy-mālai, *n.* < id. +.
► நெல்லிக்காய்மணி.

**நெல்லிக்காய்முத்து** nelli-k-kāy-muttu, *n.* < id. +. cf. *நெல்லிக்காய்மணி*.
► நெல்லிக்காய்மணி. *ஏகாவல்லிவடம் ஒன்றினால் நெல்லிக்காய் முத்து நூறும்* (*கல். சொல். அக.*).

**நெளி** neḷi, *n.* < *நெளி-*.
சுறாமீன் வாய் திறந்தது போன்று அமைந்த வளைந்த மோதிர வகை; A kind of ring, as having a peculiar curve. *அலங்கார நெளியிட்ட கையைக்காட்டாய்* (*குற்றா. குற.* 66, 2).

**நெளிமோதிரம்** neḷi-mōtiram, *n.* < *நெளி* +.
► நெளி (W.).

**நெளிவங்கி** neḷi-vaṅki, *n.* < id. +.
மகளிர் அணியும் வளைந்த தோளணி; A curved bracelet worn by women in their upper arm (*W. D.*).

**நெளிவளையல்** neḷi-vaḷaiyal, *n.* < id. +.
வளைவு வளைவாக உள்ள கையணி வகை; Curved bangles (*W. D.*).

**நெளிவு** neḷivu, *n.* < *நெளி-*.
► நெளி.

**நெற்சிறுதாலி** neṟ-ciṟu-tāli, *n.* < *நெல்* +.
► *சிறுதாலி*, 1. *நெற்சிறுதாலி நிரல் கிடந் திலங்க* (*பெருங்.* 4, 16 : 29).

**நெற்றிக்கட்டு** neṟṟi-k-kaṭṭu, *n.* < *நெற்றி* +.
பெண்கள் முன்நெற்றியில் அணியும் மாலை; A garland worn on forehead by women. *மார்பின் மாலையை வாங்கிக் கொண்டவளுடைய நெற்றிக்கட்டை* (*கலித்.* 66 : 16, *உரை*).

**நெற்றிச்சுட்டி** neṟṟi-c-cuṭṭi, *n.* < id. +.
தலை வகிடு வழியாக நெற்றியில் தொங்குமாறு பெண்களும் குழந்தைகளும் அணிந்து கொள்ளும் சங்கிலியுடன் கூடிய வில்லை உடைய அணி; An ornament worn on the forehead by women and children.

**நெற்றிச்சூட்டு** neṟṟi-c-cūṭṭu, *n.* < id. +.
மகளிர் முன்நெற்றியில் அணியும் அணிவகை; An ornament for a women forehead. *நெற்றிச்சீட்டு ஆடவர்க்காகாத தன்மையும்* (*சீவக.* 484 : 3, *உரை*).

**நெற்றிப்பட்டம்** neṟṟi-p-paṭṭam, *n.* < id. +.
► பட்டம், 2 (W.).

**நெற்றிப்பொன்** neṟṟi-p-poṉ, *n.* < id. +.

▶ பட்டம், 1. *நெடுமேரு நெற்றிப் பொன் போல பசுங்க திராயிரம் வீசும் (கல். சொல். அக.).*

## நே

**நேமி** nēmi, *n.* < *nēmi.*

▶ மோதிரம் (*யாழ். அக.*).

**நேர்ஞ்சங்கிலி** nēr-ñ-caṅkili, *n.* < நேர் +.

கழுத்திலணியப்படும் வேலைப்பாடு வாய்ந்த ஒருவகைச் சங்கிலி; A necklace of exquisite workmanship. *வீரசங்கிலியும் நேர்ஞ்சங்கிலியும் பூணப்படுஞாணும் (சிலப். 6 : 99, அடியார்.).*

**நேர்ப்பதக்கம்** nēr-p-patakkam, *n.* < id. +.

▶ நெற்றிச்சுட்டி (*W. D.*).

**நேர்வடம்** nēr-vaṭam, *n.* < id. +.

▶ முத்தாரம். *நிழன்ம விந்த நேர்வ டம்நி ழற்ப டப்புடைத்தர (சீவக. 1952 : 2).*

## நோ

**நோம்புக்கயிறு** nōmpu-k-kayiṟu, *n.* < நோம்பு +.

▶ காப்புநாண்.

**நோம்புமுடி** nōmpu-muṭi, *n.* < id. +.

▶ நோம்புமுடிச்சு.

**நோம்புமுடிச்சு** nōmpu-muṭiccu, *n.* < id. +.

தாலிச்சரட்டில் கோக்கப்பட்ட குழாய்போன்ற பொன்னுருக்களின் இணை; A pair of cylindrical pieces of gold worn on the string containing the marriage-badge.

## ப்

**ப்ருஷ்ட கண்டிகை** pruṣṭa-kaṇṭikai, *n.*

▶ பிருட்டகண்டிகை. *ப்ருஷ்டகண்டிகை ஒன்றிற் கட்டின் வயிரம் நாலும் (கல். சொல். அக.).*

## ப

**பக்கம்** pakkam, *n.* < *pakṣa.*

கையணி; Ornament for the hand (*யாழ். அக.*).

**பக்கரை** pakkarai, *n.* [T. *pakkera*, K. *pakkare.*]

▶ குதிரைக்கலணை. *வீரர் ஏறின விளங்கொளிப் பக்கரை யமைந்த (சீவக. 1772 : 2-3).*

**பகுவாய்மோதிரம்** pakuvāy-mōtiram, *n.* < பகுவாய் +.

விரிந்த வாயை உடைய மீன், பாம்பு வடிவில் செய்யப்பெற்ற பொன்னாலான மோதிர வகை; A kind of ring resembling fish or snake with mouth wide opened.

**பங்குசம்** paṅkucam, *n.* perh. *paṅkaja.*

▶ தலைக்கோலம். *பங்குசம் பிஞ்சகம் பயில் தலைக்கோலம் (பிங். 6 : 101).*

**பச்சை** paccai, *n.* < *பசு-மை.* [T. *patta*, K.M. *pacca.*]

► மரகதம். *பவளவளை செறித்தாட்கண்டு அணிந்தாள் பச்சைக் குவளைப் பசுந்தண்டு கொண்டு* (*பரிபா.* 1 : 101-102).

**பச்சைக்கல்** paccai-k-kal, *n.* < *பச்சை* +.

1. ► மரகதம்.
2. காதணி வகை; Pendant emerald, used as an ear ornament (*Colloq.*).

**பச்சைக்கல் பில்லை** paccai-k-kal-pillai, *n.* < id. +. [K. *paccakallu.*]

பச்சைக்கல் பதித்த சடைவில்லை; Disc studded with green stones, worn on head.

**பச்சைவளை** paccai-vaḷai, *n.* < id. +.

பொன் இடையிட்டதும் பச்சைக் கண்ணாடியாலானதுமான வளையல் வகை; Green, glass bracelet ornamented with gold (*Colloq*).

**பஞ்ச உங்குரம்** pañca-uṅkuram, *n.* < *pañcan* +.

ஐந்து விரல் மோதிரங்களையும் கைவளையுடன் இணைக்கும் தனித்தனிச் சங்கிலிகள் அமைந்த அணிவகை; A jewel with individual chains connecting the rings and the bangle.

**பஞ்சகண்டி** pañca-kaṇṭi, *n.* < id. +.

கழுத்தணி வகை; A kind of necklace (T. A. S. ii, 68).

**பஞ்சசரம்** pañca-caram, *n.* < id. +.

ஐந்து கோவைகளாலான முத்தாரம்; A necklace of five strings. *த்ரிஸரம் பஞ்சஸரம் என்றாற் போலே சொல்லுகின்ற முத்து வடங்களையும்* (*திவ். அமலனாதி.* 10, *வ்யா, ப.* 104).

**பஞ்சசரி** pañca-cari, *n.* < id. +.

ஐந்து சரங்கொண்ட அணிவகை; Ornament of five string (S.I.I. ii, 181).

**பஞ்ச பூசாவந்தம்** pañca-pūcāvantam, *n.* < id. +.

பூசநட்சத்திரத்தைப் போல ஐந்து உருக்களைக் கொண்ட காதணி வகை; Ear-ring having small pieces of stones arranged like the five stars of *Pūcam* asterism.

**பஞ்சமுத்திரை** pañca-muttirai, *n.* < id. +.

திருமாலின் பஞ்ச ஆயுத (சங்கு, சக்கரம், கதை, வில், வாள்) வடிவங்களாகச் செய்து சேர்த்த கால் அணி வகை; An ornament worn on the foot, consisting of pieces shaped like the five weapons of *Viṣṇu* (*சீகாழிக். கோ.* 411).

**பஞ்சரம்** pañcaram, *n.* < id. +.

கைம்பெண்கள் அணிந்து கொள்ளும் கதிரவன் வடிவிலான கழுத்தணி வகை; A variety of necklace mostly worn by widows.

**பஞ்சவர்ணக்காப்பு** pañca-varṇa-k-kāppu, *n.* < *பஞ்சவர்ணம்* +.

► பஞ்சாரக்காப்பு (*W. D.*).

**பஞ்சவர்ண மோதிரம்** pañca-varṇa-mōtiram, *n.* < id. +.

கோவில் பூசாரி ஆவதற்காக முத்திரை வைக்கும்போது காலில் அணியும் மிஞ்சி; A person while branding him with a mark to become a priest (*W. D.*).

**பஞ்சாயுதம்** pañcāyutam, *n.* < *pañcan* +.

▶ ஐம்படைத்தாலி (*விதான. மைந்தர்.* 1).

**பஞ்சாயுதமணி** pañcāyuta-maṇi, *n.* < *பஞ்சாயுதம்* +.

சங்கு, சக்கரம், கதை, வில், வாள் என்னும் திருமாலின் ஐந்து ஆயுத உருக்கள் அமைந்த சிறுவர் கழுத்தணி வகை; A necklace of gold beads with *Pañcāyutam* as pendant, worn by children (J.).

**பஞ்சாரக்காப்பு** pañcāra-k-kāppu, *n.* < *பஞ்சாரம்* +.

ஐம்பொன்னால் செய்யப்பட்ட குழந்தை காலணிகலன்; Anklet of children made up of an alloy of five metals (*W. D.*).

**பஞ்சாரம்** pañcāram, *n.* < *பஞ்ச* +.

ஐந்து சரங்கொண்ட மகளிர் கழுத்தணி வகை; Necklace of five strands worn by women (*Loc.*).

**பஞ்சாரமாலை** pañcāra-mālai, *n.* < *பஞ்சாரம்* +.

▶ பஞ்சாரம்.

**பட்டடை** paṭṭaṭai, *n.* < T. *Paṭṭeḍa.*

கழுத்தணி; Neck-ornament (*Loc.*).

**பட்டணங்காப்பு** paṭṭṇaṅ-kāppu, *n.* < *பட்டணம்* +.

காப்பு வகை; A kind of bracelet.

**பட்டம்** paṭṭam. *n.* < *paṭṭa.*

1. சிறப்புக்கு அறிகுறியாக நெற்றியில் அணியும் பொன் தகடு; Plate of gold worn on the forehead, as an ornament or badge of distinction. *பட்டமுங் குழையு மின்ன* (*சீவக.* 472 : 3).

2. திருமணத்தில் உறவுமுறையை நிலைநாட்டும் வகையில் மாமன்முறையில் உள்ளவர்கள் மணமகன் அல்லது மணமகளுக்கு நெற்றியில் கட்டும் பொற்றகடு; An ornament worn on the forehead on wedding ceremony. *பட்டங்கட்டிப் பொற்றோடு பெய்து* (*திவ். பெரியாழ்.* 3, 7, 6 : 1).

3. யானையின் முகபடாம்; Frontlet for elephants. *பட்ட மெனும் பெயர் ... மதகரி முகபடாமும் ... விளம்புவர்* (*வடமலை.* 1027).

4. தோளிலிடும் பட்டிகை; A garland worn on shoulders. *ஒத்த வடத்து இளநாகம் உருத்திர பட்டம் இரண்டும்* (*தேவா.* 4, 2, 3 : 1).

**பட்டிகை** paṭṭikai, *n.* < *paṭṭikā.*

1. இடையில் அணியும் அணிகலன்; மேகலை; Girdle. *அணியும் அரைப் பட்டிகையாள்* (*இராஜராஜ. உலா,* 182).

2. ▶ அரைப்பட்டிகை. *தொலை விரி பட்டிகைச் சுடரும் சுற்றிட* (*கம்பரா.* 1, 22, 64 : 2).

**பட்டுக்குஞ்சம்** paṭṭu-k-kuñcam, *n.* < *பட்டு* +.

புடவை, தலையணி முதலியவற்றில் அமைந்துள்ள பட்டின் கற்றைத் தொங்கல்; Silkan hanging in turban, sarees etc. (*W. D.*).

**பட்டை** paṭṭai, *n.* < *paṭṭa.*
அணிகலனின் ஓர் உறுப்பு; A part of the ornament (*யாழ். அக.*).

**பட்டைக்காப்பு** paṭṭai-k-kāppu, *n.* < id. +.
தட்டையான வளையல் வகை; Flat bangle (*W. D.*).

**பட்டைக்காறை** paṭṭai-k-kāṟai, *n.* < id. +.
பட்டையான கழுத்தணி வகை; A kind of necklet; Flat necklet (S.I.I. ii, 157).

**பட்டைக்கொலுசு** paṭṭai-k-kōlucu, *n.* < id. +.
காலில் மகளிரும் சிறுவரும் அணியும் முத்துகள் போல் தனித்தனியே செய்து கோக்கப்பட்ட பட்டையான வெள்ளி அணி வகை; A flat anklet of silver worn by children and women.

**பட்டைத்தளுக்கு** paṭṭai-t-taḷukku, *n.* < id. +.
மூக்கணி; Nose ring (*W. D.*).

**பட்டையரைஞாண்** paṭṭai-y-arai-ñāṇ, *n.* < id. +.
இடுப்பில் அணியும் பட்டையான அணிவகை; Flat ornamental band worn round the waist. *பட்டையரைஞாணும் விலைபண்ணுவதோ* (*விறலிவிடு.* 699)

**பட்டை வளையல்** paṭṭai-vaḷaiyal, *n.* < id. +.
வளையல் வகை; A kind of bangle.

**பட்டை வளையில்** paṭṭai-vaḷaiyil, *n.* < id. +.
► பட்டை வளையல். *பட்டை வளையிலாறினால் நிறை பொன் பதின் முக்கழ்ஞ்சே* (*கல். சொல். அக.*).

**படம்** paṭam, *n.* < *paṭṭa.*
► படாம். *படம் தவழ் முகத்து ஓர் வேழம்* (*சூளா.* 10, 110 : 4).

**படலை** paṭalai, *n.* < *paṭala.*
குதிரைக்கு அணிவிக்கும் ஒலியெழுப்பும் சிறிய மணிகளைக் கொண்ட கிண்கிணிமாலை; String of small tinkling bells for a horse. *படலை யெனும் பெயர் வாசிக்கோவையும்* (*வடமலை.* 1043).

**படாம்** paṭām, *n.* < *paṭa.*
யானைமுகத்திற்கு அணிவிக்கப்படும் கவசம்; Shield adorning the face of an elephant. *கடாஅக் களிற்றின் மேல் கண் படாம்* (*குறள்,* 1087).

**படிகமணி** paṭika-maṇi, *n.* < படிகம் +.
கடைந்த படிகக் கற்களால் அமைந்த மாலை; A necklace made of crystals (*மதுரைத். அக.*).

**படிகமாலை** paṭika-mālai, *n.* < id. +.
► படிகமணி. *புத்தகம் படிகமாலை குண்டிகை* (*கம்பரா.* 1, 3 : 1 *காப்பு,* வை.மு.கோ.).

**படிதம்** paṭitam, *n.* perh. *prathita.*
மாணிக்க வகை; A kind of ruby. *விந்தமும் படிதமும்* (*சிலப்.* 14 : 186).

**படுகண்** paṭu-kaṇ, *n.* < படு- +.

▶ படுகண்ணி. *படுகண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை* (S.I.I. ii, 157).

**படுகண்ணி** paṭu-kaṇṇi, *n.* < id. +.

அணிகலனில் கொக்குவாய் மாட்டப்படும் உறுப்பு; The eye in which the hook of an ornament is fastened. *கொக்குவாயும் படுகண்ணியும் போலே* (*திவ். பெரியதி*. 5, 4, 7, *வ்யா*.).

**படுகால்** paṭukāl, *n.* < id. +.

மேகலை; Waist band. *ஏணிப் படுகால்* (*பரிபா*. 10 : 11).

**படை** paṭai, *n.* < id. +.

▶ குதிரைக்கலணை. *பல்லணம் பருமம் படை ... கலணைத் தொடர்பே* (*திவா*. 7 : 44).

**பண்** paṇ, *n.* < *பண்ணு*-.

▶ குதிரைக்கலணை. *பல்லணம் பருமம் படை ... கலணைத் தொடர்பே* (*திவா*. 7 : 44).

**பண்டக்கலம்** paṇṭa-k-kalam, *n.* < *பண்டம்* +.

அணிகலப்பொது; Ornament in general. *பண்டக் கலம்பகர் சங்கமன் றன்னை* (*மணி*. 26 : 23).

**பண்டம்** paṇṭam, *n.* cf. *bhanda*. [T. *banḍamu*, K. *banḍa*, M. *paṇṭam*.]

▶ பொன். *பண்டம் இரணியம் ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**பண்டனம்** paṇṭaṉam, *n.* < *bhanḍana*.

▶ கவசம்.

**பணதி** paṇati, *n.* prob. *பண்ணு*-.

அணிகலப்பொது, Ornament in general. *யாப்புற அமைந்த வாய்ப்புடைப் பணதி* (*பெருங்*. 3, 3 : 27).

**பணி** paṇi, *n.* < பண்ணு-. [M. *paṇi*.]

▶ அணிகலன். *கற்று அறிவித்தகன் பொற்பணி* (*பெருங்*. 4, 14 : 64).

**பணிதி** paṇiti, *n.* cf. *பணதி*.

▶ பணதி. *பணிதிக்கு மேக்கொன்றா ரென்பணிக்கும்* (*குமர. பிர. காசிக்*. 90).

**பணிப்பூட்டு** paṇi-p-pūṭṭu, *n.* < *பணி* +.

அணிகலன்களில் அமைந்துள்ள கொக்கிப்பூட்டு; Lock of a clasp in an ornament.

**பணிப்பொன்** paṇi-p-poṉ, *n.* < id. +.

அணிகலன் வடிவான பொன்; Gold in the form of ornaments. *கட்டிப்பொன் போலே அவன், பணிப்பொன்போலே திருநாமம்* (*திவ். திருப்பா*. 3, 60 *வ்யா*.).

**பணிலம்** paṇilam, *n.*

சங்கினால் செய்யப்பட்ட கைவளை வகை; Conch bracelets. *கைப்பணிலந் தன்னைக் கழற்றிவிடுத்து* (*சொக்க. உலா*, 171).

**பணிவலயம்** paṇivalayam, *n.* < *பணி* +.

▶ தோளணி. *ஆயிரம் ஆயிரம் ஆகப் பணைத்த பணிவலயம் பாரீர்* (*இராஜராஜ. உலா*. 95).

**பணிவளை** paṇi-vaḷai, *n.* < id. +.

பாம்பு சுருண்டுள்ளது போன்றமைந்த அணிகலன்; An ornament resembling a coiled snake. *சூடாமணியும் பணிவளையும் சூடகமும்* (*இராஜராஜ. உலா*, 322).

**பணையம்** paṇaiyam, *n.* perh. *paṇāya.* [M. *paṇayam.*]

கால் அணிகலன் வகை; A kind of anklet. *காலுக்குப் பணையமுங்கட்டி* (*சீதக்.* 30).

**பணையிரதம்** paṇai-y-iratam, *n.*

► பட்டிகை. *பட்டிகை கச்சும் பணையிரதமும் ஆகும்* (*திவா.* 11 : 153).

**பத்திக்கச்சு** patti-k-kaccu, *n.* < *பத்தி* +.

நெற்றிச் சுட்டிவகை; An ornament worn by women and children their forehead. *பத்திக் கச்சினோ டொத்தவை பிறவும்* (*பெருங்.* 2, 5 : 144).

**பத்திமாலை** patti-mālai, *n.* < id. +.

கழுத்தில் அணியும் தாழ்வடம்; An ornament worn round the neck.

**பத்திரக்கடிப்பு** pattira-k-kaṭippu, *n.*

குதம்பை என்னும் காதணி; Ear ornament. *பத்திரக் கடிப்பு மின்னப் பதுமுகன் பகடு பேர்த்தான்* (*சீவக.* 2276 : 4).

**பத்திரக்குண்டலம்** pattira-k-kuṇṭalam, *n.*

காதணி வகைகளுள் ஒன்று; A kind of ear ring.

**பத்திரச்சுரிகை** pattira-c-curikai, *n.*

► பத்திக்கச்சு. *சித்திரப் பிணையலும் பத்திரச் சுரிகையும்* (*பெருங்.* 2, 5 : 143).

**பத்திரம்** pattiram, *n.* < *patra.*

இடுப்பில் அணியப்படும் வாரில் தொங்கவிடப்படும் இலை போன்ற வடிவுடைய ஒரு பதக்கம்; A leaf-like pendant on waist band. *வெண்கலப் பத்திரங்கட்டி விளையாடி* (*திவ். பெரியாழ்.* 1, 9, 5 : 1).

**பத்திராட்சிமணி** pattirāṭci-maṇi, *n.* < *bhadrākṣa* +.

உருத்திராக்கம் போல அணிதற்குரிய கொட்டைமணி வகை; Four-O'clock seeds worn by religious mendicants.

**பத்ரகர்ணிகா** patra-karṇikā, *n.*

மகளிர் காதின் மேல் நுனியில் அணியும் அணிவகை; A stud worn an upper arm (*அணி. ஒப். ப.* 70).

**பத்ரலேகா** patra-lēkā, *n.*

மூக்குத்தியையும் காதணியையும் கன்னத்தின் வழியே இணைக்கும் சங்கிலி; A chain connecting the ear ring and the nose stud through the cheek (*அணி. ஒப். ப.* 71).

**பதக்கம்** patakkam, *n.* < *padaka.*

1. கழுத்துச் சங்கிலி முதலியவற்றில் கோக்கப்படும் கற்கள் பதிக்கப்பட்ட அல்லது பதிக்கப்படாத தங்கத்தாலான சிறு வில்லைத் தொங்கல்; A pendant set with or without gems and suspended from the necklace. *மற்று இவை யாதும் விலை இல் பதக்கமே* (*கலிங்.* 335 : 2).

2. வெற்றிக்குப் பாராட்டாக அல்லது ஒரு நிகழ்ச்சியின் நினைவாக அளிக்கப்படும் உருவம், எழுத்து போன்றவை பொறிக்கப்பட்ட உலோகவில்லை; Medal; Memento.

**பதக்கமாலை** patakka-mālai, *n.* < *பதக்கம்* +.

பதக்கத்தோடு கூடிய பொன்னாலான மாலை; Necklet with a pendant. *திருவண்ணாமலை உடைய நாயனார் சாத்தியருள இட்ட பதக்கமாலை ஒன்றினால்* (S.I.I. ix, 103).

**பதசாலம்** pata-cālam, *n.* < *பதம்* +.

மகளிர் அணியும் காலணி வகை; A kind of food-ring worn by women. *ஆழி சிலம்போடு பதசாலம் (சிவரக. தேவிமயம். 7).*

**பதுமம்** patumam, *n.* < *padma.*

முடியுறுப்பு ஐந்தனுள் தாமரை வடிவான மகுடம்; Lotus shaped part of a crown. *தாமம் முகுடம் பதுமம் கோடகம் ... முடியுறுப்பு (திவா. 7 : 82).*

**பதுமராகம்** patuma-rākam, *n.* < *padma-rāga.*

மாணிக்க வகை; Jacinth, a species of ruby, hyacinth. *மருவிய பெயர் கோமளங் குருவிந்தம் பதுமராகம்பணா மணியே (திருவாலவா. 25, 12 : 4).*

**பந்தம்** pantam, *n.* < *bandha.*

► பொன். *பந்தம் தமனியம் ... பொன்னே (பிங். 6 : 131).*

**பம்பல்** pampal, *n.*

► பொன். *பம்பறானே எழுச்சியும் நெருக்கமும் ... பொன்னுமென்றே போற்றுமறு பெயர் (அக. நி. 2388).*

**பம்பாய்வளை** pampāy-vaḷai, *n.* < *பம்பாய்* +.

கண்ணாடி, நெகிழ்மம் அல்லது இரப்பரால் ஆன இக்கால வளையல் வகைகள்; Bangles of modern times made up of glass, plastics or rubber.

**பம்பாய்வளையல்** pampāy-vaḷaiyal, *n.* < id. +.

► பம்பாய்வளை.

**பரணம்** paraṇam, *n.* < *bhara.*

► கவசம். *ஆசு பரணம் ... மெய்புகு கருவி (திவா. 7 : 36).*

**பரம்** param, *n.* < id.

1. ► குதிரைக்கலணை. *பல்லணம் பருமம் படை ... கலணைத் தொடர்பே (திவா. 7 : 44).*
2. ► கவசம். *பாரமும் பரமும் அப்பெயர்பால் (திவா. 7 : 37).*

**பரிசமணி** parica-maṇi, *n.* < *பரிசு* +.

பள்ளர் இனத்தில் கலியாண நிச்சயத்தின் பொருட்டுக் கட்டுங் கழுத்தணி; Necklace tied around the neck of bride at a betrothal ceremony among *Paḷḷas.*

**பரிதி** pariti, *n.*

► பொன். *பரிதியே பரிவேடமும் ... பொன்னு நேமியுமெனவே நிகழ்த்து மறுபெயர் (அக. நி. 2380).*

**பரியகம்** pariyakam, *n.* < *paryaka.*

1. ஒலிக்கும் சிறுமணிகளைக் கொண்ட காலணிகலன்; பாதகிங்கிணி; Anklet consisting of little bells. *பரிபுரம் நூபுரம் பரியகம் ... பாதகிண்கிணி (திவா. 7 : 51).*

2. ► காற்சவடி. *பரியக நூபுரம் (சிலப். 6 : 84).*

3. பொன்னால் செய்யப்பட்ட கைக்காப்பு; கைச்சரி; Arm-ring. *பரியகம் வால்வளை பவழப் பல்வளை (சிலப். 6 : 93, அடியார்.).*

**பரிபுரம்** pari-puram, *n.* cf. *pari* + *sphrura.*

1. ► சிலம்பு. *பரிபுர ஒலி எழ ஒலி எழ (கலிங். 23 : 2).*

2. ► பாத கிங்கிணி. *பரிபுரம் நூபுரம் ... பாதகிண்கிணி மணியே (திவா. 7 : 51).*

**பருமம்**[1] parumam, *n.* < *பரு-மை.*

பதினெட்டு வடங்களைக் கொண்ட மேகலை; Women's waist-band consisting of 18 strings. *பருமந்தாங்கிய பணிந்த ஏந்து அல்குல் (திருமுரு. 146).*

**பருமம்**[2] parumam, *n.* < *varman.*

1. ► குதிரைக்கலணை. *பருமங் களையாப் பாய்பரிக் கலிமா (நெடுநல். 179).*

2. ► கவசம். *பருமம் கச்சை சாலிகை ... கவசப் பெயரே (பிங். 6 : 506).*

**பல்கலை** pal-kalai, *n.* < *பல்* +.

எண்கோவையாக அமைந்த மேகலை; Waist band of 8 strings. *பல்கலை சில் பூங் கலிங்கத்தள் (கலித். 56 : 11).*

**பல்காழ்** pal-kāḻ, *n.*

இருகோவை முதல் முப்பத்திரு கோவை ஈறாகிய வடங்களை உடைய மேகலை வகைகள்; Waist band. *அரவுக் கிளர்ந்தன்ன விரவுறு பல்காழ் (நற். 366 : 1).*

**பல்மணித்தாமம்** pal-maṇi-t-tāmam, *n.* < id. +.

பலமணிகளாலான மாலை; Gold chain with several gems. *பவழ மாலையும் பன்மணித் தாமமும் (பெருங். 3, 4 : 65).*

**பல்லணம்** pallaṇam, *n.* < *palyāyaṇa.* [K. *pallaṇa.*]

► குதிரைக்கலணை. *பன்னு பல்லண மரும மற்று (கம்பரா. 6, 30, 14 : 2).*

**பல்லியம்** palliyam, *n.*

► தொங்கல். *பல்லியம் என்பது ... தொங்கலும் (அக. நி. 138).*

**பலாக்காய்முருகு** palāk-kāy-muruku, *n.* < *பலாக்காய்* +.

பலாக்காய் வடிவிலான காதணி வகை; A kind of ear-ornament (*Loc.*).

**பவழக்கடகம்** pavaḻa-k-kaṭakam, *n.* < *பவழம்* +.

பவளத்தால் செய்யப்பட்ட வளையல் வகை; Coral bracelet. *பவழக்கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட* (S.I.I. ii, 26).

**பவழத்திரி** pavaḻa-t-tiri, *n.* < id. +.

பவழமாலை வகை; A necklet made of coral. *பத்திக் கடிப்பும் பவழத் திரியும் - முத்து வடமும் முழுமணிக் காசும் (பெருங். 3, 17 : 163).*

**பவழத்துக்கோத்த பவழம்** pavaḻattu-k-kōtta-pavaḻam, *n.* < id. +.
பவழமாலைக் கமைந்த பெரும் பவழத்தின் நடுவமைந்த கட்டுத்துளையின் வழிச்செல்லும் பொற்கம்பியின் முனைநிலை பெற, அப்பெரும்பவழத்தின் அடியில் சிறு பவழம் ஒன்றை இணைத்துக்கட்டி உருவாக்கும் பவழமாலை வகை; A string of bigger and smaller coral beeds stringed alternatively. *பவழத்துக் கோத்த பவழம் ஐம்பதும்* (கல். கலை. அக.).

**பவழப்பல்வளை** pavaḻa-p-palvaḷai, *n.* < id. +.
பவழத்தாலான கைவளை; Bangles made up of coral. *பரியகம் வால்வளை பவழப் பல்வளை* (*சிலப்*. 6 : 93).

**பவழம்** pavaḻam, *n.*
► பவளம். *பைந்நனை அவரை பவழம்கோப்பவும்* (*சிறுபாண்*. 164).

**பவளங்கட்டி** pavaḷa-ṅ-kaṭṭi, *n.* < *பவளம்* +.
கொங்கு வேளாள இனத்தவர் அணிந்துகொள்ளும் பவளத்தாலான மாலை; A sub division of the *Konku vēḷāḷas* wearing coral necklace (E. T. vi, 188).

**பவளத்தாலி** pavaḷa-t-tāli, *n.* < id. +.
தாலி வகை, A kind of *tāli* (*W. D.*).

**பவளத்தாவடம்** pavaḷa-t-tāvaṭam, *n.* < id. +.
► பவளமாலை (H. C. M.).

**பவளம்** pavaḷam, *n.* < *pravāla*.
நகையில் பதிப்பதற்குப் பயன்படும் நவமணியுள் ஒன்றானதும், இளஞ்சிவப்பு நிறமுடையதுமான விலை உயர்ந்த கல்; Red coral, stony axis of the stem of a gorgonian, corallium rubram, one of *nava-maṇi*. *பவளமொடு மணி மிடைந்தனை குன்றம்* (*அகநா*. 14 : 3).

**பவளமணி** pavaḷa-maṇi, *n.* < *பவளம்* +.
பவளத்தாலாகிய கையணி; Red coral bracelet.

**பவளமாலை** pavaḷa-mālai, *n.* < id. +.
பவளத்தாலான கழுத்தணி வகை; Coral necklace (H. C. M.).

**பவளமேகலை** pavaḷa-mēkalai, *n.* < id. +.
பவள மணிகள் கோத்த மேகலை; Waist band with coral beads.

**பவளவடம்** pavaḷa-vaṭam, *n.* < id. +.
1. பவளத்தால் கட்டிய மாலை; A string made of coral. *மணிக்கட்டில் சாத்தின சிறுப் பவளவடமும்* (*திவ். பெரியாழ்*. 1, 9, 2 *வ்யா*).
2. ஆண்கள் இடுப்பில் அணியும் பொன்மணிகள் கோத்த அணிவகை; A waist band for men.

**பவளவளை** pavaḷa-vaḷai, *n.* < id. +.
பவளத்தால் செய்யப்பெற்ற வளையல்; Bangle made up of coral. *பவளவளை செறிந்தாட் கண்டணிந்தாள்* (*பரிபா*. 11 : 101).

**பவித்திர மோதிரம்** pavittira-mōtiram, *n.* < *பவித்திரம்* +.

தருப்பைப் புல்லால் செய்தது போன்ற தோற்றமுடைய பொன்னாலான மோதிர வகை; Finger-ring of gold made in semblance of a *darbha* ring.

**பள்ளித்தொங்கல்** paḷḷi-t-toṅkal, *n.* < *பள்ளி* +.

பொன்னாலாகிய பதக்கம்; Golden pendant (I. M. P. cg. 1104).

**பளிங்குவடம்** paḷiṅku-vaṭam, *n.* < *பளிங்கு* +.

► படிகமணி.

**பளிதமாலை** paḷita-mālai, *n.* < *பளிதம்* +.

கருப்பூரப் பொன்னாலாகிய ஒழுங்கையுடைய திரண்ட மாலை; A thick garland made up of *karpura,* king of gold. *தின் பளித மாலைத் திரள் தாமம்* (*சீவக.* 2919 : 1).

**பற்மம்** paṟmam, *n.* < *padma.*

► பற்மமுழி. *திருக்கொள்கை ஒன்றும் இதன்மேல் பற்மமும் உட்பட* 518 *மாறிபொன் நூற்றொரு கழஞ்சரை* (S.I.I. iii, 211).

**பற்மமுழி** paṟma-muḻi, *n.*

தாமரை மலர் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் நகையின் ஓர் உறுப்பு; A part of the ornament in the form of lotus flower. *ஸஹஸ்ரதாரை சங்கமுழி பற்மமுழி சங்கிலிகை உட்பட எடை எண்பது* (*கல். சொல். அக.*).

**பன்மணித்தாலி** paṉ-maṇi-t-tāli, *n.* < *பல்* +.

பல வகை மணிகள் கொண்ட தாலி வகை; A kind of marriage badge. *மும்மணிக்காசும் பன்மணித்தாலியும்* (*பெருங்.* 5, 9 : 49).

**பன்மணிமாலை** paṉ-maṇi-mālai, *n.* < id. +.

பல்வேறு மணிகள் கோக்கப்பட்ட கழுத்தணி வகை; A necklace with precious stones. *நன்பொன் விரலினுதிலினாற் பன்மணி முத்தும் பவளமும் பைம்பொன்னும் கோத்தா லொப்ப* (*சீவக.* 1652 : 3).

**பன்னிரைத்தாலி** paṉṉirai-t-tāli, *n.* < id. +.

பாம்பின் பல் போன்று பொன்னால் செய்யப்பட்டு நிரலாகக் கோத்த தாலி வகையுள் ஒன்று; A kind of *tāli. பாப்பெயிற் றன்ன பன்னிரைத்தாலி* (*பெருங்.* 2, 7 : 97).

**பன்னீர்ச்செம்பு** paṉṉīr-c-cempu, *n.* < *பன்னீர்* +.

பன்னீர்ச்செம்பு போல் செய்யப்பட்ட ஒரு தாலியுரு வகை; Jewel piece in a *tāli,* shaped like a rosewater sprinkler.

**பனந்தார்** paṉan-tār, *n.* < *பனை* +.

பனம்பூப் போலப் பொன்னால் செய்த கழுத்தணி வகை; Gold necklace resembling a garland of palmyra flowers (W.).

பா

**பாகுவலயம்** pāku-valayam, *n.* < *bāhu* +.

தோளில் அணியும் அணிகலன்; தோள்வளை; Armlet. *பட்ட புரவிக் கவி குரத்தால் பாகு வலயம் சாத்தீரே* (*கலிங்*. 514 : 1).

**பாகுவலையம்** pāku-valaiyam, *n.*

► பாகுவலயம் (S.I.I. xviii, 455).

**பாசமாலை** pāca-mālai, *n.* < *பாசம்* +.

பொற்சரட்டில் கட்டிய இரத்தினங்களின் வரிசை கொண்ட கழுத்தணி வகை; A kind of neck-ornament. *பாசமாலை ... யொன்றிற் கோத்த தாலி பதினேழு* (S.I.I. ii, 225).

**பாசிபந்து** pāci-pantu, *n.* < U. *bāzūband.*

மயில் வடிவில் பாசிக்கொத்து போன்ற அமைப்புடைய தோளணி வகை; An armlet. *கட்டழகன் பாசிபந்து கட்டினான்* (*விறலிவிடு*. 1117).

**பாசிமணி** pāci-maṇi, *n.* < *பாசி* +.

1. கருப்பு நிறச் சிறு மணிகளை உடைய வடம்; A string of small black beads.
2. பச்சை மணிவடம்; Necklace of green, earthen beads.

**பாட்டலாக்குக்கம்மல்** pāṭṭalākku-k-kammal, *n.* < E. *padlock* +.

மகளிர் மாட்டி அணிவதற்குரிய கம்மல் வகை; Women's ear-ornament, resembling a padlock, fastened behind the ear-lobe with a screw.

**பாட்டில்** pāṭṭil, *n.* < *Mhr. pāṭalī.*

பெண்களும் குழந்தைகளும் அணியும் பட்டையான ஒருவகை வளையல்; A kind of flat bracelet worn by women and children (W.) .

**பாட்லா** pāṭlā, *n.*

► பாட்டில் (*S. D.*).

**பாடகம்** pāṭakam, *n.* < *pāṭaka.* [K. *pāḍaga.*]

சிலம்புக்கு மேல் அணியப்படும் மகளிர் கால் அணிகலன் வகை; A kind of Anklet, worn by women. *பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை* (*சிலப்*. 6 : 84).

**பாடவம்** pāṭavam, *n.*

► பாடகம். *காற்பாடவம் கழன்றுபோமோ?* (*Colloq.*).

**பாண்டம்** pāṇṭam, *n.*

விலங்குகளுக்கு அணிவிக்கப்படும் கழுத்தணி; A neck ornament for the cattle.

**பாண்டிற்காசு** pāṇṭiṟkācu, *n.* < *பாண்டில்* +.

மேகலையோடு சேர்த்து அணியப்படும் பொன்னாலான, வட்டவடிவ இடை அணிகலன்; வட்டக்காசு. A waistband with round gold coins. *பொலம்பசும் பாண்டிற்காசு* (*ஐங்குறு*. 310 : 1).

**பாதகடகம்** pāta-kaṭakam, *n.* < *பாதம்* +.

► பாடகம். *பாதகடகம் பாடகம் ஆகும்* (*திவா*. 7 : 55).

**பாதகிண்கிணி** pāta-kiṇkiṇi, *n.* < id. +.

► கிண்கிணி, 1. *பரிபுரம் நூபுரம் பாத கிண்கிணியே* (*பிங்*. 6 : 81).

**பாதச்சுற்று** pāta-c-cuṟṟu, *n.* < id. +.

கால் அணிகலன்; Anklet. *நாற்சாண் உசரத்து அஞ்சாண் பாதச் சுற்றில் மேற்படி உள்க் கருவும்* (*கல். சொல். அக.*).

**பாதசரம்** pāta-caram, *n.* < id. +.

மேற்புறம் பெரிதாகவும் கீழ்ப்புறம் சிறிது சிறுத்தும் குழாய் வடிவில் பொன் அல்லது வெள்ளித் தகட்டால் ஆனதும், காலில் தண்டைக்கு மேலே அணியப்படுவதுமான அணிகலன்; An anklet for women (W.).

**பாதசாயலம்** pāta-cāyalam, *n.* < id. +.

கால் அணிகலன் வகை; An anklet. *பொன்னின் மணியும் பவழமும் முத்தும் ஆக* 2552 *பாதசாயலம் 2ம்* (*கல். சொல். அக.*).

**பாதசாலகம்** pāta-cālakam, *n.* < id. +.

► பாதசாலம். *பரந்த மேகலையுங் கோத்த பாதசாலகமும்* (*கம்பரா*. 1, 21, 22 : 1).

**பாதசாலம்** pāta-cālam, *n.* < id. +.

► பதசாலம். *பாதசாலத்த மென்கால்* (*இரகு. நாட்டுப்*. 48).

**பாதபாசம்** pāta-pācam, *n.* < id. +.

சிலம்பு வகை; An anklet (S.I.I. v, 236).

**பாம்படம்** pāmpaṭam, *n.* < *பாம்பு* +.

கிராமத்துப் பெண்கள் அணியும் கனமான ஒருவகைக் காதணி; நாகபடம்; A kind of ear-ornament (*S. D.*).

**பாம்பணி** pāmpaṇi, *n.* < id. +.

► பாம்படம்.

**பாம்பாழி** pāmpāḻi, *n.* < id. +.

தன் தலையோடு தன் வாலைச் சுருட்டி வட்டமாகப் பாம்பு வைத்துக் கொண்டிருப்பதைப் போல் செய்யப்பட்ட ஒரு மெட்டி வகை; A loe ring in the shape of a snake.

**பாம்புமோதிரம்** pāmpu-mōtiram, *n.* < id. +.

1. நடுவிரலில் அணியும் மோதிரம்; Ring for the middle finger.

2. சுருண்டு கிடக்கும் பாம்பு உருவிலான மோதிர வகை; Ring shaped like a serpent.

**பாம்புவடம்** pāmpu-vaṭam, *n.* < id. +.

► பாம்படம் (*Loc.*)

**பாரம்** pāram, *n.* < *bhāra.*

1. ► குதிரைக்கலணை. *பாரமே கவசம் தோணி பல்லணம் (சூடா.* 11 : 185).
2. ► கவசம். *பாரமும் பரமும் அப்பெயர்ப் பால (திவா.* 7 : 37).

**பால்மணி** pāl-maṇi, *n.* < *பால்* +.

சிறு குழந்தைகளுக்கு அணிவிக்கும் வெள்ளைநிறச் சிறுமணி; Beeds of white china clay or porcelin worn by Children (*W. D.*).

**பால்மணிக்கோவை** pāl-maṇi-k-kōvai, *n.* < id. +.

சங்கு மணிகள் கோத்த குழந்தைகளின் கழுத்தணி வகை; String of shell beads, put on children as an amulet (W.).

**பாலகம்** pālakam, *n.*

► மோதிரம் (*த. மொ. அக.*).

► தோளணி (*த. மொ. அக.*).

**பாலபட்டம்** pāla-paṭṭam, *n.*

நெற்றிச்சுட்டி வகை; Ornament of forehead (*த. நா. அ. ப.* 299).

**பாலமணிக்கோவை** pāla-maṇi-k-kōvai, *n.* < *பாலமணி* +.

பெரும்பாலும் குழந்தைகளுக்கு அணிவிக்கப்படும் சங்குமணி அல்லது வெள்ளைப் பாசிமணிகள் கோத்த மாலை. String of shell beads, put on children as an anklet (W.).

**பாலிகை** pālikai, *n.* < *bālikā.*

ஒருவகைக் காதணி; An ear-ornament. *பாலிகையில் படுகண் ஒன்றும் கொக்குவாய் ஒன்றும்* (S.I.I. ii, 204).

**பாவலி** pāvali, *n.*

காதின் மேற்புறத்தில் அணிந்து கொள்ளும் அணிவகையுள் ஒன்று; An ear-ornament (*பெண். தாலாட்.* 13).

**பாவிலி** pāvili, *n.* < T. *bāvili.* [K. *bāvali.*]

► கத்திரிபாவிலி.

**பாஜிபந்து** pājipantu, *n.*

► பாசிபந்து (*Loc.*).

**பாஹீநாலி** pāhi-nāli, *n.*

ஆண்களின் கையணி வகை; A kind of bracelet for men (*அணி. ஒப். ப.*70).

## பி

**பிங்கலம்** piṅkalam, *n.* < *piṅgala.*

► பொன். *பிங்கலம் பொன்னும் பொன்னின் நிறத்தையும் பேசல் ஆகும்* (*சூடா.* 11 : 25).

**பிங்குசம்** piṅkucam, *n.* cf. *piñcha.*

தலைக்கோலம்; A head ornament. *மணிக்கருங்கதுப் பிற் காந்தட் பிங்குசம்* (*இரகு. நாட்டுப்.* 50).

**பிஞ்சு** piñcu, *n.* cf. *piñcha.* [T. *pinde*, K. M. *piñju.*]

அணிகலன்களில் அமைந்துள்ள சிறு அரும்புக்கட்டு; Small bud shapped work in an ornament. *பிஞ்சும் அரக்கும் உட்பட நிறை* (S.I.I. ii, 162, 69).

**பிஞ்சுக்கடுக்கன்** piñcu-k-kaṭukkaṉ, *n.* < *பிஞ்சு* +.

அரும்புவைத்த காதணி வகை; கடுக்கன்; A kind of ear-ornament.

**பிஞ்ஞகம்** piññakam, *n.* < *piñchaka.*

மகளிர் தலைக்கோலம்; Head ornament worn by women. *பிஞ்ஞகம் தலைக்கோலம்* (*திவா.* 7 : 92).

**பிடிகம்** piṭikam, *n.* perh. *பிடி.*

பிள்ளைகள் அணியும் கைவளை; Child's bracelet. *பிடிகம் என்பது பிள்ளைக் கைவளை* (*திவா.* 7 : 84).

**பிண்டிபத்ரம்** piṇṭipatram, *n.*

மகளிர் அணியும் தலையணி வகை; A kind of head ornament (*அணி. ஒப். ப.* 70).

**பிரகோஷ்டவளையம்** pirakōṣṭa-vāḷaiyam, *n.*

► தோளணி (*த.நா.அ. ப.* 301).

**பிரவாளம்** piravāḷam, *n.* < *pra-vāla.*

► பவளம். *பிரவாளம் துவர் இவை பவளம்* (*திவா.* 6 : 11).

**பிராமணவாளி** pirāmaṇa-vāḷi, *n.* < *பிராமணம்* +.

மகளிர் அணியும் சிறு காதணி வகை; A small ear-ornament of women (*Loc.*).

**பிருட்டகண்டிகை** piruṭṭa-kaṇṭikai, *n.*

தெய்வத் திருமேனிகளின் பின்பக்கத்தில் அணிவிக்கப்படும் ஓர் அணிகலன்; An ornament for the backside of the deities.

**பிருஷ்டகண்டிகை** piruṣṭa-kaṇṭikai, *n.* perh. *pṛṣtha* +.

► பிருட்டகண்டிகை (S.I.I. ii)

**பில்லணை** pillaṇai, *n.*

► பில்லாணி (*S. D.*).

**பில்லாக்கு** pillākku, *n.* < U. *bulāq.*

மூக்கில் தொங்கவிடும் ஓரணி; புல்லாக்கு; A kind of nose pendant.

**பில்லாணி** pillāṇi, *n.* < T. *pillāṇi.*

இணைந்த இரு வட்ட வடிவத்தின் மீது மற்றோர் இருவட்ட வடிவத்தை வைத்தாற் போலமைந்த மெட்டி வகை; Silver ring worn by women on their toes (*Loc.*).

**பில்லி** pilli, *n.*

கால் சுண்டுவிரலுக்குப் பக்கத்து விரலில் அணியும் மெட்டி; Ring for the fourth toe (*W. D.*).

**பில்லை** pillai, *n.* < U. *billa.*
சடைவில்லை; A disc worn on head.

**பிலாக்காய்க் கொத்துமணி** pilākkāy-k-kottu-maṇi, *n.* < பிலா + காய் + கொத்து +.
பரவ மகளிர் அணியும் கழுத்தணி வகை; A kind of necklace worn by *parava* women (*Parav.*).

**பிழம்பா** piḻampā, *n.*
ஒரு வகை அணிகலன்; A kind of ornament. *பன்னு துலைப் பசும் பொன்னால் பயில் பிழம்பா மிசை அணிந்த பொன் நெடுந்தோள் ஆதித்தன்* (*பெரியபு.* 54, 3 : 3).

**பிள்ளைத்தாலி** piḷḷai-t-tāli, *n.* < *பிள்ளை* +.
பரவரில் திருமணமாகாத சிறு மகளிர் கழுத்தையொட்டி அணியும் கழுத்தணி வகை; Necklace worn close to the neck by *parava* girls before marriage (*Parav.*).

**பிள்ளையார் தாலி** piḷḷaiyār-tāli, *n.*
தாலி வகை; A kind of *māṅgalyam* (*W. D.*).

**பிறகுவாளி** piṟakuvāḷi, *n.* < *பிறகு* + prob. *ஆள்.*
பின்புறமாக அணிவிக்கப்படும் அணிவகை; Ornament worn on the back. *பின்பும் பிறகு வாளியுமான அழகை* (*ஈடு,* 8, 8, 9).

**பிறப்பு** piṟappu, *n.* < *பிற-.* [M. *piṟappu.*]
சிறுவிதை போன்று பொன்னால் செய்து கோத்த மகளிரின் முளைத்தாலி; Necklace of small seed-like gold pieces. *காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து வாச* (*திவ். திருப்பா.* 7 : 3).

**பிறை** piṟai, *n.* < id.
சந்திரன் வடிவமாகப் பொன்னால் செய்யப்பட்ட மகளிர் தலையணி வகை; A crescent shaped ornament, worn by women on the head. *தண்ணம் பிறையுந் தலைபெற நிறுத்துக* (*கல்லா.* 14).

**பிறைச்சிந்தாக்கு** piṟai-c-cintākku, *n.* < id. +. T. *cintāku.*
கழுத்தணியின் ஒரு வகை; A kind of neck-ornament (J.).

**பிறைப்பூண்** piṟai-p-pūṇ, *n.* < id. +.
► பிறைவடம். *பிறைப்பூண் அகலத்துப் பெருமகன்* (*பெருங்.* 4, 10 : 25).

**பிறைவடம்** piṟai-vaṭam, *n.* < id. +.
பிறை நிலவின் வடிவாய் அமைந்த பதக்கத்தையுடைய கழுத்தணி வகை; Necklace of crescent-shaped pendants. *பிறைவடஞ் சூடி* (*சீவக.* 171 : 3).

**பின்கொக்கி** piṉ-kokki, *n.* < *பின்* +.
கழுத்தணியின் பின்புறம் அமைந்துள்ள மூட்டுவாய்; Hook of a necklace (W.).

**பின்றாலி** piṉṟāli, *n.* < id. +.
பெரிய முகப்புடைய முத்தாரமாகச் செய்து நவமணிகள் பதித்ததும் பின்புறம் முதுகு மறையத் தொங்குவதுமான கழுத்தணி வகை; A kind of necklace hanging over the back. *நவரத்தினங்களைக் கோத்து முதுகு மறையவிடும் பின்றாலி* (*சிலப்.* 6 : 102, *அரும்.*).

**பின்னல்** pinnal, *n.* < *பின்னு-.*

► அரைஞாண். *பின்னல் துலங்கும் அரசிலையும் (திவ். பெரியாழ்.* 1, 7, 3 : 2).

**பின்னல்மோதிரம்** pinnal-mōtiram, *n.* < *பின்னல்* +.

மோதிர வகை; A kind of ring (W.).

**பின்னுக்கோவை** pinnu-k-kōvai, *n.*

ஒரு வகைச் சங்கிலி; A kind of chain. *தானைத் தூக்கம் பின்னுக்கோவைத் தலையில் மொட்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு (கல். சொல். அக.).*

**பினாகம்** pinākam, *n.* < *pināka.*

► மணிமாலை (*யாழ். அக.*).

## பீ

**பீதகம்** pītakam, *n.* < *pītaka.*

► பொன். *பின்னல் துலங்கும் அரசிலையும் பீதகச் சிற்றாடையொடும் (திவ். பெரியாழ்.* 1, 7, 3 : 2).

**பீதம்** pītam, *n.* < *pīta.*

► பொன். *பீதம்மாடை ... உடலே பண்டம் (சூடா.* 6 : 2).

**பீலி** pīli, *n.* [K. *pilli.*]

1. மகளிர் கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில் அணியும் மெட்டி வகை; Toe-ring of a woman (*சிலப்.* 6 : 83, *அடியார்.*).

2. காலின் ஐந்து விரல்களிலும் வளையங்களை அணியும் மேற்பகுதியில் இணைக்கும் பட்டையான சங்கிலியை உடைய வெள்ளியணி; An ornament set of five toe rings and an anklet all connected with silver chains (*W. D.*).

3. மூன்றாவது கால்விரலுக்குப் போடும் அணி; Ring for the third toe (*W. D.*).

4. ► பொன். *பீலியென்பது ... பொன்னுமாலவட்டமும் ... ஏழ்பெயர் (அக.நி.* 2528).

## பு

**புகிடி** pukiṭi, *n.* [T. *bugaḍa*, K. *baguḍi.*]

பெண்கள் காதின் மேல்பகுதியில் அணியும் காதணி வகை; A golden ear-pendant worn by women on the top of the helix (W.).

**புசங்கக்கடகம்** pucaṅka-k-kaṭakam, *n.* < *புசங்கம்* +.

சுருண்டு கிடக்கும் பாம்பு வடிவமாகப் பொன்னால் செய்யப்பெற்ற காலணிகலன் வகை; தண்டை; Serpant shaped anklet.

**புட்டில்** puṭṭil, *n.*

குதிரையின் காலில் பூட்டப்படும் ஒலியெழுப்பவல்ல கெச்சை என்னும் அணிவகை; Tinkling anklet of a horse. *அரி பெய் புட்டில் ஆர்ப்பப் பரி சிறந்து (அகநா.* 122 : 19).

**புட்பராகம்** puṭparākam, *n.* < *puṣpa* +.

நவமணியுள் ஒன்றானதும், வெள்ளை அல்லது வெளிர் மஞ்சள் நிறத்தில் இருப்பதுமான விலையுயர்ந்த கல்; Topaz, one of *nava-maṇi* (*பதார்த்தண.* 1185).

**புணர்ச்சி** puṇarcci, *n.* < *புணர்-.*

அணிகலப்பொது; Ornaments. *புணர்ச்சிகள் பலவு மெல்லையில் பொருள்... இட* (*பெரியபு.* 7, 38 : 2).

**புத்திர தீபமணி** puttira-tīpa-maṇi, *n.* < *புத்திரதீபம்* +.

காளாமுகர் மாலையாகக் கழுத்தில் அணியும் ஒருவகை மணி; A kind of beads stringed into a necklet and worn by *Kāḷāmukar. காளாமுகர்க்குப் ... புத்திரதீபமணிகள் ... மூர்த்தியாய்* (*சி. சி. பாயி.* 1, *ஞானப்.*).

**புரி** puri, *n.* < *புரி-.*

முத்துகளாலான மாலை; Garland, as of pearls. *புரிமணி சுமந்த பொற்பூண்* (*சீவக.* 619 : 2).

**புரிவளை** puri-vaḷai, *n.* < *புரி* +.

இரு கம்பிகளை முறுக்கியவாறு செய்யப்பட்ட வளையல்; Twisted bracelet. *புகலா தொழுகும் புரி வளையார் மென்றோன்* (*பு. வெ.* 10, *காஞ்சிப்.* 1).

**புருடராகம்** puruṭarākam, *n.* < *puṣparāga.*

► புட்பராகம். *மரகதம் விட்டு உயர் புருடராகம்* (*திருவாலவா.* 25, 21 : 2).

**புல்லகம்** pullakam, *n.*

முன்நெற்றியில் அணியப்படும் தலைக்கோலத்தின் ஓர் உறுப்பாகிய மகளிர் அணி வகை; Woman's ornament for the forehead, part of *talai-k-kolam*. *தொய்யகம் புல்லகந் தொடர்ந்த தலைக்கணி* (*சிலப்.* 6 : 107).

**புல்லாக்கு** pullākku, *n.* < U. *bulāq.*

பெண்கள், மூக்கின் நுனியில் இரு துளைகளுக்கு இடையில் தொங்கவிடும் அணி; Nose pendant set with precious stones.

**புல்லிகை** pullikai, *n.* < *புல்லு-.*

காதிலிருந்து தொங்கும் வகையில் அமைக்கப்பெற்ற அணிவகை; Ear pendant.

**புல்லிகைகண்டநாண்** pullikai-kaṇṭa-nāṇ, *n.* < *புல்லிகை* +.

பதக்கம் அமைந்த கழுத்துச் சங்கிலி; Neck chain with pendant.

**புல்லிகைச்சாமரை** pullikai-c-cāmarai, *n.* < id. +.

► புல்லிகை. *ஞால் இயல் மென் காதிற் புல்லிகைச் சாமரை* (*கலித்.* 96 : 11).

**புலாக்கு** pulākku, *n.* < U. *bulāq.*

► புல்லாக்கு. *நத்துப் புலாக்கு மூக்குத்தி விசித்திர* (*முத்தை. குறவ.* 30).

**புலித்தொடர்** puli-t-toṭar, *n.* < *புலி* +.

சங்கிலி வகை; A kind of chain. *புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்* (*முல்லைப்.* 62).

**புலிநகத்தாலி** puli-naka-t-tāli, *n.* < id. +.

புலி நகங்களைப் பொன்தகட்டில் பொதித்து அணியும் கழுத்தணி; A neck chain with two tiger nails forming a pendant.

**புலிநகம்** puli-nakam, *n.* < id. +.

புலியின் நகத்தைக் கோத்துக் குழந்தைகளுக்குக் காப்பாக அணியும் ஓரணி; A necklet with a pendant of tiger's claw, often used as a charm for a child.

**புலிப்பல்தாலி** puli-p-pal-tāli, *n.* < id. +.

► புலிப்பற்றாலி.

**புலிப்பற்றாலி** puli-p-paṟṟāli, *n.* < id. +.

► புலிநகத்தாலி. *புலிப் பற்றாலிப் புன்றலைச்சிறார்* (புறநா. 374 : 9).

**புலிமுகக்கடுக்கன்** puli-muka-k-kaṭukkaṉ, *n.* < *புலி* + *முகம்* +.

புலியின் முகத்தைப் போன்று அமைந்த மகளிர் காதணி வகை; A kind of ear-ornament worn by women, resembling a tiger's face (W.).

**புலிமுகப்பணி** puli-muka-p-paṇi, *n.* < id. +.

► புலிமுகக்கடுக்கண் (*யாழ். அக.*).

**புளகச்சூழி** puḷaka-c-cūḻi, *n.*

முன்னுச்சியிலிருந்து தொங்குமாறு அணியும் அணி; An ornament worn on the forehead by women and children. *முற்றிய புளகச் சூழி முகம் புதைத்து இலங்க வீழ்த்தும்* (சூளா. 8, 105 : 2).

**புறத்துடர்** puṟa-t-tuṭar, *n.* perh. *புறம்* +.

உட்கழுத்து நகைகளுக்கு வெளியே தொங்கும் சங்கிலி; Long chain.

**புறத்தொடர்** puṟa-t-toṭar, *n.* < id. +.

அணிவகை; A kind of jewel. *புறத்தொடர் படுகண்ணும் கள்ளிப் பூவுங் கொக்குவாயும் உட்பட ஒன்று* (S.I.I. ii, 2).

**புனை** puṉai, *n.* < *புனை-*.

அணிகலப்பொது; Ornament, jewel. *கைபுனை புனைந்தும்* (கல்லா. 84, 3).

**புனையல்** puṉaiyal, *n.* < id. +.

மாலை; Necklace. *உருத்திரமாமணிப் புனையல்* (உபதேசகா. சிவநாம. 173).

**புஜகங்கணம்** puja-kaṅkaṇam, *n.* < *bhuja* +.

► வாகுவலயம்.

**புஜகீர்த்தி** puja-kīrtti, *n.*

வீரர்கள் அணியும் தோளணி வகை; A bracelet worn on the upper arm by the distinguished warriors (*மதி. களு.* i, 87).

**புஷ்பராகம்** puṣparākam, *n.* < *puṣpa-rāga*.

► புட்பராகம் (*யாழ். அக.*).

## பூ

**பூ** pū, *n.* < *பூ-*.

யானையின் நெற்றிப்பட்டம்; Ornamental plate on the forehead of an elephant. *பூ நுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்* (புறநா. 12 : 2).

**பூக்கடுக்கன்** pū-k-kaṭukkaṉ, *n.* < பூ +.

பாவர் அணியும் மலர் வடிவிலான காதணி வகை; A kind of ear-ring worn by parava women, which looks like a flower (*Parav.*).

**பூசணம்** pūcaṇam, *n.* < *bhūṣaṇa.*

► பூடணம் (*யாழ். அக.*).

**பூசணிக்காய்க்கொத்துமணி** pūcaṇi-k-kāy-k-kottu-maṇi, *n.* < *பூசணி* + *காய்* +.

பரவ மகளிர் அணியும் பூசணிக்காய் வடிவிலான மணிகளைக் கொண்ட கழுத்தணி வகை; Necklace having pumpkin shaped beads.

**பூசாந்திரக்கடுக்கன்** pūcāntira-k-kaṭukkaṉ, *n.* < *பூசாந்திரம்* +.

► பஞ்சபூசாவந்தம் (W.).

**பூசாந்திரம்** pūcāntiram, *n.* perh. *puṣya* + *bandha.*

► பஞ்சபூசாவந்தம்.

**பூசாவந்தம்** pūcāvantam, *n.* < id.

► பஞ்சபூசாவந்தம் (W.).

**பூட்சி** pūṭci, *n.* < *பூண்-.*

அணிகலப்பொது, In general ornament, jewel (*கல்லா.* 91, 9, *உரை*).

**பூட்டு** pūṭṭu, *n.* < *பூட்டு-.*

பெண்கள் நெற்றியில் அணிவதும் வட்டவடிவிலானதுமான தலையணி; A head ornament worn by women. *அளகபந்தி பூட்டிய பூட்டும்* (*கம்பரா.* 1, 21, 5 : 4).

**பூடணம்** pūṭaṇam, *n.* < *bhūṣaṇa.*

► அணிகலன். *பொன்னணி பூடணம்* (*திருமந்.* 2289 : 1).

**பூடி** pūṭi, *n.*

காதின் மேல் பகுதியில் மகளிர் அணியும் பொன் அணிவகை; Gold ear-ornament worn at the top of the helix by women (*S. D.*).

**பூண்** pūṇ, *n.* < *பூண்-.* [T. *ponnu*, M. *pūṇ.*]

1. ► அணிகலன். *நுண்பூணாகம் வடுக்கொள முயங்கி* (*மதுரைக்.* 569).
2. ► கிம்புரி. *தாங்கி கிம்புரி கோளகை பூணே* (*பிங்.* 6 : 103).

**பூண்கடைப்புணர்வு** pūṇ-kaṭai-p-puṇarvu, *n.* < *பூண்* +.

அணிகலனில் அமைந்துள்ள கொக்கி; Hook of a jewel. *கடையும் கயிலும் பூண்கடைப் புணர்வே* (*திவா.* 7 : 63).

**பூணாரம்** pūṇāram, *n.* < *பூண்-* +.

மார்பில் அணியப்படும் மணி மாலை; Necklace of gems. *தேவர்கோன் பூண் ஆரம் தென்னார் கோன் மார்பினவே* (*சிலப்.* 17, *உள்வரி.* 1 : 2).

**பூரகம்** pūrakam, *n.* < *pūraka.*

மகளிர் விரலணி வகை; A variety of ring worn by females (*அணி. ஒப். ப.* 71).

**பூரப்பாளை** pūra-p-pāḷai, *n.*

தலைக்கோலத்தில் ஓர் உறுப்பு; தலைப்பாளை; A piece in a women's head-ornament. *வலம் புரிச்சங்கும் பூரப்பாளையும்* (*சிலப்.* 6 : 106, *அடியார்.*).

**பூரானட்டிகை** pūrāṉ-aṭṭikai, *n.* < *பூரான்* +.

பூரான் வடிவத்தில் அமைந்த உட்கழுத்து அட்டிகை வகை; A kind of close-fitting necklace.

**பூரி** pūri, *n.* < *bhūri.*

▶ பொன். *பசும்பூரி சேர்த்தி* (*கம்பரா.* 6, 39. 1 : 1).

**பூரிபத்திரம்** pūri-pattiram, *n.*

மகுட உறுப்பு; Ornamental filled of a crown (*Loc.*).

**பூரிமம்** pūrimam, *n.*

தோளிற்கு மேலே அணியும் அணிவகை; An ornament worn on the shoulders.

**பூரியம்** pūriyam, *n.* < *bhūri.*

▶ பொன். *பூரி, பூரியமும் பிங்கலமும் பொன்* (*நாமதீப.* 377).

**பூனைக்காய்ச்சிமணி** pūṉai-k-kāycci-maṇi, *n.* < *பூனைக்காய்ச்சி* +.

குறவர் கழுத்தில் அணியும் மணிவகை; A bead used in ornaments by *kuṟavas* (*Loc.*).

**பூஷணம்** pūṣaṇam, *n.* < *bhūṣaṇa.*

▶ பூடணம்.

**பெட்டிமோதிரம்** peṭṭi-mōtiram, *n.* perh. *பெட்டி* +.

மோதிரவகை; A kind of ring (*E. D.*).

## பெ

**பெரியகொப்பு** periya-koppu, *n.* < *பெரிய* +.

காதின் மேற் பக்கத்தில் அணியும் அரச இலை வடிவிலான அணிவகை; An ornament worn on the upper ear in the form of a pipal leaf (*W. D.*).

**பெருகு** peruku, *n.*

அணிகல வகை; An ornament. *பெருகு பூணே பேரணிகலமாம்* (*அக. நி.* 2634).

**பெருஞ்சூட்டு** peru-ñ-cūṭṭu, *n.* < *பெருமை* +.

தலையணியின் ஒரு வகை; A kind of head ornament (*பிங்.* 6 : 104).

**பெரு விரல் சுற்று** peru-viral-cuṟṟu, *n.* < id. +.

▶ கால்மோதிரம்.

## பே

**பேசரி** pēcari, *n.* < U. *bēsari.*

எட்டுக்கல்லால் அமைந்த பொன்னாலான மூக்கணி வகை; A kind of nose-screw (*N. D.*).

**பேட்டு** pēṭṭu, *n.* < T. *pēṭu.*

ஒன்றுக்கு மேற்பட்ட இழைகளால் செய்யப்பட்டதும், கழுத்தில் அல்லது இடுப்பில் அணியப்படுவதுமான சரடு; String, as of a necklace waist-cord containing more than one strand (*Loc.*).

**பேதை பாதம்** pētai-pātam, *n.* perh. பேதம் +.

தெய்வத்தின் காலில் அணியும் அணிவகை; An ornament for the leg of an idol. *திருக்கழற்கீழிடும் பேதைபாதமும்* (S.I.I. viii, 39).

**பேரணி** pēr-aṇi, *n.* < பெரு-மை +.

1. ► பேரணிகலம். *மதாணி ஆரம் பெரும் பூண் பேரணி* (*பிங்*. 6 : 106).

2. யானையின் தந்தத்தில் அணியும் அணிவகை; Ornamental ring put on the tuscs of elephants. *பேரணி இலங்கொலி மருப்பிற் களிறும்* (*பரிபா*. 13 : 25).

**பேரணிகலம்** pēr-aṇi-kalam, *n.*

மார்பில் அணியக்கூடிய பெரும்பதக்கம்; A grand necklace with pendant on the chest. *பேரணிகல மணிந்த முலையாரும்* (*சீவக*. 2340 : 3, *உரை*).

**பேராரம்** pēr-āram, *n.* < பெரு-மை +.

சகசிரதாரை எனும் நீண்ட வடிவிலான முத்துமாலை; A long chain of pearls. *நிலவுவீசு பேரார நிபுடமாலை* (*தக்கயாகப்*. 106).

## பொ

**பொகடி** pokaṭi, *n.* cf. பூடி. [K. *bugaḍi.*]

மகளிர் காதணி வகை; A kind of ear-ornament. *காதிற் பொகடி யொருசோ டொழிய* (*விறலிவிடு*. 830).

**பொட்டு** poṭṭu, *n.* [T. K. *boṭṭu*, M. *poṭṭu.*]

கழுத்தில் அணியும் பொன்னால் செய்யப்பட்ட ஒருவகைத் தாலி உரு; Gold ornament in the shape of small metal cups strung together and worn round by the neck. *அரக்கியர் கட்டிய பொட்டுகள் தொட்டறு பட்டிடும்* (*இராமநா*. *சுந்*. 18).

**பொட்டுக்கருகல்மணி** poṭṭu-k-karukal-maṇi, *n.* < பொட்டு +.

திருமணத்தின் அடையாளமாகத் தெலுங்கு இனப் பெண்டிர் அணியும் கறுப்பு மணிகள் கோத்த ஒருவகைத் தாலி, String of black beads and discs, worn by girls and women, used by Telugus as a marriage badge also.

**பொட்டுக்காறை** poṭṭu-k-kāṟai, *n.* prob. < id. +.

மகளிர் அட்டிகை வகை; A kind of neck ornament. *பொட்டுக்காறை யெந்த ஈனுவன் வீட்டில் இருக்குதோ* (*விறலிவிடு*. 701).

**பொட்டுத்தாலி** poṭṭu-t-tāli, *n.* < id. +.

பொட்டு வடிவான திருமாங்கலியம்; Marriage badge with discs or small cups strung together (*W. D.*).

**பொடிநகை** poṭi-nakai, *n.* < *பொடி* +.

அணிகலன்; Jewel or ornament, with inferior alloy used largely in soldering or in setting precious stones (*Loc.*).

**பொத்தானட்டிகை** pottāṉ-aṭṭikai, *n.* < *பொத்தான்* +.

கழுத்தணி வகை; A kind of necklet (*Loc.*).

**பொருள்** poruḷ, *n.* prob. *பொரு-*. [K. *poruḷu*, M. *poruḷ*, Tu. *porlu.*]

▶ பொன். *பொருளோடு அரியே ... பொன் எனப்படுமே (திவா. 6 : 1).*

**பொலம்** polam, *n.* < *பொன்-*.

▶ பொன். *பொலம்பூண் வேந்தர் (பதிற்றுப். 64 : 2).*

**பொலம் பூந்தும்பை** polam-pū-n-tumpai, *n.* < *பொன்* +.

அரசர்கள் தம் படையின் சிறந்த வீரர்களுக்கு அளித்த தலையணியாகிய பொன்னால் செய்த தும்பைப் பூ; The medals given to warriors in ancient times before on great war. *புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை (மதுரைக். 737).*

**பொலிவு** polivu, *n.* < *பொலி-*. [*T. polpu.*]

▶ பொன். *பொலிவே பொன்னும் பொலிவு மிருபேர் (அக. நி. 2686).*

**பொற்கச்சு** poṟ-kaccu, *n.* < *பொன்* +.

பொற்கம்பியால் செய்து மார்பில் அணியும் கச்சு வடிவமான ஒரு பொன்னணி; A kind of gold brassiere. *பசும்பொற் கச்சை பத்தியிற் குயின்ற (பெருங். 2, 6 : 142).*

**பொற்கசை** poṟ-kacai, *n.* < id. +.

▶ பொற்கம்பி (*யாழ். அக.*).

**பொற்கம்பி** poṟ-kampi, *n.* < id. +.

தங்கத்தாலான கம்பி; Gold wire. *பொற்கம்பியினை யொத்த ... நரம்பினது (சிறுபாண். 34, உரை).*

**பொற்காசு** poṟ-kācu, *n.* < id. +.

பொன்னாலான நாணயம்; Gold coin. *காணம் பொற்காசு (திவா. 6 : 5).*

**பொற்காரை** poṟ-kārai, *n.* < id. +.

பொன்னால் செய்யப்பட்ட கழுத்தணி வகை; A gold necklet. *இக்கோயில் ஆடவலாற்கு சாத்த இட்ட பொற்காறை இரண்டினால்* (S.I.I. viii, 722).

**பொற்குவளை** poṟ-kuvaḷai, *n.* < id. +.

குவளைப்பூ வடிவில் பொன்னால் *செய்யப்பட்ட* காதணி *வகை*; An ear ornament in the form of nelumbo.

**பொற்சரடு** poṟ-caraṭu, *n.* < id. +.

பொற்கம்பியால் பின்னிய கழுத்தணி; Necklace made by plaiting gold threads. *விளங்கு பொற்சரட்டில் கோத்த பெருகு ஒளி முத்தின் தாமம் (பெரியபு. 28, 1210 : 3).*

**பொற்சூட்டு** por-cūṭṭu, *n.* < id. +.

தங்கத்தாலான நெற்றிப்பட்டம்; A golden plate worn on the forehead. *செம்பொற் சூட்டொடு கண்ணி காதல் தோழர்கட்கு அருளி (சீவக.* 2569 : 2).

**பொற்பட்டி** por-paṭṭi, *n.* < id. +.

ஆடை நெகிழவிடாதபடி இடையில் அணிந்திருக்கும் ஒட்டியாணம்; Waist band.

**பொற்பின்னல்** por-pinnal, *n.* < id. +.

இடுப்பில் அணியும் பொற்கம்பியினால் பின்னிய அணிகலன்; அரைஞாண்; Waist-band woven of gold threads. *திருவரையில் சாத்தின பொற்பின்னலும் (திவ். பெரியாழ்.* 1, 7, 3 *வ்யா. ப.* 142).

**பொற்புரி** por-puri, *n.* < id. +.

பொன்னாலான வடம்; Twisted gold cards worn as a chain. *முத்துத் தாமமொடு பொற்புரி யணிந்து (பெருங்.* 2, 5 : 11).

**பொற்பூ** por-pū, *n.* < id. +.

பாணர் சூடிக்கொள்வதற்கு அரசர் அளித்த தாமரையுருவான பொன்னணி வகை; Ornamental lotus flower, made of gold and presented to a bard by a king. *பாணன் பொற்பூச்சூடல் (பொருந.* 159, *அடிக்.*).

**பொற்பூணூல்** por-pūṇūl, *n.* < id. +.

பொன்னால் நூல் வடிவில் செய்யப்பட்ட அணிவகை; உபவீதம்; Sacred thread of gold, used as an ornament (*Loc.*).

**பொற்றாமரை** porrāmarai, *n.* < id. +.

► பொற்பூ. *பைம் பொற்றாமரை பாணர்ச்சுட்டி (பதிற்றுப்.* 48 : 1).

**பொற்றாரை** porrārai, *n.* < id. +.

► பெற்றோரை (*சீவக.* 2132 : 1 *பி-ம்.*).

**பொற்றேரை** porrērai, *n.* < id. +.

► பெற்றோரை (*சீவக.* 2132 : 1 *பி-ம்.*).

**பொற்றோரை** porrōrai, *n.* < id. +.

மெல்லிய பொன்னிழைகளால் ஆன இடையணி; Thread-like waist ornament made of gold. *அல்குற் பொற்றோரை மின்ன (சீவக.* 2132 : 1).

**பொறி** pori, *n.* < *பொறி-*.

1. ► சீதேவி. *ஐம்பால் வகுத்த கூந்தல் செம்பொறி திருநுதல் பொலிந்த தேம் பாய் ஓதி (நற்.* 160 : 5).

2. ► நெற்றிப்பட்டம். *வேந்தன் பெயராற் பொறியும் பெற்றான் (சீவக.* 1792 : 1).

3. மோதிர வகை; A kind of ring. *பொறியெனும் பெயரே ... ஐம்புலனும் மோதிரமும் எழுத்துமாம் (வடமலை.* 1142).

**பொன்** pon̲, *n.*

1. அணிகலன்; Ornament. *கடலுடுத்த காரிகை பொன்னணிந் திருந்தென (சீவக.* 1250 : 4).

2. ▶ திருமங்கலியம். *பொன்னைக் கொணர்ந்து ... நீ பொன்புனைந் ததுவே (தஞ்சைவா.* 359).

3. சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூனதம் என்னும் நால்வகைப்பட்ட தங்கம்; Gold of which there are four kinds viz., *cātarūpam, kil̠iccir̲ai, āṭakam, cāmpūn̲atam. பொன் செய் புனை இழை கட்டிய மகளிர் (குறுந்.* 21 : 2).

**பொன்ஞாண்** pon̲-ñaṉ, *n.* < *பொன்* +.

1. பொன் கம்பிகளை முறுக்கிச் செய்யப்பட்ட சங்கிலி; Thread like chain.

2. பொன்னால் செய்யப்பட்ட அரைஞாண்; The waist thread made up of gold. *ஏர் படக் கிடந்த பொன் ஞாண் இருள் கெட விழிப்ப (சீவக.* 2280 : 3).

**பொன்மணி** pon̲-maṇi, *n.* < id. +.

பொன்மணிகள் பல கோத்துச் செய்யப்பட்ட கழுத்தணி வகை; Necklace of gold beads. *பொன்மணி யொலிப்ப (திவ். பெரியதி.* 1, 7, 1 : 1).

**பொன்மணிமாலை** pon̲-maṇi-mālai, *n.* < id. +.

▶ பொன்மணி.

**பொன்மாலை** pon̲-mālai, *n.* < id. +.

கழுத்தணி வகை; A kind of gold Necklace.

**பொன்முடி** pon̲-muṭi, *n.* < id. +.

▶ கிரீடம் (*கயா.*).

**பொன்வாகை** pon̲-vākai, *n.* < id. +.

பண்டைய வீரர்கள் வெற்றியின் அடையாளமாகத் தலையில் சூடிய பொன்னாலான வாகைமலர்; Gold medals resembling *vākai* flower given to soldiers after a great victory by the king in ancient times.

**பொன்னரி** pon̲-n̲-ari, *n.* < id. +.

கிண்கிணி முதலியவற்றினுள் உள்ளிடும் பொற்பரல்; Bead of gold inside a tinkling ornament. *பொன்னரிய கிண்கிணியும் (சீவக.* 2921 : 3).

**பொன்னரிமாலை** pon̲-n̲-ari-mālai, *n.* < id. +.

1. பொன்னால் செய்யப்பட்ட தலையணி வகை; A golden chain worn on the forehead perpendicularly beneath the hair. *மின்னிருங் கூந்தன் மேதகப் புனைந்த பொன்னரி மாலையை (பெருங்.* 2, 40 : 349-350).

2. ▶ பொன்மாலை. *தோளிற் றோன்றும் பொன்னரி மாலை (கம்பரா.* 6, 16, 5 : 3).

**பொன்னரியமாலை** pon̲-n̲-ariya-mālai, *n.* < id. +.

▶ பொன்னரிமாலை (*யாழ். அக.*).

பொன்னுருட்டு poṉ-ṉ-uruṭṭu, *n.* < id. +.
வேலைப்பாடுகள் ஏதுமின்றி உருட்டாயமைந்த பொன்மோதிரம்; Plain gold ring, hoop of gold (W.).

பொன்னுருவிமாலை poṉ-n-uruvi-mālai, *n.* < id. + உருவு- +.
கழுத்தணி வகை; A kind of necklace. *பொன்னுருவிமாலைதனைக் கழற்றி யெறிவேன்* (கோவ. க. 18).

பொன்னூல் poṉṉūl, *n.* < id. +.
1. பல அடுக்குகளாய் அமைந்த தங்கள் சங்கிலிகளால் ஆன கழுத்தணி வகை; Gold necklace of several strands.
2. ► பொற்பூணூல். *புடையார் பொன்னூலினை* (*திவ். திருவாய்.* 3, 7, 4 : 2)
3. ► பொற்கம்பி (S.I.I. ii, 156, 42).

பொன்னோலை poṉ-ṉ-ōlai, *n.* < id. +.
மகளிர் காதணி வகை; Gold ear-ring for a women. *பொன்னோலை வட்டம் பொழிந்து மின்னுகுப்ப* (*சீவக.* 677 : 2).

போ

போங்கு pōṅku, *n.* < T. *pōṅgu.*
► கடுக்கன் (*விறலிவிடு.* 369).

போஞ்சி pōñci, *n.* [ K. *pōñce.*]
கைவளையல் வகை; A kind of wristlet.

ம

மகரக்குழை makara-k-kuḻai, *n.* < *மகரம்* +.
► மகரகுண்டலம். *மகரக் குழை மறித்த நோக்கு* (*திணை. நூற்.* 77 : 4).

மகரகண்டிகை makara-kaṇṭikai, *n.* < id. +.
நாயகமணியின் இருபுறங்களிலும் பூட்டுவாயில் மகரமீன் வடிவிலானதும் ஆடவர்களுக்கு உரியதுமான கழுத்தணி; Necklace with fish shaped hook, worn by males.

மகரகுண்டலம் makara-kuṇṭalam, *n.* < id. + *kuṇḍala.*
விழித்த கண்களையுடைய சுறா மீன் வடிவிலான காதணி வகை; Fish shaped ear-ring. *செயிர் மகரகுண்டலமும்* (*சீவக.* 168 : 3).

மகரப் பகுவாய் makara-p-pakuvāy, *n.* < id. +.
திறந்த வாயுடன் கூடிய சுறா மீனின் வடிவமையச் செய்த தலையணி வகை; A head ornament shaped like the open-mouthed shark. *மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து* (திருமுரு. 25).

மகரம் makaram, *n.* < *makara.*
1. ► மகரகுண்டலம் (S.I.I. ii, 220, 7).
2. ► குறங்கு செறி. *மாழைகொண் மணிமகரங் கௌவிவீற் றிருந்தனவே* (*சீவக.* 174 : 4).

**மகரவலயம்** makara-valayam, *n.* < id. +.

► மகரப்பகுவாய். *மகரவலய மணிதிகழ் நுதலியர்* (*பரிபா.* 10 : 77).

**மகரவாய்** makara-vāy, *n.* < id. +.

► மகரப்பகுவாய். *பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை* (*கலித்.* 54 : 6).

**மகரவாய்மோதிரம்** makara-vāy-mōtiram, *n.* < id. +.

மகரமீனின் வாய்வடிவிலானதும் கால் விரலில் அணியப்படுவதுமான வகை; Toe-ring in the shape of the mouth of a shark. *மகரவாய் மோதிரம், பீலி, கான்மோதிர முதலியன* (*சிலப்.* 6 : 83, *அடியார்.*).

**மகரிகை** makarikai, *n.* < *makarika.*

1. அணி முதலியவற்றில் அமைந்த சுறாமீன் வடிவு; The figure of shark, as in ornament. *மகரிகை வயிர குண்டலமலம்புந் ... தோள்புடை வயங்க* (*கம்பரா.* 5, 3, 78 : 2).

2. ► கிம்புரி. *வழியும் மதியத்தின் வகிர் நிகர் பணை மருப்பினிடை மகரிகை தரித்த மதமா* (*வில்லி.* 5, 8, 22 : 4).

**மகிடம்** makiṭam, *n.* < *mahiṣa.*

► கிரீடம். *விக்கிரமபாகுவின் மகுடமும்* (S.I.I. iv, 555).

**மகுடம்** makuṭam, *n.* < *makuṭa.*

1. அதிகாரத்தின் சின்னமாக அரசன், அரசி ஆகியோர்தம் தலையில் அணிந்துகொள்ளும் முடி; கிரீடம்; Crown. *அரக்கன்றன் மகுடம்* (*கம்பரா.* 6, 14, 245 : 4).

2. பெண்கள் அணிந்து கொள்ளும் காதணி வகை; An ear ornament worn by women (J).

**மங்கல்யம்** maṅkalyam, *n.*

► மங்கலியம். *சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரண* (*கந்தரலங்.* 21 : 3).

**மங்கல்லியம்** maṅkalliyam, *n.* < *maṅgalya.*

► மங்கலியம்.

**மங்கலக் கடிப்பு** maṅkala-k-kaṭippu, *n.* < *மங்கலம்* +.

ஒரு வகைக் காதணி; A kind of ear ring. *மைவிரி குழலினாளை மங்கலக் கடிப்புச் சேர்த்தி* (*சீவக.* 488 : 2).

**மங்கலசூத்திரம்** maṅkala-cūttiram, *n.* < *maṅgala* +.

திருமாங்கலியம் கோக்கப்பட்ட சரடு; Twisted thread in which the *tāli* is strung.

**மங்கலநாண்** maṅkala-nāṇ, *n.* < *மங்கலம்* +.

► மங்கலசூத்திரம். *நிறைநெடு மங்கல நாணோ* (*கம்பரா.* 1, 3, 2 : 1).

**மங்கலப்பூண்** maṅkala-p-pūṇ, *n.*

திருமாங்கல்யம்; Marriage badge. *பண்பினாளை நல் மங்கலப் பூண் துகிலொடு நயந்து சாத்தி* (*வில்லி.* 1, 5, 94 : 2).

**மங்கலம்** maṅkalam, *n.* < *maṅgala.*

► தாலி, 1. *மற்றை நல்லணிகள் காணுன் மங்கலம் காத்த மன்னோ* (*கம்பரா.* 5, 4, 35 : 4).

**மங்கலவணி** maṅkala-vaṇi, *n.* < *மங்கலம்* +.

1. திருமணத்தின் அடையாளமாக மணமகன் மணமகளின் கழுத்தில் அணிவிக்கும் தாலி; Marriage badge. *அகலுண் மங்கலவணி யெழுந்தது* (*சிலப்.* 1 : 47, *அரும்.*).

2. ஆண்கள் மங்கலக்குறியாக அணியும் வெள்ளணி; White cloth or ornament, worn auspicious occasions by men. *மங்கல வணியினர்* (*சீவக.* 603 : 1).

**மங்கலியசூத்திரம்** maṅkaliya-cūttiram, *n.* < *maṅgalya* +.

► மங்கலசூத்திரம். *மங்கல சூத்திரத்தை யணிந்த மகளிருடனே* (*புறநா.* 127 : 5, *உரை*).

**மங்கலியம்** maṅkaliyam, *n.* < *maṅgalya.*

► தாலி. 1.

**மஞ்சரி** mañcari, *n.* < *mañjari.*

► மணிமாலை (*அணி. ஒப். ப.* 71).

**மஞ்சிகை** mañcikai, *n.*

பொன்னாலான காதணி வகை; An ear ornament. *மஞ்சிகை துளைச்சிறு காதினுட்டுளங்க* (*சீவக.* 2388 : 2).

**மஞ்சிரம்** mañciram, *n.* cf. *mañjīra.*

கால் விரலில் அணியும் மோதிரம்; Toe-ring (*மதுரைத். அக.*).

**மஞ்சீரம்** mañcīram, *n.* < id.

ஓசை எழுப்பும் காற் சிலம்பு; Tinkling anklet. *மஞ்சீர மாறாவனகிரி* (*அழகர்கல.* 8).

**மஞ்சு** mañcu, *n.* < *mañju.*

► அணிகலன். *அணியொடு கலமே மஞ்சு பணி ... ஆபரணம்* (*சூடா.* 7 : 31).

**மஞ்சுவாய்** mañcu-vāy, *n.* < *மஞ்சு* +.

ஒரு நகை; An ornament. *மஞ்சுவாயும் மேற்படியிலக் கட்டிந மாணிக்க மொந்றும்* (*கல். சொல். அக.*).

**மட்டப்பூ** maṭṭa-p-pū, *n.* < *மட்டம்* +.

அணி உறுப்புகளுள் ஒன்றான தொங்கல்; A pendant in a jewel (S.I.I. ii, 184).

**மடை** maṭai, *n.* < மடு-. [T. K. *maḍa*, M. *maḍuva.*]

அணிகலனில் அமைந்துள்ள பூட்டு; ஆபரணக்கடைப்பூட்டு; Clasp, as of an ornament. *மடைசெறி முன்கைக் கடகமொடு* (*புறநா.* 150 : 21).

**மண்டநம்** maṇṭanam, *n.*

► அணிகலன் (*மதுரைத். அக.*).

**மண்டனம்** maṇṭaṉam, *n.*

► மண்டநம்.

**மணி** maṇi, *n.* < *maṇi.*

1. அணிகலன்களில் பதிக்கும் விலையுயர்ந்த கல்; Jewel, gem precious stone. *இன்னாக் கானமும் இனிய பொன்னோடு மணிமிடை அல்குல் மடந்தை* (*குறுந்.* 274 : 7).

2. ► மாணிக்கம். *ஒளி திகழ் திருந்து மணிநளி இருள் அகற்றும்* (*புறநா.* 172 : 7).

3. ► பவளம். *மணி உரு இழந்த அணி அழி தோற்றம்* (அகநா. 5 : 25).
4. ► நீலமணி. *முண்டகங் கதிர்மணி கழாஅலவும்* (சிறுபாண். 148).
5. ► முத்து. *மணி தெளித்தன்ன வணி நிறத் தெண்ணீர்* (பெருங். 3, 4 : 39).
6. ► சிந்தாமணி. *பிணிநிலை ... மணிநிலை விசும்பொடு வரங்கள் ஈவன்* (சூளா. 4, 62 : 1-2).
7. ► வயிரம். *செற்றமும் கூர்மையும் சேரும் மணியும் ... வயிரக்கிளவி* (திவா. 11 : 362).
8. ► நவமணி. *வனப்பும், நவமணியும்* (பிங். 10 : 887).
9. கழுத்தில் அணியும் மணிமாலை; Necklace of beads.

**மணிக்கம்பை** maṇi-k-kampai, *n.* < *மணி* +.
மணிகள் பதிக்கப்பட்ட காதணி வகை; Ear stud with gems.

**மணிக்கயிறு** maṇi-k-kayiṟu, *n.* < id. +.
► முத்துவடம். *மணிக்கயிற் றூசன் மறலிய விடத்தும்* (பெருங். 1, 34 : 116).

**மணிக்கலம்** maṇi-k-kalam, *n.* < id. +.
► மணிக்கலன். *மணிக்கலப் பேழையு மணிக்கண் ணாடியும்* (பெருங். 1, 57 : 40).

**மணிக்கலன்** maṇi-k-kalaṉ, *n.* < id. +.
இரத்தினங்கள் பதித்த அணிவகை; Ornament set the jewels. *பரிசட்டமு மிலங்கு மணிக்கலனு நல்கி* (S.I.I. iii, 217).

**மணிக்காஞ்சி** maṇi-k-kāñci, *n.* < id. +.
► மணிமேகலை. *அது மணிக்காஞ்சி என்றொட்டி* (தொல். சொல். 439, தெய்வச். ).

**மணிக்குவளை** maṇi-k-kuvaḷai, *n.* < id. +.
இடையிடையே மணிகள் பதிக்கப்பட்ட குவளைப்பூ வடிவிலான பொன் கடுக்கன்; A kind of ear ring studded with gems resembling *kuvaḷai* flower.

**மணிக்கோவை** maṇi-k-kōvai, *n.* < id. +.
இரத்தினங்கள் கோக்கப்பட்ட மாலை; Necklace set with gems. *பொன்னாண் கோத்த நன்மணிக்கோவை* (மணி. 3 : 133).

**மணிசரம்** maṇi-caram, *n.* < *maṇi-sara.*
► மணிக்கோவை (*யாழ். அக.*).

**மணித்தாலி** maṇi-t-tāli, *n.* < *மணி* +.
மணிகள் பதிக்கப்பட்ட கழுத்தணி வகை; Necklace with precious stones.

**மணித்தோடு** maṇi-t-tōṭu, *n.* < id. +.
மணிகள் பதித்துச் செய்யப்பட்ட காதணி வகை; A kind of ear ring studded with precious stones.

**மணிமகுடம்** maṇi-makuṭam, *n.* < id. +.
► மணி முடி.

**மணிமாலை** maṇi-mālai, *n.* < id. +.
முத்துமணிகள் கோக்கப்பட்ட மாலை; String of pearls.

**மணிமிடைபவளம்** maṇi-miṭai-pavaḷam, *n.* < id. + *மிடை-* +.

மணியும் பவளமுங் கலந்து செய்யப்பட்ட கழுத்தணி வகை; Necklace of gems and coral beads strung alternately .

**மணிமுடி** maṇi-muṭi, *n.* < id. +.

திருமால், தேவி முதலிய தெய்வங்களுக்கு அணிவிக்கப்படுவதும், மன்னர்கள் அணிந்ததுமான மணிகள் மிக்க தலையணி வகை; மணிமகுடம்; கிரீடம்; Crown crowded with gems. *வட திசை மன்னர் மணிமுடி ஏறினள் (சிலப்.* 27 : 65).

**மணிமுடிச்சு** maṇi-muṭiccu, *n.* < id. +.

► மணிமுடி (*Colloq.*).

**மணிமேகலை** maṇi-mēkalai, *n.* < *maṇi-mēkhala.*

மகளிர் இடையில் அணியும் அணிவகை; மேகலை; Woman's jewelled girdle. *வாரார வீக்கி மணிமேகலை திருத்தி (திவ். சிறிய. ம.* 10 : 1).

**மணியாரக்கோவை** maṇi-y-āra-k-kōvai, *n.* < *மணி* +.

மணிகளும் முத்துகளும் கோக்கப்பட்ட வடம்; A string of gems and pearls. *கோவோடு தாரகைகள் கோத்தமைத்த மணியாரக்கோவை போன்ற (கம்பரா.* 6, 23, 31 : 1).

**மணியாரம்** maṇi-y-āram, *n.* < id. +.

பொன் மணிகளைக் கோத்துப் பெரிதாகச் செய்யப்பட்டதும் பொன்மணியிலிருந்து வேறானதுமான கழுத்தணி வகை; Necklace of large gold beads.

**மணியாழி** maṇi-y-āḻi, *n.* < id. +.

மணிகள் பதித்த அழகிய மோதிரம்; Ring inlaid with gems. *வீயுமுயிர் மீளும் மருந்து மௌலாகியது வாழிமணியாழி (கம்பரா.* 5. 4, 69 : 4).

**மணிவட்டம்** maṇi-vaṭṭam, *n.* < id. +.

1. ► வீரக்கழல் (*மலை.*).
2. ► சிலம்பு (W.).

**மணிவடம்** maṇi-vaṭam, *n.* < id. +.

1. இரத்தினங்கள் பதிக்கப்பட்ட மாலை; String of gems.
2. ► உருத்திராக்க மாலை.
3. முத்துக்கள் கோக்கப்பட்ட மாலை; String of pearls.
4. பாத அணிவகை; பாதசாலம்; Anklet.
5. ► வீரக்கழல்; Warrior's ankle-ring.

**மத்தகத்தகடு** mattaka-t-takaṭu, *n.* < *மத்தகம்* +.

► மத்தகம். *மத்தகத்தகடு ஒன்று பொன் பதின்கழஞ்சு (கல். சொல். அக.).*

**மத்தகம்** mattakam, *n.* < *mastaka.*

மகளிரின் தலைக்கோல அணிவகையுள் ஒன்று; A kind of head-ornament worn by women. *மத்தல நித்திலம் (பரிபா.* 16 : 5).

**மத்தாள மணி** mattāḷa-maṇi, *n.*

பரவ இனத்தவர் அணியும் ஒரு கழுத்தணி வகை; A necklace of *parava* caste (*Parav.*).

**மத்திக்காய்** matti-k-kāy, *n.*

► காதணி.

**மதலிகை** matalikai, *n.* cf. *மதலை.*

அணிகலன்களில் அமைந்துள்ள தொங்கல்; தூக்கம்; Pendant of a jewel (*திவா.* 7 : 66).

**மதாணி** matāṇi, *n.* < *மத* + *அணி.*

1. கழுத்தணியின் பெரிய பதக்கம் போன்ற தொங்கல்; Large pendant suspended from the necklace. *திண்கதிர் மதாணி* (*மதுரைக்.* 461).

2. அணிகலன்; Jewel. *அணி மதாணி ... ஆபரணம்* (*திவா.* 7 : 79).

**மந்தனம்** mantaṉam, *n.* < *maṇḍana.*

யானை முக படாம்; The metal badge for the forehead of an elephant (*சூடா.* 7 : 19).

**மயிர்க்குச்சு** mayir-k-kuccu, *n.* < *மயிர்* +.

1. கொண்டையூசி; Hairpin (W.).

2. தொங்கலுடன் கூடிய தலையணிவகை; A head ornament with pendants (*யாழ். அக.*).

**மயிர்மாட்டல்** mayir-māṭṭal, *n.* < id. +.

மகளிர் காதணியிலிருந்து தலைமயிரில் மாட்டும் ஓரணி; மாட்டல்; An ornament worn by women connecting the ear ornament with the tresses (*Loc.*).

**மயிர்மாட்டி** mayir-māṭṭi, *n.* < id. +.

► மயிர்மாட்டல் (*Loc.*).

**மயிலடி** mayilaṭi, *n.* < *மயில்* +.

1. கால் விரலில் அணியும் மெட்டி வகை, காற்பீலி; Toe-ring (W.).

2. ஐவர்ண அணியுள் பெண்கள் காலின் நடுவிரலில் அணியும் அணி; Ring worn on the middle toe, by women, one of *aivarnam* (*யாழ். அக.*).

**மயிற்கழுத்து** mayi-ṟ-kaḻuttu, *n.* < id. +.

மயிலின் கழுத்து உருவும் வண்ணமும் அமைந்த மாலை வகை; A garland or necklace perhaps in the form and colour of peacock's neck. *மயிற்கழுத்து மனவுமணி வடமும் பூண்டு* (*பெரியபு.* 10, 8 : 2).

**மயிற்கொடி** mayi-ṟ-koṭi, *n.* < id. +.

கொண்டையங்கோட்டை மறவர் வகையைச் சார்ந்த பெண்டிர் திருமணத்தில் கட்டும் தாலி வகை; A kind of marriage badge worn by *Koṇṭaiyaṉ-kōṭṭai Marava* women (G. Tn. D. 1-136).

**மரகதத்தாள்செறி** marakatattāḷ-ceṟi, *n.* < *மரகதம்* +.

சிறு வயிரங்கள் சூழ நடுவே ஒரு பெரிய மரகதம் (பச்சைக்கல்) பதித்துச் செய்யப்பட்ட காலாழி வகை; A kind of toe ring. *வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி* (*சிலப்.* 6 : 92, *அடியார்.*).

**மரகதநாயகம்** marakata-nāyakam, *n.* < id. +.

நடுவில் பச்சைகல் வைத்து இழைத்த கால் மோதிரவகை; A toe ring set with gems round an emerald in the centre. *இவை மரகத நாயகமாகிய வட்டப்பூ* (*சிலப்*. 6 : 97, *அரும்*.).

**மரகதம்** marakatam, *n.* < *marakata.*

நவமணியுள் ஒன்றானதும், விலை உயர்ந்ததுமான பச்சை இரத்தினம்; Emerald, one of *nava-maṇi*. *மரகத மணியோடு வயிரங் குயிற்றிய* (*சிலப்*. 5 : 147).

**மரமணி** mara-maṇi, *n.* < *மரம்* +.

ஆடு மாடுகளை அழைப்பதற்கு இடையர் தம் அரையில் கட்டிக் கொள்ளும் மணி; Bell tied by herdsman around his waist to call the cattle (ஈடு, 4, 8, 4, ஜீ.).

**மருதங்காய்மாலை** marutaṅkāy-mālai, *n.*

இசுலாமிய மகளிர் அணியும் மருதங்காய் வடிவிலான கழுத்தணி வகை; A necklace mostly worn by Mohammadan women made up of beads in the form of *marutaṅ-kāy*.

**மரை** marai, *n.* [T. *mara.*]

திருகுவகை; Nut of a screw.

**மரையாணி** marai-y-āṇi, *n.* < *மரை* +.

திருகாணி; Screw nail.

**மல்லிகை மொட்டு** mallikai-moṭṭu, *n.* < *மல்லிகை* +.

பொன்னாலான மகளிர் தலையணி வகை; A gold ornament worn on the head by women.

**மலர்ச்சரடு** malar-c-caraṭu, *n.* < *மலர்* +.

பொன்னால் தனித்தனிப் பூ வடிவங்களைச் செய்து அவற்றைப் பொன் அல்லது வெள்ளிக் கம்பியால் கோத்த கழுத்தணி வகை; A string made up of gold flowers.

**மவுலி** mavuli, *n.* < *mauli.*

► மகுடம், 1. *குண்டலங்களு மவுலியும்* (*கம்பரா*. 6, 15, 1 : 3).

**மழுங்கன்** maḻu-ṅ-kaṉ, *n.* < *மழுங்கு-*.

வேலைப்பாடில்லாத அணி; Plain ornament without any delicate workmanship (W.).

**மறை** maṟai, *n.*

► மரை (*W. D.*).

**மறையாணி** maṟai-y-āṇi, *n.* < *மறை* +.

► மரையாணி.

**மனவு**[1] maṉavu, *n.* < *மனா*.

► அரைப்பட்டிகை (*தஞ்சைவா*. 373).

**மனவு**[2] maṉavu, *n.*

► மணி. *மனவிரி யல்குலார்தம்* (*சீவக*. 466 : 3).

**மனாவு** maṉāvu, *n.* < *மனா*.

► மனவு. *மனாவே கலை அரைப்பட்டிகை* (*திவா*. 7 : 58).

மா

**மாங்கல்ய தந்து** māṅkalya-tantu, *n.* < *mangalya* + *tantu.*

► மாங்கலியசூத்திரம். *சசிதேவி மாங்கல்ய தந்து ரக்ஷாபரண* (*கந்தரலங்.* 21 : 3).

**மாங்கல்யம்** māṅkalyam, *n.* < id.

► தாலி, 1.

**மாங்கல்லியம்** māṅkalliyam, *n.* < id.

► மாங்கலியம்.

**மாங்கலியச்சரடு** māṅkaliya-c-caraṭu, *n.* < id. +.

► மாங்கலியசூத்திரம் (*Colloq.*).

**மாங்கலியசூத்திரம்** māṅkaliya-cūttiram, *n.* < id. +.

► தாலிச்சரடு. *மங்கலவணியெழுந்தது - மாங்கலிய சூத்திரம்* (*சிலப்.* 1 : 47, *அரும்.*).

**மாங்கலியம்** māṅkaliyam, *n.* < id.

► தாலி, 1. *மங்கலவணி - மாங்கலியமென்பாருமுளர்* (*சிலப்.* 2 : 63, *அடியார்.*).

**மாங்காய்** māṅkāy, *n.* < *மா* +.

1. நடுவில் வைரமும் சுற்றிப் பதினொரு சிவப்பும் பதித்து மாங்காய் வடிவில் செய்த கழுத்தணி உறுப்பு வகை; A mango-shaped ornamental piece in a necklace, consisting of a central diamond surrounded by eleven rubies (*Loc.*).

2. ► மாங்காய் மாலை.

**மாங்காய்நாண்** māṅkāy-nāṇ, *n.* < *மாங்காய்* +.

► மாங்காய்மாலை (S.I.I. ii, 93, 28).

**மாங்காய்ப்பட்டடை** māṅkāy-p-paṭṭaṭai, *n.* < id. +.

காலில் அணியும் ஓர் அணி வகை; A kind of ankle ornament (*N. D.*).

**மாங்காய் மாலை** māṅkāy-mālai, *n.* < id. +.

அடிப்புறம் மட்டமாகவும் மேலே துறுத்திக்கொண்டும் மாங்காய் வடிவிலமைந்த பொன் உருக்கள் கோத்த கழுத்தணி; Necklace containing mango shaped pieces.

**மாசரணம்** mācaraṇam, *n.*

ஒரு நகை; A jewel. *இரண்டு மாசரணம் ஒன்றில் கோத்த முத்து ஆயிரத்து ஒரு நூற்று* (*கல். சொல். அக.*).

**மாசை** mācai, *n.* < *māṣa.*

► பொன். *மாசை மாக்கடல்* (*சீவக.* 911 : 2).

**மாட்டல்** māṭṭal, *n.* < *மாட்டு-.*

(பெண்கள் அணிந்திருக்கும்) காதணியோடு ஒரு புறத்தை இணைத்து, மறுபுறத்தைத் தலையில் செருகிக்கொள்ளக் கூடிய சிறு சங்கிலி. A chain attached to the ear-stud to be hooked to the hair above (*Loc.*).

**மாட்டுச்சலங்கை** māṭṭu-c-calaṅkai, *n.*

உலோகச் சங்கிலியில் கோத்து மாட்டின் கழுத்தில் கட்டப்படும் அணி; A chain of tinklets worn on the neck of cows and oxen (*W. D.*).

**மாட்டுமணி** māṭṭu-maṇi, *n.*

▶ மாட்டுச்சலங்கை (*W. D.*).

**மாடிகை** māṭikai, *n.* < *māthī*.

▶ கவசம். *சாலிகை மாடிகை கந்தளம் ... மெய்புகுகருவி (பிங்.* 6 : 506).

**மாடியம்** māṭiyam, *n.*

▶ மாடிகை. *மாடியந் தானை மன்னர் (சீவக.* 537 : 1).

**மாடு** māṭu, *n.* cf. *māṣa.*

▶ பொன். *மாடு ஆர் மலர்க் கொன்றை வளச்சடை வைத்து (தேவா.* 1, 31, 7 : 1).

**மாடை** māṭai, *n.* < id.

▶ பொன். *பீதகம்மாடை ... பொன் எனப்படுமே (திவா.* 6 : 1).

**மாணவம்** māṇavam, *n.* < *manava.*

பதினாறு கோவையுள்ள முத்தாரம்; A pearl necklace of sixteen strings (*மதுரைத். அக.*).

**மாணிக்கக் கண்டி** māṇikka-k-kaṇṭi, *n.* < *மாணிக்கம்* +.

மாணிக்கக் கற்கள் பதித்த கழுத்தணி; Necklace with rubies. *வெள்ளித் தளியையும் மாணிக்கக் கண்டியுங் கொடுத்தார் (கல். சொல். அக.).*

**மாணிக்கக் குதம்பை** māṇikka-k-kutampai, *n.* < id. +.

மாணிக்க மணிகளுக்கு இடையே வயிர மணிகள் பதித்த காதணி வகை; An ear ring with saphire and diamonds.

**மாணிக்கத்திரு** māṇikka-t-tiru, *n.* < id. +.

பொன்சரட்டில் கோக்கப்பட்ட தாலி; A kind of marriage badge. *உமாபரமேஸ்வரியார்க்கு பொன் நாணிற் கோத்த மாணிக்கத்தின் திரு ஒன்றிற் கட்டின வயிரம்* (S.I.I. ii, 46).

**மாணிக்கப்படி** māṇikka-p-paṭi, *n.* < id. +.

இரத்தினாங்கி; Jewelled garment. *தனக்காக ஒரு மாணிக்கப்படிசாத்தி* (*ஈடு*, 4, 4, 3).

**மாணிக்கப்பீடம்** māṇikka-p-pēṭam, *n.* < id. +.

மாணிக்கம் வைத்திழைத்த மோதிரவகை; A kind of ring set with rubies. *மாணிக்கபீடமும் பக்கத்தே வளைந்து (சிலப்.* 6 : 96, *அடியார்.*).

**மாணிக்கம்** māṇikkam, *n.* < *māṇikya.*

நவமணியுள் ஒன்றானதும், சாதுரங்கம், குருவிந்தம், சௌகத்திகம், கோவாங்கம் என்னும் நால்வகைப் பகுப்பினை உடையதுமான விலை உயர்ந்த செந்நிறக் கல்; Ruby, carbuncle, of which there are four kinds, viz., *cāturaṅkam, kuruvintam, caukattikam, kōvāṅkam.* *இந்நிறத்த பொதுவாய மாணிக்கம் (திருவிளை.* 17, 38 :1).

**மாணிக்கமாலை** māṇikka-mālai, *n.* < *மாணிக்கம்* +.

மாணிக்கக் கற்கள் பதித்த கழுத்தணி வகை; Necklace of rubies. *பவழம் இரண்டு ராஜாவந்தம் இரண்டு மாணிக்கமாலை ஒன்று பொன் ஒன்பதின் கழஞ்சு* (S.I.I. 13, 144).

**மாணிக்க மூக்குத்தி** māṇikka-mūkkutti, *n.* < id. +.

மாணிக்கம் பதித்துச் செய்த மூக்கணி வகை; A nose stud with ruby.

**மாணிக்க மேகலை** māṇikka-mēkalai, *n.* < id. +.

மாணிக்கக் கற்கள் பதித்த மேகலை; Waist band set with rubies.

**மாணிக்கவாளி** māṇikka-vāḷi, *n.* < id. +.

காதணி வகை; An ear-ornament (S.I.I. viii, 39).

**மாத்திரை** māttirai, *n.* < *mātrā.*

காதில் அணிந்து கொள்ளும் அணிவகை; An ear-ornament. *செம்பொன் மாத்திரை செரீஇய காதினர்* (*பெருங்*. 3, 17 : 157).

**மாதர்** mātar, *n.* perh. *māta. nom. sing. of mātr. cf. மாது.*

► பொன். *மாதரே யிடைச் சொல்லு மாதருங் காதலும் அழகும் பொன்னுமைப்பேர்* (*அக. நி*. 2860).

**மாதுளங்காய் மாலை** mātuḷankay-mālai, *n.* < *mātuliṅga* +.

மாதுளங்காய் வடிவில் பொன்னால் செய்யப்பட்ட கழுத்தணி வகை; A necklace made up of gold resembling a pomegranate.

**மாதுறுப்பு** māturuppu, *n.* < *மாது* +.

► உத்தி (*யாழ். அக.*).

**மாந்தளிர்** māntaḷir, *n.* < *மா* +.

ஒரு நகை; An ornament. *உடையார் சாந்தியருள ... மாந்தளிர் மனாகாசு நிறைக் கல்லால்* (S.I.I. vi, 33).

**மாந்தோட்டுப் பொத்தி** māntōṭṭu-p-potti, *n.* < id. +.

நகையின் ஓர் உறுப்பு; A part of a jewel. *கட்டின கோமளம்* 28, *வயிரம்* 1106, *பருமுத்து* 790, *சிறுமுத்து* 360, *திரள்பவழம்* 291, *மாந்தோட்டுப்பொத்தி* 30 (*கல். சொல். அக.*).

**மாம்பிஞ்சு** mām-piñcu, *n.* < id. +.

கழுத்தணியின் மாவடு வடிவிலான பதக்கம் அல்லது தொங்கல்; A pendant in a necklace, shaped like the tender mango.

**மாம்பிஞ்சுக் கொலுசு** mām-piñcu-k-kolucu, *n.* < id. +.

மாம்பிஞ்சு வடிவில் வெள்ளியால் செய்யப்பட்ட கால் அணிகலன் வகை; A variety of silver anklet.

**மாமணி** mā-maṇi, *n.* perh. *மா* +.

1. ► மாணிக்கம். *ஒரு மா மணியாய் உலகிற்கு ஓங்கிய திரு மா மணி எனத் தெய்வம் உற்று உரைப்ப* (*சிலப்*. 12 : 49).

2. ► நீலமணி. *காலன் ஆர் உயிர் வீட்டிய மாமணி கண்டனார்* (*தேவா*. 2, 9, 9 : 2).

**மார்க்கவசம்** mār-k-kavacam, *n.* < id. +.
மார்பில் அணியும் கவசம்; Shield (*Loc.*).

**மார்ப்பதக்கம்** mār-p-patakkam, *n.* < id. +.
மார்பில் தொங்கும் பெரிய பதக்கம்; A large pendant (*W. D.*).

**மாலை** mālai, *n.* < *mālā*.
பெண்கள் மார்பில் தொங்கும்படி அணியும் கழுத்தணி வடம்; Woman's necklace or string of jewels, beads, etc. *பொன்னில் மணியில் ... மாலை என்று ஆகும் (திவா.* 11 : 353).

**மாழை** māḻai, *n.* prob. *māṣa*.
► பொன். *மாழை ஒண்கண் வளைக் கை நுளைச்சியர்* (தேவா. 2, 38, 5 : 3).

## மி

**மிசைவடம்** micai-vaṭam, *n.* < *மிசை-*.
► வீரக்கழல் (W.).

**மிஞ்சி** miñci, *n.* [K. *miñcu.*]
காலில் இரண்டாவது விரலில் அணியும் மோதிர வகை; Ring worn on the second toe. *கால் மிஞ்சிக் காரன் பின்போனாள் (தனிப்பா.* ii, 138, 351).

**மிஞ்சிகை** miñcikai, *n.*
ஒரு வகைக் காதணி; குண்டலம்; A kind of ear-ring. *குழையே மிஞ்சிகை காதணி குண்டலம் (திவா.* 7 : 70).

**மிளகுப்பட்டுமணி** miḷaku-p-paṭṭu-maṇi, *n.* < *மிளகு* +.
பரவ மகளிர் சிறப்பாக அணியும் மிளகு போன்ற சிறிய மணிகளைக் கோத்த மாலை; A necklace made up of beads in the shape of pepper seeds (*Parav.*).

**மிளகுமாலை** miḷaku-mālai, *n.* < id. +.
► மிளகுப்பட்டுமணி.

**மிளகுவட்டம்** miḷaku-vaṭṭam, *n.* < id. +.
► மிளகுப்பட்டுமணி (*Parav.*).

**மின்னூல்** minnūl, *n.* corr. of *முந்நூல்*.
மூன்று சரமாய் அமைந்த மகளிர் கழுத்தணி வகை; Woman's necklace of three strands.

**மினுக்கன் வளையல்** minukkan-vaḷaiyal, *n.* < *மினுக்கல்* +.
வளையல் வகை; A kind of bangle. *இத்தேவர்க்குக் கொடுத்த மினுக்கன்வளையல் இரண்டினால்* (S.I.I. viii, 128).

**மினுக்குத் தொடர்** minukku-t-toṭar, *n.* < *மினுக்கு* +.
பளபளக்கும் சங்கிலி; A twinkling chain. *தேவர் பூணும் மினுக்குத்தொடராலும்* (S.I.I. v, 234).

## மீ

**மீன்பீலி** mīṉ-pīli, *n.* < *மீன்* +.

காலின் சிறுவிரலில் அணியும் மீன் உருவான மெட்டி; Fish shaped ring worn on the little toe (W.).

## மு

**முக்கட்டு** mukkaṭṭu, *n.*

► மூக்குத்தி.

**முக்காழ்** mukkāḻ, *n.* < *மூன்று* +.

1. மூன்று கோவையாக அமைவதும் (இடையில் அணிவதுமான) முத்துவடம்; Three stringed waist band made up of pearls. *கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப் பயந்த எங்கண்* (*கலித்.* 80 : 2-3).

2. மூன்று கோவையாக அமைவதும் (கழுத்தில் அணிவதுமான) முத்துச் சரம்; Three stringed pearl necklace. *மயிர்ப்புறஞ் சுற்றிய கயிற்கடை முக்காழ்* (*மணி* 3 : 135).

**முக்குக்கடுக்கன்** mukku-k-kaṭukkaṉ, *n.*

கடுக்கனின் ஒரு வகை; A kind of ear-ring (*Loc.*).

**முக்தாவளி** muktāvaḷi, *n.*

ஆண்கள் கழுத்தில் அணியும் பெரிய முத்துகள் கோத்த மாலை; String made up of bigger pearls of worn by gents (*அணி. ஒப். ப.* 70).

**முக்தாஜலம்** muktājalam, *n.*

மகளிர் தலையில் அணியும் முத்துவலை; The hairnet of ladies with interwoven pearls (*அணி. ஒப். ப.* 70).

**முகக்காறை** muka-k-kāṟai, *n.* < *முகம்* +.

விலங்குகளின் முகம்போல நடுப்பகுதி அமைந்த உட்கழுத்தணி; An ornament for inner neck shaped as a face of an animal (M. E. R. 720 of 1916-B).

**முகசரம்** muka-caram, *n.* < id. +.

உச்சியிலிருந்து நெற்றிவரை இருக்கும் ஒரு சரத்தையும், நடு நெற்றியிலிருந்து காதுவரை நீண்டு கட்டப்பெற்றிருக்கும் இரு சரங்களையும் கொண்டு முப்பிரிவாக அமைந்த தலையணி வகை; நெற்றிச்சுட்டி; A group of three chains two running above the forehead and one from the centre of the head to this chain.

**முகப்பு** mukappu, *n.* < id. [K. *mogappu.*]

அணிகலன்களின் முன்புறத்திலும் சங்கிலியின் இரண்டு, மூன்று சரங்களை இணைக்கும் வகையிலும் எடுப்பாகச் செய்யப்பட்ட பகுதி; Front piece of a jewel.

**முகப்புக்கல்** mukappu-k-kal, *n.* < *முகப்பு* +.

இரண்டு அல்லது மூன்று சங்கிலி இழைகளை ஒன்றாக இணைக்கும் இணைப்பு; Frontpiece of the multistringed chains (*W. D.*).

முகரி mukari, *n.*

► பொன். *முகரி ஆசை பொலம் மாசை (நாமதீப. 376).*

முகவட்டு muka-vaṭṭu. *n.* < *mukha* +.

நெற்றி உச்சியில் அணியும் விலங்கின் அணிவகை; An ornament worn on the forehead of an animal. *நெற்றி முன்னாப் பூட்டுத்தரள முகவட்டும் பொலிய (திருவிளை. 29, 15 : 3).*

முகவளை muka-vaḷai. *n.* < *முகம்* +.

வளைகள் கழலாதிருக்க அணியுந் தடைவளையம்; Bangle of shorter size, worn as a keeper. *வளைக்கு முகவளை (குலோத். கோ. 505).*

முகுடம் mukuṭam. *n.* < *mukuṭa.*

1. ► மகுடம், 1. *முகுடமும் பெருஞ்சேனையும் (வில்லி. 1,1, 14 : 4).*

2. முடி உறுப்பு ஐந்தனுள் ஒன்று; A part of the crown, one of five *muṭi-y-uṟuppu. தாமம் முகுடம் ... முடியுறுப்பு ஐந்தெனக் கிளப்பர் (திவா. 7 : 82).*

முசினாப்பு mucināppu, *n.*

ஒரு நகை; An ornament. *முத்துச் சுட்டி முசினாப்பு நொங்களொல்ல நவரெற்றினக் குடையும் (கல். சொல். அக.).*

முஞ்சம் muñcam, *n.* perh. *முச்சி.*

குழந்தைகளுக்குத் தலை உச்சியில் வைத்து முடிக்கப்படும் தலையணி; Ornament worn in the crown of head by children. *புதல்வர் கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ (பரிபா. 16 : 8).*

முடக்கு muṭakku, *n.* < *முடக்கு-.*

► நெளி. *சிவந்த நிறத்தையுடைய முடக்கென்னும் மோதிரத்தையும் (நெடுநல். 143-144, உரை).*

முடக்குமோதிரம் muṭakku-mōtiram, *n.* < *முடக்கு* +.

► நெளி. *வாளைப்பகுவாய்மோதிரம் - முடக்கு மோதிரம் (சிலப். 6 : 95, அரும்.).*

முடி muṭi, *n.* < *முடி-.*

1. ► மகுடம், 1. *முடித்தலை அடுப்பாகப் புறை குருதி உலைக் கொளீஇ (புறநா. 26 : 8).*

2. ► கிம்புரி, 1. *கிம்புரி முடி தந்தப்பூண் (சூடா. 11 : 46).*

முடிக்கலம் muṭi-k-kalam, *n.* < *முடி* +.

► மகுடம். *ஆண்டு அரசருடைய முடிக்கலம் முதலியவற்றை வாங்கிக்கொண்டு (பெரும்பாண். 451, உரை).*

முடிச்சுக்காறை muṭiccu-k-kāṟai, *n.* < *முடிச்சு* +.

பெண்களின் கழுத்தணி வகை; A kind of gold necklet, worn by women (*Loc.*).

முடிச்சுச்சங்கிலி muṭiccu-c-caṅkili, *n.* < id. +.

கழுத்தணியாகிய சங்கிலி வகை; A variety of neck chain (*W. D.*).

முடிமணி muṭimaṇi, *n.* < *முடி* +.

► சூடாமணி.

**முடியுறுப்பு** muṭi-y-uṟuppu, *n.* < id. +.

தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என ஐவகைப்பட்ட மகுட உறுப்புக்கள்; Ornamental parts of a crown, five in number, viz., *tāmam, mukuṭam, patumam, kōṭakam, kimpuri. தாமம் முகுடம் ... முடியுறுப்பு ஐந்தெனக் கிளப்பர்* (*திவா*. 7 : 82).

**முத்தணி** muttaṇi, *n.* < *முத்து* +.

முத்துகளால் செய்யப்பட்ட அணிகலன்; An ornament made up of pearls. *முத்து அணி அணிவாள் வெள்ளை* (*திருவாலவா. க. வா*. 20).

**முத்தம்** muttam, *n.* < *muktā*.

► முத்துமாலை. *சொரிகதிர் முத்த மின்னுந் துணைமுலைத் தணிந்த* (*சீவக*. 1352 : 3).

**முத்தமாலை** mutta-mālai, *n.* < *முத்தம்* +.

► முத்துமாலை. *மணிபுனை செம்பொற் கொட்டை வம்பணி முத்த மாலைக்* (*சீவக*. 113 : 1-2).

**முத்தரை** muttarai, *n.* < *முத்து* +.

இடுப்பில் அணியும் முத்துவடம்; Waist-band made of pearls. *பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ்* (*சிலப்*. 6 : 87).

**முத்தவள்ளி** mutta-vaḷḷi, *n.* < *முத்தம்* +.

முத்துக்கோத்த கொடிபோன்ற அணிவகை; A garland of pearls, as shaped like a creeper. *முத்துவள்ளியொடு மும்மணி சுடர* (*பெருங்*. 1, 34 : 203).

**முத்தாகலாபம்** muttā-kalāpam, *n.* < *muktā-kalāpa*.

► முத்தாரம் (W.)

**முத்தாரம்** muttāram, *n.* < id. + *hāra*.

முத்துக்கள் கோக்கப்பட்ட மாலை; முத்துமாலை; Garland of pearls. *கோடணிந்த முத்தாரம் ஒல்க ஒசிபவளோர்* (*பரிபா*. 21 : 61).

**முத்தாலதை** muttā-latai, *n.* < *muktā-lata*.

► முத்தாரம் (*யாழ். அக*.).

**முத்தாவலி** muttāvali, *n.*

► முத்தாவளி (*இலக். அக*.).

**முத்தாவளி** muttāvaḷi, *n.* < *muktāvalī*.

► முத்துமாலை (W.).

**முத்திராவதாரம்** muttirāvatāram, *n.* prob. *mudra* +.

காதணி வகை; An ear ornament (M. E. R. 222 of 1921).

**முத்திரி** muttiri, *n.* < *mudrā*.

உள் துளையமைந்த காதணி வகை; A kind of ear ornament, in the form of a hollow cylinder.

**முத்திரிகை** muttirikai, *n.* < *mudrikā*.

எழுத்துகள் பொறிக்கப்பட்ட மோதிரம்; Engraved signet or seal (W.).

**முத்திரை** muttirai, *n.* < *mudrā.*

காதில் அணியும் குண்டல வகை; Ear ornament. *காதின் மேற்செய்ய முத்திரையும்* (*திருவாலவா.* 13, 4 : 3).

**முத்திரை மோதிரம்** muttirai-mōtiram, *n.* < *முத்திரை* +.

முத்திரையிட்ட மோதிரம்; Seal ring (*Colloq.*).

**முத்தின்சூடகம்** muttiṉ-cūṭakam, *n.* < *முத்து* +.

முத்துகளாலான கைவளை; Bracelet made up of pearls. *முத்தின் சூடகம் ஒன்றில் துண்டம்* இரண்டில் (S.I.I. ii. 211).

**முத்தின் பட்டிகை** muttiṉ-paṭṭikai, *n.* < id. +.

முத்துகள் கோக்கப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட இடையணி; Waistband made up of pearls. *மேற்படியார் சாத்தும் முத்தின்பட்டிகை ஒன்றினால்* (*கல். சொல். அக.*).

**முத்தின்வளையல்** muttiṉ-vaḷaiyal, *n.* < id. +.

► முத்து வளையல். *மேற்படியார் சாத்தும் முத்தின் வளையல் ஒன்று* (*கல். சொல். அக.*).

**முத்து** muttu, *n.* < *muktā.*

நவமணியுள் ஒன்றானதும், சிப்பியிலிருந்து எடுக்கப்படுவதுமான விலை மதிப்புமிக்க உருண்டை வடிவ வெண்ணிறப் பொருள்; Pearl, one of *nava-maṇi.* *முல்லை முகைமுறுவன் முத்தென்று* (*நாலடி.* 45 : 1).

**முத்துக்கடுக்கன்** muttu-k-kaṭukkaṉ, *n.*< *முத்து* +.

முத்துக்கட்டிய கடுக்கனென்னுங் காதணி; Pearl ear-ring (W.).

**முத்துக்கண்டி** muttu-k-kaṇṭi, *n.* < id. +.

முத்தாலாகிய கழுத்தணி வகை; Pearl necklace.

**முத்துக்குஞ்சம்** muttu-k-kuñcam, *n.* < id. +.

முத்துகள் கோத்த குஞ்சம்; Pearls hangings. *நவரெற்றினக் குடையும் முத்துக் குஞ்சமும் பவளக்குஞ்சவும்* (TAS, viiii, p. 20-22).

**முத்துக்கொண்டை** muttu-k-koṇṭai, *n.* < id. +.

தெய்வச்சிலைகளின் தலையில் அணியும் முத்தாலான தலையணி வகை; Head-dress of pearls, as for idols.

**முத்துக்கொண்டை கிரீடம்** muttu-k-koṇṭai-kirīṭam, *n.* < id. +.

► முத்துக்கொண்டை.

**முத்துக்கொலுசு** muttu-k-kolucu, *n.* < id. +.

முத்துகள் பதிக்கப்பட்ட கொலுசு வகை; A kind of anklet with pearls.

**முத்துக்கோவை** muttu-k-kōvai, *n.* < id. +.

► முத்தாரம் (W.).

**முத்துச்சங்கிலி** muttu-c-caṅkili, *n.* < id. +.

பொன்னால் முத்துகளைப் போலச் செய்து கோக்கப்பட்ட கழுத்தணியாகிய சங்கிலி; Chain made up of gold beads (*W. D.*).

**முத்துச்சல்லி** muttu-c-calli, *n.* < id. +.

► முத்துப்புரி (*மதுரைத். அக.*).

**முத்துச்சுட்டி** muttu-c-cuṭṭi, *n.* < id. +.

முத்தால் செய்யப்பட்ட சுட்டி; A variety of forehead ornament with pearls. *விருந்துகளிலும் நமக்காயிட்டு தந்ததாக முத்துச்சுட்டி முசினாப்பு* (TAS, viii, p. 20-22).

**முத்துத்தாமம்** muttu-t-tāmam, *n.* < id. +.

1. ► முத்துமாலை. *கோலமாமணி யாரமு முத்துத்தா மமும்* (*திவ். அமலனாதி*. 9 : 3).

2. ► முத்துச்சல்லி. *முத்துத்தாம முறையொடு நாற்றுமின்* (*மணி*. 1 : 49).

**முத்துத்தாழ்வடம்** muttu-t-tāḻvaṭam, *n.* < id. +.

► முத்துமாலை (W.).

**முத்து நிரப்பம்** muttu-nirappam, *n.* < id. +.

நவமணிகள் இழைத்துப் பொன்னால் செய்யப்பட்ட நீண்ட ஒற்றைச் சர மாலை; Long gold or pearl necklace of a single string. *முத்து நிரப்பம் ... ஏகாவலி வடம்* (*தக்கயாகப்*. 340, *உரை*).

**முத்துப்புரி** muttu-p-puri, *n.* < id. +.

முத்துக்கோக்கப்பட்ட தொங்கல்; Ornamental hangings or strung pearls. *முத்துப்புரி நாற்றி* (*பெருங்*. 4, 5 : 48) .

**முத்துமாத்திரை** muttu-māttirai, *n.* < id. +.

► மாத்திரை. *முத்துமாத்திரை ஒன்றிற் கோத்த முத்து சப்பத்தி ஒன்று பொன்னும் உட்பட* (*கல். சொல். அக.*).

**முத்துமாலை** muttu-mālai, *n.* < id. +.

வெண்ணிற முத்துகளால் ஆன கழுத்தணி வகை; Garland of pearls (*திவ். அமலனாதி*. 9, *வ்யா*.).

**முத்துருவி** mutturuvi, *n.* prob. *mudrā*.

மகளிர் காதணி வகை; An ear-ornament for women (*யாழ். அக.*).

**முத்துவடம்** muttu-vaṭam, *n.* < *முத்து* +.

► முத்துமாலை. *முத்துவடமும் முழுமணிக் காசும்* (*பெருங்*. 3, 17 : 164).

**முத்துவளையல்** muttu-vaḷaiyal, *n.* < id. +.

முத்துகள் பதித்த பொன்னாலான கைவளை; Bangles inlaid with pearls. *பண்டாரத்தும் பொன்கொடு செய்த முத்துவளையல்* (*கல். சொல். அக.*).

**முத்துவாளி** muttu-vāḷi, *n.* < id. +.

முத்தாலான காதணித் தொங்கல் வகை; A variety of ear made up of pearls. *திருமுத்துவாளி இரண்டினால் பொன்னும்* (*கல். சொல். அக.*).

**முதாரி** mutāri, *n.* < *முது-மை* + prob. *அரி*.

► வளையல். *முன்கை முதாரியும் ஒளிகால* (குமர. *பிர*. *முத்துக். பிள்*. 17).

**முந்தாங்கி** mun-tāṅki, *n.* < *முன் + தாங்கி.*
விரலாழி கழலாமை பொருட்டு அதன் முன்னிடும் வளையம்; Keeper, ring that keeps another on the finger or toe (*Loc.*).

**மும்மணிக்காசு** mu-m-maṇi-k-kācu, *n.* < *மும்மணி* +.
மூன்று வகை மணிகள் (புருடராகம், வைடூரியம், கோமேதகம்) பதித்த பொற்காசாலாகிய அணிகலன் வகை; An ornament inlaid with three kinds of precious stones. *மும்மணிக்காசும் பன்மணித் தாலியும்* (பெருங். 5, 9 : 49).

**மும்மணிக்கோவை** mu-m-maṇi-k-kōvai, *n.* < id. +.
மூன்று கொத்துள்ள கழுத்தணி வகை; Necklace of three strings of beads (W.).

**முருகு** muruku, *n.* perh. *முறுக்கு*-. [T. K. *murugu.*]
1. காதின் மேல்பகுதியில் அணியக் கூடிய அணிவகை; An ornament worn in the helix of the ear. *வச்ர முருகை யெந்தக் கோனான்றன் கையிற் கொடுத்தானோ* (விறலிவிடு. 703).
2. இரு குழந்தை இறந்து மூன்றாவதாகப் பிறக்கும் பெண் அல்லது ஆண் குழந்தையை முறத்திலிட்டு உரக்குழியைச் சுற்றி இழுத்துவந்து கம்பிபோல் தங்கத்தில் செய்து குத்தும் அணிகலன்: A small stud worn on the ears of the third new born - both Male and Female if the first two were very short lived (*W. D.*)

**முளைத்தாலி** muḷai-t-tāli, *n.* < *முளை* +.
கழுத்தணியில் கோக்கும் முளை போன்ற பொன் அணி; A kind of gold bead for stringing in a necklace, shaped like tender shoots (*திவ். திருப்பா.* 7, *வ்யா. ப.* 99).

**முற்பூண்** muṟ-pūṇ, *n.* < *முன்* +.
மங்கல நாண்; Marriage badge. *தெம்மாதர் முற்பூண்கவர் மன்னன்* (வில்லி. 1, 5, 87 : 3).

**முறுக்கு** muṟukku, *n.* < *முறுக்கு*-. [T. *murikādu*, K. *muṟuku.*]
பொற்கம்பிகளை முறுக்கி ஒன்றின் மீது ஒன்று பொருந்த இணைத்துச் செய்யப்பெற்ற வளை; A bangle made up of twisted gold wire.

**முறுக்குக் கொலுசு** muṟukku-k-kolucu, *n.* < *முறுக்கு* +.
காப்புக்குக் கீழே போடும் கால் அணி வகை; A variety of foot chain (*W. D.*).

**முறுக்குச் சங்கிலி** muṟukku-c-caṅkili, *n.* < id. +.
தாம்புக்கயிறு வடிவத்தில் பொன்னிழைகள் முறுக்கிச் செய்யப்பட்ட கழுத்தணி; Neck chain resembling the twisted threads (*W. D.*).

**முறுக்குத் தண்டை** muṟukku-t-taṇṭai, *n.* < id. +.
முறுக்கப்பட்ட நிலையில் அமைந்த தண்டை வகை; A kind of Hollow anklet.

**முன் பூண்** muṉ-pūṇ, *n.* < *முன்* +.
► முற்பூண்.

**முன்றாங்கி** muṉṟāṅki, *n.* < *முன் + தாங்கு*-.
விரல்களில் அணியும் மகளிர் அணி வகை; A kind of ring worn by women, on the toes (*S. D.*).

**முன்னீடு** mun̠-n̠-īṭu, *n.* < *முன்னிடு-.*

பெண்கள் காதணி வகை; An ear-ornament, worn by women (W.).

**முன்னுச்சிப்பூ** mun̠n̠ucci-p-pū, *n.* < *முன்னுச்சி* +.

► உச்சிப்பூ (*Loc.*).

மூ

**மூக்குத்தழுக்கி** mūkku-t-taḻukki, *n.* < *மூக்கு* +.

► மூக்குத்தளுக்கு (*யாழ். அக.*).

**மூக்குத்தளுக்கு** mūkku-t-taḷukku, *n.* < id. +.

► தளுக்கு. *மூக்குத்தளுக்கிட்டு முத்தமிட்டு* (*விறலிவிடு.* 187).

**மூக்குத்தி** mūkkutti, *n.* cf. *மூக்கொற்றி.* [K. Tu. *mūkuti*, M. *mūkkutti.*]

1. பெண்கள் மூக்கு நுனியில் பக்கவாட்டுப் பகுதியில் துளையிட்டு அணிந்துகொள்ளும் சிறிய அணி; Ornament worn on the nose, nose screw (of women). *முத்தமிட வொட்டாத மூக்குத்தியைக் கழற்றி* (*விறலிவிடு.* 569).

2. ► மூக்குவாளி.

**மூக்குப்பொட்டு** mūkku-p-poṭṭu, *n.* < *மூக்கு* +.

► மூக்குத்தி, 1.

**மூக்குவாளி** mūkku-vāḷi, *n.* < id. +.

மூக்கில் அணிந்துகொள்ளப் படும் ஒருவகை வளையம், மூக்கணி வகை; A ring worn in the nose (W.).

**மூக்கொற்றி** mūkkor̠r̠i, *n.* < id. + *ஒற்று-.*

► மூக்குத்தி, 1 (W.).

**மூணுகொம்பு மாங்கல்யம்** mūṇu-kompu-maṅkalyam, *n.*

► மூன்று கொம்பு மாங்கலியம் (*W. D.*).

**மூணுமுக வங்கி** mūṇu-muka-vaṅki, *n.*

► மூன்றுமுகவங்கி (*W. D.*).

**மூணுவடச்சங்கிலி** mūṇu-vaṭa-c-caṅkili, *n.*

► மூன்றுவடச்சங்கிலி (*W. D.*).

**மூர்த்த வேட்டணம்** mūrtta-vēṭṭaṇam, *n.* < *mūrdha-vēṣṭana.*

► மகுடம், 1 (*யாழ். அக.*).

**மூளிமோதிரம்** mūḷi-mōtiram, *n.* < *மூளி* +.

வேலைப்பாடற்ற வளையம்; Plain ring (*W. D.*).

**மூன்றுகொம்பு மாங்கல்யம்** mūn̠r̠u-kompu-maṅkalyam, *n.*

தாலி வகை; A kind of marriage badge.

**மூன்றுமுக வங்கி** mūṉṟu-muka-vaṅki, *n.*

வங்கி வகை; A kind of bracelet for upper arm (*W. D.*).

**மூன்றுவடச்சங்கிலி** mūṉṟu-vaṭa-c-caṅkili, *n.*

சிறு முகப்பால் இணைக்கப்பட்டிருக்கும் மூன்று சரமுடைய சங்கிலி; Three stringed chain worn on neck (*W. D.*).

## மெ

**மெட்டி** meṭṭi, *n.* [T. *meṭṭe.*]

கால் பெருவிரலுக்கு அடுத்த விரலில், திருமணமானதற்கு அடையாளமாகவோ அல்லது அழகிற்காகவோ அணிந்துகொள்ளும் வெள்ளி வளையம்; Silver ring worn on the second toe by women either as a sign of married status or as cosmetic jewellers.

**மெய்க்கவசம்** mey-k-kavacam, *n.* < மெய் +.

அம்பு, துப்பாக்கிக் குண்டு முதலியவைகளால் தாக்கப்படாதபடி உடலில் இடும் காப்புச்சட்டை; Coat of mail, armour (W.).

**மெய்புகுகருவி** mey-puku-karuvi, *n.* < id. +.

► கவசம். *புலியினது தோலாற் செய்யப்பட்ட மெய்புகுகருவி* (*புறநா.* 13 : 2, *உரை*).

**மெய்புதையரணம்** mey-putai-y-araṇam, *n.* < id. +.

► மெய்புகுகருவி. *பஃறோன் மெய் புதை அரணம் எண்ணாது* (*பதிற்றுப்.* 52 : 6).

**மெய்ம்மறை** mey-m-maṟai, *n.* < id. +. *மறை-.*

► கவசம். *நோன் புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை* (*பதிற்றுப்.* 14 : 12).

**மெய்யுறை** mey-y-uṟai, *n.* < id. +.

► கவசம். *கவசம் கண்டம் மெய்யுறை ... சுரிகை மெய்புகு கருவி* (*திவா.* 7 : 36).

## மே

**மேகலை** mēkalai, *n.* < *mēkhalā.*

1. பெண்கள் இடையில் அணியும் ஏழு அல்லது எட்டுக் கோவையுள்ள அணிவகை; Waist band worn by maidens having seven or eight strings. *மேகலை காஞ்சி வாகுவலயம்* (*பரிபா.* 7 : 47).

2. ► அரைஞாண், 1. *அரைசெய் மேகலையான்* (*தேவா.* 2, 6, 9 : 4).

**மேதை** mētai, *n.*

► கோமேதகம். *மேதை கோமேதகமாம்* (*நாமதீப.* 384).

**மேருமணி** mēru-maṇi, *n.* < *mēru* +.

செபமாலை, கழுத்தணி முதலியவற்றின் முதன்மை அல்லது மைய மணி; The principal or central bead in rosary or necklace (*யாழ். அக.*).

**மேலீடு** mēl-īṭu, *n.* < மேல் + இடு-.

பெண்கள் காதில் அணிந்துகொள்ளும் அணி வகை; A jewel worn in the ear by women (W.).

**மேலொட்டி** mēloṭṭi, *n.* < மேல் +.
காதணி வகை; A kind of ear ring (*W. D.*).

**மேற்பணி** mēr-paṇi, *n.* < id. +.
பரவ மகளிர் காதணி வகை; An ear-ornament worn by parava women (*Parav.*).

### மொ

**மொக்குத்தளுக்கு** mokku-t-taḷukku, *n.* < மொக்கு +.
மலர் அரும்பு வடிவிலான மூக்கணி வகை; A variety of nose ornament resembling a bud (*W. D.*).

**மொட்டு** moṭṭu, *n.*
நகையின் முகப்புப்பகுதி; Front piece of a jewel. *பள்ளித் தொங்கல் ஒன்று இதில் தச்சமொட்டொன்று பறளை ஒன்று* (*கல். சொல். அக.*).

**மொடுகு** moṭuku, *n.* [T. *murugu.* ]
கையணி வகை; A kind of bracelet.

**மொழுக்கன்** moḻukkaṉ, *n.* cf. *மழுங்கன்.*
வேலைப்பாடில்லாத அணிகலன்; Plain jewel without elaborate or fine engraving or filigree work (*Loc.*).

**மொழுக்கன் மோதிரம்** moḻukkaṉ-mōtiram, *n.* < மொழுக்கன் +.
பூவேலை முதலியன செய்யப்படாத மோதிரம்; Plain ring (W.).

**மொழுக்கனோலை** moḻukkaṉ-ōlai, *n.* < id. +.
கல் வைத்து இழைக்காது தங்கத்தால் செய்த காதணி; Woman's plain ear-ring made of gold and not set with gems (W.).

### மோ

**மோகனமாலை** mōkaṉa-mālai, *n.* < மோகனம் +.
பொன்னும் பவளமுங் கோத்த மாலை வகை; A necklace of gold beads and corals. *மோகனமாலைக் கிசைவாய் மல்லிகைப் பூமாலையிட்டே* (*கொண்டல்விடு.* 501).

**மோசகம்** mōcakam, *n.*
ஆண்கள் அணியும் காதணி வகை; A kind of ear-ring for gents (*அணி. ஒப். ப.* 70).

**மோசை** mōcai, *n.* < *mōcā.*
(பெரும்பாலும்) வாழைப்பூ வடிவில் செய்யப்பட்ட விரலணிகளுள் ஒன்று; Finger ornament, probably of the shape of plantain flower. *மெல் விரல் மோசை போலக் காந்தள் வள் இதழ்* (*நற்.* 188 : 4).

**மோடிமோதிரம்** mōṭi-mōtiram, *n.* < மோடி +.
சொகுசாமோதிரம்; Finger-ring made of pinchbeck (*Loc.*).

**மோதரம்** mōtaram, *n.*
► மோதிரம். *தாமோ தவழ்வர் என்று ஆய்ச்சியர் தாம்பினால் தாம் மோதரக் கையால் ஆர்க்க* (*திவ். பெரிய. தி.* 10, 5, 3 : 3).

**மோதிரத்தோடா** mōtira-t-tōṭā, *n.* < *மோதிரம்* +.

► பஞ்ச உங்குரம்.

**மோதிரம்** mōtiram, *n.* prob. *mudrā.* [K. *Mōdira,* M. *Mōdiram.*]

பெரும்பாலும் தங்கத்தால் செய்து விரலில் அணிந்துகொள்ளும் சிறு வளையம்; கணையாழி; Finger-ring. *சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்* (*கலித்.* 84 : 23).

**மோலி** mōli, *n.* < *mōuli.*

► மௌலி. *செம்பொன் மோலி* (*கம்பரா.* 6, 4, 144 : 4).

## மௌ

**மௌத்திகம்** mauttikam, *n.* < *mauktika.*

1. ► முத்து. *தரளம் நித்திலமே முத்து மௌத்திகம் தானும் அப்பேர்* (*சூடா.* 6 : 6).
2. ► மணி. *வனப்பும் நவமணியும் மௌத்திகமும் ... கண்டையும் மணியே* (*சூடா.* 10 : 887).

**மௌத்திக மாலை** mauttika-mālai, *n.* < id. +.

► முத்துவடம்.

**மௌலி** mauli, *n.* < *mauli.*

► மகுடம், 1. *தாரணி மௌலி பத்தும்* (*கம்பரா.* 6, 15, 1 : 3).

**மௌவலாரம்** mauvalāram, *n.* [T. *muvva.*]

முல்லையரும்புகளின் வடிவில் அமைந்ததும் ஒலியெழுப்பும் சலங்கை கொண்டதுமான சிலம்பு; Anklet with small bells (*Loc.*).

## யா

**யாளித்தாலி** yāḷi-t-tāli, *n.* < *யாளி* +.

யாளி என்னும் விலங்கின் வடிவில் அமைந்த பதக்கம்; A pendant resembling the legendary animal *yāḷi.*

**யாளிமுகம்** yāḷi-mukam, *n.* < id. +.

யாளியின் முகம்போல அணிகளில் அமைக்கப்படும் தொங்கல் முகப்பு அல்லது பொருத்துவாய்; Ornamental pendant or clasp of jewels, shaped like the face of a *yāḷi.*

**யானைக்குண்டலம்** yāṉai-k-kuṇṭalam, *n.* < *யானை* +.

யானை முகம் போன்று அமைந்த வட்டவடிவிலான காதணி வகை; A kind of ear ring.

**யானைப்பட்டம்** yāṉai-p-paṭṭam, *n.* < id. +.

► ஓடை, 1.

## யோ

**யோகம்** yōkam, *n.* < *yōga.*

► அரைப்பட்டிகை, 1. *அரியா யோகமும்* (*சிலப்.* 14 : 170).

ர

**ரசுமிமாலை** racumi-mālai, *n.* < *raśmi* + *mālā*.

► இரசுமிமாலை (*Loc.*).

**ரத்தினப்பணி** rattiṉa-p-paṇi, *n.* < *ratna* +.

► இரத்தினப்பணி. *ரவி மறைக்கும் புதிய மாணிக்க ரத்தினப் பணியை எடுத்து அணிந்து* (*அரிச். வெண். உ. பா.* 24).

**ரத்தினம்** rattiṉam, *n.* < id.

► ரத்னம்.

**ரத்தின மோதிரம்** rattiṉa-mōtiram, *n.* < id. +.

► இரத்தின மோதிரம். *ரத்தின மோதிரம் குருவிஞும் ஒன்றும் உட்பட* (S.I.I. ii, 93).

**ரத்ந கடகம்** ratna-kaṭakam, *n.* < id. +.

► இரத்தின கடகம். *ரத்ந கடகம் ஒன்றிற் கட்டின வயிரம் முப்பத்தாறும்* (*கல். சொல். அக.*).

**ரத்ந பட்டிகை** ratna-paṭṭikai, *n.* < id. +.

► இரத்ந பட்டிகை. *கண்ட நாண் நடுவுரத்ந பட்டிகை* (*கல். சொல். அக.*).

**ரத்னகண்டி** ratṉa-kaṇṭi, *n.* < id. +.

► இரத்னகண்டி. *ரங்கையனீந் தானங்கோர் ரத்னகண்டி* (*விறலிவிடு.* 1130).

**ரத்னம்** ratṉam, *n.* < id.

1. ► இரத்தினம்.
2. ► வைரம் (*Loc.*).

**ரத்ன மாலிகா** ratṉa-mālikā, *n.* < id. +.

► இரத்ன மாலிகா (*அணி. ஒப். ப.* 71).

**ரத்ன மோதிரம்** ratṉa-mōtiram, *n.* < id. +.

► இரத்ன மோதிரம். *ரத்தின மோதிரம் ஒன்றிற் கட்டின வயிரம் ஒன்றும்* (*கல். சொல். அக.*).

**ரத்ன வளையல்** ratṉa-vaḷaiyal, *n.* < id. +.

► இரத்ன வளையல். *ரத்ன வளையில் ஒன்றில் கட்டின மாணிக்கம் இருபதும் மரகதம் இருபதும் உட்பட* (S.I.I. ii, 93).

**ரவையட்டிகை** ravai-y-aṭṭikai, *n.* < *ரவை* +.

► இரவையட்டிகை.

**ரஸனா** rasaṉa, *n.*

► இரஸனா (*அணி. ஒப். ப.* 71).

**ரஜ்ஜு** rajju, *n.* < *rajju.*

► இரஜ்ஜு.

### ரா

**ராக்கடி** rākkaṭi, *n.* < U. *rākkaḍi.*
► இராக்கடி.

**ராக்கடை** rākkaṭai, *n.* < id.
► இராக்கடி (*தாசீல்தார் நா. ப.* 40).

**ராக்கிடி** rākkiṭi, *n.* < id.
► இராக்கடி (*Loc.*).

**ராக்குடி** rākkuṭi, *n.* < id.
► இராக்கடி (*Loc.*).

**ராக்கொடி** rākkoṭi, *n.* < id.
► இராக்கடி (*Loc.*).

**ராக்கோடி** rākkōṭi, *n.* < id.
► இராக்கடி (*Loc.*).

**ராணிச்சங்கிலி** rāṇi-c-caṅkili, *n.* < *ராணி* +.
► இராணிமுடிச்சுச் சங்கிலி (*W. D.*).

**ராணிமுடிச்சுச் சங்கிலி** rāṇi-muṭiccu-c-caṅkili, *n.* < id. +.
► இராணிமுடிச்சுச்சங்கிலி (*W. D.*).

**ராஜவந்தம்** rāja-vantam, *n.* perh. *rajan* + *bandha.*
► இராஜவந்தம் (S.I.I. v, 268).

### ரு

**ருக்குச்சரம்** rukku-c-caram, *n.*
கழுத்தணி வகை; A variety of neck chain (*W. D.*).

**ருசக** rucaka, *n.*
ஆண்கள் மணிக்கட்டில் அணியும் அணிவகை; A variety of bracelet for gents (*அணி. ஒப். ப.* 70).

### ரெ

**ரெட்டைவடச் சங்கிலி** reṭṭai-vaṭa-c-caṅkili, *n.*
► இரட்டைவடச் சங்கிலி (*W. D.*).

### ல

**லட்சுமிதாலி** laṭcumi-tāli, *n.* < *லட்சுமி* +.
தாலியுடன் சேர்த்துக் கீரைக்காரர் கட்டும் பொன்னாலான சிறு தாலி; A small *tāli* worn along with the marriage badge by *keeraikkara* women (*W. D.*).

**லலாடம்** lalāṭam, *n.* < *lalāṭa.*
மகுட உறுப்பு வகை; A part of the crown.

**லலாட பட்டம்** lalāṭa-paṭṭam, *n.* < *லலாடம்* +.
நெற்றிப்பட்டம்; Forehead band.

## லூ

**லூட்சா** lūṭcā, *n.*

தூதேருலர் என்னும் இனத்தவர் அணியும் தாலியின் பெயர்; Marriage badge of the tribe, *tūtērular* (E. T.).

## லோ

**லோட்டா** lōṭṭā, *n.* < U. *lōṭā.* < Arab. *luṭiyā.*

பொன்மணியால் ஆன கழுத்தணி வகை; A necklace of gold beads (*Loc.*).

**லோலாக்கு** lōlākku, *n.* < U. *lōlak.*.

காதில் தொங்கவிடப்படும் அணிவகை, தொங்கட்டான்: A pendant fastened to the ear lobe.

## வ

**வகிட்டுப் பதக்கம்** vakiṭṭu-p-patakkam, *n.* < *வகிடு* +.

► நெற்றிச்சுட்டி (*W. D.*).

**வங்கான்** vaṅkāṉ, *n.*

சில்லறை ஆபரணம்; Sundry jewellery. *வங்கானுந் தொங்கானு மாட்டிக் கிளுகிளுத்து* (*ஆதியூரவதானி*, 64).

**வங்கி** vaṅki, *n.* perh. *bhaṅgin.*. [T. K. *vaṅki*, Tu. *vaggi.*]

முழங்கைக்கு மேலே அணியப்படும் முடக்கு மோதிரம் போன்ற பெரிய வளையல்; A kind of armlet (W.).

**வங்கிக்காரை** vaṅki-k-kārai, *n.* < *வங்கி* +.

வளைந்த அட்டிகை வகை; A necklet.

**வங்கிச்சுற்று** vaṅki-c-cuttu, *n.* < id. +.

► வங்கி (*W. D.*).

**வங்கிநெளிவு** vaṅki-neḷivu, *n.* < id. +.

நெளி மோதிரம்; A kind of ring (*Loc.*).

**வங்கிவளையல்** vaṅki-vaḷaiyal, *n.* < id. +.

வளைந்த வளையல் வகை; A kind of bangle (W.).

**வச்சிரம்** vacciram, *n.* < *vajra.*

► வயிரம். *வச்சிரம் வயிரம்* (*திவா*. 6 : 13).

**வசனம்** vacaṉam, *n.* < *vasana.*

► அரைப்பட்டிகை, 1 (*யாழ். அக.*).

**வசு** vacu, *n.* < *vasu.*

1. ► பொன். *தேவர் கோதனம் தீ பொன்னும் வசு* (*பிங்*. 10 : 983).
2. ► இரத்தினம். *புந்தி வசுமணி கோ தனம் தீ* (*உரி. நி*. 214).

**வட்டக்குவளை** vaṭṭa-k-kuvaḷai, *n.*

வட்டமாகச் செய்யப்பட்டதும் குவளை மலர் வடிவிலானதும் கல்பதிக்கப்பட்டதுமான கடுக்கன்; An ear ring with inlaid gem.

**வட்டப்பூ** vaṭṭa-p-pū, *n.* < *வட்டம் + பூ.*

கால்விரலணி வகை; மரகதக் கடை செறி; A toe-ring. *இவை மரகத நாயகமாகிய வட்டப்பூ (சிலப். 6 : 97, அரும்.).*

**வடபல்லி** vaṭapalli, *n.*

தலைக்கோலத்தில் வலதுபுறம் வைத்து அணியப்படும் புல்லகம் என்னும் அணிகலன்; Woman's ornament for the forehead, part of *talai-k-kōlam*. *தென்பல்லி வடபல்லி யென்னும் இவையும் (சிலப். 6 : 107, அடியார்.).*

**வடம்** vaṭam, *n.* < *vaṭa.*

1. ► மணிமாலை (*திருவாலவா. க. வா.* 20).

2. கழுத்துச் சங்கிலியின் தடித்த ஒரு சரடு; சரம்; Strands of a garland; chains of a necklace. *நடம் செயத் தரளவடம் தெறு நகரோய் (கல்லா. 53. 18).*

**வடுகவாளி** vaṭuka-vāḷi, *n.* prob. வடுகர் +.

வடுக நாட்டு மகளிர் அணிந்து கொள்ளும் முத்தாலான ஒருவகைக் காதணி; A kind of ear-ring (S.I.I. ii, 206).

**வண்டயம்** vaṇṭayam, *n.* [T. *peṇḍiyamu*, M. *peṇḍeya.*]

► கழல், 1. *வீரவண்டயம் அணிந்த திருவடிகள் (திவ். திருப்பா. 17 அரும். ப. 162).*

**வண்டிக்கடுக்கன்** vaṇṭi-k-kaṭukkaṉ, *n.* < வண்டி +.

பொன்னாலான, பெரிய வட்டவடிவான கடுக்கன் வகை; A large, circular, gold ear-ring (*Loc.*).

**வண்டு** vaṇṭu, *n.*

பொன்னால் செய்யப்பட்ட கையணி வகை; கைவளை; Bracelet. *சிரஞ் செய்நூ புரமும் வண்டுஞ் சிலம்பொடு (கம்பரா. 1, 21, 22 : 2).*

**வத்திரபட்டம்** vattira-paṭṭam, *n.* < *vaktra* +.

முன்நெற்றியில் அணியும் பொன்தகடு; நெற்றிப்பட்டம்; Ornamental plate worn on the forehead; frontlet (*யாழ். அக.*).

**வந்திகை** vantikai, *n.* < *bandhikā.*

1. ► கைவந்தி.

2. கையில் தோளின்கீழ் அணியப்படும் அணிவகை; Armlet. *பண்ணத்தோள்... வயக்குறு வத்திகை (மதுரைக். 415).*

3. முன்நெற்றியில் அணியும் அணிவகை; An ornament worn on the forehead. *வந்திகையே நுதலணியுஞ் சுணங்கும் (அக. நி. 3098).*

4. ► அணிகலன். *வந்திகை வந்திப் பட்ட மலடிப்பூண் பொதுச்சுணங்காம் (அரு. நி. 292).*

**வயந்தகம்** vayantakam, *n.* perh. *vasantaka.*

தலையிலிருந்து நெற்றியில் தொங்கும்படி அமைந்த, மகளிர் தலைக்கோலத்தின் தொங்கலுறுப்பு; நெற்றிச்சுட்டி; Pendant in front of a head-ornament, worn by women. *அணிநுதல் வகைபெறச் செரீஇய வயந்தகம் போற் தோன்றும் (கலித்.* 79 : 5).

**வயிடூயம்** vayiṭūyam, *n.*

► வயிடூரியம். *வயிடூயம் வெயிற் கோமேதகம் (திருவிளை.* 17, 46 : 3).

**வயிடூரியம்** vayiṭūriyam, *n.* < *vaidūrya.*

நவமணிகளுள் ஒன்றானதும் விலை மதிப்புடையதுமான வெளிர் நீலக்கல்; Cat's-eye, an opalescent gem, one of *nava-maṇi. வாலவாயம் வயிடூரியம் (பிங்.* 6 : 110).

**வயிர உழுத்து** vayira-uḻuttu, *n.* < *வயிரம்* +.

வைரக்கல் பதிக்கப்பட்ட உழுத்து; An ancient ornament set with a diamond. *வயிர உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும்* (S.I.I. ii, 93).

**வயிரச்சங்கிலி** vayira-c-caṅkili, *n.* < id. +.

கழுத்தில் அணியும் சரப்பணியென்னும் அணி; A kind of necklace. *சங்கிலி வயிரச் சங்கிலி சாரும் (திவா.* 7 : 89).

**வயிரசாயலம்** vayira-cāyalam, *n.* < id. +.

தோள் அணிவகை; A kind of anklet. *வயிரசாயலம் ஒன்று பொன் நூற்று இருபத்து இருகழஞ் சேய் (கல். சொல். அக.).*

**வயிரம்** vayiram, *n.* < *vajra.*

1. நவமணியுள் ஒன்றானதும், ஒளியைப் பல திசைகளில் பிரதிபலிப்பதுமான விலை உயர்ந்த வெண்ணிறக்கல்; Diamond, one of *nava-maṇi. வயிரக் குறட்டின் வயங்கு மணி ஆரத்து (புறநா.* 365 : 4).

2. ► கிம்புரி, 1. *கோட்டை வயிரஞ் செறிப்பினும் ... பன்றி செயிர்வேழ மாகுத லின்று (நாலடி.* 358 : 3).

3. வாளியென்னும் அணியின் தகடு; The flat metal piece of a kind of ear-ring (*யாழ். அக.*).

**வயிரமுடி** vayira-muṭi, *n.* < *வயிரம்* +.

1. வயிரம் இழைத்த மகுடம்; Crown set with diamonds.

2. வயிரம் முதலிய மணிகள் வைத்து இழைத்துச் செய்யப்பட்டுக் கடவுள் சிலைக்குச் சாத்தப்படும் தலையணி வகை; தொப்பாரம்; Head ornament of an idol, set with diamonds and other precious stones.

**வயிரவல்லி** vayira-valli, *n.* < id. +.

அணிகலன் வகை; A kind of jewel. *தேவாங்கும் மகர வாளியும் வயிர வல்லியும் திருக்கும் ஆக்கி (அரிச். வெண். உ.* 22).

**வயிரவாளி** vayira-vāḷi, *n.* < id. +.

மகளிர் காதணி வகை; A woman's ear-ornament (J.).

**வரிமணி** vari-maṇi, *n.* < *வரி* +.

பரவமகளிர் அணிந்து கொள்ளும் கழுத்தணி; A neck ornament worn by parava women (*Parav.*).

**வருணசரம்** varuṇa-caram, *n.* < *varṇa-sara.*

செம்மணிகளால் செய்த கழுத்தணி; Necklace of rubies or red gems. *வருணற் கீந்த வருண சரத்தையே (கம்பரா.* 6, 7, 35 : 4).

**வல்லிக்கயிறு** valli-k-kayiṟu, *n.* < *வல்லி* +.

உடைமேல் அணியும் அரைஞாண்; Waist-cord worn over the cloth. *பட்டின்கண்ணே அழகுபடக் கிடந்த வல்லிக்கயிறு விளங்க (சீவக.* 2280 : 3, *உரை*).

**வல்லிகை** vallikai, *n.* < *வல்லி.*

1. குதிரைக் கழுத்தில் கட்டும் வடம்; Halter of a horse. *நீலமணிக் கடிகை ... வல்லிகை (கலித்.* 96 : 10).

2. பொன் இழையால் பின்னப்பட்ட காதணி வகை; An ear-jewel woven with gold threads. *கடிப்பிணை வல்லிகை ... தோடும் (திவா.* 7 : 71).

**வலம்புரி** valam-puri, *n.* < *வலம்* +.

தெய்வ உத்திக்கு அடுத்து அணியப்படும் பொன்னாலான வலம்புரிச் சங்கு வடிவத் தலையணி; A head-ornament, shaped like *valampuri-c-caṅku.*

**வலம்புரிவளை** valampuri-vaḷai, *n.* < id. +.

வலம்புரிச் சங்கினால் செய்யப்பட்ட கைவளையல்; A bracelet made up of conch. *வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து (நெடுநல்.* 142).

**வலயம்** valayam, *n.* < *valaya.*

1. ► வாகுவலயம். *தொடியும் உந்தியும் தோள் அணி வலயமும் (பரிபா.* 13 : 52).

2. ஒரு வகைத் தலைக்கோலம்; A kind of head-ornament. *எறி மகரவலயம் அணிதிகழ் நுதலியர் (பரிபா.* 10 : 77).

3. உருண்டையாகவோ தட்டையாகவோ இருக்கும் முன்கை வளை; Bracelet. *நிரைநில முழவலயங் களினலைய (பெரியபு.* 21, 9 : 1).

**வலை** valai, *n.* < *வல-.* [T. M. *vala*, K. *bale.*]

யாகபத்தினி நெற்றியில் அணிந்து கொள்ளும் சாலகம் என்னும் அணிவகை; Ornament worn on the forehead by the wife of the chief sacrificer. *அறம்புகழ்ந்த வலைசூடி ... நிலை கோத்த நின்றுணைத் துணைவியர் (புறநா.* 166 : 14).

**வலையம்** valaiyam, *n.*

► வாகுவலயம். *வலையத் திணி தோள்மிசை மழவு ஏற்றி (பதினொ. ஆளுடை. திருவந்.* 81 : 1).

**வள்ளி** vaḷḷi, *n.* < *vallī.*

1. ► கைவளை. *ஆம்பல் வள்ளித்தொடிக்கை (புறநா.* 63 : 12).

2. ► அணிகலன். *அணிகலம் பூடணம் வள்ளி... ஆபரணம்மே (பிங்.* 6 : 65).

**வளை** vaḷai, *n.* < *வளை-.* [K. *baḷe.*]

1. மகளிர் கையில் அணியும் அணி; கைவளை; Bangle; bracelet. *கோடு ஈர் இலங்கு வளை ஞெகிழ* (*குறுந்.* 11 : 1).

2. ► தோள்வளை. *திருந்து கோல் எல் வளை வேண்டி யான் அழவும்* (*நற்.* 136 : 1).

3. ► கங்கணம், 2. *வளையும் தொடியும் கடகமும் கங்கணம்* (*பிங்.* 6 : 76).

**வளைக்காச்சுமணி** vaḷai-k-kāccu-maṇi, *n.* < *வளை* +.

► *சங்குமணி* (*சிவரக. அபுத்தி.* 5).

**வளைமணிவடம்** vaḷai-maṇi-vaṭam, *n.* < id. +.

► அக்குவடம். *திருவரையிற் சாத்தின வளைமணிவடமானது* (*திவ். பெரியாழ்.* 1, 7, 8, *வ்யா. ப.* 150).

**வளையம்** vaḷaiyam, *n.* < *valaya.*

1. காது, மூக்கு முதலியவற்றில் அணியும் வட்ட வடிவ அணிகலன்; Ring-shaped piece of jewellery.

2. ► கைவளை. *எல் வளையம் மென் தோளேம் எங்கையர்* (*திணை. ஐம்.* 37 : 3).

3. மெட்டி வகை; A kind of toe ring. *தலை விரல் சுற்றும் தாது அணி வளையமும்* (*பெருங்.* 2, 19 : 180).

**வளையல்** vaḷaiyal, *n.* < *வளை-.*

முன்கையில் பெண்கள் அணியும் வகையில் உலோகம், கண்ணாடி முதலியவற்றால் செய்யப்பட்ட வளையம் போன்ற அணிகலன்; Bangle; bracelet. *காறையும் நாணும் வளையலும் கண்டவர்* (*திருமந்.* 2894 : 2).

**வளையற்காப்பு** vaḷaiyaṟ-kāppu, *n.* < *வளையல்* +.

► வளையல்.

**வளையில்** vaḷaiyil, *n.*

► வளையல் (W.).

**வன்னசரம்** vaṉṉa-caram, *n.* < *வன்னம்* +.

► இரத்தினமாலை. *மண்மகடன் மார்பினணி வன்னசரமென்ன* (*கம்பரா.* 1, 15, 13 : 3 *வை.மு.கோ.*).

## வா

**வாகுசுட்டி** vāku-cuṭṭi, *n.* < *bāhu* +.

► தலைப்பாளை.

**வாகுபுரி** vāku-puri, *n.* < id. +.

► தோள்வளை. *வாகுபுரி வயங்க* (*காளத். உலா,* 151).

**வாகுவலயம்** vaku-valayam, *n.* < id. +

► தோள் வலையம். *மேகலைகாஞ்சி, வாகுவலயம்* (*பரிபா.* 7 : 47).

**வாசிக்கோவை** vāci-k-kōvai, *n.* < *வாசி* +.

குதிரையின் கழுத்தில் அணிவிக்கப்படும் கிண்கிணிமாலை; A garland of small bells round a horse's neck. *படலையே படர்தல் மாலை பதலையே வாசிக்கோவை* (*சூடா*. 11 : 70).

**வாடாத்தாமரை** vāṭā-t-tāmarai, *n.* < *வாடு* + *ஆ* neg. +.

பண்டைக்கால அரசர்களால் பாணர்கள் தலையில் சூடிக்கொள்ளுவதற்காக அளிக்கப்பட்ட பொற்றாமரைப்பூ; Lotus shaped ornament of gold, presented to bards by ancient kings. *வாடாத்தாமரை சூட்டுவ னினக்கே* (*புறநா*. 319 : 15).

**வாடாமாலை** vāṭā-mālai, *n.* < id. + < id. + *மாலை*.

பொன்னாலான மலர்களைக் கொண்டு செய்யப்பட்ட கழுத்தணி வகை; பொன்னரி மாலை; Gold necklace, as not fading neck garland of flowers. *வாடாமாலை பாடினி யணிய* (*புறநா*. 364 : 1).

**வாய்வடம்** vāy-vaṭam, *n.*

நகை வகை; An ornament. *கோத்தவடம் இரண்டும் இதன் மேல் வாய் வடம் ஒன்றுத் தனிவடம் சவிநாலும்* (*கல். சொல். அக.*).

**வார்ப்பு** vārppu, *n.* < *வார்-*.

► கைவளை. *வார்ப்பென்பதுவே வளையெனலாகும்* (*அக. நி*. 3141).

**வாலவாயசம்** vālavāyacam, *n.* < *vāla-vāya-ja.*

► வைடூரியம்.

**வாலவாயம்** vālavāyam, *n.*

► வாலவாயசம். *வாலவாயம் வைடூரியமே* (*திவா*. 6 : 14).

**வாளி** vāḷi, *n.* < *vāḷi.*.

கம்பி வடிவமாகச் செய்யப்பட்ட காதணி வகை; A kind of ear-stud or ear-ring. *மங்கல ஐம் படையும் தோள்வளையும் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்து இலக* (*திவ். பெரியாழ்*. 1, 5, 10 : 3).

**வாளிகை** vāḷikai, *n.* < *vāḷi-kā.*

► வாளி. *சுட்டிகையும் வாளிகையும்* (*ஆதியுலா*, 68).

**வாளைப்பகுவாய் மோதிரம்** vāḷai-p-pakuvāy-mōtiram, *n.* < *வாளை* +.

► முடக்கு மோதிரம். *வாளைப் பகுவாய் மோதிரம் - முடக்குமோதிரம்* (*சிலப்*. 6 : 95, *அரும்*.).

## வி

**விசயச்சந்தம்** vicaya-c-cantam, *n.* < *vijaya-c-chanda.*

எழுநூறு முத்துகள் கோக்கப்பட்ட தாழ்வடம்; A necklace of seven hundred pearls (*யாழ். அக.*).

**விசிறிமுருகு** viciṟi-muruku, *n.* < *விசிறி* +.

காதின் மேற்பகுதியில் அணியும் பொன்னாலான விசிறிவடிவக் காதணி வகை; Fan-shaped ear-ring of gold, worn on the upper part of the ear (W.).

**விடங்கு** viṭaṅku, *n.* < *விடங்கம்.* [T. K. Tu. *beḍaṅgu.*]

அரைப்பட்டிகை முதலிய அணிகலன்களின் உறுப்பு; A part of girdle and other ornaments. *திருப்பட்டிகை யொன்றில்... மொட்டு ஒன்றும் விடங்கு நாலும்* (S.I.I. ii, 184).

**விடுகம்பி** viṭu-kampi, *n.* < விடு +.

தேவையான அளவில் துண்டிக்கப்பட்டுக் காதுத் துளையில் அணிந்து கொள்ளப்படும் சன்னமான கம்பியாகிய அணிகலன்; A metal wire cut into small pieces and worn on ear lobes. *வேண்டும் அளவும் வாய் நெகிழ்த்து விடு கம்பிகளாய்ப் புனையீரே (கலிங். 512 : 2).*

**விடுகாசு** viṭu-kācu, *n.* < id. + T. *gāzu.*

► விடுகாசு வளையல் (W.).

**விடுகாசு வளையல்** viṭu-kācu-vaḷaiyal, *n.* < *விடுகாசு* +.

1. கண்ணாடி வளையல் வகை; A glass armlet (W.).

2. இருதண்டைகளுக்கு இடையே ஐந்து வளையல்கள் அமையக் கைகளில் அணியப்படும் அணிகலன்; A variety of Bangle (*W. D.*).

**விடுநாண்** viṭu-nāṇ, *n.* < *விடு* + *நாண்.*

1. அரைஞாண்; Girdle, cord for the waist. *நாண் - விடுநாண் (ஈடு,* 2, 5, 5).

2. கழுத்திலிருந்து இடைவரை தொங்கும் நீளச்சங்கிலி; Long chain. *திருக்கழுத்திற் சாத்தின விடுநாணானது திருவுந்தியளவும் தாழ (திவ். பெரியாழ்.* 2, 10, 2, *வ்யா. ப.* 488).

**வித்தம்** vittam, *n.* < *vitta.*

► பொன். *செந்தாது வித்தம் ... பொன் எனப்படுமே (திவா.* 6 : 1).

**வித்துருமம்** vitturumam, *n.* < *vidruma.*

► பவளம். *மரகத மாலை ஐம்பொன் மாலை வித்துருவ மாலை (திருவிளை.* 5, 160 : 1).

**விபூஷணம்** vipūṣaṇam, *n.* < *vi-bhūṣaṇa.*

► அணிகலன்.

**வியாழகுண்டலம்** viyāḻa-kuṇṭalam, *n.* < *வியாழம்* +.

சுருண்ட பாம்பு அமைப்பிலான காதணி; An ear ring resembling a snake.

**விரலணி** viral-aṇi, *n.* < *விரல்* + *அணி.*

► மோதிரம். *விரலணி ஆழி வீகம் ... மோதிரம் (திவா.* 7 : 88).

**விரலாழி** viral-āḻi, *n.* < *விரல்* + *ஆழி.*

► மோதிரம். *விரலாழிக்கண் பல்விதக் கண்கள் சேர்த்து (திருவாலவா.* 22, 13:1).

**விரற்செறி** viraṟ-ceṟi, *n.* < *விரல்* + *செறி.*

► நெளி. *விரற்செறியினைத் திருத்தலும் (தொல். பொ.* 22, *நச்சர்.*).

**விரற்பூண்** viraṟ-pūṇ, *n.* < *விரல்* +.

► மோதிரம். *வீகம் விரற்பூணாழி மோதிரம் (நாமதீப.* 435).

**விரிச்சிகை** viriccikai, *n.*

► விரிசிகை. *விரிச்சிகைதானே அரைப்படியாகும் (அக. நி.* 3202).

**விரிசிகை** viricikai, *n.*

முப்பத்திரண்டு மணிக்கோவைகளை உடைய மகளிர் இடையணி; An ornamental waist-band of 32 strings, worn by women. *கண்கொள் பருமம் பதினான்கு முப்பத்திரண்டு விரிசிகை (திருமுரு. 16, உரை).*

**வில்லை** villai, *n.* < U. *villa.*

1. ► வில்லைமுருகு (W.)

2. ஒருவகைத் தலையணி; A kind of head-ornament.

**வில்லைமுருகு** villai-muruku. *n.* < *வில்லை + முருகு.*

காதணி வகை; A kind of ear-ornament (W.).

**வில்வமாலை** vilva-mālai, *n.* < *வில்வம் + மாலை.*

பொன் அல்லது வெள்ளியினால் வில்வ இலையின் உருக்களாகச் செய்து சிவபெருமானுக்கு அணிவிக்கப்படும் மாலை; A neck ornament for *Śiva* consisting of silver or gold beal leaves (*யாழ். அக.*).

**விளக்கம்** viḷakkam, *n.* < *விளங்கு-.* [K. *beḷahu.*]

► மோதிரம். *செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து (நெடுநல். 144).*

## வீ

**வீகம்** vīkam, *n.*

► மோதிரம். *விரலணி ஆழி வீகம் ... மோதிரம் (திவா. 7 : 88).*

**வீரக்கங்கணம்** vīra-k-kaṅkaṇam, *n.* < *vīra* +.

► வீரகடகம் (W.).

**வீரக்கடகம்** vīra-k-kaṭakam, *n.* < id. + .

வீரர்கள் அணிந்து கொள்ளும் வீரவளை; Warrior's bracelet.

**வீரக்கண்டாமணி** vīra-k-kaṇṭā-maṇi, *n.* < id. +.

வீரக்குறியாக அணியும் மணிகட்டிய கழல்; Ring with little bells, worn on the leg, as a mark of heroism.

**வீரக்கண்டை** vīra-k-kaṇṭai, *n.* < id. +. [K. *vīragaṇṭe.*]

► வீரக்கழல்.

**வீரக்கவசம்** vīra-k-kavacam, *n.* < id. +.

வீரர்கள் அணியும் கவசம்; Warrior's armour.

**வீரக்கழல்** vīra-k-kaḻal, *n.* < id.+.

வெற்றிக்கும் ஆண்மைக்கும் அடையாளமாக வீரர் அணியும் ஒலிக்கும் காலணிகலன்; String of little bells worn on the leg, as a sign of heroism.

**வீரக்கேயூரம்** vīra-k-kēyūram, *n.* < id. +.

வீரர் அணிவதற்கு உரியதும் இரும்பினால் ஆனதுமான தோள்வளை; Warrior's armlet of iron.

**வீரகங்கணம்** vīra-kaṅkaṇam, *n.* < id. +.

► வீரகடகம்.

**வீரகடகம்** vīra-kaṭakam, *n.* < id. + .

► வீரக்கடகம் (W.).

**வீரகண்டாமணி** vīra-kaṇṭā-maṇi, *n.* < id. +.

► வீரக்கண்டாமணி. *வீரகண்டாமணி விருது காலிட்டு* (*கொண்டல்விடு*. 494).

**வீரகண்டை** vīra-kaṇṭai, *n.* < id. +. [K. *vīragaṇṭe.*]

► வீரக்கழல் (W.).

**வீரகேயூரம்** vīra-kēyūram, *n.* < id. +.

► வீரக்கேயூரம் (*யாழ். அக.*).

**வீரச்சங்கிலி** vīra-c-caṅkili, *n.* < id. +.

1. வீரத்திற்கு அடையாளமாகக் கையில் அணியும் பொன்அணி; Gold chain worn as an armlet, as a sign of heroism. *வீரசங்கிலி கேயூரம்* (*பிரபுலிங். பிர*. 9).

2. மகளிர் கழுத்தணி வகை; A woman's necklace (*சிலப்*. 6 : 99, *அடியார்*.).

**வீரச்சலங்கை** vīra-c-calaṅkai, *n.* < id. +.

வீரர் அணியும் சிறு மணிகள் கொண்ட காற்சதங்கை; String of little bells, worn on the legs by heroes (*Loc.*).

**வீரச்சூடிகை** vīra-c-cūṭikai, *n.* < id. + *cūḍikā.*

முன் நெற்றியில் வீரர் அணியும் அணிவகை; An ornament for the forehead worn by warriors.

**வீரசூடிகை** vīra-cūṭikai, *n.* < id. +.

► வீரச்சூடிகை. *வீர சூடிகை நெற்றியி னயலிட்டு விசித்தார்* (*கம்பரா*. 5, 9, 18 : 4).

**வீரத்தண்டை** vīra-t-taṇṭai, *n.* < id. + *தண்டை*.

► வீரக்கழல்.

**வீரதண்டை** vīra-taṇṭai, *n.* < id. +.

► வீரக்கழல் (*யாழ். அக.*).

**வீரப்பட்டம்** vīra-p-paṭṭam, *n.* < id. + *பட்டம்*.

1. ► வீரப்பட்டிகை.

2. தெய்வ மூர்த்தங்கட்கு அணிவிக்கப்படும் நெற்றியணி வகை; பொற்றகடு; A jewel on the forehead of deities.

**வீரப்பட்டயம்** vīra-p-paṭṭayam, *n.* < *வீரம்* +.

► வீரப்பட்டிகை (*யாழ். அக.*).

**வீரப்பட்டிகை** vīra-p-paṭṭikai, *n.* < id. +.

வீரர் வெற்றிக்குறியாக நெற்றியில் அணியும் பொற்றகடு; Frontlet of gold worn on the forehead of a warrior, as a sign of victory.

**வீரபட்டம்** vīra-paṭṭam, *n.* < *vīra* + *பட்டம்.*

► வீரப்பட்டிகை. *வீர பட்டத்தொடு திலக மின்னவே* (*கம்பரா.* 1, 22, 53 : 3-4).

► வீரப்பட்டம், 2.

**வீரபட்டிகை** vīra-paṭṭikai, *n.* < id. +.

► வீரப்பட்டிகை. *நுதலணி யோடையிற் பிறழும் வீரபட்டிகை* (*கம்பரா.* 3, 6, 159 : 3).

**வீரமுடி** vīra-muṭi, *n.* < id. +.

வீரர்கள் அணியும் மகுடம்; Warrior's crown.

**வீரமுத்திரிகை** vīra-muttirikai, *n.* < id. +.

காலின் நடுவிரலில் அணியும் மோதிர வகை; A ring worn on the middle toe (W.).

**வீரவளை** vīra-vaḷai, *n.* < *வீரம்* + *வளை.*

வீரர்கள் கையில் அணிந்து கொள்ளும் கடகம்; Warrior's armlet. *வீரவளையை உடைய தோளாகிய துடுப்பால்* (*புறநா.* 26 : 10, *உரை*).

**வீழ்** vīḻ, *n.* < *வீழ்-.* [K. *bīḻal.*]

திருமணத்தின் அடையாளமாக அணிவிக்கப்படும் மங்கலநாண்; Cord on which the marriage badge is strung. *அலர் முலையாகத்து ... நெடு வீழ் தாழ* (நெடுநல். 137).

## வெ

**வெண்குழை** veṇ-kuḻai, *n.*

சங்கினாலான காதணி; Ear ring made up of conch. *கையது வெண் குழை காதது சூலம்* (*தேவார.* 1, 117, 11 : 1).

**வெண்கோவை** veṇ-kōvai, *n.*

► முத்தாரம். *கொடி இடைத் தரள வெண்கோவை சூழ்வன* (*கம்பரா.* 1, 3, 37 : 3).

**வெண்டு** veṇṭu, *n.* perh. வெண்டு-.

முறுக்கிய அமைப்பிலான காது வலயம்; Twist of an ear-ring (*யாழ். அக.*).

**வெண்டையம்** veṇṭaiyam, *n.* [T. *peṇḍiyamu.*]

1. வீரர்களது காலணிகலன்; Warrior's anklet. *தண்டையணி வெண்டையம் கிண்கிணி சதங்கையும்* (*திருப்பு.* 748 : 1).

2. குதிரை அல்லது யானையின் காற் சதங்கை; Hollow ring with pebbles inside, ties to the feet of horses or elephants. *வெண்டையங் கவடி* (*அரிச். பு. வேட்டஞ்.* 13).

3. கட்டைவிரல் மோதிரம்; Thumb-ring (W.).

**வெண்பாசி** veṇ-pāci, *n.* < *வெண்-மை* + *பாசி.*

பாசிமணி வகை; A kind of white bead. *வெண்பாசி பூண்டு* (*திருவாலவா.* 52, 3 : 2).

**வெண்பொன்** veṇ-poṉ, *n.* < வெண்-மை +.

► வெள்ளி. *வெண்பொற் கட்டின்மேல்* (*சீவக.* 2421 : 2).

**வெள்ளி** veḷḷi, *n.* < வெண்-மை. [T. *veṇḍi*, K. *belli*, M. *veḷḷi*.]

அணிகலன்கள் முதலியன செய்யப் பயன்படும் விலை உயர்ந்த பளபளப்பான வெண்ணிற உலோகம்; Silver, *Argentum*. *வெள்ளி உருக்குறு கொள்கலன் கடுப்ப* (*நற்*. 124 : 6-7).

**வெள்ளி அரணா** veḷḷi-araṇā, *n.* < *வெள்ளி* +.

வெள்ளியாலான அரைஞாண்; A silver waist-cord (*W. D.*).

**வெள்ளித் தளை** veḷḷi-t-taḷai, *n.* < id. +.

வெள்ளிக் காப்பு; A foot ring made up of silver. *இப்பிள்ளை இணைக் காலில் வெள்ளித் தளை நின்று இலங்கும்* (*திவ். பெரியாழ்*. 1, 2, 3 : 3).

**வெள்ளி வள்ளி** veḷḷi-vaḷḷi, *n.*

மகளிர் அணியும் வெள்ளியாலான தோள்வளை; A kind of silver armlet, worn by women. *வெள்ளி வள்ளியின் விளங்கு தோணலார்* (*சீவக*. 420 : 3).

**வெற்றித்தண்டை** veṟṟi-t-taṇṭai, *n.* < *வெற்றி* + *தண்டை*.

வெற்றியின் அடையாளமாக வீரர்கள் காலில் அணியும் கழல்; Anklet worn on the leg, as a sign of victory (*யாழ். அக*.).

**வெற்றிலைப் பூமணி** veṟṟilai-p-pūmaṇi, *n.* < *வெற்றிலை* + *பூ* +.

மகளிர் அணியும் அணிவகை; A kind of jewel worn by women (*யாழ். அக*.).

**வெறுக்கை** veṟukkai, *n.* < *வெறு-*.

► பொன். *வெறுக்கைச் செல்வம் வீசுதல் ஆற்றாது* (*பெருங்*. 3, 7 : 15).

## வே

**வேங்கை** vēṅkai, *n.* cf. *ஈங்கை*. [T. *vēgi*, M. *veṅṅa*.]

► பொன். *வேங்கை சம்பூதைம் ... பொன் எனப்படுமே* (*திவா*. 6 : 1).

**வேடகம்** vēṭakam, *n.* prob. *vēdhaka*.

காதணி வகை; An ear-ornament. *வல்லிகை வேடகம் ... தோடும் ஆகும் என்ப* (*திவா*. 7 : 71).

**வேடம்** vēṭam, *n.*

► வல்லிகை (*அபிதா. மாலை*.).

**வேர்வாளி** vērvāḷi, *n.*

காதணி வகை; An ear-ornament. (S.I.I. viii, 68).

**வேலங்காய்க்கொலுசு** vēlaṅ-kāy-k-kolucu, *n.* < *வேல்* + *காய்* +.

வேலங்காய் போலும் வெள்ளியாலான குண்டுகளை உடைய கால் அணிகலன்வகை; A silver anklet with beads resembling babul fruit.

**வேஷகம்** vēṣakam, *n.* < *vēṣaka*.

► வேடகம் (*யாழ். அக*.).

**வேஷம்** vēṣam, *n.*

காதணி வகை; An ear ornament (*யாழ். அக*.).

## வை

**வைடூர்யம்** vaiṭūryam, *n.* < *vaidūrya.*

► வைடூரியம்.

**வைடூரியம்** vaiṭūriyam, *n.* < id.

► வயிடூரியம். *வைடூரியம் நிணம் கோமேதகம் வாள் நகை முத்தம்* (*திருவாலவா.* 25, 10 : 3).

**வைரக்கடுக்கன்** vaira-k-kaṭukkaṉ, *n.* < *வைரம்* +.

வைரமணிகள் பதித்த காதணி வகை; Diamond ear-ring.

**வைரம்** vairam, *n.* < *vajra.*

► வயிரம். *அட்டுநீ ரருவிக் குன்றத் தல்லது வைரந் தோன்றா* (*சீவக.* 2925 : 1).

**வைரமூக்குத்தி** vaira-mūkkutti, *n.* < *வைரம்* +.

வைரம் பதித்த மூக்கணி வகை; A variety of nose stud inlaid with diamond.

## ஜ

**ஜடைக்குச்சு** jaṭai-k-kuccu, *n.* < *ஜடை + குச்சு.*

► சடைக்குச்சு.

**ஜடைசிங்காரம்** jaṭai-ciṅkāram, *n.* < id. +.

மகளிர் தலைப் பின்னல் மீது அணியும் அணிவகை; A kind of gold ornamental pendants, used in plaited tresses by women.

**ஜடை நாகம்** jaṭai-nākam, *n.* < id. +.

► சடைநாகம்.

**ஜடைபில்லை** jaṭai-pillai, *n.* < id. +.

► சடைவில்லை.

**ஜம்பு** jampu, *n.* perh. *yam.*

அரடாவை இணைக்கும் மகுட உறுப்பு; The portion of the crown that holds the *araṭā.*

**ஜம்புல்** jampul, *n.*

அணிவகை; A jewel (*தாசீல்தார்நா. ப.* 40).

## ஜி

**ஜிமிக்கி** jimikki, *n.* < Hind. *jhumkī.*

► சிமிக்கி.

## ஸ்ரீ

**ஸ்ரீசந்தம்** śrī-cantam, *n.* < *śrī* +.

நகைவகை; A kind of jewel (S.I.I. ii, 32).

**ஸ்ரீபாதஹுவலயம்** śrī-pātahu-valayam, *n.* < id. +.

தெய்வத் திருமேனிகளின் காலணிகலன் வகை; Foot ornament of idols. *ஸ்ரீபாதஹுவலயம் ஒன்றித் தடவிக் கட்டின பளிங்கு மூன்றும்* (*கல். சொல். அக.*).

**ஸ்ரீபாஹுவலயம்** šrī-pāhu-valayam, *n.* < id. +.

▶ வாகுவலயம். *ஸ்ரீபாஹுவலயம் ஒன்றித் தடவிக் கட்டின பளிங்கு மூன்றும்* (S.I.I. ii, 39).

**ஸ்ரீமுடி** šrī-muṭi, *n.* < id. +.

▶ மகுடம், 1. *ஸ்ரீமுடி ஒன்றிற் கோத்த முத்து வட்டமும்* (S.I.I. ii, 39).

**ஸ்ரீவாகுவலையம்** šrī-vākuvalaiyam, *n.* < id. +.

▶ வாகுவலயம்.

## ஹ

**ஹர்ஷகம்** harṣakam, *n.*

ஆண்களின் கழுத்தணி வகை; A kind of necklace for gents (*அணி. ஒப். ப.* 71).

**ஹஸ்தகடகம்** hasta-kaṭakam, *n.* < *hasta* +.

▶ கைவளை.

**ஹஸ்த பட்டைக்காறை** hasta-paṭṭai-k-kāṟai, *n.* < id. +.

கை அணி வகை; A kind of ornament for hands. *ஹஸ்த பட்டைக்காறை இரண்டு நாலும் தாலி இரண்டும் நாலும்* (S.I.I. vi, 33).

**ஹஸ்த பத்ரம்** hasta-patram, *n.* < id. +.

மகளிர் விரலணி வகை; A kind of rings worn by females (*அணி. ஒப். ப.* 71).

## ஹா

**ஹாரம்** hāram, *n.* < *hāra.*

▶ ஆரம்.

**ஹாராவளி** hārāvaḷi, *n.* < id. + *āvaḷi.*

பல இழைகளை உடைய சரம்; A chain with many strings.

## ஸ

**ஸப்தஸரம்** sapta-saram, *n.* < *saptan* +.

▶ சப்தசரி. *த்ரிஸரம் பஞ்சஸரம் ஸப்தஸரம் என்றாப் போலே* (*திவ். அமலனாதி.* 10, *வ்யா. ப.* 104).

**ஸம்படிகா** sampaṭikā, *n.*

மகளிர் கூந்தலில் மாட்டிக் கன்னப்புறங்களில் தொங்கவிடும் பதக்கம் போன்ற அணிகலன்; A pendant hung from the tresses of women near their ears (*Loc.*).

**ஸரப்பணி** sara-p-paṇi, *n.* [T.K. *sarapaṇi.*]

▶ சரப்பணி.

**ஸரப்பளி** sara-p-paḷi, *n.*

▶ சரப்பளி.

**ஸரம்** saram, *n.* < *sara.*

▶ சரம்.

# குறிப்புகள்



இந்நூலின் பதிப்பாசிரியர் பேராசிரியர் வ. ஜெயதேவன் இல்லினாய்சு பல்கலைக்கழகப் பேராசிரியர் லாடிஸ்லாவ் சுகுஸ்தா அவர்களிடம் நேரிடையாக அகராதியியலில் பயிற்சி பெற்றவர்; தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறையின் முதல் இயக்குநர்; தமிழ் மொழித்துறையின் முன்னைத் தலைவர்; தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியர்; தமிழ்ப் பேரகராதித் திருத்தப்பணித் திட்டத்தின் தலைமைப் பதிப்பாசிரியர்; இந்திய அகராதியியல் கழகத்தின் பொதுச் செயலாளர்; ஆசிய அகராதியியல் கழகத்தின் தலைவர்; அகராதிகள், மொழிபெயர்ப்பு நூல்கள், ஆய்வுநூல்கள், பதிப்புக்கள் பலவற்றின் ஆசிரியர்; இவர் மேற்பார்வையில் 28 பேர் முனைவர் பட்டமும் 100 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர்.

இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும், பேச்சு வழக்கிலும் வழங்கிவரும் அணிவகைகளைத் தொகுத்து அவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கும் அகராதியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது

சென்னைப் பல்கலைக்கழகம்
2007

அணிகலன் அகராதி